# ,eJ rkak

## juk - 13

## Mruau mwT iugG toфhlb

(2010 Mk M z L njhlffk eilK iwggLjjggLk.)

rkaf fytjJiw
nkhofs> khdl tay> r%f tQQhd glk
Njra fyt eWtfk
,yqif

இந்து சமயம்
தரம் - 13
ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

முதற் பதிப்பு - 2010

சமயக் கல்வித் துறை
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

பதிப்பு:

# முகவுரை

2007 ஆம் ஆண்டில் 6 ஆம் 10 ஆந் தரங்களில் அறிமுகஞ் செய்யப்பட்ட, தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை, படிப்படியாக அடுத்தடுத்த வருடங்களில் 7 ஆம் 11 ஆம் மற்றும் 8 ஆம் 9 ஆந் தரக் கலைத்திட்டங்கள் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டது. 2009, 2010 களில் க.பொ.த. உயர்தர வகுப்புகளிலும் அவ்வணுகு முறையை விரிவுபடுத்துவதில் தேசிய கல்வி நிறுவக கலைத்திட்டம் வகுப்போர் வெற்றி கண்டுள்ளனர். எனவே, 12 ஆம் 13 ஆந் தரங்களின் பல்வேறு பாடங்களுக்கும் உரிய பாடத்திட்டங்களிலும், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளிலும் மாணவரிடத்தில் விருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள் என்பன தொடர்பான விரிவான தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இத்தகவல்கள், தங்கள் பாடம் தொடர்பான கற்றல் - கற்பித்தல் சந்தர்ப்பங்களை வகுத்துக் கொள்வதற்கு ஆசிரியர்களுக்கு உறுதுணையாக அமையும்.

கலைத்திட்டம் வகுப்போரால் கனிஷ்ட இடைநிலை (6 - 9), சிரேஷ்ட இடைநிலைத் (10 - 11) தரங்களுக்கு உரிய கலைத்திட்டங்களைத் தயாரிப்பதற்காகக் கையாண்ட அணுகுமுறையிலும் பார்க்க, க.பொ.த. உயர்தர பாடங்களுக்காக ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளைத் தயாரிப்பதற்காக, வேறுபட்ட ஓர் அணுகுமுறை அனுசரிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன். 6, 7, 8, 9, 10, 11 ஆந் தரங்களில் பாட விடயங்களைக் கற்பிக்கும்போது பின்பற்ற வேண்டிய கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் தொடர்பாக ஆசிரியர்கள் குறித்த மாதிரி ஒன்றின்பால் வழிப்படுத்தப்பட்டனர்.

க.பொ.த. உயர்தர வகுப்புக்குரிய பாடத்திட்டங்களும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளும் ஆசிரியர்களுக்கு தமது விருப்பின்படி செயற்படுவதற்கான சுதந்திரத்தை உயரிய மட்டத்தில் அனுபவிப்பதற்கு இடமளிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்தந்தப் பாட அலகுக்கு அல்லது பாடத்துக்கு (lesson) உரிய தேர்ச்சியையும், தேர்ச்சி மட்டத்தையும் விருத்தி செய்வதற்காக, உத்தேச கற்றல் முறைகளையும், தாம் விரும்பும் முறைகளையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும் என்பதே இம்மட்டத்தில் ஆசிரியர் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது. தாம் பயன்படுத்தும் கற்பித்தல் அணுகுமுறையை வெற்றிகரமான வகையில் பிரயோகித்து மாணவர்களை உத்தேச தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள் என்பவற்றின்பால் இட்டுச் செல்லும் பணியை ஆசிரியர்கள் குறைவேதும் இன்றி நிறைவேற்றுதல் வேண்டும். க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் முக்கியத்துவம், அப்பரீட்சை தொடர்பாக கல்வித் துறையைச் சேர்ந்த சகலரும் காட்டும் கரிசனை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டே ஆசிரியருக்கு இவ்வாறான சுதந்திரம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி ஆசிரியர்களுக்கு இன்றியமையாத ஒரு கைந்நூலாக அமையட்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். எமது பிள்ளைகளின் அறிவுக் கண்ணைத் திறப்பதற்கு, இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் அடங்கியுள்ள தகவல்களும் முறைகளும் அறிவுறுத்தல்களும் எமது ஆசிரியர்களுக்குச் சரியாக வழிகாட்டும் என பெரிதும் எதிர்பார்க்கின்றேன்.

**பேராசிரியர். லால் பெரேரா**
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.

# முன்னுரை

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 13 ஆந் தரத்திற் குரிய கற்றல் - கற்பித்தற் செயன்முறையை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு உங்களுக்கு துணையாக அமையும்.

இந்த வழிகாட்டி நூலைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட பாடத்திட்டம் இதுவரையில் நடைமுறையில் இருந்த பாடத்திட்டங்களிலிருந்து வேறுபட்டது. இது தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட பாடத்திட்டமாக அமைந்திருப்பதே அவ்வேறு பாடாகும். இங்கு தரப்பட்டுள்ள தேர்ச்சிகளை இத்தரத்திலேயே அடைய முடியாமற் போக இடமுண்டு. சிலவேளை அதற்காக நீண்ட காலம் எடுக்கலாம். எனினும் தேர்ச்சி மட்டங்களையும் அந்தந்த தேர்ச்சி மட்டத்தின் கீழ் தரப்பட்டுள்ள கற்றற் பேறுகளையும் இத்தரம் முடிவடைவதற்குள் அடைதல் அவசியமாகும். எனவே, இத்தரத்துக்குரிய பாடங்களைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு தேர்ச்சி மட்டங்களும் கற்றற்பேறுகளும் துணை யாகும். இக் கற்றற்பேறுகளை கற்றல் - கற்பித்தற் செயல்முறையின் குறிக்கோள்களை வகுத்துக் கொள்வதற்கும் வகுப்பறை மதிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்துக் கொள்வதற்கு மான நியதிகளாகப் பயன்படுத்துவது குறித்து, கவனம் செலுத்துவீர்கள் என எதிர்பார்க்கப் படுகின்றது. மேலும், இப்பாடத்தைப் பயிலும்போது உசாவுவதற்குரிய மேலதிக நூல்கள், இணையத் தளங்கள் (Web Side) முதலானவை குறித்து மாணவர்களுக்கு அறிவூட்டம் செய்வதற்கும் இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி துணையாக அமையும்.

நீங்கள் ஆக்கபூர்வமான ஓர் ஆசிரியர்களாகச் செயற்படுவீர்கள் எனும் எதிர்பார்ப்புடனே உத்தேசச் செயற்பாடுகள் இங்கு மாதிரி செயற்பாடுகளாகத் தரப்பட்டுள்ளன என்பதை கருத்தில் கொள்ளுங்கள். குறிப்பாக ஆசிரியர் மைய வகுப்பறைச் செயன்முறையை மாணவர் மையச் செயன்முறையாக மாற்றியமைத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, நூல் உசாவுகை, இணையப் பயன்பாடு முதலான தேடல்களின்பால் மாணவரை இட்டுச் செல்லத்தக்கவாறு கற்றல் வாய்ப்புக்களை உருவாக்குவது குறித்து மிகவும் கவனம் செலுத்தல் வேண்டும். கற்பித்தலின்போது, மரபு ரீதியான முறையில் குறிப்பு வழங்குவதற்குப் பதிலாக, கவர்ச்சிகரமான வகையில் புத்தறிவு, கோட்பாடுகள் முதலானவற்றை முன்வைத்தல் வேண்டும். அதற்காக இப்புதிய வகுப்பறையில் தொழினுட்பத்தை உச்ச அளவில் உபயோகப்படுத்தும் தொடர்பாடல் முறைகளை பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்த வேண்டும். எனவே, புதிய தொழினுட்பச் சாதனங்களை இயன்றளவுக்கு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவது அவசியமாகும்.

இப்பாடத்தை 13 ஆந் தரத்தில் கற்கத் தொடங்கும் உங்கள் மாணவர்களுக்கு, இப் பாடத்திட்டம் குறித்து தெளிவுபடுத்துவது பயனுடையதாகும். வருடத்துள் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் உங்களது கற்றல் - கற்பித்தல் திட்டங்களை அறிமுகஞ் செய்வதால்

கற்றலின்பால் சகல மாணவர்களதும் ஆர்வத்தைத் தூண்டலாம். மேலும், முழுப் பாடத் திட்டத்தையும் கற்பதற்காக மாணவர்களைப் பாடசாலையின்பால் ஈர்ப்பதற்கும் அது துணையாகும். புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பின் ஊடாக வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் தெள்ளத்தெளிவான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக இப்பாடத் திட்டத்தையும், ஆசிரியர் அறிவுரை வழிகாட்டியையும் பயன்படுத்தி உங்களது ஆக்கத் திறனை விருத்தி செய்து கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரிப்பதில் பங்களிப்புச் செய்த கல்வி மான்களுக்கும் ஆசிரியர்களுக்கும், தேசிய கல்வி நிறுவக அதிகாரிகளுக்கும் எனது விசேட நன்றியைத் தெரிவிக்கின்றேன். இப்பணியில் வழிகாட்டல் வழங்கிய பணிப்பாளர் நாயகம் பேராசிரியர். லால் பெரேரா அவர்களுக்கும் அச்சிட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுள்ள கல்வி வெளியீட்டு ஆணையாளர் உட்பட ஏனைய பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். இதில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை எனக்கு அனுப்பி வைப்பீர்களாயின் நன்றி உடையவன் ஆவேன்.

**விமல் சியம்பலாகொட,**
உதவிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்.

# அறிமுகம்

தேசிய கல்வி நிறுவக சமயத் துறையின் ஊடாக தரம் - 13 இந்து சமய புதிய பாடத்திட்டத்திற்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியைத் தயாரித்து, பாடசாலைத் தொகுதிக்கு அறிமுகம் செய்து வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியை அடைகின்றோம்.

பாடசாலைகளில் சமய பாடம் கலைத்துறைப் பாடமாகக் கொள்ளப்பட்டாலும், வாழ்க்கையில் நேரடியாகப் பங்கெடுக்கும் விடயங்கள் பல அதில் உள்ளன. அதனாற் கலைத்துறை மாணவர்கள் மட்டுமன்றி, எல்லாத் துறையினரும் இந்து சமய பாடத்தைக் கற்க முன்வர வேண்டும். இதற்கு இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களின் அர்ப்பண சிந்தனை, முயற்சி என்பன தேவையாகும். அவ்வகையில் இப்பாடத்தை மாணவர் விருப்புடன் பயிலக்கூடியதாக ஆசிரியரின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது. இப்பாடம் பரீட்சைக்குரியது மட்டுமன்றி, முழுவாழ்க்கைக்கும் தேவையான அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியானது இரண்டு பகுதிகளைக் கொண்டது.

- விடய உள்ளடக்க வழிகாட்டித் தொடர்
- பாடசாலை மட்டக் கணிப்பீடு

என்பன அவையாகும்.

மாணவரிடம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான கற்றற் பேறுகள், உத்தேச விடய உள்ளடக்க வழிகாட்டிகள், கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள், உசாத்துணைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்நூலின் முதற்பகுதி அமைகின்றது. இவை யாவும் ஆசிரியர்களுக்கான வழிகாட்டலையே வழங்குகின்றன. எனவே, ஆக்கபூர்வமான ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனைக்கும் ஏற்றதான கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள ஆசிரியர்களுக்கு பூரண உரிமை உண்டு.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியின் இரண்டாம் பகுதியில் கற்றல் - கற்பித்தற் செயற் பாடுகளை மேலும் விருத்தி செய்வதற்குரிய பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக் கருவிகள் தவணைக்கு மூன்று என்ற ரீதியில் தரம் - 13 க்கு 9 கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கணிப்பீட்டுக் கருவிகள், வகுப்பறைக்கு வெளியேயும் மாணவர்கள் கற்பதற்குத் துணைபுரிவதுடன், குழுச் செயற்பாடு, ஆய்வுகள் என்பவற்றுக்கும் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றின் விருத்திக்கும் இட்டுச் செல்லும் என நம்புகின்றோம்.

| | | |
|---|---|---|
| **ஆலோசனையும் வழிகாட்டலும்** | : | **பேராசிரியர். லால் பெரேரா**<br>பணிப்பாளர் நாயகம்,<br>தேசிய கல்வி நிறுவகம்.<br>**திரு. விமல் சியம்பலாகொட**<br>உதவிப் பணிப்பாளர் நாயகம்,<br>மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞானப் பிரிவு,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **பணிப்பு** | : | **கலாநிதி மாபுல்கொட சுமணரத்ன தேரர்**<br>பணிப்பாளர்,<br>சமயக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம். |
| **இணைப்பாக்கம்** | : | **செல்வி. வ. விஜயலெட்சுமி**<br>பிரதான செயற்திட்ட அதிகாரி,<br>சமயக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம். |
| **விடய ஆலோசனை** | : | **பேராசிரியர். வை. கனகரத்தினம்**<br>தமிழ்த் துறை,<br>பேராதனைப் பல்கலைக்கழகம்.<br>**பேராசிரியை. கலைவாணி இராமநாதன்**<br>சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.<br>**திருமதி. நா. செல்வநாயகம்**<br>சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.<br>**திரு. எஸ். முகுந்தன்**<br>விரிவுரையாளர்,<br>இந்து நாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம். |
| **எழுத்தாளர் குழு** | : | **திரு. பெ. பேரின்பராசா**<br>ஆசிரியர், மட் / களுதாவளை ம.வி.<br>**திரு. செ. கமலநாதன்**<br>ஆசிரிய ஆலோசகர், பட்டிருப்பு கல்வி வலயம்.<br>**திரு. ந. பத்மானந்தன்**<br>அதிபர், புத் / உடப்பு த.ம.வி.<br>**திருமதி.ச. யோகராஜா**<br>ஆசிரிய ஆலோசகர், திருக்கோவில் கல்வி வலயம்.<br>**திருமதி.அ.நி.பத்மநாதன்**<br>ஆசிரிய ஆலோசகர், நுவரெலிய கல்வி வலயம்.<br>**செல்வி. வ. விஜயலெட்சுமி**<br>பிரதான செயற்திட்ட அதிகாரி,<br>சமயக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம். |
| **பதிப்பு** | : | **செல்வி. வ. விஜயலெட்சுமி**<br>பிரதான செயற்திட்ட அதிகாரி,<br>சமயக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம். |
| **கணினித் தொழினுட்பம்** | : | **செல்வி. கமலவேணி கந்தையா**<br>விஞ்ஞான தொழினுட்பப் பீடம், தேசிய கல்வி நிறுவகம். |
| **அட்டைப் படம்** | : | **திரு. இ.எல்.கே.லியனகே**<br>அச்சகப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம். |
| **காரியாலய உதவி** | : | **திருமதி. எஸ். சி. பிரியதர்ஷினி**<br>சமயக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.<br>**திரு. எச். பி. காமினி ரோகண**<br>சமயக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம். |

# உள்ளடக்கம்


| **விடயம்** | **பக்கம்** |
|---|---|
| முகவுரை | iii |
| முன்னுரை | iv |
| அறிமுகம் | vi |
| எழுத்தாளர் குழு | viii |
| 1. விடய உள்ளடக்க வழிகாட்டித் தொடர் | 01 |
| 2. பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம் | 140 |
| 3. பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக்கருவிகள் | 143 |

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 6.0** | : | இந்து சமய தத்துவ சிந்தனைகளின் அடிப்படைக் கருத்துக்கள் அவற்றின் உண்மைத் தன்மை என்பவற்றைக் காரண, காரியங்களூடாக முன்வைப்பர். |
| **தேர்ச்சி மட்டம் 6.1** | : | அறிவுக்குரிய வழிகளை எடுத்துக்காட்டுகளுடன் முன்வைப்பர். |
| **பாடவேளைகள்** | : | 10 |

**கற்றற் பேறுகள்:**

- அளவை என்பதன் விளக்கத்தை அறிந்து கூறுவர்.
- சைவ சித்தாந்திகள் ஏற்றுக் கொள்ளும் அறிவைப் பெறுவதற்குரிய அளவைகளின் வகையீடுகளைப் பட்டியற்படுத்துவர்.
- புலக்காட்சி, அனுமானம், உரை என்பவற்றின் விளக்கம், வகைகள் முதலானவற்றைத் தொகுத்து எழுதுவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

## 6.1 அறிவுக்குரிய வழிகள்

### 6.1.0 அறிமுகம்

- அறிவுக்குரிய வழிகள் தமிழில் அளவை என வழங்கப்படுகின்றன. இது வடமொழியில் பிரமாணம் எனப்படுகிறது.
- மனிதனுடைய அறியாமையே ஆன்மீக இலட்சியத்தை அடைவதற்குத் தடையாக அமைவதோடு, துன்பத்துக்கும் காரணம் எனப்படுகிறது.
- இந்திய தத்துவ முறைகளிலும் இந்து தத்துவ முறைகளிலும் அறிவைப் பற்றிய கருதுகோள்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.
- இந்து தத்துவ சிந்தனைகளில் அறிவு, அதனைப் பெறும் வழிகள் என்பன நுண்மையாக ஆராயப்பட்டுள்ளன.
- அறிவை அளக்கக்கூடிய கருவி எதுவோ அதுவே அளவை அல்லது பிரமாணம் என சாத்திரங்கள் கூறுகின்றன. அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள் ஆகிய மூன்று உறுப்புக்களும் அளவையியலில் இன்றியமையாதவையாகும்.
- இந்திய தத்துவ வாதிகள் காண்டல், கருதல், உரை, ஒப்பு, பொருள், இன்மை, ஒழிபு, உண்மை, உலகுரை, இயல்பு என பல பிரமாணங்களை கொள்வர்.

  | | | | |
  |---|---|---|---|
  | **(உ-ம்)** | உலகாயதர் | - | காண்டல் மட்டுமே பிரமாணமாகக் கொள்வர். |
  | | வைசேடிகர், பௌத்தர் | - | காண்டல், கருதல் எனும் இரண்டையும் பிரமாணம் என்பர். |

- சைவசித்தாந்திகள் காண்டல், கருதல், உரை எனும் மூன்றையும் பிரமாணங்களாகக் கொள்கின்றனர்.

### 6.1.1 அறிவுக்குரிய வழிகள்

**(அ) புலக்காட்சி - காண்டல்**

- அறியப்படுகின்ற பொருள், புலனுறுப்பு ஆகிய இரண்டுக்கும் இடையிலான நேரடித் தொடர்பினால் அறிதல் நிகழ்கிறது. இதுவே புலக்காட்சியின் பயில்நிலையாகும். எனவேதான் ''புலக்காட்சி'' என்பதற்கு ''நேரடியாக அறிதல்'' என்று பொருள் விளக்கம் கொள்ளப்படுகிறது.
- யோகிகளதும் ஞானிகளதும் சில சாதனைகளால் புலனுறுப்புடன் நேரடியான தொடர்பு இன்றியும் அறிதற் செயற்பாடு நடைபெறலாம். இது புறநடையாகும்.
- புலக்காட்சி 2 வகைப்படும்.

  (1) நிர்விகல்பம் (2) சவிகல்பம்
- குறித்த ஒரு பொருளைப் பருமையானதாக மட்டும் அறிதல், அதன் குண இயல்பு களேதும் குறிக்கப்படாமல் வெறுமனே ''அது'' என்று மட்டும் அறிவது நிர்விகல்பம் ஆகும்.
- சவிகல்பம் என்பது இதன் மறுதலையாகும். அதாவது குறித்த பொருளை அதன் விசேடங்களுடன், குணாம்சங்களுடன் அறிவது சவிகல்பப் புலக்காட்சியின் பயில்நிலை ஆகும்.
- இவற்றை விட காட்சியளவை மேலும் நான்கு வகைப்படும். வாயிற்காட்சி, இந்திரியக் காட்சி, தன்வேதனைக்காட்சி, யோகக்காட்சி என்பன அவையாகும்.

**(ஆ) கருதல்**

- காட்சியளவை போல நேரடியாக அன்றி யாதாயினும் ஒன்றின் ஊடாக (துணை கொண்டு), பெறப்படுகின்ற அறிவாகவே இது விளங்குகிறது. இதன் காரணமாக கருதல் அளவையினைப் ''பின்வரும் அறிவு'' அல்லது ''ஊடக அறிவு'' என்று குறிப்பிடுவர்.
- எல்லாக் கருதல் அளவையிலும் மூன்று நிலைகள் உள்ளன.

  (1) நிறுவப்பட வேண்டுவதாயுள்ள எழுவாய்

  (2) நிறுவப்படவேண்டிய குணவியல்பு (சாத்தியம்)

  (3) நிறுவப்படக்கூடிய வழி (சாதனம் / ஹேது / இலிங்கம்)
- பொதுவாகக் கருதல் அளவையானது தன்பொருட்டனுமானம், பிறர் பொருட்டனுமானம் என வகுத்து நோக்கப்படுகிறது. ஒருவன் ஒரு விடயம் பற்றித் தனக்குள் துணிய முற்படுகின்ற சந்தர்ப்பத்தில் தன்பொருட்டனுமானம் தொழிற்படுகிறது. தன்பொருட் டனுமானத்தையே ஸ்வார்த்த அனுமானம் என்றும் கூறுவர்.
- இது ஒருவனின் தனிப்பட்ட சிந்தனைக்குள்ளேயே நிகழ்ந்து விடுவதனால் காரண காரியத் தொடர்புகளைப் பிறருக்கு எடுத்துக்காட்டி, நிறுவவேண்டிய தேவை அங்கே ஏற்படுவதில்லை.

- ஆனால் தான் உணர்ந்த ஒன்றைப் பிறர் ஏற்றுக்கொள்ளும்படி வெளிப்படுத்தும் பொழுது அங்கே படிநிலையான நிறுவுகை இன்றியமையாததாகிறது. இதுவே பிறர் பொருட்டனுமானம் ஆகும். இதனைப் பரார்த்த அனுமானம் என்றும் சுட்டுவர்.
- பிறர் பொருட்டனுமானத்தின் பயில்நிலைக்கான எடுத்துக்காட்டுப் பின்வருமாறு:

  (1) மலையின் கண் நெருப்பு உள்ளது. (பிரதிஞ்ஞை)

  (2) ஏனெனில், அங்கு புகை இருக்கிறது. (ஹேது)

  (3) எங்கெல்லாம் புகை உள்ளதோ அங்கெல்லாம் நெருப்புண்டு. (உ-ம்: அடுப்படி)

  (4) நெருப்போடு இணைபிரியாத உறவுடைய புகை இம்மலையில் உள்ளது. (உபநயம்)

  (5) எனவே இம்மலையின் கண் நெருப்பு உள்ளது. (நிகமனம்)
- நெருப்புடன் எப்பொழுதும் இணைந்தே வருவதாக அறியப்பட்ட புகை பற்றிய புலக் காட்சியினை ஆதாரமாகக் கொண்டே மலையில் நெருப்பு உள்ளது என்ற விடயம் உய்த்துணரப்படுகிறது.

## (இ) உரையளவை

- குறித்த விடயம் பற்றி உணர்ந்து தெளிந்த; அவ்விடயம் பற்றிக் கருத்துரைக்கும் அதிகாரமுடைய ஒருவருடைய கூற்றே உரையளவையாகக் கருதத்தக்கது. சான்றுரை, ஆப்தவாக்கியம், ஆகமப்பிரமாணம், சுருதிப்பிரமாணம் என்ற பெயர்களும் உரை யளவைக்குண்டு.
- உரையளவை, லௌகீகம் என்றும் வைதீகம் என்று வகையீடு செய்யப்படுகிறது. உலகியல் சார்ந்த விடயங்கள் பற்றிய சான்றுரைகளை லௌகீகம் என்பர்.
- பரமார்த்திக விடயங்கள் தொடர்பான தத்துவநிலை ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப் படுகின்ற சான்றுரைகள் இந்து மரபுப்படி ''ஆப்தன்'' ஆகிய இறைவனுடைய வாக்கியங் களே ஆகும்.
- பொதுவாக வேத வாக்கியங்களை (வைதீகம்) இவ்வாறு ஆப்தவாக்கியங்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்ற மரபு இந்துக்களிடம் உண்டு. சைவ தத்துவங்கள் சிவா கமங்களையும் ஆப்தப் பிரமாணங்களாக ஏற்கின்றன.
- உரையளவை மூன்று வகைப்படும். அவையாவன: மந்திரம், தந்திரம், உபதேசம் என்பன.

  (i) **மந்திரம் என்பது** மனதிலே குறித்த ஒரு பொருளை, அல்லது இலக்கினை நிலைநிறுத்தி, குறித்த ஒரு மந்திரப் பிரயோகத்தால் உச்சாடனம் செய்தல்.

  (ii) **தந்திரம் என்பது** ஆகமப் பிரமாணத்துடன் கூடிய வேதாகம உரையளவை.

  (iii) **உபதேசம் என்பது** குருவினால் பக்குவமுள்ள சீடருக்கு உபதேசித்தல்.

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படி** I அறிவுக்குரிய வழிகளையும் அவை ஒவ்வொன்றின் சிறப்பையும் மாணவர் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி** II: மாணவர் அறிவுக்குரிய வழிகளான புலக்காட்சி, அனுமானம், உரை பற்றிய தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்வ தற்கான உதவிகளை வழங்குங்கள்.

**படி** III: மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து, தலைப்புக்களை வழங்கி, அத்தலைப்புகளின் கீழ் வரக்கூடிய விளக்கங்கள், வகைகள் முதலான வற்றைத் தேடித் தொகுக்குமாறு கூறுங்கள்.

**படி** IV: தொகுத்த விடயங்களை வகுப்பறையில் முன்வைக்குமாறு கூறுங்கள்.

**படி** V: திருத்தங்களுடன் கூடிய தொகுப்பினை வகுப்பறையில் காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**உசாத்துணைகள்:**

| | | | |
|---|---|---|---|
| (1) | தருக்க சங்கிரகம் | - | சிவப்பிரகாசம் |
| (2) | அறிவாராய்ச்சியியல் | - | சோ. கிருஷ்ணராசா |
| (3) | Indian Philosophy | - | Vol II, S. Rathakrishan |
| (4) | இந்திய தத்துவ ஞானம் | - | கி. இலட்சுமண ஐயர் |
| (5) | சிவஞானசித்தியார் | - | திருவிளங்கம் புத்துரை |
| (6) | சைவசித்தாந்த மெய்ப்பொருளியல் | - | கலைவாணி இராமநாதன் |

**தேர்ச்சி 6.0** : இந்து சமய தத்துவ சிந்தனைகளின் அடிப்படைக் கருத்துக்கள், அவற்றின் உண்மைத்தன்மை என்பவற்றைக் காரண, காரியங்களூடாக முன்வைப்பர்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : இந்து தத்துவ அடிப்படைச் சிந்தனைகள் பற்றிய விளக்கத்தைப் பெறுவர்.

**பாடவேளைகள்** : 30

**கற்றற் பேறுகள்:**

- ‘தரிசனங்கள்’ என்ற எண்ணக்கருவை விளங்கி வெளிப்படுத்துவர்.
- வைதீக, அவைதீக தரிசனங்களை வேறுபடுத்தி, அவை பற்றி விபரிப்பர்.
- இந்து தரிசனங்களிலுள்ள அடிப்படை எண்ணக்கருக்களை ஒழுங்குமுறையில் தொகுத்து எழுதுவர்.
- இந்து தத்துவ சிந்தனைகளில் இந்து தரிசனங்கள் பெறும் இடத்தை மதிப்பீடு செய்வர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

## 6.2.1 இந்து தரிசனங்கள்

**அறிமுகம்**

- இந்து தத்துவ சிந்தனைகளில் இந்து தரிசனங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.
- இந்து தரிசனங்கள் காலத்தால் முற்பட்டவை.
- இந்து தரிசனங்கள் ஆறு ஆகும். அவை:

  சாங்கிய - யோகம்

  நியாய - வைசேடியம்

  மீமாம்சை - வேதாந்தம் என்பனவாம்.

## 6.2.2 சாங்கியம்

- இந்து தரிசனங்களில் ஒன்றாக சாங்கிய தரிசனம் விளங்குகின்றது. இது இருமைவாதக் கோட்பாடாக (வாதமாக) அமைந்துள்ளது.
- யோக தரிசனத்துடன் தொடர்பு உடையதாக சாங்கிய தரிசனம் விளங்குகின்றது.
- சாங்கியம் என்னும் சொல் உயர் அறிவு எனப் பொருள்படும். இயற்கை, உலகு என்பன எவ்வாறு தொழிற்படுகின்றன, எதற்காக இயற்கையும் உலகும் படைக்கப் பட்டன என்பனவற்றை ஆய்வு செய்யும் தத்துவமாக சாங்கிய தரிசனம் விளங்குகின்றது.

- இயற்கையும் உலகும் தம்முள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதைக் கூறும் அதேவேளை இயற்கையின் அடிப்படைத் தத்துவத்தை விளக்கும் தரிசனமாகவும் சாங்கிய தரிசனம் அமைந்துள்ளது.
- சாங்கிய தரிசனமானது இயற்கை தொழிற்படுவதற்கு காரணமான மனிதனைப் பற்றியும் விபரிக்கின்றது. இயற்கையை விபரிக்கும்போது பிரகிருதி தத்துவமாகவும் மனிதனை விபரிக்கும்போது புருட தத்துவமாகவும் சாங்கியம் விரித்துரைக்கின்றது.
- சாங்கிய தரிசனம் புருடன், பிரகிருதி என்றும் இரு பதார்த்த விளக்கமுடையது எனக் குறிப்பிடுகின்றது. சாங்கியம் இறைக் கோட்பாட்டை ஏற்காதபோதும் இந்து தரிசனங்களில் ஒன்றாகவே ஏற்கப்பட்டுள்ளது. ஆனால் அது வைதீக தரிசனமாகவே கருதப்படுகின்றது. ஏனெனில் அது வேத இலக்கியங்களை ஆப்த வாக்கியமாகக் கொண்டிருப்பதே காரணமாகும்.
- சாங்கிய தரிசனம் கி.பி. 2 ஆம் நூற்றாண்டு காலம் தொடக்கம் பிரதான தத்துவ தரிசனமாக அமைந்திருந்தது.
- கபிலருடைய சாங்கிய சூத்திரமும், ஈஸ்வர கிருஷ்ணருடைய சாங்கிய காரியையும் சாங்கிய தரிசனத்தின் பிரமாண நூல்களாக விளங்குகின்றன. மகாபாரதத்திலும் சாங்கியம் என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- பகவத்கீதையில் சாங்கிய யோகம் ஆன்மச் செயற்பாட்டினை எடுத்துக் காட்டுகின்றது. இதனால், இந்து தத்துவ மரபில் சாங்கிய தரிசனம் செல்வாக்குப் பெற்றிருந்திருந்ததெனலாம்.

**சாங்கியம் கூறும் புருட தத்துவம்**

- புருடனின் இயல்புகள் பல. அவையாவன:
  - (1) அறிவுடையது
  - (2) நித்தியமானது (என்றுமுள்ளது; அழிவற்றது)
  - (3) இயக்கமற்றது
  - (4) போக்தாவே அன்றிக் கருத்தா அன்று.
- சாங்கியக் கோட்பாட்டில் புருடன் என்பது போக்தா எனக் கூறப்பட்டுள்ளது. போக்தா என்பது போகங்களை அனுபவிப்பது என்று பொருள் கொள்ளப்படும்.
- புருடன் எனும் போக்தாவுக்கு போகத்தைப் படைக்கும் சக்தியாக பிரகிருதி உள்ளது. அதனால் புருடன் பிரகிருதியால் தளைப்படுத்தப்பட்டுள்ளது என்பர்.
- ஆன்ம உண்மையினை காட்சி, அனுமானம் ஆகிய வழிகளில் அறிந்து கொள்ள முடியும் என்பதையும் சாங்கியம் விளக்குகின்றது.
- பிரகிருதி படைப்பவற்றை அனுபவிக்க ஒரு சக்தி வேண்டும். அச்சக்தியே புருடன் என சாங்கியம் குறிப்பிடும்.

- சாங்கிய தத்துவம், வீடுபேறு பற்றியும் குறிப்பிடும். புருடனே வீடுபேறு அடையும் என்பது சாங்கியத்தின் கருத்தாகும்.
- பிரகிருதியின் பிணைப்பில் இருந்து விடுதலை அடையும்போது முத்தி கிடைக்கும் என்றும் சாங்கியம் குறிப்பிடுகின்றது.
- புருடனை (ஆன்மாவை) ஆத்மீக விடுதலை நோக்கியதாகக் கூறியதாலேயே இந்து தரிசனங்களில் ஒன்றாக சாங்கியம் முன்வைக்கப்பட்டுள்ளது.

**பிரகிருதித் தத்துவம்:**

(1) அறிவற்றது

(2) சடப்பொருள்

(3) நித்தியமானது (அழிவற்றது, என்றுமுள்ளது)

(4) இயக்கமற்றது (புருட சந்நிதி மாத்திரத்தில் இயங்குவது)

- மூலப்பொருள் ஒன்று; இன்ப துன்பங்களால் தீண்டப்படாதது. அதுவே பிரகிருதி என சாங்கியம் குறிப்பிடுகின்றது.
- பிரகிருதியே பிரபஞ்சமாக விரிவடைகின்றது. புருடனுக்காகவே பிரபஞ்சம் விரிவடைந்து, தனு கரண புவன போகமாக மாற்றமடைகிறது. பிரகிருதி தாமாகவே விரிவடையும். அதனை செயற்படுத்த ஒருவன் தேவை இல்லை. இவ்வாறு கடவுளை மறுத்த சாங்கியம் புருடன் என்னும் ஆன்மாவை மேன்மைப்படுத்திக் கூறுகின்றது. மனிதனை சம்சாரச் சுழற்சிக்கு உட்படுத்தி, விடுதலைக்கு தடையாக விளங்குவது பிரகிருதியாகும்.
- பிரகிருதி புருடனுடைய போகத்திற்காகப் பொருட்களை உற்பத்தியாக்கியவண்ணம் இருப்பது. சாங்கியக் கருத்தாக்கத்தின்படி பிரகிருதிக்கு முடிவு கிடையாது. சதா இயங்கிக் கொண்டிருப்பது. ராஜச, தாமச, சாத்வீகம் எனும் முக்குணங்களினால் ஆனது. படைக்கப்படும் பொருட்களும் இம் முக்குண அமைப்புடையனவாகும்.
- பிரகிருதியின் உற்பத்தி, ஒடுக்கம் பற்றிய சிந்தனையில் சாங்கியம் சற்காரியவாதக் கோட்பாட்டைப் பயன்படுத்துகிறது. முக்குணங்களின் சேர்க்கையே உலகப் பரிமாணமம்; அதுபோன்று முக்குணங்கள் மீண்டும் தனித்தனியாகப் பிரிதல், ஒடுக்கம் எனப்படும், பிரகிருதியின் இயக்கம் ஒருபோதும் நிற்பதில்லை.
- பிரகிருதி, புருடனுடைய போகத்திற்காகவே பொருட்களை உற்பத்தி செய்கின்றது. புருடனானவன் பிரகிருதியின் பிடியில் இருந்து விடுபட்டுக் கொள்வதே சாங்கியம் கூறும் கைவல்ய மோட்சமாகும்.
- காரண, காரிய அடிப்படையில் பிரகிருதி காரணம்; உலகு காரியம். ஆனால் புருடன் என்பது காரணமும் இல்லை, காரியமும் இல்லை எனக் கூறப்படுகின்றது.

- சாங்கியம் காரண, காரியக் கோட்பாட்டை வலியுறுத்துவதால் சற்காரியவாதக் கொள்கை என்றும் வலியுறுத்தப்படுகிறது. இதுவே சாங்கியத்தினுடைய சிறப்பியல்பும் அதி உன்னத புலமைத்துவமும் ஆகும். இக் காரண, காரியக் கோட்பாடே பிற்கால இந்து தரிசனங்கள் அனைத்திலும் சற்காரியவாதமாகவும், அசற்காரிய வாதமாகவும் விளக்கமுறுகின்றன.
- சாங்கியம் இருபத்தினான்கு பிரகிருதி தத்துவங்களையும் இருபத்தைந்தாவதாகப் புருட தத்துவத்தினையும் ஏற்றுக் கொண்டுள்ளது.
- சாங்கியம் பிரகிருதி, புருடன் ஆகிய இரண்டு மூலங்களை அடிப்படையாகக் கொண் டிருப்பதாலேயே இது இருமைவாதம் எனச் சிறப்பிக்கப்படுகிறது.

### 6.2.3 யோகம்

- இந்து தரிசனங்களில் யோக தத்துவம் ஒரு முக்கியமான பிரிவாகும். யோக தத்துவம் என்பதன் பொருள்,

  (1) பிரகிருதியிடமிருந்து பிரிதல் (2) இறைவனிடம் இணைதல்
  என இருவகையாக விளக்கப்படும்.
- யோக தத்துவத்தின் பிரமாண நூல் யோக சூத்திரமாகும். அதன் ஆசிரியர் பதஞ்சலி முனிவர் ஆவார்.
- யோக தத்துவம் பற்றிய கருத்துக்கள், பகவத்கீதையிலும் விளக்கப்பட்டுள்ளது.
- சாங்கியம் ஏற்றுக் கொண்ட புருடன், பிரகிருதி என்னும் அடிப்படைக் கோட்பாடுகளை, யோக தத்துவமும் ஏற்றுக் கொள்கிறது. இதனால், யோக தத்துவம் சாங்கிய யோகம் என்றும் அழைக்கப்படும்.
- எனினும் சாங்கியம் ஏற்றுக் கொள்ளாத இறைக்கோட்பாட்டை யோகம் ஏற்றுக் கொள்வது இதன் தனிச் சிறப்பாகும்.
- இதுவே சாங்கியத்துக்கும் யோகத்துக்குமுள்ள மிகப் பெரிய வேறுபாடாகும். எனவே யோகம் ஈஸ்வர சாங்கியம், ஷேஷ்வர சாங்கியம் எனும் சிறப்புப் பெயர்களைப் பெற்றுள்ளது.
- பதஞ்சலி முனிவர் யோகம் பற்றிய நான்கு பிரதானமான விடயங்களை முன்வைக் கின்றார். அவை:

  (1) சமாதி (2) சாதனம் (3) விபூதி (4) கைவல்யம்

  என்பனவாகும்.
- இந்த நான்கு விடயங்களும் நான்கு அத்தியாயங்களை உள்ளடக்கியதாகவும், 195 பாடல்களைக் கொண்டதாகவும், பதஞ்சலி முனிவரின் யோகசூத்திரம் அமைந் துள்ளது.

- சாங்கியம் கூறும் பிரகிருதித் தத்துவம், புருட தத்துவம் என்பவற்றை யோக தத்துவமும் குறிப்பிடுகின்றது. ஆனால் யோக தரிசனமானது புருடனுக்கு ஏற்பட்டுள்ள அறியாமை, பிரகிருதித் தொடர்பாலே ஏற்பட்டதெனக் குறிப்பிடுகிறது.
- இத்தகைய (புருட - பிரகிருதி) உறவு மாயைத் தோற்றமாகும். இந்த உறவில்லாது புருடன் தனது சுயாதீன நிலையை உணர்வதே கைவல்யம் எனப்படும்.
- கைவல்ய நிலையே யோகத்தின் மிகச் சிறந்த சாராம்சமாகக் கூறப்படுகிறது.
- கைவல்ய நிலையை அடையச் செய்யும் முறைகளில் ஒன்றாகவே யோகம் சுட்டிக் காட்டப்படுகிறது.
- கைவல்ய நிலை என்பது கேவல நிலை என்னும் சொல்லில் இருந்து தோன்றியதாகும். கேவல நிலை என்பது தனித்திருத்தல் எனப் பொருள்படுகிறது. புருடன் காம, குரோத, மோகம் என்னும் உணர்வுகளில் இருந்து விடுபட்டு, தனித்திருக்கும் நிலையே கைவல்ய நிலையாகும்.
- மன இயக்கங்களைத் தடுக்கும் நோக்கில் அட்டாங்க யோகப் பயிற்சிகள் போதிக்கப் படுகின்றன. இத்தகைய யோகப் பயிற்சிகளில் பின்வருவன அடங்கும்.

| | | |
|---|---|---|
| இயமம் | - | தீய செயல்களைத் தவிர்த்தல் |
| நியமம் | - | ஒழுக்க விதிகளைக் கடைப்பிடித்தல் |
| ஆசனம் | - | இருத்தல், உடலை தியானத்திற்கான வழியில் தயார்ப்படுத்தல் |
| பிரணாயாமம் | - | மூச்சைப் பயிற்றுவிக்கும் பயிற்சி |
| பிரத்தியாகாரம் | - | புலனடக்கம் |
| தாரணை | - | மன அடக்கம், குறித்த விடயத்தில் மனதைப் பதித்தல். |
| தியானம் | - | அச்சிந்தனையில் ஆழ்ந்து ஈடுபடுதல்; சிந்தனையில் வியாபித்தல். |
| சமாதி | - | தியானத்திலே நிலைபெற்றிருத்தல் |

என இந்நிலை விரிவடையும். சமாதி நிலையே கைவல்யம் என யோக சூத்திரம் கூறுகின்றது.

### 6.2.4 வைசேடிகம்

**அறிமுகம்**

- சாங்கியத்திற்கு அடுத்தும், நியாயத்திற்கு முன்னருமாகத் தோற்றம் பெற்ற தரிசனக் கொள்கையே வைசேடிகம்.
- பௌத்தத்திற்கும் சமணத்திற்கும் முந்தியதென்ற நிலைப்பாடும் உண்டு.
- வைசேடிகம் பன்மையியலான மெய்மைவாதமாகும். அது பிரபஞ்சத்திலுள்ள ஆன்மாக்கள் பல்லியல்பான தனித்தன்மையுடையன எனக் கருதுகிறது.

- இத்தரிசனத்தின் ஸ்தாபகர் கணாதர். அவர் இயற்றிய நூலின் பெயர் வைசேடிய சூத்திரம். இந்த நூலிற்கு பதார்த்த தர்ம சங்கிரகம் என்றதொரு உரை நூலை பிரசத்தபாதர் என்பார் இயற்றியுள்ளார். உதயணர், சிறிகரர் ஆகியோர் பிரசத்தபாதரின் உரைநடையை விதந்து பாராட்டியுள்ளனர். இந்நூல் பிற்காலத்தில் நியாய தரிசனத்துடன் இணைக் கப்பட்டது. நியாய தரிசனக் கொள்கையினர் வைசேடியத்தின் உள்பொருளியற் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டு, தமது அறிவாராய்ச்சியற் கொள்கையின் துணையுடன் அதனை விருத்தி செய்தனர்.

- சிவாதித்தர், லொகாசி, பாஸ்கரர், விசுவநாதர், அன்னம்பட்டர் ஆகிய பிற்காலச் சிந்தனையாளர்கள் நியாய வைசேடிகர் என அழைக்கப்பட்டனர்.

### பதார்த்தம்

- வைசேடிகரின் அபிப்பிராயப்படி பிரபஞ்சம் ஆறு அல்லது ஏழு வகைப் பதார்த்தங் களாலானது. அறிவின் விடயமாயுள்ள அனைத்தும் பதார்த்தங்கள் எனப்படும். ஆரம்பத்தில் வைசேடிகர் ஆறு வகைப் பதார்த்தங்களையே ஏற்றுக் கொண்டிருந்தனர். அபாவம் என்ற வகையும் பிற்காலத்திலே இத்தரிசனத்தில் இணைக்கப்பட்டது.

- அறிவிற்கு விடயமாயுள்ள பொருட்கள் அனைத்தையும் வைசேடிகம் பாவம், அபாவம் என்ற இரு பிரிவுகளாக வகுத்துக் கொண்டது. வைசேடிகரின் முதலாவது வகை யீடுகள் பாவத்தில் உள்ளடங்கும். அபாவம் ஏழு வகையீடுகளைக் கொண்டது. அறிவின் விடயமாயுள்ள அனைத்தும் வைசேடிகரின் கருத்துப்படி பதார்த்தம் என்ப தில் உள்ளடக்கப்படும். வைசேடிகர் கூறும் 7 வகைப் பதார்த்தங்களாவன:
  1. திரவியம் 2. குணம் 3. தர்மம் 4. சாமானியம் 5. விசேடம் 6. சமவாயம்
  7. அபாவம் என்பனவாகும்.

### திரவியம் (பொருள்)

- கர்மம் (இயக்கம்), பண்பு என்ற இரண்டையும் உள்ளடக்கியது திரவியம். எல்லா பொருட்களின் தோற்றத்திற்குரிய சடக்காரணம் இதுவாகும். திரவியமின்றி, பண்பை அழிக்கவோ அன்றி, படைக்கப்படவோ முடியாதது.

- சடப்பொருள், ஆன்மப்பொருள் என்ற இரண்டையும் உள்ளடக்கிய வகையில் திரவியம் 9 வகைப்படும்.

| | | |
|---|---|---|
| (1) நிலம் (பிருதிவி) | (2) நீர் (அப்பு) | (3) நெருப்பு (தேஜஸ்) |
| (4) காற்று (வாயு) | (5) ஆகாயம் (ஈதர்) | (6) காலம் |
| (7) வெளி | (8) ஆத்மன் | (9) மனம் (உளம்) |

- நிலம், நீர், நெருப்பு, வாயு என்ற நான்கும் அடிப்படை மூலப்பொருட்களான அணுவியல்பினது. ஆகாயம் அணுவியல்பானதல்ல. அது முடிவிலியானதும், உள்ளார்ந்ததுமாகும். இவ்வைந்தும் பூதங்கள் (பௌதீகவியல்பானவை) என அழைக்கப்படும். இவற்றின் குணாதிசயங்கள் முறையே மணம், சுவை, நிறம், ஸ்பரிசம், சப்தம் என்பனவாகும். இவை முறையே எமது ஐம்புலன்களாலும் உணரக் கூடியன.

- காலமும் வெளியும் ஆகாயத்தைப் போலவே ஏகமாயும், நித்தியமாயும் சகலவற்றிலும் வியாபித்துள்ளது. அது பிரிக்கமுடியாததும் எல்லையற்றதுமாகும்.

**குணம் (இயல்பு)**

- இது திரவியம் போல தனியான இருப்புடையதல்ல. திரவியத்தில் உள்ளடங்கியது. இதனை சடப்பொருளிற்குரிய பண்பு (குணம்), உளப்பண்பு என பிரிக்கலாம். கணாதர் 17 வகையான பண்புகள் பற்றிக் குறிப்பிடுகிறார். பிரசத்தபாதர் இவற்றுடன் மேலதிகமாக 7 பண்புகளைச் சேர்த்துக் கொண்டார். நியாய, வைசேடிகம் 24 பண்புகள் உள்ளதாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. நாற்றம் நிலத்தின் குணம். சுவை நீரின் குணம். நிறம் நெருப்பினதும், ஸ்பரிசம் வாயுவினதும், சப்தம் ஆகாயத்தினதும் குணங்களாகும். அறிகை, இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு என்பன உளத்தின் குணங்களாகும்.

**கர்மம் (செயல்)**

- செயல் ( கர்மம்) என்பது திரவியத்தில் உள்ளடங்கியதொரு குணமாகும். இயக்கவியல் பண்புடைய இது ஐந்து வகையாகும். அவை:
  (1) மேல் நோக்கிய இயக்கம் (2) கீழ்நோக்கிய இயக்கம் (3) எதிர் இயக்கம் (4) விரிவு (5) பெயர்ச்சி
  என்பனவாகும்.

**சாமானியம் (பொதுத் தன்மை)**

- சாமான்யம் (பொதுமை) என்பது ஒரு வகையீட்டுக் கருத்தாகும். ஒரு வகுப்பின் சகல அங்கத்தவர்களிற்குமுரிய பொதுப் பண்பு சாமானியம் என அழைக்கப்படும். மானிடம் ஒரு வகுப்பினரான உயிர்களின் பொதுப் பண்பு. இது எல்லாத் தனிமனிதரிலும் உள்ளடங்கியதொன்று. தனியானதும், பொறுமையும் தற்சார்பற்ற மெய்மைகளாகுமென கணாதர் குறிப்பிடுகிறார்.

**விசேடம் (சிறப்புத் தன்மை)**

- ஒரு பொருள் தானாக இருக்கும் அதேவேளை அது பிறிதொன்றாக இல்லாதிருப்பது தனியன் ( விசேடம்) என்ற இப்பண்பினாலாகும். சாமானியம் தொகுநிலையிலும் விசேடம் பிரிநிலையிலும் பெறப்படுகின்றனவாகும்.

**சமவாயம் (இணைப்புத் தன்மை)**

- பிரிக்கமுடியாத தொடர்பு சமவாயம் எனப்படும். சம்யோகம் (இணைப்பு) என்பது பிரிபடக்கூடியது என்ற பொருளைத் தரும். காரணத்திற்கும் காரியத்திற்கும் இடையிலான தொடர்பு சமவாயத் தொடர்பு என கணாதர் குறிப்பிடுகிறார்.

**அபாவம்**

- இன்மையைச் சுட்டுவது அபாவம். அறிவும் அறிபொருளும் இருவேறு இருப்புடையன வென ஏற்றுக் கொள்ளும் வைசேடிகர், தமது உட்பொருளியல் நிலைப்பாட்டிலிருந்தே அபாவத்தை ஒரு வகையீடாக ஏற்றுக் கொண்டனர்.

**அணுவாதம்**

- நியாய, வைசேடிகர் அசத்காரிய வாதத்தை ஏற்றுக் கொண்டவர்கள். இதன்படி காரியம், காரணத்தில் ஏலவே உள்ளடங்கி இருப்பதில்லை.
- காரியம் ஒரு புதிய தொடக்கமும் புதிய படைப்புமாகும். இதனை ஆரம்பவாதம் எனவும், பரமாணு காரணவாதம் எனவும் அழைப்பர். சடப்பொருள் உலகானது பகுதிகளாலானதென்றும், உற்பத்தி, அழிவு என்பனவற்றிற்குரியதென்றும் நாமறிவோம்.
- பகுதிகளாகப் பிரிக்கப்படுவதன் பிரிக்கமுடியாத அலகு, ‘பரமாணு’ எனப்படும். இது உள்ளார்ந்தது. இதனால் தோற்றமும் அழிவும், இப்பரமாணுக்களின் சேர்க்கையும் பிரிவுமாகும் என்பது பெறப்படும்.
- நிலம், நீர், நெருப்பு, வாயு என அணுக்கள் நான்கு வகைப்படும். ஆகாயம் அணுவல்ல. அது அணுக்களின் சேர்க்கைக்கு இடமளிப்பது. அணுக்கள் அளவிலும் பண்பிலும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுவதுடன் தத்தமக்கேயுரிய விசேட பண்பு களைக் கொண்டவை.
- வைசேடிக அணுவாதம் சடப்பொருளில்லானதல்ல. அது ஆன்மா, இறைவன், கர்மக் கோட்பாடு என்பனவற்றையும் ஏற்றுக் கொள்வதை மனங்கொள்ளல் வேண்டும். அணுக்கள் பிரபஞ்சத்தின் சடக்காரணம். இறைவன் தன் ஆற்றலால் இதனைச் செயற்படுத்துகிறார்.

**இறைவன்**

- வைசேடிகர் வேதத்தையும் ஒழுக்கவிதியான கர்மக்கோட்பாட்டையும் ஏற்றுக் கொள்பவர்கள். நியாய வைசேடிகரான உதயணர் இறையிருப்பு பற்றி முன்மொழிந்த வாதங்கள் மிகப் பிரபல்யமானவை. இறைவன் எங்குமுள்ளவன். பூரணமுடையவன். உள்ளார்ந்தவர்; உலகிற்கான கருவிக் காரணம். ஆன்மா இறைவனால் படைக்கப் பட்டதல்ல.

**பந்தமும் விடுதலையும்**

- அறியாமை பந்தத்திற்கும், அறிவு விடுதலைக்கும் இட்டுச் செல்கின்றன. அறியாமை காரணமாக ஏற்படும் ஆன்மாவின் செயல்கள் வேதத்திற்கு ஏற்புடையதாயின் நற்செயலாகவும், வேதத்தால் தடை செய்யப்பட்டதாயின் புறக்கணிக்கத்தக்கது என்றும் வைசேடிகம் குறிப்பிடுகிறது.
- ஆன்மாவின் செய்வினைகள் காரணமாக, அதற்குரிய பலாபலன்கள் ஏற்படுத்துவதை கர்மவிதிக் கோட்பாடு உறுதி செய்கிறது.
- பந்தங்களிலிருந்து விடுதலை பெற அறிவு உதவுகிறது. விடுதலையென்பது எல்லா வகையான துன்பத்திலிருந்தும் நீங்கிய நிலையாகும். விடுதலை பெற்ற ஆன்மாவானது தன்னுடைய தனித்தன்மை, விசேட இயல்பு என்பனவற்றை கொண்டிருப்பினும் ஆன்மா செயலற்றிருக்கும்.

## 6.2.5 நியாய தரிசனம்

- நியாய தரிசனம் கௌதமர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. இவர்அக்கபாதர் எனவும் அழைக்கப்படுவர். கௌதமரின் நியாய சூத்திரம் நியாயித்தல், தர்க்க சாஸ்திரம், பிரமாண சாஸ்திரம் என்றும் அழைக்கப்படும். ஹேது வித்தியா, வாத வித்தியா, அன்விக்ஷி - விமரிசன பரபாக்கு எனப் பலவாறாக அழைக்கப்படும்.

- கௌதமரின் நியாய சூத்திரத்திற்கு வாத்சாயனரின் உரையொன்றும் உளது. அது நியாயபாடியம் என அழைக்கப்படும். நியாயபாடியத்திற்கு உத்யோதகரர், வார்த்திகை எனும் பொழிப்புரையைச் செய்துள்ளார். இதற்கு வாகஸ்பதி தாற்பரிய தீபிகை என்ற குறிப்புரையைத் தந்துள்ளார். இவை தவிர உதயணரின் நியாய குசுமாஞ்சரி, ஜெயந்தரின் நியாயமஞ்சரி என்பன குறிப்பிடத்தக்க நியாய தரிசன நூல்களாகும்.

- நவ நியாயக் கொள்கை தொடர்பாக கனேஷர் தத்வே சிந்தாமணி என்ற நூலை எழுதியுள்ளார். வாசுதேவர், ரகுநாதர், மதுரானந்தர், ஜெகதீவர் என்போர் இத்தரிசனத்தின் பிரபல்யம் மிக்க அளவையியலாளர் ஆவர்.

**நியாயமும் வைசேடிகமும்**

- நியாயம் பன்மைவாத நிலைப்பாட்டையும், அணுவாத நிலைப்பாட்டையும் கொண்டது. வைசேடிகர் கௌதீவதீதம் உள்பொருளியல் என்பன பற்றிய கோட்பாட்டையும், நியாயக் கொள்கையின் தர்க்கத்தையும், அறிவாராச்சியியலையும் விருத்தி செய்தனர். இரு பகுதியினரும் உலகவாழ்க்கை துயரம் மிக்கதெனவும், துன்ப நீக்கமே வாழ்க்கையின் மேலான இலக்கு எனவும் ஏற்றுக் கொண்டனர்.

- மெய்மை பற்றிய அறியாமையே ஆன்மாவின் பந்தத்திற்கு காரணமெனவும், மெம்மை பற்றிய சரியான அறிவினால் இது நீங்கும் எனவும் கூறப்படுகிறது.

- காட்சியை லௌகீகக் காட்சி, அலௌகீகக் காட்சி என இரண்டாக வகுக்கலாம். லௌகீகக் காட்சி புலன்கள் பொருளுடன் கொள்ளும் சாதாரண தொடர்பால் ஏற்படுவது. இதனை மானதக்காட்சி (அகக்காட்சி), பௌதீகக் காட்சி என இரண்டாக மேலும் வகுக்கலாம். இன்பதுன்ப உணர்வுகள் விருப்பு, வெறுப்பு என்பன மானதக் காட்சியால் பெறப்படும். பௌதீகக் காட்சி அல்லது சாதாரணக் காட்சியால் புறப்பொருட்கள் பற்றிய அறிவு காணப்பது, கேட்பது, தொட்டுணர்தல், சுவைத்தல், நாற்றம் என்பனவற்றிற்குரிய புலன்கள் வழி பெறப்படும்.

அலௌகீகக் காட்சி →
- சாமானிய இலக்கணம் பொருந்தியவை (நிறைகள் பற்றிய அறிவு)
- ஞான இலக்கணம் பொருந்தியவை (பேறு நாற்றத்தால் அறிவது)
- யோக இலக்கணம் பொருந்தியவை (யோகக் காட்சி) (முக்காலம் பற்றிய அறிவு)

என மூன்றாக வகுக்கலாம்.

**நிறைகள் பற்றிய அறிவு:**

**(உ-ம்)** மனிதத்தன்மை, பசுத்தன்மை. இதனை பூர்வக் காட்சியனுமானம் என சித்தியார் குறிப்பிடும். (ஞாபகத்தை ஆதாரமாகக் கொண்ட காட்சி)

அனுமானம் சுவார்த்த அனுமானம், பரார்த்த அனுமானம் என இரண்டாக பிரிக்கப்படும்.

**பக்கம் (பிதிஞ்ஞை)** : இம்மலை நெருப்புடையது - பக்க தருமம் புகையுடைமையால் ஏது (லிங்கம்)

**திட்டஸ்கதம்** : எங்கு புகையுண்டோ அங்கு நெருப்புண்டு (அடுக்களை போல)

**உபநயம்** : இம்மலை புகையுடையது

**நிசமனம்** : நெருப்புடைமையால்

லிங்க பராமரிசத்தால் பெறப்படுகின்ற அறிவே அனுமான அறிவு என வரைவிலக்கணப் படுத்தப்படுகிறது.

ஏதுவின் ஐந்து குணாதிசயங்கள்

**காரணக் கோட்பாடு (வரைவிலக்கணம்)**

- காரணத்திற்கும் காரியத்திற்கும் இடையிலான நிபந்தனையற்ற தவிர்க்க முடியாத தொடர்பு அசத்காரியவாதம். அதாவது காரியம், காரணத்தில் உள்ளடங்கவில்லை என்ற நிலைப்பாடு.

**ஆன்மா**

- கர்மக் கோட்பாடு காரணவிதிப்படி இயங்குகிறது. படைப்பின் நோக்கக் கொள்கை வாதத்தை, நியாயம் ஏற்றுக் கொள்ளுகிறது.
  இறைவன், ஆன்மா, அணுக்கள் (சடம்)
  ஆன்மாவே அறிபவன், போக்தா, ஒவ்வொரு ஆன்மாவும் பகுதிகளற்றது.

**பந்தம்**

- அறியாமையினாலும், கர்மாவினாலும் விளைவது மெய்யான அறிவைப் பெறுவதாலும் கர்மா தொலைவதாலும் விடுதலை கிடைக்கும். வேதங்கள் இறைவாக்கு.

**இறைவன்**

உதயணரின் இறையிருப்பு பற்றிய வாதங்கள் குறிப்பிடத்தக்கவை. அவையாவன:

- இவ்வுலகம் காரியமாதலின் அதற்கொரு காரணம் இருத்தல் வேண்டும். அக்காரணமே இறைவன்.
- அணுக்களிற்கு இயக்கம் உண்டெனில், அவ்வியக்கத்தைத் தருபவர் இறைவன்.
- உலகம் நிலைத்துள்ளதற்கும், அழிவதற்கும் இறைவனின் சித்தம் ஏதுவாக உளது.
- ஒவ்வொரு சொல்லும் அர்த்தமுடையது. அது ஒரு பொருளைச் சுட்டும். பொருள் சுட்டும் சொல் இறைவனின் வாக்கு.
- வேதங்களின் தவறற்ற அறிவிற்கு காரணம் அது இறைவனால் மொழியப்பட்டதனா லாகும். வேத வாக்கியங்கள் ஒழுக்க நடைமுறைகளை போதிக்கின்றது. இது இறைவாக்காகும்.

- ஒழுக்க விதிகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துபவரும் இறைவன்.
- அணுக்களின் பிரிவும் சேர்க்கையும் செயற்படுத்த பிரக்ஞையுள்ள ஒருவராலேயே நடைமுறைப்படுத்த முடியும். அதுவே இறைவன்.
- எமது செயல்களிற்கான பலாபலன்களைத் தருவதற்கு உரிய காரணம் ஒன்று இன்றியமையாதது. அதுவே இறைவன்.

### 6.2.6 பூர்வமீமாம்சை

**அறிமுகம்**

- மீமாம்சை என்ற சொல் வேதக் கிரியைகளை விளக்குவதற்கே ஆரம்பத்தில் பயன் படுத்தப்பட்டது. இன்று விமர்சன ரீதியான ஆய்வு என்பதை சுட்டப் பயன்படுகிறது. வேதங்களால் விதிக்கப்பட்டதை எவ்வாறு விளக்குதல் வேண்டும் என்ற தத்துவார்த்த நடைமுறையை மீமாம்சம் கொண்டிருக்கிறது.
- எவ்வாறு சாங்கியம் யோகத்துடனதும், நியாயம் வைசேடிகத்துடனும் இணைக்கப்படுகிறதோ அதேபோல மீமாம்சை வேதாந்தத்துடன் இணைக்கப்படுகிறது.
- உத்தர மீமாம்சை என்பது வேதாந்தத்தைச் சுட்டும். இரண்டும் வேதத்தை விளக்குகிறது. வேறுபாடு அவை விளக்கும் விடயங்கள் பற்றியது.
- கர்ம காண்டத்தை விளக்குவது மீமாம்சை (வேத மந்திரங்களும் பிராமணங்களும்) ஞானகாண்டத்தை விளக்குவது வேதாந்தம் (மெய்மை பற்றிய அறிவை விளக்குவது).

**இலக்கியங்கள்**

- மீமாம்சை சூத்திரம் - ஆக்கியோன் ஜைமினி. தர்மத்தின் இயல்பைப் பற்றி ஆராய்வதாக இந்த நூல் தொடர்கிறது. மீமாம்ச சூத்திரத்தின் உரைநூல் சப்ரபாடியம். அதனை எழுதியவர் சப்ரசுவாமி. இதற்கு மீண்டும் உரை எழுதியவர்கள் பிரபாகரர், குமாரிலபட்டர் என்னும் இருவருமாவர்.

**அறிவுக் கொள்கை**

- சரியாக புரிந்து கொள்ளப்பட்டதே வலிதான அறிவு என பிரபாகரர் குறிப்பிடுகிறார். ஞாபகம் ஏலவே உள்ள பதிவுகளில் இருந்து பெறப்படுவதால் அது வலிதான அறிவாகமாட்டாது. குமாரிலர் வலிதான அறிவு பற்றி பின்வருமாறு குறிப்பிடுவார்.
    1. வலிதான அறிவில் காரண தோஷம் இருத்தலாகாது.
    2. முரண்பாடுகள் அற்றதாக இருத்தல் வேண்டும்.
    3. புதுமைத்தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டும்.
    4. யதார்த்தத்தை மெய்யாகப் பிரதிபலிக்க வேண்டும்.

**காட்சியும் அனுமானமும்**

- **ஜைமினி:** 3 வகையான பிராமணங்களை மட்டுமே குறிப்பிடுகிறார்.
  1. காட்சி 2. அனுமானம் 3. உரை (ஆப்த வாக்கியம்)
- **பிரபாகர்:** இம்மூன்றுடன் உவமானம், அர்த்தாபத்தி என்பவற்றையும் சேர்க்கிறார்.

- **குமாரிலர்:** மேற்கூறிய ஐந்துடன் அனுலப்தியையும் ஏற்றுக் கொள்கிறார்.

- அறிவு இரு வகைப்படும்.
  1. நேரடி அறிவு - காட்சியால் பெறப்படுவது
  2. வழிப்பேற்று அறிவு - ஏனைய பிரமாணங்களால் பெறப்படுவது

  இவர்கள் நியாயக் கொள்கையினரின் காட்சிக் கொள்கையையும் அனுமானக் கொள்கையையும் ஏற்றுக் கொள்கிறனர்.

**உவமானம்:**

- தெரிந்ததிலிருந்து (அறிந்ததிலிருந்து) தெரியாததைப் (அறியாததைப்) அனுமானிப் பதற்கு இது உதவுகிறது. வீட்டுப் பசுவிலிருந்து காட்டுப் பசுவை அறிதல். ஒத்த தன்மை உடையவற்றிலிருந்து உவமானம் காட்டப்படும்.

  **அறிவு:** 1. ஏக தேச அறிவு 2. வியாபன அறிவு என இரண்டாகும்.
  உவமானம் ஏக தேச அறிவிற்கே பயன்படுத்தப்படுகிறது.

**உரையளவை:**

- இரண்டாக பிரிக்கப்படும். 1. ஆப்த வாக்கியம் 2. வேத வாக்கியம். ஆப்தவாக்கியத்தின் ஏற்புடைமையானது, அது எனக் கூறுபவரின் தகுதியில் தங்கியிருக்கிறது. ஆனால், வேத வாக்கியம் உண்மை அறிவாகும்.

**அர்த்தாபதி:**

- தேவதத்தன் பகலுணைவான். ஆனால் படுத்திருக்கிறான். எனவே அவன் இரவில் உண்ணுதல் வேண்டும் என்ற அறிவு அர்த்தாபதி மூலம் பெறப்படும் அறிவு.

**அனுபலப்தி:**

- இன்மை பற்றிய அறிவு

**தருமம்:**

- இதனை, கட்டளை (ஆணை) என்றும் அதன்படி மனிதன் செயற்படுதல் வேண்டுமென்றும் சைமினி கூறுகிறார்.

- கடப்பாடு நாளாந்த கடப்பாடு, விசேட கடப்பாடு என இரண்டாகும்.

**பிரதிசித்தம்:**

- தடை செய்யப்பட்ட செயல்கள் பாவமும், நரகமும் இதனைச் செய்வதால் கிட்டும்.

- தருமத்தைச் செய்தலே சுவர்க்கத்தை அடையும் மார்க்கம். பிற்கால மீமாம்சகரே மோட்சம் என்ற கருத்தை ஏற்றுக் கொள்கிறார்கள்.

- வேதங்கள் இறைவனின் இருப்பிற்கு சான்று பகருகின்றன.

- பரமாணு, காலம், வெளி, மனம் போன்ற கருத்துக்களின் இருப்பிற்கு காரணம் இறைவன் இருப்பதாலாகும்.

- எமது வினைகளிற்கேற்ற பலாபலங்களை நாம் அறுவடை செய்கிறோம். அதனைத் தடுப்பதற்கு உள்ள சக்தியை வழிநடத்த ஒருவர் தேவை. அவர் இறைவன்.

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படி** I இந்து தரிசனங்கள் பற்றியும், அவற்றில் அடங்கும் தரிசனங்களின் சிறப்புப் பற்றியும் மாணவர் கூறுவதற்கு இடமளியுங்கள்.

**படி** II: இந்து தரிசனங்கள் ஒவ்வொன்றையும் பற்றிய தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றைப் பெறக் கூடிய நூல்கள், கட்டுரைகள் முதலானவற்றை மாணவர்களுக்கு வழங்கி, வழிப்படுத்துங்கள்.

**படி** III: மாணவரை ஐந்து குழுக்களாக்கி ஒவ்வொரு தரிசனங்களை வழங்கி, அத்தலைப்பின் கீழ் வரக்கூடிய விடயங்களைத் தேடித் தொகுத்து, கையேடு தயாரிக்குமாறு கூறுங்கள்.

**படி** IV: தொகுத்த விடயங்களை வகுப்பறையில் முன்வைப்பதோடு, கையேட்டைக் காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**உசாத்துணைகள்:**

(1) வியத்தகு இந்தியா - ஏ. எல். பசாம்

(2) இந்திய தத்துவ ஞானம் - கி. இலட்சுமணன்

(3) தத்துவ தரிசனங்கள் - இ. எஸ். டி. செ. ஞானம்

(4) இந்து சமய தத்துவம் - ரி. எம். பி. மகாதேவன்

(5) இந்து ஞானமரபில் ஆறு தரிசனங்கள் - ஜெயமோகன்

(6) இந்து தத்துவக் களஞ்சியம் - எஸ். என். கந்தசாமி

(7) கீழை, மேலை நாடுகளில்
மெய்ப் பொருளியல் வரலாறு (பகுதி I) - எஸ். இராதாகிருஷ்ணன்

(8) தமிழரின் தரிசன மரபு - அருணன்

(9) சாங்கிய சாரம் - க. சுப்பிரமணியன்

**தேர்ச்சி 6.0** : இந்து சமய தத்துவ சிந்தனைகளின் அடிப்படைக் கருத்துக்கள். அவற்றின் உண்மைத்தன்மை என்பவற்றைக் காரணகாரியங்களூடாக முன்வைப்பர்.

**தேர்ச்சி மட்டம் 6.3** : வேதாந்த தத்துவ சிந்தனைகளைப் பகுப்பாய்வு செய்து அவற்றுக்கு மதிப்பளிப்பர்.

**பாடவேளைகள்** : 40

**கற்றற் பேறுகள்:**

- வேதாந்த சிந்தனைகள் பற்றிய விளக்கத்தை அறிந்து கூறுவர்.
- வேதாந்த தத்துவ சிந்தனைகள் தோன்றியமைக்கான பின்னணியைத் தெளிவுபடுத்துவர்.
- வேதாந்த தத்துவ சிந்தனைகளுக்கு அடிப்படையாக அமைந்த பிரமசூத்திரம் பற்றி விளக்கி எழுதுவர்.
- வேதாந்த தத்துவக் கோட்பாடுகளுள் முக்கியம் பெற்ற பிரமம், ஆன்மா, உலகு, எனும் கோட்பாடு பற்றிய கருத்துக்களை இனங்கண்டு விளக்குவர்.
- அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம் ஆகிய கோட்பாடுகளுக்கிடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளைப் பட்டியலிடுவர்.
- இந்து தத்துவ சிந்தனை வளர்ச்சியில் இக்கோட்பாடுகளின் முக்கியத்துவங்களை அறிந்து மதிப்பளிப்பர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

## 6.3.1 வேதாந்தம் ஓர் அறிமுகம்

- இந்திய மெய்யியல் சிந்தனை மரபினை வைதீக தத்துவங்கள், அவைதீக தத்துவங்கள் என்ற வகையில் பாகுபடுத்துவர்.
- வேதங்களைப் பிரமாணமாக ஏற்றுக்கொண்ட மெய்யியற் கோட்பாடுகள் வைதிக தத்துவங்கள் எனப்படுகின்றன.
- வைதீக தத்துவங்களை இந்து தரிசனங்கள், இந்து மெய்யியற் கோட்பாடுகள் எனவும் குறிப்பிடுவர்.
- உபநிடதங்கள், வேதத்தின் அந்தமாக அமைந்து, மெய்யியற் சிந்தனைகளின் உள்ளடக்கமாக விளங்குவன. இதனால், உபநிடதங்களுக்கு வேதாந்தம் என்ற பெயரும் உண்டு.
- உபநிடத மெய்யியற் சிந்தனைகளின் அடுத்த கட்ட வளர்ச்சியைப் பிரதிபலிப்பனவாக வேதாந்தக் கோட்பாடுகள் உள்ளன.

- உபநிடதங்களும், உபநிடதங்களின் விளக்கமாக பாதராயணர் எழுதிய பிரம சூத்திரமும் வேதாந்தக் கோட்பாடுகள் தோற்றம் பெறுவதற்கான அடிப்படையாக அமைந்தன.
- பிரமசூத்திரத்துக்கு சங்கரர், இராமானுசர், மத்துவர், நீலகண்ட சிவாசாரியார் முதலியோர் உரைகளை எழுதியுள்ளனர்.
- சங்கரர், இராமானுசர், மத்துவர் ஆகியோர் பிரம சூத்திரத்திற்குச் செய்த விளக்க உரைகள் முறையே, மகாபாஷ்யம், ஸ்ரீபாஷ்யம், மத்வ பாஷ்யம் என வழங்கப்படு கின்றன.
- உபநிடதங்களை முக்கிய பிரமாணமாகக் கொண்டு தோன்றிய இக் கோட்பாடுகள் வேதாந்தம் என்ற பெயராலேயே சுட்டப்படுகின்றன.

## 6.3.2 பிரமசூத்திரம்

**அறிமுகம்**

- பிரஸ்தானத்திரயங்களுள் ஒன்றான பிரமசூத்திரம் பாதராயணர் என்பவரால் இயற்றப்பட்டது.
- பிரமசூத்திரமானது வேதாந்த சூத்திரம், சாரீரக சூத்திரம், உத்தரமீமாம்ச சூத்திரம், முதலான பெயர்களால் வழங்கப்படுகிறது.
- பிரமசூத்திரம் என்பது பிரமம் ஆகிய பரம்பொருளைப் பற்றி விளக்கும் நூற் பாவால் ஆன நூல் எனப் பொருள்படும்.

**தோற்றத்துக்கான பின்னணி**

- உபநிடதங்கள் எல்லாம் ஒரு காலத்திலோ, ஓர் இடத்திலோ, ஒரு தரப்பட்ட அறிஞராலோ இயற்றப் பெறாத காரணத்தால் இவற்றில் கூறப்படும் செய்திகள் ஒரே தன்மையதாய் அமையவில்லை.
- உபநிடதங்கள் அவ்வப்போது பல்வேறுபட்ட குரு, சீடர்களுக்கிடையே நிகழ்ந்த உரையாடல்களின் தொகுப்பாகும். இதனால் இவற்றில் ஒன்றைப் பற்றி ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களும் சில சமயம் நேர்மாறான, முரண்பாடான விடயங்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான காரணங்களால் உபநிடதங்களை எளிதில் புரிந்து கொள்ள முடியாத தன்மை காணப்பட்டது.
- இதனால் உபநிடதங்களில் காணப்படும் சில முரண்பாடுகளை நீக்கி, ஒருமைப் பாட்டைக் கண்டறிந்து, பொருளைத் தெளிவாக்கி வரையறை செய்யவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. அதற்காக எழுந்ததே பிரமசூத்திரம்.
- பாதராயணர், உபநிடதக் கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து அவற்றின் திரண்ட கருத்துக்களை பிரமசூத்திரம் என்ற பெயரில் இயற்றினார்.

**நூல் அமைப்பு**

- 545 சூத்திரங்களைக் கொண்ட இந்நூல் நான்கு அத்தியாயங்களை உடையது. அவை சமன்வயம், அவிரோதம், சாதனம், பலம் என்பனவாகும்.
- நான்கு அத்தியாயங்களும் மேலும் பல அதிகரணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**பொருள் மரபு**

- பிரம சூத்திரத்தின் முதல் அத்தியாயம் சமன்வயம். இது 138 சூத்திரங்களை உடையது. உபநிடதங்களில் உள்ள முரண்பாடுகளை இசைவுபடுத்தி, சில அடிப்படை யான பொதுக்கருத்துக்களைக் சுட்டிக்காட்டுவதாக உள்ளது. பிரபஞ்சத்தின் தோற்றம், முடிவு தொடர்பான கேள்விகளுக்கான விடைகள் இதில் உள்ளன.
- அவிரோதம் - இது பிரம சூத்திரத்தின் இரண்டாம் அத்தியாயம் ஆகும். இது 150 சூத்திரங்களைக் கொண்டது. பிரபஞ்சத்தின் இருப்புக்கு பிரமமே காரணம் என்ற கருத்துடன் முரண்படுகின்ற பிற தத்துவப் பிரிவுகளை மறுத்துரைப்பதாக இந்த அத்தியாயம் அமையப் பெற்றுள்ளது.
- சாதனம் - இது பிரமசூத்திரத்தின் மூன்றாவது அத்தியாயம். இதில் 182 சூத்திரங்கள் உள்ளன. வாழ்வின் தன்மை, அதன் குறைபாடுகள், உலக வாழ்வில் துன்பங்களிலிருந்து விடுபட்டு, பிரமஞானத்தை அடைவதற்கான வழிமுறைகள் பற்றி இந்த அத்தியாயம் குறிப்பிடுகின்றது.
- பலம் - பிரமசூத்திரத்தின் இறுதி அத்தியாயமான இதில் 75 சூத்திரங்கள் உள்ளன. பிரமசூத்திரத்தின் நான்கு அத்தியாயங்களுள்ளும் இது அளவில் சிறியது. இறப்பு, மறுமை, பிரமஞானத்தை அடைந்தவன் பெறுகின்ற பயன் என்பன இதில் உள்ளது.

**பிரமசூத்திரத்தின் சிறப்பு**

- ஆதிசங்கரர், இராமானுஜர், மத்துவர், பாஸ்கரர், ஸ்ரீகண்டர் (நீலகண்டர்), நிம்பாக்கர், ஸ்ரீபதி, வல்லபர், சுகர், பலதேவர் ஆகியோராலும் நவீன இந்து தத்துவ அறிஞரான டாக்டர் இராதாகிருஷ்ணன் முதலானோர்களாலும் உரைகள் செய்யப்பட்ட சிறப்புக்குரியது.
- ஆன்ம ஈடேற்றமே உண்மையான சமயத்தின் குறிக்கோள். அவ்வகையில் பிரம சூத்திரமும் அதற்கு வழிகாட்டுகின்றது.
- பிரமசூத்திரம் இந்திய தத்துவ ஆராய்ச்சியை மிக உன்னதமான ஒரு நிலைக்கு உயர்த்தி உள்ளது. குறிப்பாகத் தர்க்கமுறைகளுக்கான திறவுகோலாக இது உள்ளது.

மேற்கூறிய காரணங்களால் இந்திய தத்துவ சிந்தனைகளின் வற்றாத ஊற்றாகப் பிரமசூத்திரம் விளங்குகின்றது என்பதை உறுதிப்படுத்தலாம்.

### 6.3.3 அத்வைதம் - விளக்கம்

- அத்வைதம் என்ற சொல்லுக்கு ஆறு வகையாகப் பொருள் கொள்வர். அவையாவன:
  அன்மை (சாதிருசியம்) இன்மை (சுபாவம்)
  மறுதலை (விரோதம்) வேற்றுமை (பேதம்)
  சிறுமை (அற்பதையம்) பொறையின்மை (அப்பிராசங்தியம்)
- இந்து தத்துவ மரபில் அத்வைதத்துக்கு இன்மைப் பொருள் கொண்டு, பிரமம் ஒன்றே உண்மைப் பொருள் என நிறுவுவோர் கேவலாத்துவிதவாதிகள். கேவலம் - தனிமை. இக் கொள்கையை முன்னெடுத்தவர் சங்கரர் ஆவார்.
- சங்கரரைப் போன்று இராமானுஜரும் இரண்டு இல்லை என அத்வைதத்திற்கு இன்மைப் பொருளையே தமது விசிட்டாத்வைதத்தில் கொள்கிறார்.
- மத்துவரின் துவைதம் அத்வைதத்திற்கு மறுதலைப் பொருளைக் கொள்கிறது. பிரமம், ஆன்மா இரண்டும் வேறு வேறு. உள்ளது ஒன்றல்ல இரண்டு என்பது.
- சைவசித்தாந்தம் அத்வைதத்திற்கு அன்மைப் பொருளைக் கொள்கின்றது.

### 6.3.4 அத்வைதம்

**சங்கரர் - அறிமுகம்**

- காலம் - கி.பி. 8 ஆம் நூற்றாண்டு (கி.பி. 788 - கி.பி. 829)
- பிறந்த இடம் - கேரளத்தில் காலடி எனும் கிராமம்
- தாய், தந்தை - ஆரியாம்பாள், ஆதிகேசவர்
- ஆசிரியர் - கோவிந்தர், கௌடபாதர்

- **பணிகள்**
  1. நூற்பணி:
  - பிரமசூத்திரம், பகவத்கீதை தசோபநிடதங்களுக்கு உரைநூல்கள் எழுதினார்.
  - சிவானந்த லகரி, சௌந்தரிய லகரி, சுப்பிரமணிய புஜங்கம், ஆரியாசதகம், பஜகோவிந்தம் முதலான தோத்திர நூல்களைப் பாடினார்.
  - விவேகசூடாமணி, உபதேச சாயஸ்ரி - அத்வைத கொள்கை விளக்க நூல்களை எழுதினார்.
  2. வேதாந்த மடங்களை அமைத்தார்.

- **அற்புதங்கள்:**
  1. தங்க நெல்லிக்கனி மழை பொழியச் செய்தமை.
  2. பூர்ணா நதியை திசைமாறி ஓடச் செய்தமை.
  3. தாய்க்கு விஷ்ணு தரிசனம் கிடைக்கச் செய்தமை.
  4. சீடர்களுக்காக வெந்நீரூற்றை உண்டாக்கியமை.
  5. தானே நெருப்பை உண்டாக்கித் தாயின் தகனக் கிரியைகளைச் செய்தமை.

- வேதாந்தக் கோட்பாடுகளுள் முதன்மையான, முக்கியமான கோட்பாடு என அத்வைதக் கோட்பாடு கொள்ளப்படுகின்றது.
- பிரஸ்தான திரயத்துக்கு, சங்கரர் எழுதிய உரைகளில் அத்வைத சிந்தனைகளின் தோற்றுவாயைக் காணலாம்.
- பிரஸ்தான திரயத்தில் அடங்கும் உபநிடதம், பிரம சூத்திரம், பகவத்கீதை ஆகிய நூல்களில் அத்வைத சிந்தனைகள் உள்ளன. உபநிடதங்கள் உரையாடல்களாகவும், மகாவாக்கியங்களாகவும் அத்வைத சிந்தனைகளை முன்வைத்துள்ளன.
- பாதராயணரின் பிரமசூத்திரம் ஒருமைவாதக் கருத்துக்களை மிகச் சுருக்கமாக விபரிக்கும் நூலாக உள்ளது.
- கௌடபாதரின் "மாண்டுக்கிய காரிகை" அத்வைதக் கோட்பாட்டின் திறவுகோலாக அமையப் பெற்ற நூலாகும்.
- உபநிடதங்கள், பிரமசூத்திரம், பகவத்கீதை என்பவற்றில் உள்ள அத்வைதச் சிந்தனை களை, முக்கிய பிரமாணங்களாகக் கொண்டு அத்வைதத்தை ஒரு கோட்பாடாக முறைமைப்படுத்தியவர் சங்கரர். இதனால் சங்கரரை அத்வைத ஸ்தாபகர் எனக் கொள்ளும் மரபு உள்ளது.
- **வேதாந்த தத்துவ மரபில் சங்கரர் பற்றிய மதிப்பீடு:**
    - இந்திய தத்துவ மரபில் உபநிடத தத்துவ சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு, கேவலாத்வைதம் எனும் புதிய தத்துவ மரபினைத் தோற்றுவித்தமை.
    - பின் எழுந்த இந்து தத்துவங்களுக்கு முன்னோடி ; முதன்மையானவர்.

**அத்வைதக் கோட்பாடு**

- அத்வைதம் என்பது அ+துவைதம் எனப் பிரித்து, உள்பொருள் இரண்டு அல்ல; ஒன்று என பொருள் கொள்ளப்படுகிறது.
- சங்கரர் அறுவகைப் பிரமாணங்களை ஏற்றார். அவை பிரத்தியட்சம், அனுமானம், ஆப்த வாக்கியம், உபமானம், அனுலப்தி, அருத்தா பத்தி என்பனவாகும்.
- பிரம்மம், ஆன்மா பற்றிய இருமை இன்மைக் கொள்கையே அத்வைதம் போதிக்கும் அடிப்படைக் கொள்கையாகும்.
- சங்கரர் அத்வைத தத்துவத்தை அரைச் சுலோகத்தில் அடக்கியுள்ளார். "பிரம்ம சத்தியம் ஜகத்மித்யா, ஜீவோ பிரம்ம ஏவநா அபர". பிரமம் உண்மையான பொருள்; இந்த உலகம் ஒரு தோற்றமே; ஒவ்வோர் ஆன்மாவும் பிரமம்தான். வேறொன்றுமில்லை என்பது இதன் பொருளாகும்.
- வேதாந்த சூத்திரம் (பிரமசூத்திரம்) , உபநிடதம், பகவத்கீதை ஆகிய பிரஸ்தான திரயங்களை அடிப்படையாகக் கொண்டு, சங்கரர் தமது கோட்பாட்டை நிறுவுகிறார்.

### (அ) பிரமம்

- பிரமமானது ஆன்மா, உலகம் ஆகிய இரு பொருள்களிலும் முதன்மையானது. பிரமம் மட்டுமே உண்மைப்பொருள். ஏனைய யாவும் அதன் தோற்றம்.
- பிரமம் அநாதியானது; அந்தமற்றது; அழிவில்லாதது; எங்கும் செறிந்து நீக்கமற நிறைந்திருப்பது.
- பிரமம் எதனைப் போன்றதாக இல்லை எனக் கூறலாமேயொழிய, எதுவாக உள்ளது என விளங்க வைப்பது கடினம்.
- பிரமத்திற்கு இரண்டு நிலைகள் கூறப்படுகின்றன.
    1. நிர்க்குண நிலை - மாயையோடு சேராதநிலை, குணமற்ற நிலை.
    2. சகுண நிலை - மாயையோடு சேர்ந்த நிலை, குணங்களோடு கூடிய நிலை - ஈஸ்வரன்.
- ஒரேயொரு மூலப்பொருளாயுள்ள பிரமம் பல சீவன்களாகிறது.
- ஆன்மாவே பிரமம் - தத்துவமஸி, அகம் பிரமாஸ்மி, சோகம் அஸ்மி எனும் உபநிடத மகாவாக்கியங்கள் இதற்கு அடிப்படையாகின்றன.
- பிரமம் ஒன்றே; அஞ்ஞானத்தின் காரணமாக அது பல வகைப் பொருட்களாகக் காட்சியளிக்கிறது.
- அவித்தையாகிய அஞ்ஞானத்தினின்றும் விடுதலை பெறுமிடத்து பிரமமே எங்கும் பரந்திருக்கும் பரிபூரணப் பொருளாகும்.

### (ஆ) ஆன்மா

- சங்கரர் ஆன்மாவின் இருநிலைகள் பற்றிக் குறிப்பிடுகிறார்.
    - (i) பரமாத்மா (என்றும் உள்ள பொருள்)
    - (ii) ஜீவாத்மா (அவித்தைக்கு உட்பட்டது)
- ஜீவாத்மாக்கள் பலவாகத் தோன்றும். அது ஒன்றேயாகும். அடிப்படையில் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றென்பதைப் பின்வரும் வாதங்கள் மூலம் சங்கரர் நிறுவுவார்.
    - (i) அவச்சேத வாதம் (ii) பிரதிபிம்ப வாதம்
- அவித்தை என்பதன் பொருள் அறியாமையாகும். அவித்தையே பிரமத்தைச் சீவன்களாக்குவது. அவித்தையாகிய அஞ்ஞானத்தினாலேயே சீவன் தன்னைப் பிரமத்திலிருந்து வேறுபட்டதாக எண்ணுகிறது.

### (இ) உலகம்

- உலகம் என்பது உண்மையல்ல; அது தோற்றம். பிரமம் உலகாக மாறுவதாகக் காணப்படுகிறதேயொழிய, உண்மையில் பிரமத்தில் மாற்றமெதுவும் ஏற்படுவதில்லை. இதனை விவர்த்தவாதம் மூலம் நிறுவுகிறார்.
- விவர்த்தவாதம் என்பது ஒரு பொருள் இன்னொன்றாக மாறாமலிருந்தபடியே மாறி விட்டதாகத் தோன்றுவது. (உ-ம்) கயிறு பாம்பாகத் தோன்றுதல்.

**மாயை**

- மாயைக் கோட்பாட்டின் மூலம் பிரமம் உலகைத் தோற்றுவிக்கிறது என்கிறார்.
- மாயையே உலகத் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணம்.
- மாயை என்பதற்கு பலவிதமாகப் பொருள் கொள்வர். மாயையைச் சொல்லால் விபரிக்க முடியாது. இதனால் அது அநிர்வசனீயம் எனப்படும்.
- மாயைக்கு இரண்டு இயல்புகள் உள்ளன. அவையாவன;
    - (i) ஆவரணம் - உள்ளதை மறைக்கும் இயல்பு.
    - (ii) விக்ஷேபம் - இல்லாததைத் தோற்றுவிக்கும் இயல்பு.
- ஈஸ்வர தத்துவம் - பிரமத்தை மாயை மறைப்பதால் தோன்றுவது.

**இறைவனை அடையும் வழிகள்**

- சங்கரர் ஞானத்திற்கு முதன்மையளிக்கிறார்.
- ஆன்மா அவித்தையினின்று விடுபட்டு, தன்னைப் பிரம்மமென உணர்தல் விடுதலையாகும்.
- சங்கரர் கூறும் முத்தி - அத்வைதமுத்தி. தன்னைப் பிரமம் என்று உணரும் அனுபவமே அத்வைத அனுபவம். சீவன்முத்தி, விதேகமுத்தி இரண்டையும் குறிப்பிடுகிறார்.

### 6.3.5 இராமானுஜரும் விசிட்டாத்வைதமும்

- **காலமும் வாழ்வும்**

| | | |
|---|---|---|
| **காலம்** | - | கி.பி.11 ஆம் நூற்றாண்டு (கி.பி 1027) |
| **இடம்** | - | தென்னிந்தியாவில் ஸ்ரீ பெரும்புதூர். |
| **தாய்தந்தை** | - | காந்திமதியம்மை, ஆதிகேசவாச்சாரியார். |
| **ஆசிரியர்** | - | யாதவப் பிரகாசர், திருக்கோட்டியூர்நம்பி |

- **பணிகள்**

1. நூற்பணி
    - பிரமசூத்திரம், பகவத்கீதை, உபநிடதம் ஆகிய நூல்களுக்கு வைணவ சித்தாந்த நோக்கில் உரைநூல்கள் எழுதினார்.
    - வேதாந்தசாரம், வேதாந்த சங்கிரகம், வேதாந்த தீபம் முதலிய நூல்களை எழுதினார்.
    - கத்தியத் திரயம் - பிரபக்தி தத்துவத்தை விளக்கும் நூலை எழுதினார்.
2. பகவத்கீதையைப் பிறருக்கு உபதேசித்தமை.
3. நாலாயிர திவ்யபிரபந்தம் - குறிப்பாக நம்மாழ்வார் பாடல்களை மக்களிடையே பரப்பியமை.
4. நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று வைணவ மதத்தை நிலைபெறச் செய்தமை.
5. சாதி, இன, மத வேறுபாடின்றி யாவரும் முத்தியடைய வழிகாட்டியமை.

- **அற்புதங்கள்**
    1. கிருஷ்ண பகவான் வேட்டுவ வடிவில் வந்து வழித்துணையானமை.
    2. ஸ்ரீரங்கத்து மடாதிபதி ஆளவந்தாரின் வேண்டுகோளை அறிந்து பாடியமை.
    3. காஸ்மீரிலிருந்த போதாயனவிருத்தி நூல் பகவான் அனுக்கிரகத்தால் கிடைக்கப் பெற்றமை.
- **பிரமாணங்களும் கோட்பாடுகளும்**
    - பிரமாணங்கள் - காண்டல், கருதல், உரை
    - விசிட்டாத்வைதக் கோட்பாடு விளக்கம் - பிரபக்தி தத்துவம்
- **வேதாந்த தத்துவ வளர்ச்சியின் இராமானுஜர் பற்றிய பங்கு மதிப்பீடு:**
    1. சமுதாய வாழ்க்கையிலிருந்து பிரிந்து தொலைவிலே நின்ற வேதாந்த தத்து வங்களை மக்களோடு இணைத்து வேதாந்தப் புரட்சி செய்தவர்.
    2. சங்கரரின் அத்வைதக் கோட்பாட்டை உள்வாங்கி, மீட்டுருவாக்கம் செய்து, புதிய தத்துவத்தை உருவாக்கியவர்.
    3. தத்துவ சிந்தனைகளையும் சமயநெறி முறைகளையும் ஒன்றிணைத்து விசிட்டாத்வைதக் கோட்பாடு என்னும் புதிய கோட்பாட்டை நிறுவியவர்.

**இராமானுஜரும் விசிட்டாத்வைதமும்**

- சங்கரரது அத்வைதக் கொள்கைகளைத் தழுவியும் வேறுபட்டும் அமைந்தது விசிட்டாத்வைதக் கோட்பாடு.
- பிரமம், ஆன்மா, உலகு ஆகிய முப்பொருள்களும் உண்மை என்ற அடிப்படையில் அமைந்ததே விசிட்டாத்வைதக் கோட்பாடு.
- பிரம்ம சூத்திரத்துக்கு வைணவ தத்துவ நோக்கிலே எழுதப்பட்ட ஸ்ரீபாஷியத்தை அடிப்படையாக வைத்து தமது விசிட்டாத்தைவக் கருத்துக்களை முன்வைக்கிறார்.
- உபநிடதக் கூற்றுக்களிலுள்ள பேதாபேத சுருதிகளை முதன்மைப்படுத்திய கோட்பாடாக, விசிட்டாத்வைதக் கோட்பாடு அமைகிறது.
- பிரஸ்தான திரயங்களோடு நாலாயிர திவ்ய பிரபந்தத்தினையும் பிரமாண நூலாகக் கொள்கிறார்.

**விசிட்டாத்வைதக் கோட்பாடு**

- மூன்று பொருள்களும் உண்மையானவையென இராமானுஜர் தத்துவத்திரயம் பேசுகிறார்.
- உயிர்கள் அனைத்தையும் உள்நின்று இயக்குபவன் இறைவன் - பரமான்மா. உலக இயக்கத்துக்கும் இறைவனே காரணமாகிறான். இதனால் இப்பொருள்கள் அனைத்தும் ஒன்று. இதுவே இராமானுஜரின் அத்வைதம்.
- விசிட்டாத்வைதம் - விசிட்டம் + அத்வைதம்
  விசேடனங்களுக்கும் விசேடியத்திற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பே (விசிட்டம்) விசிட்டாத்வைதம் என இராமானுஜரால் குறிப்பிடப்படுகிறது.
- பிரம்மம், உயிர், உலகம் மூன்றுக்குமுள்ள தொடர்பு
    - சரீர சரீரி சம்பந்தம் - உலகு, உயிர் - சரீரம்; பிரமம் - சரீரி.
- இவற்றுக்கிடையிலான தொடர்பை அப்பிரதக்சித்தி மூலம் விளக்குகிறார். ஒன்று நிலைபெற, மற்றொன்று அவசியம். உலகு, உயிர் நிலைபெற இறைவன் அவசியம். இறைவனின் தனித்துவத் தன்மைக்கு உலகு, உயிர் என்பன அவசியம்.

**(அ) பிரமம்**

- பிரமம் என்ற மூலப்பொருள் விஷ்ணு. ஸ்ரீமந் நாராயண மூர்த்தியே கடவுள்.
- சரீர சரீரி சம்பந்தம் - உலகத் தோற்றத்துக்கு தலைவன். ஆன்மாக்களையெல்லாம் தனது உடலாகவும் பண்பாகவும் கொண்டு விளங்குபவன் பரமான்மா.
- இறைவனின் பண்புகள் - ஐஸ்வர்யம், பலம், வீரியம், தேஜஸ், ஞானம்.
- இறைவன் பூரண அறிவுடையவன். சிருஷ்டி, திதி, ஸம்காரம், ஞானம் எனும் நான்கு தொழில்களையும் இயற்ற வசுதேவன், பிரத்தியும்னன், அநிருத்தன் முதலான நிலைகளை எடுக்கிறான்.
- இறைவனின் சக்தி ஸ்ரீ. ஸ்ரீயினின்றும் பிரிக்கமுடியாதவன் ஸ்ரீநிவாசன்.
- ஆன்மாக்களைத் தனது அங்கமாக கொண்டிருந்தாலும் பரமான்மா பாதிக்கப் படுவதில்லை. இறைவன், ஆன்மாக்கள் மீது கருணை கொண்டு, காப்பவன்.

**(ஆ) ஆன்மா**

- ஆன்மாக்கள் எண்ணிக்கையிற் பல. அவை நித்தியமானவை, அழிவற்றவை.
- அவை தாம் செய்யும் கன்ம வினைகளுக்கு ஏற்ப உடல்களை எடுக்கின்றன.
- மூவகை ஆன்மாக்கள் (i) எப்பொழுதும் முத்திநிலையிலுள்ளவை.
  (ii) கட்டுண்ட நிலையிலிருந்து முத்தியடைந்தவை.
  (iii) எப்பொழுதும் கட்டுண்ட நிலையிலுள்ளவை.
- ஆன்மாக்கள் அறிவை இயல்பாக உடையவை.
  - தர்மபூதஞானம் - இவ்வறிவு நிறைவற்றது. அந்தக் கரணங்களின் துணையுடனேயே அறியும் இயல்புடையது. இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு என்பன அறிவின் இயல்புகள் ஆகும்.
- ஆன்மாக்களின் துயருக்கும் அல்லலுக்கும் காரணம் அறிவுக்குறைவு. அவை பிறவிப் பிணியினின்றும் நீங்க நற்கருமங்களைச் செய்ய வேண்டும்.
- பிறவிப் பிணி நீங்கி, ஸ்ரீவைகுண்டத்தை அடைதல் வீடுபேறு ஆகும்.

**(இ) உலகம்**

- நித்தியமானது; அழிவற்றது.
- உலக இருப்பு பரிணாமவாதம் மூலம் நிறுவப்படுகிறது.
- பிரமமானது உலகமாக மாற்றமடைந்து சிருஷ்டி நிகழ்கிறது. இறைவனாகிய சரீரிக்கு இது பண்பு. ஆதலால் இறைத்தன்மை நிலைபேற்றுக்கு காரணமான பொருளாகிறது.

**முத்தி நிலை**

- ஆன்மாக்களின் கன்ம பலன்களினடிப்படையில் வீடுபேறு கிடைக்கும்.
- பகவானது பேரருளால் ஆன்மாக்களின் கன்மம் அழிந்து முத்திநிலை ஏற்படும்.
- ஞானமும் பக்தியும் வீடுபேற்றுக்கு வழியாகக் கூறப்பட்டாலும் பிரபத்தியே முத்திக்கு வழியாகும். இந்நிலையை அடைய கன்மமும் ஞானமும் துணையாகிறது.
- விதேக முத்தி - உடல் அழிந்த பின் வைகுண்டமடைதல்.

### 6.3.6 மத்துவரும் துவைத வேதாந்தமும்

**காலமும் வாழ்வும்:**

**காலம்** - கி.பி. 13 ஆம் நூற்றாண்டு (கி.பி. 1199 - 1278)

**இடம்** - தென்னிந்தியாவில் உடுப்பிக்கு அருகிலுள்ள கிராமத்தில் பிறந்தவர்.

**தாய், தந்தை** - வேதவதி அம்மையார், மத்யகேசபட்டர்

**ஆசிரியர்** - அச்சுதப்பிரேக்ஷ்ஷர்

**பணிகள்:**

1. நூற்பணி
   - பிரஸ்தானதிரயங்களான வேதாந்த சூத்திரம், தச உபநிடதங்கள், பகவத் கீதை என்பவற்றிற்குப் பாஷியங்கள் எழுதியமை.
   - இருக்குவேதத்தின் முதல் நாற்பது மந்திரங்களுக்கு விரிவுரைகள் எழுதியமை.
   - பாரத தாற்பரிய நிருணயம் - மகாபாரதம் பற்றிய நூலுக்கு விளக்கம் எழுதியமை.
   - பாகவத புராண விளக்க நூல் எழுதியமை.
   - 'சர்வ மூலம்' தொகைநூல் - துவைத வேதாந்தக் கோட்பாட்டு நூல்கள் எழுதியமை.
2. உடுப்பியில் கிருஷ்ணனுக்கு ஆலயம் நிறுவியமை.
3. கன்னடத்தில் ஹரிதாசர்களை உருவாக்கியமை.
4. துவைத மதத்தை நிறுவியமை.

**பிரமாணங்களும் கோட்பாடுகளும்:**

- பிரமாணங்களாக காண்டல், கருதல், உரை ஆகிய மூன்றையும் ஒப்புக் கொள்கிறார்.

**வேதாந்த தத்துவ வளர்ச்சியில் மத்துவர் பற்றிய மதிப்பீடு:**

- சங்கரதும் இராமனுஜரதும் அத்வைதக் கோட்பாடுகளை உள்வாங்கி, துவைதக் கோட்பாட்டை நிறுவியமை.
- உள்ள பொருள் மூன்று. ஆயினும் அவை தம்மிடையே என்றும் வேறு பாடுடையவை என்ற நிலையில் தமது கோட்பாட்டை நிலைநிறுத்தியமை
- வைணவ மதச் சார்புடையதாகத் தமது வேதாந்தத்தை நிறுவியமை
- முத்திக் கோட்பாடு பற்றி புதிய கருத்து நிலையை முன்வைத்தவர்.

**துவைத வேதாந்தம்:**

- துவைதம் என்னும் சொல்லுக்கு இரண்டு என்பது பொருள். இரண்டு எனப் பேசப்படுபவை இறைவனும் ஆன்மாவும் ஆகும்.
- இவை இரண்டும் இரண்டு என்ற நிலையினின்றும் நீங்கி ஒன்று என்ற நிலையை ஒருபோதும் அடைவதில்லை. எப்பொழுதும் இரண்டும் இரண்டுதான் - துவைதக் கோட்பாடு.

- மத்துவர் பிரஸ்தான திரயங்களை மட்டுமன்றி இதிகாசங்கள், வைணவ ஆகமங்கள், வைணவ புராணங்கள், சிறப்பாகப் பாகவத புராணங்களையும் பிரமாண நூல்களாகக் கொள்கிறார்.
- மத்துவர் பன்மைவாதி. உள்பொருள்கள் பல. ஈஸ்வரன் அல்லது இறைவன், சீவன், சடம் ஆகியன உண்மைப் பொருள்கள்.
- இவை நிரந்தரமானவை. என்றும் இருப்பவை. இவற்றுக்கிடையேயுள்ள வேறுபாடு களும் - பேதங்களும் நிரந்தரமானவை. ஐவகைப் பேதங்களை இவர் குறிப்பிடுகிறார்.

1. சீவாஈஸ்வரபேதம் - சீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் இடையிலே உள்ள பேதம்.
2. சடாஈஸ்வரபேதம் - சடத்துக்கும் ஈஸ்வரனுக்குமுள்ள பேதம்.
3. சீவசடபேதம் - சீவனுக்கும் சடத்துக்குமுள்ள பேதம்.
4. சீவபரஸ்பரபேதம் - ஒரு சீவனுக்கும் இன்னொரு சீவனுக்கும் இடையிலான பேதம்.
5. சடபரஸ்பரபேதம் - ஒரு சடத்துக்கும் இன்னொரு சடத்துக்கும் இடையிலான பேதம்.

- புற உலகின் உண்மையை மத்துவர் ஏற்றுக் கொள்வதால் அவரது கொள்கையை காட்சிப் பொருள் கொள்கை என்பர்.
- இறைவன் ஒருவனே சுதந்திரமான உள்பொருள். மற்றைய உள்பொருள்களாகிய ஆன்மாக்களும் சடப்பொருள்களும் பர தந்திரமானவை (சுதந்திரமற்றவை).

### (அ) பிரமம்

- சகுணப் பிரமத்தை மத்துவர் முதன்மைப்படுத்துகிறார்.
- பிரமம் முக்குணங்களையும் கடந்ததே தவிர, தெய்வீக இயலான பண்புகளையும் குணத்தையும் கடந்ததல்ல. (குண பூரணன்)
- பிரமம் எல்லாப் பொருட்களினதும் உள்ளீடாக அமைவதுடன் அவைகளின் செயற்பாட்டிற்கு வழிகாட்டியாகவும் அமைகிறது.
- இறைவன் மட்டுமே சார்பற்றவன். மிக உயர்ந்த உள்பொருள் (சர்வ உத்தமன்).
- மகாவிஷ்ணு மூர்த்தியே சர்வவல்லமை படைத்த ஈஸ்வரன். அவர் ஆன்மாக்கள் பிறவித் துன்பத்தினின்றும் நீங்கி முத்தி பெறுதற்பொருட்டு, உலகைப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் இயற்றுகிறார்.
- ஆன்மாக்களின் அறியாமைக்குக் காரணமாயமைவது இறைவனின் பேராற்றல் தன்மையெனக் கருதப்படும் மாயையாகும்.
- ஆன்மாக்களின் அறிவுக்கும் விடுதலைக்கும் காரணமாக அமைவது பிரமம்.

### (ஆ) ஆன்மா

- ஆன்மாக்கள் பல. எண்ணிக்கையற்றவை.
- ஆன்மாக்கள் இருநிலைகளில் வைத்து விளக்கப்படுகிறது.

(i) போன்றிருத்தல் (ii) சார்ந்திருத்தல்

- ஆன்மாவானது பிரமத்தின் தன்மைகள் பலவற்றைப் பெற்றிருக்கிறது. ஆனால் கடவுளுக்குச் சமமானதல்ல.
  - (i) ஆன்மாக்கள் இறைவனைப் போன்று சத், சித், ஆனந்தம் என்ற பண்புகளைப் பெற்றவை ஆயினும் அப்பண்புகள் நிறைவற்ற பண்புகளாக இருத்தல்.
  - (ii) அறிபவர், செய்பவர், அனுபவிப்பவர் என்ற வகையில் ஆன்மாவும் இறைவனைப் போன்றிருப்பதாக எண்ணப்படுகிறது.
- சகல செயற்பாட்டிற்கும் உயிர்கள் இறைவனைச் சார்ந்துதான் இயங்குகின்றன. (உ-ம்) அறிதல், செய்தல், துய்த்தல்.
- கண்ணாற் காணமுடியாத ஆன்மா, நல்வினை தீவினைக்கேற்ப சடப்பொருளாலான உடல்களை எடுத்து உலகிலே வாழ்கிறது. இதற்கு இறைவனின் கருணை வேண்டும். தானாகவே தனக்குரிய உடலைத் தெரிவு செய்யும் தகைமை ஆன்மாவுக்கு இல்லை. மத்துவர் குறிப்பிடும் மூன்று வகை ஆன்மாக்கள்:

1. நித்திய முத்தர்கள் - நித்தியமாயும் சுதந்திரமாயும் இருப்பவை. (உ-ம்) இலட்சுமி (ஸ்ரீ)
2. முத்தர்கள் - சம்சாரத் தளையிலிருந்து விடுதலை அடைந்தவர்கள் - தேவர்கள், ரிஷிகள், ஆன்மீக தலைவர்கள்.
3. பந்தப்பட்ட சீவன்கள் - பெத்தநிலையினுள்ளோர். இவர்களை மேலும் இரு வகைப்படுத்துவர்.
   - (i) வீடுபேறடையத் தகுதியுடையவர். முக்தியோக்யர்கள்.
   - (ii) வீடுபேறடையும் தகுதி இல்லாத வர்கள். (தமோயோக்யர்கள்)

**வீடுபேறடையும் தகுதி இல்லாதவர்கள்**

**சம்சாரபந்தத்தில் உழல்வோர்** **நித்திய நரகத்தில் உழல்வோர்**

- ஆன்ம விடுதலை ஆன்மாக்களின் முக்குணங்களின் அடிப்படையிலும் தீர்மானிக்கப் படுகின்றன.

| | | |
|---|---|---|
| சாத்விகம் | - | முத்திநிலை எய்துகின்றன. |
| இராசதம் | - | சம்சாரத்தில் உழல்கின்றன. |
| தாமசம் | - | நித்திய நரகத்தில் வீழ்கின்றன. |

- முத்தியடைந்த நிலையிலும் ஆன்மாக்களுக்கிடையில் வேறுபாடு உண்டு.
- முத்திநிலையில் கூட ஆன்மா ஈஸ்வரனாவதில்லை.

**(இ) உலகம்**

- உலகம் உண்மையான பொருள். நிலையான பொருள்.
- இறைவன் உலகைப் படைப்பதற்கு நிமித்த காரணன், சட உலக தோற்றத்திற்கு அடிப்படை பிரகிருதி.
- ஆன்மாக்கள் முத்தியின்பம் பெறுவதற்கு நிலைக்களனாக அமைகிறது.

**முத்தி நிலை**

- ஆன்மா தனது முயற்சியால் நேரே விடுதலை பெற முடியாது. இறைவனின் அருள் கைகூடும்பொழுதுதான் முத்திநிலை சாத்தியமாகிறது.
- ஆன்மா பந்தத்தாற் கட்டப்பட்டிருப்பதால் இறைவனுடைய உண்மைத் தன்மையை உணர்வதில்லை.
- ஞானம், பக்தி என்பன மோட்சம் அடைவதற்குரிய வழிகள்.
- முத்திநிலையிலும் ஆன்மா பேரின்பத்தை அனுபவிக்குமே தவிர பிரமத்துடன் இரண் டறக் கலப்பதில்லை.

**முக்கிய குறிப்பு:** அத்வைத, விசிட்டாத்வைத, துவைத, சைவசித்தாந்த கோட்பாடுகளுக்கிடையிலான ஒப்பீடுகளை ஆசிரியர் கற்பித்தலின்போது முன்வைக்க வேண்டும்.

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

**படி I** வேதாந்த தத்துவ சிந்தனைகளையும் அவை தோன்றியதற்கான பின்னணியையும் மாணவர் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி II:** வேதாந்த தத்துவ சிந்தனைகளுக்கான மூலங்கள், வேதாந்த தத்துவ சிந்தனைகளில் பிரமம், ஆன்மா, உலகு பற்றிய கருத்துக்கள் என்ப வற்றை இனங் கண்டு தொகுப்பதற்குத் தேவையான நூல்களை வழங்கி வழிகாட்டுங்கள்.

**படி III:** மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து பின்வரும் தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு வினாவிடைப் புத்தகமொன்றைத் தயாரிக்க வழிகாட்டுங்கள்.

(i) வேதாந்த தத்துவ சிந்தனைகளுக்கு அடிப்படையாய் அமைந்த மூலங்கள்.

(ii) அத்வைதமும் விசிட்டாத்வைதமும்

(iii) துவைதக் கோட்பாட்டின் தத்துவம்

(iv) விசிட்டாத்வைதமும் சைவசித்தாந்தமும் ஒப்பீடு

**படி IV:** வினாவிடைத் தொகுப்பாக அமைத்த புத்தகத்தை வகுப்பறையில் முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

## உசாத்துணைகள்:


(1) இந்திய தத்துவ ஞானம் - சி. இலட்சுமண ஐயர்

(2) இந்து சமய தத்துவம் - ரி. எம். பி. மகாதேவன்

(3) இந்திய தத்துவக் களஞ்சியம் - சோ. ந. கந்தசாமி

(4) கீழை, மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு - டாக்டர். இராதாகிருஷ்ணன்

(5) இந்தியத் தத்துவவியல் - எஸ். வரதராஜன்

(6) மத்துவ வேதாந்தம் - டாக்டர். இராதாகிருஷ்ணன்

**தேர்ச்சி 7.0** : சைவசித்தாந்த மெய்ப்பொருளியலை ஆராய்ந்து விளங்கிச் செயற்படுவர்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : சைவசித்தாந்த மெய்ப்பொருளியலை பிரமாணங்கள் ஊடாக முன்வைப்பர்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற் பேறுகள்:**

- சைவசித்தாந்த நூல்களில் ஒன்றான சிவஞானசித்தியார் பற்றிய விளக்கத்தைப் பெறுவர்.
- பிரமாணம் என்பதற்கான விளக்கத்தைக் கூறுவர்.
- சிவஞானசித்தியார் கூறும் அளவைப் பிரமாணங்கள் பற்றியும் அவற்றின் சிறப்புக்கள் பற்றியும் எடுத்துக் கூறுவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**7.1.1 சிவஞானசித்தியார் கூறும் பிரமாணங்கள் - விளக்கம்**

- அறிவைப் பெறுவதற்கு ஆதாரமாக இருப்பவை அளவைகள் என அழைக்கப்படும். இவ் அளவைகள் பிரமாணங்கள் என்றும் கூறப்படுகின்றன. பிரமாணம் என்பது மெய்யான அறிவைப் பெறுவதற்கான வழி எனக் கூறப்படும்.
- அறிவைப் பெறும் வழியாகிய பிரமாணங்கள் பற்றி சைவசித்தாந்த நூல்களின் பிரமாணவியல் எடுத்து விளக்குகின்றது.
- அளவை என்பது காட்சி, கருதல், உரை என மூன்று வகையே என்று சிவஞான சித்தியாரின் பரபக்கம் விளக்குகின்றது.
- காட்சி பற்றிக் கூறும்போது நான்கு வகைக் காட்சியை எடுத்துரைக்கின்றது. அவை

  - புலக்காட்சி
  - தன் வேதனைக்காட்சி
  - மானதக்காட்சி
  - யோகக்காட்சி

  என்பனவாகும்.
- இந்த நான்கும் மெய்யான அறிவு பெறும் வழிகளாக கூறப்பட்டுள்ளன. மேலும் கூடுதலான அறிவைப் பெறும் வழிகள் கூறப்பட்டாலும் அவை அனைத்தும் காட்சி, கருதல், உரை ஆகிய மூன்றிலுள்ளும் அடங்கும் என்றும் சிவஞானசித்தியார் குறிப்பிடுகின்றது.
- அருணந்தி சிவாச்சாரியார் கருதல் பிரமாணம் என்னும் அனுமானப் பிரமாணத்தை விளக்கும்போது அறியப்பட்டதில் இருந்து அறியப்படாததை அறிவதே அனுமானம் எனக் கூறிப்பிடகின்றார்.

- அருணந்தியார் மூவகை அனுமானம் பற்றி எடுத்துக் காட்டுகிறார். அவை
    - கருதல் அனுமானம்
    - பூர்வக்காட்சி அனுமானம்
    - ஆகம அனுமானம் (உரை)

  என்பனவாகும்.
- கருதலனுமானமானது தன்பொருட்டு கருதல் அனுமானம் என்றும் பிறர் பொருட்டுக் கருதல் அனுமானம் என்றும் இருவகையாகக் கூறப்படும் என்றும் சிவஞானசித்தியார் எடுத்துரைக்கின்றது.
- அனுமானப் பிரமாணம் ஒரு கருத்தை மூன்று வழிகளில் நிறுவமுடியும் என்று குறிப்பிடுகிறது. அவையாவன:

  1. ஜல்பம் 2. விதண்டை 3. வாதம்

  என்பனவாகும்.
- இரு மாறுபட்ட கருத்துடைய இருவர் எதிரெதிராக வாதிடுவது ஜல்பம் எனப்படும்.
- எதிராளியின் கருத்துக்களை ஏற்காது தனது கருத்தை நிலைநாட்டுவது விதண்டை எனப்படும். இதுவே விதண்டாவாதமாக விரிவடைந்தது. உண்மைக் கருத்தை அறியுமுகமாக இருவர் கலந்துரையாடுவதும் விவாதிப்பதும் வாதம் என்று அழைக்கப்படும்.
- இதனால் அனுமானித்தல் முறை என்பது உண்மையை அறிவதற்கான ஒரு வாத முறையாக அமைகின்றது. இத்தகைய வாத முறைகளில் காரண, காரிய தொடர்புகள் இடம்பெறும்.
- உரை அளவை என்பது ஆகம பிரமாணம் எனக் கூறப்படும். உரையளவை வாக்கிய வடிவத்தில் காணப்படும். இது ஆப்தவாக்கியம் என்றும் அழைக்கப்படும்.
- ஆப்தன் எனப்படுபவன் பக்கம் சாராது உணர்வு நிலை இல்லாது உள்ளதை உள்ளவாறு கூறுபவன் ஆவான். ஆப்தன் குருகுலவாசத்தில் உயர்ந்த சீடனாக விளங்குவான். இது சுருதிப் பிரமாணம் என்றும் அழைக்கப்படும்.
- சிவஞானசித்தியார் உரையளவையை;
    1. மந்திர உரை
    2. தந்திர உரை
    3. உபதேச உரை

  என மூன்றாக வகுத்துக் கூறுகின்றது.

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படி I** சிவஞானசித்தியார் கூறும் பிரமாணங்கள் பற்றி மாணவர் கூறுவதற்கு இடமளியுங்கள்.

**படி II:** அளவைப் பிரமாணங்கள், சிவஞான சித்தியார் கூறும் பிரமாணங்கள் என்பன தொடர்பாக தகவல்களைத் திரட்டுவதற்குத் தேவையான நூல்களை வழங்குங்கள்.

**படி III:** மாணவர்களை குழுக்களாகப் பிரித்து பிரமாணங்கள், சிவஞானசித்தியார் கூறும் பிரமாணங்கள் தொடர்பாக சிறுகையேடு ஒன்றைத் தயாரித்து காட்சிப்படுத்த வழிகாட்டுங்கள்.

**உசாத்துணை:**

1. சைவ சித்தாந்த அடிப்படைகள் - ஆ. தேவசேனாதிபதி

**தேர்ச்சி 7.0** : சைவசித்தாந்த மெய்ப்பொருளியலை ஆராய்ந்து விளங்கிச் செயற்படுவர்.

**தேர்ச்சி மட்டம் 7.2** : அத்வைதம், சைவசித்தாந்தம் என்பவற்றுக்கிடையிலான விளக்கத்தைத் தர்க்கரீதியாக முன்வைப்பர்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற் பேறுகள்:**

- இந்து தத்துவ சிந்தனைகளான அத்வைத, சைவசித்தாந்தக் கோட்பாடுகள் பற்றிய அடிப்படை அறிவினைப் பெற்று, விளக்கிக் கூறுவர்.
- இவ்விரு தத்துவ சிந்தனைகளும் அத்வைதம் என்பதற்குப் பொருள் கொள்ளும் வகையில் வேறுபடுமாற்றை சான்றுகளுடன் விளக்கி எழுதுவர்.
- அத்வைதம், சைவசித்தாந்தம் என்பவற்றுக்கிடையிலான கோட்பாட்டு உருவாக்கம், பிரமாணங்கள் என்பவற்றை நூலாதாரங்களுடன் முன்வைப்பர்.
- இறைவன், உலகு, உயிர்கள் பற்றிய மெய்யியற் சிந்தனைகளை அத்வைத வேதாந்தமும், சைவசித்தாந்தமும் வெளிப்படுத்துவதிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை இனங்கண்டு பட்டியற்படுத்துவர்.
- அத்வைதமும் சைவசித்தாந்தமும் ஆன்மீக விடுதலைக்கு வழிகாட்டுமாற்றை விளங்கி அவை பற்றி தர்க்கிப்பர்.
- இந்து தத்துவ சிந்தனை வளர்ச்சிக்கு அத்வைத வேதாந்தமும் சைவசித்தாந்தமும் வகிக்கும் பங்களிப்பினை மதிப்பிடுவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**7.2 அத்வைதம் - சைவசித்தாந்தம் என்பவற்றின் ஒப்பீட்டு விளக்கம்**

**பெயர் விளக்கம்**

- வேதாந்த மரபில் அத்வைதம் என்ற சொல்லானது "அ + துவிதம்". அதாவது "இரண்டல்ல" → ஒன்று எனக் கருத்து விளக்கம் கொள்ளப்படுகிறது.
- பன்மை வாதத்தை மறுத்துரைப்பதும் ஒருமை வாதத்தினைச் சாதிப்பதுமே இதனூடு பெறப்படுவதாகும். அத்துடன் இருமை வாதமா அல்லது இருமை இன்மைக் கோட்பாடா எனச் சாதிப்பதும் இதன் வழி பெறப்படும்.
- "சைவசித்தாந்தம்" என்ற பதம் சைவம் + சித்தம் + அந்தம் எனப் பகுதியுறும். சைவம் என்பது சிவசம்பந்தமானது.

  "சைவம் சிவனுடன் சம்பந்தமாகுதல்
  சைவம் தனையறிந்து சிவம் சாருதல்" - திருமந்திரம்

- அந்த வகையில் சிவப்பரம்பொருள் தொடர்பான நெறியின் முடிந்த முடிவான அறிவைச் சாதிப்பது என்பதே இதற்கான பொருள் விளக்கமாகும்.

## கோட்பாட்டு உருவாக்கமும் காலமும்

- அத்வைதம் ஒரு கோட்பாடாக உருப்பெற்றது கி.பி. 8 ஆம், 9 ஆம் நூற்றாண்டுக் காலகட்டத்திலேயே ஆகும்.
- அத்வைதச் சிந்தனை மரபின் மூலங்கள் உபநிடதங்களிலும், கீதையிலும், பிரம்ம சூத்திரத்திலும் விரவியிருப்பினும், கௌடபாதரின் மாண்டுக்கியகாரிகை அதனை நன்கு விளக்கியுரைத்திருப்பினும், ஆதிசங்கரரே பிரமாணவியல் ரீதியாக இதனை முதலில் நிறுவியிருக்கிறார்.
- ஆதிசங்கரரைத் தொடர்ந்து அவரது சீடர்களான சுரேஸ்வரர், பத்மபாதர், மண்டல மிஸ்ரர், வாசஸ்பதிமிஸ்ரர் போன்றோர் அத்வைதக் கோட்பாட்டை மேலும் விரிவுபடுத்தி வளர்த்துச் சென்றனர். குறிப்பாக பிற வேதாந்தக் கொள்கையினரால் அத்வைதம் விமர்சிக்கப்பட்ட சந்தர்ப்பங்களிளெல்லாம் அத்வைதக் கொள்கையை செம்மையாக்கி, தர்க்கபூர்வமாகப் பதிலிறுப்பதில் இவர்களின் பங்களிப்புக் காத்திரமானதாகும்.
- சைவசித்தாந்தத்தின் மூலங்களும் வேத சிவாகமங்கள் தொட்டு சங்க இலக்கியங்கள், சைவத்திருமுறைகள் வரையில் இனங்காணப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் வட இந்தியாவில் மத்திய காலத்தில் எழுச்சி பெற்ற அட்டப்பிரகரண சித்தாந்த நூல்களும், தமிழ் நாட்டில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் பின் எழுச்சியுற்ற மெய்கண்டசாத்திரங்களுமே சைவசித்தாந்தக் கோட்பாட்டை முழுமையாக நிறுவினார்.
- மெய்கண்ட சாத்திரங்களின் பின்னர் பண்டார சாத்திரங்கள் சைவசித்தாந்தக் கோட் பாட்டை வளம்படுத்தின.

## ஆராய்ச்சிக்குள்ளாக்கப்பட்ட பொருட்கள்

- அத்வைதம், சைவசித்தாந்தம் ஆகிய இரண்டு தத்துவக் கொள்கைகளும் பரம்பொருள், உயிர், பிரபஞ்சம் ஆகிய மூன்று விடயங்களையும் ஆராய்ச்சிக்குட்படுத்தின.
- இரண்டு தத்துவங்களுமே பரம்பொருள் உண்மையினை ஏற்றுக் கொண்டன. ஒரு வகையில் உயிரின் இருப்புப் பற்றியும் கருத்துரைத்துள்ளன.
- அத்வைதிகள் ‘‘உள்பொருள் ஒன்றே’’ என்கிற ஒருமைவாதிகள் ஆவர்.
- பிரம்மம் (பரம்பொருள்) மட்டுமே உண்மை. பிரபஞ்சம் வெறும் தோற்றம் மட்டுமே. ஒவ்வோர் ஆன்மாவும் பிரம்மமே என வாதிடுகின்றனர். பிரமத்தின் இருமையற்ற நிலை, உலகத்தின் உண்மையற்ற நிலை, பிரமத்திலிருந்து ஆன்மா வேறுபடாத நிலை என அத்வைத சாரத்தை இனங்காட்ட முடியும்.
- அந்த வகையில் கேவலாத்வைதத்தை சாதிக்க முயலுகின்ற சங்கர வேதாந்திகள் ஆன்மா, பிரபஞ்சம் ஆகியவற்றின் நித்தியத்தன்மையை நிராகரிக்கின்றனர்.
- சைவசித்தாந்திகளோ ஒருமைவாதிகள் அல்லர். அவர்கள் பன்மைவாதிகள் ஆவர். பரம்பொருளாகிய பதியும் உயிர்களாகிய பசுக்களும் பிரபஞ்ச இயற்கையின் சிருட்டிக்குக் காரணமான மலங்களும் (பாசம்) அநாதியானவை என்று வாதிடுவர்.

- குறிப்பாக பதி, பசு, பாசம் ஆகிய மூன்று பதார்த்தங்களின் இருப்பைச் சாதிக்கின்ற வகையினால் சைவசித்தாந்தத்தை திரிபதார்த்த நிச்சயம் / முப்பொருளுண்மைக் கொள்கை என அழைப்பர்.

  "பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
  பதியினைப் போல் பசு பாசம் அநாதி" - திருமூலர்

- பதி - கடவுட் கொள்கை, பசு - ஆன்மக் கோட்பாடு, பாசம் - மாயை உள்ளிட்ட மும்மலங்களையும் உள்ளடக்கியது. (ஆணவம், கன்மம், மாயை - உலகப் படைப்புத் தொடர்பானது)

### பிரமாண நூல்கள்

- அத்வைதிகள் தங்கள் கோட்பாட்டை நிறுவுவதற்கு பிரஸ்தானத்திரயங்களையும், மாண்டுக்ய காரிகையையும் அடிப்படைப் பிரமாண நூல்களாகக் கொள்வர்.
- ஆதிசங்கரரின் முப்பெரும் பாடியங்களும், விவேகசூடாமணி போன்ற பனுவல்களும் பிற்கால அத்வைதிகளுக்கு அடிப்படைப் பனுவல்களாகின.
- சைவசித்தாந்திகள் வேத சிவாகமங்களை பொது, சிறப்பு ஆப்தப் பிரமாண நூல்களாக ஏற்றுக் கொள்கின்றனர்.

  "முதலாகும் வேதம் முழுதாகமமாகப்
  பதியான ஈசன் பகர்ந்த இரண்டு" - திருமந்திரம்

  "வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்
  ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுரைப்பர் நாதனுரையிவை" - திருமந்திரம்

  "சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" - உமாபதிசிவாசாரியார் (சிவப்பிரகாசம்)

- குறிப்பாக யசுர்வேத சதருத்திரியப் பகுதியும், சுவேதாசுவதரம் போன்ற சில உபநிடதங் களும் சைவசித்தாந்த வரலாற்றுடனும் கோட்பாடுகளுடனும் பிரிக்கமுடியாத தொடர் புடையவை.
- அந்த வகையில் அத்வைதிகளைப் போலவே சைவசித்தாந்திகளும் வேதங்களைத் தமது பிரமாண நூலாக ஏற்றுக் கொள்கின்ற வகையில் ஒற்றுமைப்படுகின்றனர்.
- சிவாகமப் பிரமாண நூல்களில் இந்தக் கருத்தொருமிப்பைக் காணமுடியாதுள்ளது.

### பிரமாணங்கள்

- தத்தம் கருத்தியல்களை தத்துவார்த்தபூர்வமாக நிறுவும் வகையில் அளவைகள்/ பிரமாணங்களைப் பயன்படுத்துகின்ற முறைமையிலும் இவ்விரு கோட்பாடுகளுக்கிடை யில் ஒற்றுமை வேற்றுமைகளை அவதானிக்க முடிகிறது.
- அத்வைதிகள் பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம், அருத்தாபத்தி, அனுபலத்தி, உவமானம் ஆகிய ஆறு பிரமாணங்களைப் பயன்படுத்தித் தம் கொள்கையை நிலைநாட்ட முயல்கின்றனர்.

- சைவசித்தாந்திகளோ அறிவாராய்ச்சியியலில் கையாளப்படுகின்ற பத்து அளவை களையும் பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம் ஆகிய மூன்று அளவைகளுள் உள்ளடக்கி முப்பொருண்மையைச் சாதிப்பதற்கு மூன்று அளவைகளைப் பிரயோகித் துள்ளனர்.
- எவ்வாறாயினும் பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம் ஆகிய மூன்று பிரமாணங் களைக் கையாளுவதில் அத்வைதிகளும் சைவசித்தாந்திகளும் ஒற்றுமை உடையவர் களாகின்றனர்.

**பரம்பொருள்**

- இரண்டு தத்துவங்களும் பரம்பொருண்மையை ஏற்றுக் கொள்கின்றன. அத்வைதிகள் பரம்பொருளை உபநிடதங்கள் உருவகித்தது போன்று ''பிரம்மம்'' எனச் சுட்டுகின்றனர்.
- ''சுத்தசைதன்ய வஸ்து'' நாம ரூப பேதங்களைக் கடந்த நிர்க்குணப்பொருள், காலதேச வரையறைகளுக்கு அப்பாற்பட்ட முழுமைப்பொருள் என பிரம்மத்தை விவரிக்கின்ற அத்வைதிகள், மாயை (அவித்தை)யின் பாதிப்பினாலேயே குணங் குறிகளுடன் கூடிய பிரபஞ்சத்துடன் (இயற்கையுடன்) இயைந்த ஈஸ்வரநிலை பிரம்மத்திற்கு ஏற்படுவதாகக் கருத்துரைக்கின்றனர்.
- இந்த வகையில் நிர்க்குணம், சகுணம் என இரண்டு நிலைகளில் அத்வைதம் பிரம்மம் பற்றிய சிந்தனைகளை விவாதித்துள்ளது.
- குணங்குறிகளைக் கடந்த ''நிர்க்குணயியல்பே'' பிரம்மத்தின் உண்மையான இயல்பு என்றும் குணங்களுடன் இயைந்ததால் வந்த ஈஸ்வர நிலையாகிய சகுணத்தன்மை சார்பினால் உண்டானது என்றும் அத்வைதம் கருதுகிறது.
- பரம்பொருளைப் பதி அதாவது தலைவர் (முதற்பொருள்) எனச் சுட்டும் சைவசித்தாந்திகள் விஸ்வபதி, பிரஜாபதி என உயிர்களின் தலைவராக, உலகின் தலைவராக, பசுக்களாகிய உயிர்களை ஆற்றுப்படுத்தவல்ல எஜமானராகப் பரம்பொருளைப் பதி எனச் சுட்டியிருக்கிறது.
- சொரூப இலக்கணம், தடத்த இலக்கணம் என 2 நிலைகளில் பதி பற்றி சைவசித்தாந்தம் குறிப்பிட்டுள்ளது.
- சொரூப இலக்கணம் - இதுவே பதியின் இயல்பான தன்மையாகும்.

> ''பதி பரமேயதுதான்...
> நிலவும் அரு உரு இன்றிக் குணங்குறிகளின்றி
> நின்மலமாய் ஏகமாய் நித்தம் ஆகி
> அலகில் உயிர்க் குணர்வாகி அசலமாகி
> அகண்டிதமாய் ஆனந்த உருவாய்
> செலவரிதாய், செல்கதியாய், சிறிதாய், பெரிதாய்
> திகழ்வது தற்சிவம்'' - சிவப்பிரகாசம்

"பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்
அருமைக்கும் ஒப்பின்மையான்" - திருவருட்பயன்

"இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" - திருநாவுக்கரசு

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்கச்
சோதிக்க வேண்டா கடர் விட்டுளன் எங்கள் சோதி" - திருஞானசம்பந்தர்

முதலான பாடற் சான்றுகள் பதியின் வரம்பிகந்த தன்மையாகிய சொரூப இலக்கணத்தை உணர்த்துவதற்கான அனுபூதி முயற்சிகளாக காட்டப்படுகின்றன.

- சைவசித்தாந்தப் பதியின் சொரூப இலக்கணமும் அத்வைதிகள் சித்திரிக்கும் நிர்க் குணப் பிரம்மத்திற்கும் இடையில் நெருங்கிய ஒருமைப்பாடுகளை அவதானிக்க முடியும்.
- சைவசித்தாந்தத்தில் உயிர்கள் மீது கொண்ட கருணையினால் திருவருட்சக்தி அதிட்டித்து நிற்க, பதிப்பொருள் எடுக்கும் தடத்த இலக்கணம் பற்றியும் விரிவாக நூலாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

"நாடரிய கருணைத் திரு உருவமாகி...
நினைந்த உரு நிறுத்திருவன் நிமலன் தானே" - சிவப்பிரகாசம்

"அருவும் உருவும் அறிஞர்க்கறிவாம்
உருவும் உடையான் உளன்" - திருவருட்பயன்

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க் காயிரம்
திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டாமே" - திருவாசகம்

"அகளமாய் யாவரும் அறிவரிது அப்பொருள்
சகளமாய் வந்தது" - திருவுந்தியார்

- சைவசித்தாந்தத் தடத்த இலக்கணமானது அருவம், உருவம், அருஉருவம் ஆகிய மூன்று நிலைகளில் பதிப்பொருள் எடுக்கின்ற நவபேதங்களைப் பற்றியும் உயிர்களின் பொருட்டு நிகழ்த்தப்படுகின்ற பஞ்சகிருத்தியங்கள் பற்றியும் பதியின் எண்குணங்கள் பற்றியும் அனேக விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

"சிவம் சக்தி நாதம் விந்து ......
நவந்தரு பேதம் ஏக நாதனே நடிக்கும் என்ப" - சிவஞானசித்தியார்

"அழிப்பிளைப்பாற்றலாக்கம் அவ்வவர் கன்மமெல்லாம்
......................................................................
பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடின் அருளே எல்லாம்" - சிவஞானசித்தியார்

- அத்வைதிகள் சித்திரிக்கின்ற ஈஸ்வரநிலை (சகுணப்பிரம்மம்) சைவசித்தாந்திகள் குறிப்பிடுகின்ற தடத்தநிலையுடன் வேறுபாடுடையது ஆகும்.
- தடத்த நிலையில் சக்தியை அதிட்டித்துப் பதிப்பொருள் திருமேனிகளைத் தாங்குவதற்கு உயர்ந்த நோக்கம் உள்ளது. மலபந்தத்தில் அகப்பட்ட ஆன்மாக்களுக்குச் சிவப் பேற்றினை அளிப்பதே அந்த நோக்கமாகும்.
- அத்வைதிகளின் ஈஸ்வரநிலை எனப்படும் சகுணப் பிரம்மத்திற்கு அவ்வாறானதொரு நோக்கமில்லை.
- பிரம்மம் மாயையால் பந்தமுறுவது எதன்பொருட்டு என்பது பற்றி, அத்வைதிகள் எதனையும் குறிப்பிடவுமில்லை.

**ஆன்மா**

- அத்வைதிகள் பிரம்மமே அகவயமான அவித்தையின் காரணத்தால் ஆன்மாக்களாகக் காட்சி தருகிறது என்கின்றனர்.
- அவச்சேதவாதம், பிரதிவிம்பவாதம் ஆகியவற்றின் மூலம் ஆன்ம இருப்பு, அனேகான்ம வாதம் ஆகியவை மறுக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வோர் ஆன்மாவும் அவித்தையால் பந்தமுற்று தன்னைப் பிரம்மம் என்று உணராத நிலை காணப்படுகிறதே அன்றி, ஆன்மாக்கள் என்று பிரம்மத்துக்கு வெளியே எதுவுமில்லை என்பது அத்வைதிகளின் கருத்தாகும். இவை மூலமாகப் பிரம்மமே ஆன்மா என்ற ஏகான்மவாதம் சாதிக்கப்படுகிறது.
- ஆனால் சைவசித்தாந்தமோ பதியினைப் போலவே, பசு ஆகிய ஆன்மாவும் நித்திய மானது என்கிறது.
- மேலும் எண்ணற்ற ஆன்மாக்கள் இப்பிரபஞ்சத்தில் உள்ளதாகவும் அநாதியாகவே பாசத்தால் கட்டுண்ட அவை முட்டை, வியர்வை, வித்து, கருப்பை என நான்கு முறைகளில் எண்பத்தினான்கு நூறாயிரம் யோனி பேதங்களுக்கு உட்படுவதாகவும் குறிப்பிடுகிறது.

  ‘‘எண்ணரிதாய் நித்தமாய் இருள்மலத்தில் அமுழ்ந்தி
  இருவினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை
  ........................................................................
  பாதம் உற்றிடும் நற் பசுவர்க்கம்...’’ - சிவப்பிரகாசம்

  ‘‘ஏற்றியொரு தொகை அதனில் இயம்புவார்கள் யோனி
  எண்பத்து நான்கு நூறாயிரமென்றெடுத்தே’’ - சிவப்பிரகாசம்

- எண்ணற்ற ஆன்மாக்களை அவை பந்திக்கப்பட்டுள்ள மலங்களின் அடிப்படையில் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானாகலர் என மூன்று தொகுதியாகச் சைவசித்தாந்தம் வகைப்படுத்திச் சுட்டியுள்ளது

## ஆன்ம விடுதலை

- தன்னைப் பிரம்மமாக உணர்வதே அத்வைதம் சுட்டும் விடுதலையாகும்.
- அவித்தையின் காரணமாக, தானே பிரம்மம் என்பதனை ஆன்மாக்கள் உணர்வ தில்லை. எனவேதான் மெய்ஞ்ஞானமே விடுதலை பெறுவதற்கான சாதனமாக அத்வைதிகளால் முன்வைக்கப்படுகிறது. அதாவது தானே பிரம்மம் என்பதனை உணர்ந்த கணத்தில் ஆன்மா பிரம்மாகிவிடுகின்ற அத்வைதஅனுபவம் கிடைப்பதனால் உடல் அழியும் வரை காத்திருக்க வேண்டிய அவசியம் அற்றுப் போகிறது.
- எனவேதான் சீவன்முத்தி, விதேகமுத்தி ஆகிய இரண்டையும் அத்வைதம் ஏற்கிறது.
- ''தத் துவம் அஸி'' - அது நீ ஆகிறாய்
  ''அகம் பிரம்மாஸ்மி'' - நான் பிரம்மம் ஆகிறேன்

  போன்ற உபநிடத மகாவாக்கியங்களின் பொருளமைதியை, அத்வைதம் கூறும் விடுதலை பற்றிய கருத்து நிலையில் வைத்தே, ஆதிசங்கரர் முதலியோர் பொருள் விபரிப்பர்.
- சைவசித்தாந்திகள் ஆன்மவிடுதலை என்பதனை உயிர்கள் ஆணவத்தின் சகவாசகத் தால் பல பிறவிகளின் பலனாகப் பெற்ற சஞ்சித வினை முழுவதுமாக அழிவதனால் சாத்தியப்படும் ஒன்றாகக் குறிப்பிடுவர்.
- அநாதியாகவே கூடியிருந்த ஆணவத்தின் வலி கெடுவதனால் மல சம்பந்த முற்றிருந்த ஆன்மா சிவசான்னித்யமடைகிறது.
- இந்த உயர்நிலையடைவதற்காக நாற்பாத நெறிமுறைகளைச் சுட்டுகின்ற சைவ சித்தாந்தம் விடுதலையை சுத்தாத்துவித அனுபவமாகக் குறிப்பிடும்.
- ''அத்துவிதமென்ற அந்நியச் சொல் கண்டுணர்ந்து
  சுத்த சிவந்தன்னைத் தொடருநாள் எந்நாளோ''
  - எந்நாட்கண்ணி - தாயுமானவர்)
- ''தாடலை'' என்ற எடுத்துக்காட்டு
  ''தாடலை போல் கூடியவை தானிகழா வேற்றின்பக்
  கூடலை நீ ஏகமெனக் கொள்'' - திருவருட்பயன்
- ஆன்ம விடுதலைக்குத் தடையேற்படுத்தும் இடையீட்டுப் பொருட்கள் என்ற வகையிலே அத்வைதம் மாயை அவித்தை பற்றியே விவரிக்கிறது. அப்பொருள் அநிர்வசனீயம், வியட்டி கமட்டி அணுகுமுறை என இது பற்றிய விளக்கங்கள் அத்வைதத்தில் இடம்பெறுகின்றன.
- சைவ சித்தாந்தமோ ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி எனும் பஞ்ச மலங்களை இடையீட்டுப் பொருட்களாக விவரிக்கிறது. எவ்வாறாயினும் இவை பல சந்தர்ப்பங்களில் விடுதலைக்குத் துணைபுரியும் சாதனங்களையும் (''தேற்றாங்கொட்டை துணிவெளுத்தல் உதாரணம்'') சைவசித்தாந்திகளால் எடுத் தாளப்பட்டுள்ளன.
- அத்வைதிகளின் கருத்துப்படி விடுதலையைத் தடைசெய்யும் மாயை என்பது பிரம்மத்திடமிருந்து தோன்றியது. ஆனால், சைவசித்தாந்தக் கருத்தியலில் பதி, பசு போலவே மலங்களும் அநாதியானவை. பதியிடமிருந்து தோன்றுவன அன்று.

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படி I** அத்வைதம், சைவசித்தாந்தம் முதலியன பற்றி மாணவர் முன்னர் கற்ற விடயங்களை மீட்டு, கலந்துரையாடலொன்றை நிகழ்த்துங்கள்.

**படி II:** இவ்விரு தத்துவ சிந்தனைகள் பற்றி மாணவர் மேலதிக தகவல்களைப் பெறுவதற்குத் தேவையான உசாத்துணை நூல்களை வழங்குங்கள்.

**படி III:** மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து, பின்வரும் தலைப்புகளை வழங்கி அவை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள வழிப் படுத்துங்கள்.

(i) உள்பொருள்கள் ஒன்றா? பலவா?

(ii) ஆன்மீக விடுதலைக்குச் சிறந்தது பக்திமார்க்கமா? ஞானமார்க்கமா?

**படி IV:** பின் வகுப்பறையில் குறித்த நேரத்தில் நான்கு குழுக்களையும் இரண்டு அணிகளாகப் பிரித்து, வகுப்பறையில் விவாதப் போட்டியினை நிகழ்த்துங்கள். இதற்கு சக ஆசிரியர்களின் உதவியையும் பெற்றுக் கொள்ளுங்கள். விவாதத்துக்குச் சேகரித்த தகவல்களை ஒழுங்குபட எழுதி, வகுப்பறையில் காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**உசாத்துணைகள்:**

(1) வேதாந்தத் தெளிவாம சைவசித்ததாந்தம் - கலைவாணி இராமநாதன்

(2) சைவசித்தாந்தத் தெளிவு - நா. ஞானகுமாரன்

**தேர்ச்சி 7.0** : சைவசித்தாந்த மெய்ப்பொருளியலை ஆராய்ந்து விளங்கிச் செயற்படுவர்.

**தேர்ச்சி மட்டம் 7.3** : சைவசித்தாந்த மெய்ப் பொருட் கோட்பாடுகளை ஆதாரங்களுடன் விளங்கிக் கொள்வர்.

**பாடவேளைகள்** : 50

**கற்றற் பேறுகள்:**

- இந்து தத்துவ சிந்தனைகளில் முக்கியத்துவம் பெறும் 'சைவ சித்தாந்தம்' என்பதன் பொருளை அறிந்து கூறுவர்.
- சைவசித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் பற்றிய முப்பொருட் கோட்பாடுகளை நூலாதாரங்களின் துணையுடன் முன்வைப்பர்.
- சைவசித்தாந்த சாத்திரங்களின் துணையுடன் பதி, பசு, பாசம் பற்றிய கருத்துக்களை விளக்கி எழுதுவர்.
- சைவசித்தாந்தம் கூறும் முத்திக் கோட்பாடு ஆன்மீக விடுதலைக்கு வழிகாட்டு மாற்றை இனங்கண்டு கூறுவர்.
- சைவத் திருமுறைகள், அறநூல் என்பவற்றின் துணையுடன் சைவசித்தாந்தம் கூறும் முத்திக்கான மார்க்கங்களை வகைப்படுத்தி எழுதுவர்.
- சைவசித்தாந்த மெய்ப்பொருட் கோட்பாடு இந்துக்களின் வாழ்வியலோடு தத்துவ சிந்தனைகளை தொடர்புபடுத்துமாற்றை உணர்ந்து மதிப்பளிப்பதோடு அவற்றைத் தம் வாழ்விலும் கடைப்பிடிக்க முன்வருவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

## 7.3 சைவசித்தாந்த மெய்ப்பொருட் கோட்பாடுகள்

### 7.3.1 முப்பொருள்கள் (பதி, பசு, பாசம்)

- சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்கள் பதி, பசு, பாசம் என்பனவாம்.
- அளவையியல் நெறிமுறைகள், சற்காரியவாதம் என்பவற்றின் அடிப்படையில், சைவ சித்தாந்தக் கோட்பாடு, உலகப் பொருட்களை மூன்று பிரிவுகளில் அடக்குகிறது.
    1. வரையறை இல்லாத அறிவுடைய பொருள் - பதி
    2. வரையறை உள்ள அறிவுடைய பொருள் - பசு
    3. அறியும் இயல்பற்ற சடப்பொருள் - பாசம்
- பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களும் சித்து, சதசித்து, அசித்து எனப்படும். இவை அநாதியானவை.

- சைவசித்தாந்தம் பதி உண்மைப்பொருள் என்பதனை முதலில் நிறுவுகின்றது. அதற்கு ஆகமப் பிரமாணத்தையும் அநுமானப் பிரமாணத்தையும் துணையாகக் கொள்கிறது. பானை உண்டெனில் அதனைப் படைத்தவனும் உள்ளான் என்பது போல
- ஆன்மா செய்த வினைகளின் பயன்கள், அவ்வான்மாக்களைச் சென்று சேராது. அவ்வாறு அவற்றைச் சேர்க்க ஒருவன் வேண்டும். அவனே கடவுள்.
- இறை அனுபூதி பெற்ற தத்துவ ஞானிகளது வாக்குகளாலும் அவர்களால் உருவாக் கப்பட்ட வேத ஆகமங்கள், சைவசித்தாந்த சாத்திரங்கள், தேவார திருவாசகங்களின் கருத்துக்களாலும் பதி உண்மை நிறுவப்படுகின்றது.
- ஆன்மாக்கள் பல. அவை காட்சிக்குத் தெரியாதவை; அநுமானத்தால் மட்டும் உணரப்பட வேண்டியவை எனச் சைவசித்தாந்தம் கூறுகிறது.
- ஆன்மாக்கள் நல்வினை தீவினைகளை அனுபவிப்பதற்கே உலகம் பதியினாற் படைக்கப்பட்டுள்ளது. ஆன்மாவோடு இயற்கையாகவே செம்பில் களிம்பு போல ஆணவ மலம் இணைந்திருக்கிறது.
- ஒருவனாகிய இறைவனும் அநேகரான ஆன்மாக்களும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களும் ஆன (பதி, பசு, பாசம்) முப்பொருள்களும் அநாதியானவை என்பது சைவசித்தாந்தம்.
- இந்த முப்பொருள்களுக்கு இடையிலான தொடர்பினை சைவசித்தாந்தம் வியாபகம், வியாப்பியம், வியாத்தி எனக் கூறும். இது பதியாகிய இறைவனின் வியாபகத்துள் பசுக்களாகிய உயிர்களும் பாசமாகிய மும்மலங்களும் அடங்கியிருக்கின்றன என்பதையும் இந்த வியாபகமும் இப்பொருட்கள் யாவற்றுள்ளும் விரவி நீக்கமற நிறைந்துள்ளது என்பதையும் விளங்குகிறது.
- இதனைச் சிவஞானசித்தியார், கடல் தன்னுள்ளே தண்ணீரையும் உப்பையும் கொண்டிருப்பது போல் இறைவன் ஆன்மாவையும் பொருட்களையும் கொண்டுள்ளான் என விளக்குகிறது.

## (அ) பதி

- சைவசித்தாந்திகள் இறைவனை இறை, கடவுள், பதி, பரமசிவன், ஈசன், பரமாத்மா எனப் பல பெயர்களால் குறிப்பிடுவர்.
- பதி 'தலைவன்' எனப் பொருள்படும். இறைவன் எல்லா உயிர்களுக்கும் எல்லா உலகங்களுக்கும் தலைவர் என்பதை இது குறிக்கும்.
- பதியே மேலான பொருள். பதி ஒருநாமம், ஓருருவம் ஒன்றுமிலான். தத்துவங்களைக் கடந்தும், தத்துவங்களோடு பிரிந்தும், பிரிப்பின்றியும் நிற்பவன். அளவைகளுக்கு எட்டாதவன்.
- பதிக்கு இருநிலைகள் சைவசித்தாந்தத்தில் கூறப்படுகிறது.
    1. சிறப்பியல்பு - சொரூப லட்சணம்
    2. பொது இயல்பு - தடத்த லட்சணம்

- பதி ஊரிலான், பேரிலான், குணமிலான், குறியிலான், போக்கிலான், இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் இவன் என எவராலும் சொல்ல முடியாது. இவ்வாறு கருவி கரணங்களுக்கு அப்பாற்பட்டு நிற்கும் நிலையைச் சொரூப இலட்சணம் என்பர். இதனைச் சிவப்பிரகாசம் பின்வருமாறு குறிப்பிடும்.

  " பல்கலையாகம வேதம் யாவையினுங் கருத்து
  பதிபசுபாசம் தெரித்தல் பதிபரமே அதுதான்
  நிலவும் அரு வுரு வன்றிக் குணங்குறிகள் இன்றி
  நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி
  அலகில் உயிர்க்குணர்வாகி அசலமாகி
  அகண்டிதமாய் ஆனந்த உருவாய் அன்றிச்
  செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
  திகழ்வது தற் சிவமென்பர் தெளிந்துளோரே"

- பதி, ஆன்மாக்கள் மீது கொண்ட பெருங்கருணையினாலே, அநாதியாகவே மலத்தால் பிணிப்புண்டிருக்கும் அவற்றின் துன்பங்களைப் போக்கி, அருள் செய்வதற்காகத் தன் நிலையினின்றும் ஒருபடி இறங்கிவந்து, எழுந்தருளும் நிலை தடத்த இலட்சணமாகும்.

- இந்நிலையில் அவ்வுயிர்களின் பொருட்டு, ஐந்தொழில்களையும் செய்வதற்குரிய வகையில் திருவருளையே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளுவான். இந்நிலையில் உருவும், குணமும், குறியும், செயலும் உடைய மூர்த்திகளாக இருப்பதே இறைவனது தடத்த நிலையாகும்.

  "அவையேதானே ஆய் இருவினையில்
  போக்கு வரவு புரிய ஆணையின்
  நீக்கமின்றி நிற்கும் அன்றே"

  என்பது சிவஞானபோதம்.

- சிவம் அதாவது பதியின் இயல்பு ஞானமும் ஆனந்தமுமாகும். இதனை சத், சித், ஆனந்தம் என்பர். இம்மூன்றினுள் இறைவனின் எண்குணங்களும் அடங்கும். இவை
  - என்றுமுள்ள, எக்காலத்தும் ஒரே தன்மையாயிருக்கும் பொருள் சத்து. தன்வயத்தனாதல் இதனுள் அடங்கும்.
  - சித்தில் தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை எனும் ஆறு குணங்களும் அடங்கும்.
  - ஆனந்தத்தில் வரம்பிலின்பமுடைமை அடங்கும்.

- பதியாகிய பரசிவத்தினது மேலான கருணை பராசக்தி. அப்பராசக்தியினின்றும் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி என்பன தோன்றும். பரமசிவன் அச்சக்திகளைப் பொருந்தி நின்று, அருட்டிருமேனிகளைக் கொண்டு சுத்தமாயையோடு பொருந்தி வேதம் ஆகமம் முதலிய கலைகளைத் தோற்றுவிப்பான்.

- அசுத்த மாயையினின்று உலகங்களைத் தோற்றுவிப்பான். உரிய காலம் வரை உலகை நிலைநிறுத்தி, காத்து, பின் தோன்றிய முறையே ஒடுங்கச் செய்து, முடிவில் தன்னிலே ஒடுங்கச் செய்வான்.
- இவ்வாறு இறைவன் கொள்ளும் திருமேனிகள் மூன்று. அவை:

  1. அருவம் 2. உருவம் 3. அருவுருவம்

  என்பனவாகும்.
- சிவன் முப்பத்தாறு தத்துவங்களில், ஒவ்வோர் தத்துவங்களினின்று கொண்டு, தத்தம் தொழிலைச் செய்யும் முறையில் சிவம், சக்தி, நாதம், விந்து என அருவத் திருமேனி நான்காயும், சதாசிவம் எனும் அருவுருவத் திருமேனி ஒன்றாயும், மகேஸ்வரன், உருத்திரன், விஷ்ணு, பிரமன் எனும் உருவத் திருமேனி நான்காயும் ஒன்றிலொன்றாகத் தோன்றி, முத்தியறுத்து ஒன்பது பேதத்திலும் வேற்றுமையின்றி நின்று அவ்வத் தொழிலைச் செய்வர்.

**பதி**

| **அருவம்** | **அருவுருவம்** | **உருவம்** |
|---|---|---|
| நிஷ்களம் | சகளநிஷ்களம் | சகளம் |
| (சத்தர் ) | (உத்தியுத்தர் ) | (பிரவிருத்தர் ) |
| சிவம் | சதாசிவம் | மகேஸ்வரன் |
| சக்தி | | உருத்திரன் |
| நாதம் | | திருமால் |
| விந்து | | பிரமன் |

- இவ்வொன்பது பேதங்களுள் சக்தி, விந்து இரண்டும் சக்தி பேதமாகும். ஏனைய ஏழும் சிவபேதமாகும். இச் சிவபேதம் ஏழினும் பராசக்தியும் அவரோடு பிரிவின்றி அவ்வப் பெயர் பொருந்தி, துணையாய் நின்று நடாத்தும். (உ-ம்) மகேஸ்வரி, உமை, நாராயணி.
- சைவசித்தாந்தத்தில் இறைவன் உயிர்களுடன் ஒன்றாய், உடனாய், வேறாய் நிற்பான் என்பர். இவற்றை பேதம், அபேதம், பேதாபேதம் ஆகிய மூன்று நிலைகளிலும் காண்பர்.

  (i) இறைவன் உலகங்களும் உயிர்களுமாக நிற்கும் ‘அபேத’ நிலை

  (ii) இறைவன் தானாக அல்லது வேறாக நிற்கும் ‘பேத’ நிலை

  (iii) இறைவன் அவையே தானாக நிற்கிறான். இது ‘பேதாபேத’ நிலை

  எனப்படும்.
- தடத்த நிலையில் இறைவன் ஆற்றும் ஐந்தொழில்கள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாம்.

**படைத்தல்**

- இறைவன் உயிர்களைப் படைப்பதில்லை. உயிர்களுக்கு வேண்டிய உடம்பு உணர்த்துவதற்கு வேண்டிய கருவி கரணங்கள், வாழ்க்கைக்கு வேண்டிய இடங்கள், நுகர்ச்சிக்கு வேண்டிய பொருட்கள் ( தனு, கரண, புவன, போகம்) என்பவற்றைப் படைக்கிறான்.
- 'இல்லது உளதாகாது' எனும் சற்காரிய வாதத்தை ஒப்புக் கொள்ளும் சைவசித்தாந்தம், சூக்கும (நுட்பமான) நிலையிலுள்ளவற்றை தூல (பருப் பொருள்) நிலைக்குக் கொண்டு வருவதையே படைத்தல் (சிருஷ்டி) என்று கூறும். உலகப் படைப்பிற்கு முதற்காரணம் மாயை. துணைக்காரணம் சத்தி. நிமித்த காரணம் இறைவன் ஆகும்.

**காத்தல்**

- தோற்றுவிக்கப்பட்ட உலகு உயிர்களை உரிய கால எல்லை வரையிற் காப்பாற்றி, கன்ம நுகர்ச்சிக்குத் துணை செய்தலே காத்தல் (திதி) எனப்படும்.

**அழித்தல்**

- பல பிறவிகளிற் பிறந்திறந்து உழலும் உயிர்களை இளைப்பாற வைத்தல் அழித்தல் (சங்காரம்) எனப்படும்.

**மறைத்தல்**

- இரு வினைகளை ஒன்றாக எண்ணும் நிலையினை வருவித்து, மலங்களை முதிர்விக்கும் அருட்செயல் மறைத்தல் (திரோபவம்) எனப்படும்.

**அருளல்**

- உயிர்களின் பக்குவ நிலையில் அவற்றின் மலபாசத்தை ஒழிக்க வீடுபேறு எனப்படும் முத்தியை அருளுவது அநுக்கிரகம் எனப்படும். இதனை உமாபதி சிவாசாரியார், பின்வருமாறு திருவருட்பயனில் கூறுவார்.

  "ஆக்கி எவையும் அளித்தா சுடன் அடங்கப்
  போக்கும் அவன் போகாப்புகல்"

**(ஆ) பசு**

- சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள்களில் சதசித்து எனப்படுவது பசு.
- கடவுளைப் போலவே உயிர்களும் அநாதி நித்தியப் பொருள்கள்.
- சைவ சித்தாந்திகள் உயிர்களைப் பசு, ஜீவன், ஆன்மா, தேகி, உள்ளம், சதசத்து என பலவாறு அழைப்பர்.
- உயிர்களின் எண்ணிக்கைக்கு அளவே இல்லை. உயிர்கள் அளவில்லாதவை.
- பசு பாசத்தோடு சம்பந்தப்பட்டது. பாசங்களுடன் பொருந்தியுள்ளதால் உயிருக்குப் பசு எனும் பெயர் வழங்குகிறது.
- ஆன்மாவுக்குப் பல குணங்கள் உள்ளன. அவை அறிவித்தால் அறியும் தன்மை; சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் தன்மை என்பனவாம்.
- பசு பாசத்தோடு சம்பந்தப்பட்டு நிற்கும் நிலை பெத்தநிலை. பாசங்கள் யாவும் நீக்கப்பட்டு உயிர் இறைவனைச் சாரும் போதுள்ள நிலை முத்தி எனப்படும்.

- பசு நித்தியமாய், வியாபகமாய் சரீரந்தோறும் வெவ்வேறாய் இருக்கும். பதி அவற்றுடன் அத்துவிதமாய் நின்று வினைப்பயனை ஊட்டுவார். அவை பாசத் தொடர்பில் பிறப்பு இறப்புக்குட்படும். இவற்றுக்கு அகக்கருவிகளும் புறக்கருவிகளும் துணையாய் அமையும்.
- ஆன்மாக்களுக்கு மூன்று அவத்தைகள் (நிலைகள்) உள்ளன எனச் சைவசித்தாந்தம் கூறும். அவை கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை எனப்படும்.

  **கேவலாவத்தை -** உயிர் தோற்றமில் காலந்தொட்டு ஆணவ மலத்தோடு இயைந்து அறியாமையில் மூழ்கி கிடக்கும் நிலை.

  **சகலாவத்தை** - உயிரின்மீது கொண்ட கருணையால் பதி, மாயையை முதற் காரணமாகக்கொண்டு உயிருக்குத் தனு, கரண, புவன, போகங்களைத் தந்தருளுகின் றான். உடம்மை ஏற்கும் உயிர், மலபந்தங்களுக்கு உட்பட்டு நிற்கும் நிலை.

  **சுத்தாவத்தை** - சகலாவத்தை நிலையில் பல்வேறு பிறவிகள் எடுத்துப் படிப்படியே முதிர்ந்து இறைவன் திருவருளுக்கு உரியதாகும் போது உயிர் அடையும் நிலை இதுவாகும்.
- பசுக்கள் தம் பெத்த நிலையில் மூவகைப்படும். அவை விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்பனவாம்.

| | | |
|---|---|---|
| விஞ்ஞானகலர் | - | ஆணவமலம் மட்டும் உள்ளவர். |
| பிரளயாகலர் | - | (உலகத் தொடர்புள்ளவராய்) ஆணவம், கன்மம் என்னும் இரண்டு மலமும் உள்ளவர். |
| சகலர் | - | ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் உடையவர். |

- ஆன்மா சார்ந்ததன் வண்ணமானது என்பது அதன் பிரதான குணமாகிறது. சத்தாகிய பதியைச் சாரும்போது சத்தாயும் அசத்தாகிய மலத்தைச் சாரும் போது அசத்தாயும் விளங்குவதால் பசு சதசத்து எனப்படுகிறது.
- ஆன்மாக்கள் காரணாவத்தைகளை மட்டுமன்றி, காரியாவத்தைகளாகிய சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் எனும் ஐந்து அவத்தைகளுக்கும் உட்படும். இவற்றை முறையே நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் எனவும் கூறுவர். இவை ஆன்மாவில் கேவலாவத்தை நிலையிலும் சகலாவத்தை நிலையிலும் காணப்படும்.
- ஆன்மாக்கள் ஆணவ முனைப்பால் நல்வினை, தீவினைகளாகிய இருவினைகளைப் புரிந்து அவற்றின் பயனை அனுபவிப்பதற்கேற்ப உடம்பை பெறுகின்றன.பிறந்து பழவினையை நுகரும்போதே புதுவினைகளையும் பெருக்கி பிறப்பிறப்புச் சுழலில் உழல்கின்றன. இவ்வேளை அவை நல்வினைப் பயனால் இறுதி இலட்சியத்தை அடைய முயற்சிக்கின்றன. அவை சரியை, கிரியை, யோக, ஞானமெனும் நாற் பாதங்களின் வழிநின்று படிப்படியாக முத்திநிலைக்கு இட்டுச் செல்லப்படு கின்றன.
- இந்நிலையில் இருவினை ஒப்பு, மலபரிபாகம் பெற்று சத்திநிபாதம் (குரு வடிவாகத் திருவருள் பதியப்) பெற்று இறைவனடி சேருகின்றன.

## (இ) பாசம்

- ஆன்மா இறைவனை உணர்ந்து பேரின்பம் பெறுவதற்குத் தடையாய் அதனைப் பந்தித்திருப்பது பாசம் எனப்படும்.
- இது தளை, கட்டு, பந்தம், அசித்து எனவும் வழங்கும்.
- பாசம் உயிரை மாசுபடுத்தும் காரணத்தினால் மலம் எனப்படும்.
- மலங்கள் மூன்று வகைப்படும். அவை ஆணவம், கன்மம், மாயை என்பன. இவை ஆன்மாவைப் பற்றும் சடத்தன்மையுள்ள அறிவற்ற நித்தியப் பொருள்கள்.
- மும்மலங்களுள் ஆணவமே, ஆன்மாவை அநாதியாகப் பற்றியுள்ளதால் 'மூலமலம்' எனவும், 'சகசமலம்' எனவும் கூறுவர்.
- கன்மமும் மாயையும் இடையிடையே வந்து செயற்கையாகக் கூடுவன. ஆகையால் அவை 'ஆகந்துக மலம்' எனப்படுகின்றன.

### (i) ஆணவம்

- ஆணவ மலம் உயிரை மயக்கி, அவற்றின் வியாபகத்தன்மை விளங்கவொட்டாது மறைத்து, ஒடுக்கி அணுத்தன்மை படுத்துவதனால் ஆணவம் எனப்பட்டது.
- பசுத்துவம், மலம், அஞ்ஞானம், அவித்தை, பாசம், அசுத்தி, களங்கம், மோகம், தமசு, சடம் எனும் பெயர்களும் ஆணவ மலத்தையே குறிக்கும்.
- சிற்றறிவும் சிறுசெயலும் உடையதாக்குதல் ஆணவத்தின் இயல்பு.
- ஆணவம் ஆன்மாக்களுக்குப் பொய்ப்பிரபஞ்சத்தை மெய்ப்பொருள் என்று அறிவித்து நிற்றலால், அவை வினைகளை இயற்றி பிறவியுள் அகப்பட்டுத் துன்புறுகின்றன.
- நான், எனது என்று எண்ணும் அகந்தையும் இஃது எனது என எண்ணுகிற மமதையும் ஆணவத்தினாலேயே உண்டாகின்றன.
- ஆணவம் அளவில்லாத சக்திகளை உடையது. ஆணவம் செம்பிற்களிம்பு போல உயிருடன் கலந்து நிற்கும் தன்மையுடையது. உயிர்களுக்கு ஆணவம் ஒரு குற்றமாகக் இருத்தலால் 'மலம்' எனப்பட்டது.
- கண்ணை மறைத்து நிற்கும் இருள்போல ஆணவமலம் உயிரின் அறிவை மறைத்து நிற்றலால் 'இருண்மலம்' எனப்பட்டது.
- ஆணவம் ஆன்மாவைப் பந்தித்திருக்கும்போது, தன்னையும் காட்டாது பிறபொருளையும் காட்டாது. ஆனால், இருளோ பிறபொருளைக் காட்டாவிடினும் தன்னைக் காட்டும். ஆதலால் ஆணவம் இருளிலும் கொடியது.
- உயிரின் அறிவு, இச்சை, செயல் ஆகியவற்றை மறைத்து நிற்கும் ஆணவத்திற்கு குணங்கள் எட்டு என்பர் சைவசித்தாந்திகள். அவை,

  (i) விகற்பம் - தன்னைவிடப் பிறர் ஒவ்வாரெனல்.
  (ii) கற்பம் - பிடித்ததைப் பிடித்திருத்தல்.
  (iii) குரோதம் - கோபம் கொண்டு நினைத்தல்.
  (iv) மோகம் - ஒன்றிற்கு ஆசைப்படல்.

(v) கொலை - உயிர்களைக் கொல்லுதல்.
(vi) அழுர் - எப்பொழுதும் துக்கப்படுதல்.
(vii) மதம் - அகங்காரம் மேலிடுதல்.
(viii) நகை - சிரித்தல்.

- ஆணவம் உயிரின் குணமன்று. அதன் குற்றமே.
- நெல்லுக்கு உமி போன்றதாய் உயிரைப் பற்றி நிற்கும் ஆணவத்தை நீக்குதலே முத்திநெறியாகும்.
- ஆன்மாக்களின் மூன்றுநிலைகளுள் கேவலநிலை, சகலநிலை என்னும் இரண்டிலும் ஆணவம் ஆன்மாவைப் பந்தித்து நிற்கும். சுத்தநிலை எனும் முத்திப்பேற்றின் ஆணவம் வறுத்த வித்துப் போன்று வலி கெட்டு நிற்கும்.
- ஆன்மா மாயையின் காரியமான உடம்பை ஒரு சாதனமாகப் பெற்றுள்ளது.

இதனைப் பயன்படுத்தி திருவருளை உணர்ந்து இறைவனைப் பற்றி நிற்பதே ஆணவம் கெடுவதற்கு வழியாகும். இதனை,

"ஒன்று மிகினும் ஒளிகவராதேலுள்ளம்
என்றும் அகலாது இருள்" எனத் திருவருட்பயன் விளக்குகிறது.

- சிவஞானசித்தியாரில் ஆணவமலத்தின் தன்மைகளை அருணந்தி சிவாசாரியார் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"ஒன்றதாய் அநேகசக்தியுடையதாய் உடனாய் ஆதி
அன்றதாய் ஆன்மாவின்தன் அறிவொடு தொழிலை ஆர்த்து
நின்று போத் திருத்த வத்தை நிகழ்த்திச் செம்பினிற் களிம்பேய்ந்து
என்றும் அஞ்ஞானங் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே."

**(ii) கன்மம்**

- கன்மம் என்பது வினை, செயல் எனவும் பொருள்படும்.
- ஆணவத்தின் பிடியிலிருந்து ஆன்மாவை விடுவிப்பதற்காகவே இறைவன் கருவி, கரணங்களோடு கூடிய உடம்பைத் தந்துள்ளான். ஆன்மாக்கள் எடுக்கும் உடம்புகளுக்குக் காரணமாய்ப் பலவித போகங்களைத் தருவதும் ஆன்மாவைக் கைவிட்டு, நீங்காததாய் மனம், வாக்கு, காயம் என்பவற்றால் செய்யப்படுவதாய் அமைவதும் கன்மம் ஆகும்.
- கன்மம் இன்ப துன்பம் தரும் புண்ணிய பாவ வடிவினது. சர்வசங்காரகாலத்தில் ஆன்மாக்கள் மாயையில் ஒடுங்கும்போது அவற்றை விட்டு நீங்காது மாயையில் ஒடுங்கும்.
- கன்மத்தின் செயல்கள் பின்வருவன:

(i) இருத்தல் - இந்திரிய வழிச் செல்லுதல்.
(ii) கிடத்தல் - அவ்வழியில் ஓங்கிநிற்றல்.
(iii) விடுதல் - முயலுதல்.

(iv) இயற்றல் - இதவகிதஞ் செய்தல்.

(v) பரநிந்தை - பிறர்பழிகூறல்.

(vi) மேவல் - பல பிறப்புகளில் மேவல்.

- கன்மம் மூன்று வகைப்படும். அவை சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்பன.
- ஒருவன் முன் செய்த வினையின்பயனை இப்பிறவியில் அனுபவிக்கும்போது அது பிராரத்தம் எனப்படும். இதனை விதி, ஊழ், தெய்வம், நியதி எனவும் கூறுவர்.
- பிராரத்த கன்மத்தை அனுபவிக்கும்போது செய்யும் புதிய வினைகள், ‘ஆகாமியம்’ எனப்படும். இந்த ஆகாமியத்திலும் ஒருபகுதி உடனுக்குடனே அனுபவத்துக்கு வரும். அதுவும் பிராரத்தமாய்க் கழியும்.
- முன்னைப் பிறவியிற் செய்த வினைகளிலும், இப்பிறவியிற் செய்த வினைகளிலும் அனுபவத்துக்கு வராமல் ஏனைய பிறவிகளுக்கு என எஞ்சிக் கிடக்கும் வினை சஞ்சிதமாகும்.
- வினை அனுபவத்துக்கு வரும்போது அதாவது கன்மத்தின் பயன் செய்தமுறையில் அன்றி மாறியும் வரும். இதனைத் தெய்வீகம், பௌதிகம், ஆத்மீகம் என வகுப்பர்.
- தெய்வம் காரணமாகவரும் கன்மத்தை ஆதி தெய்விகம் எனவும், பஞ்சபூதங் காரணமாக வரும் கன்மத்தை ஆதி பௌதிகம் எனவும், உயிர்களால் வரும் கன்மத்தை ஆதி ஆத்மிகம் எனவும் கூறுவர்.
- பிறவி எடுத்த ஆன்மா, ஆணவத்தின் முனைப்பினாலே வினைகளைப் புரிகிறது. இவ்வினைகள் பொதுவாக நல்வினை, தீவினை என இருவகைப்படும். ஆணவத்தை அடக்கி, ஆன்மாவை ஈடேற்றும் செயல்கள் நல்வினை எனப்படும்.
- ஆணவத்துக்கு அடங்கி, ஆன்மாவுக்குக் கேடு விளைக்கும் வினைகள் தீவினையாகும்.
- நல்வினையானது சிவநல்வினை, பசுநல்வினை எனவும், தீவினையானது சிவத்தீவினை, பசுத்தீவினை எனவும் பகுக்கப்படும்.
- இவற்றைத் தவிர, வெறுவினை என்பதுவும் உண்டு. (உ-ம்) உணவு சமைத்தல், ஓவியம் வரைதல், ஆடை தைத்தல் முதலியன. இவ்வினைக்குப் பயன் இல்லை.
- பற்றற்ற வினையும் உளது. இருவினையொப்பு. மலபரிபாகம், சத்திநிபாதம் ஆகிய பக்குவநிலை அடைந்தோர், எல்லாம் அவன் செயல் என திருவருள் துணைக்கொண்டு செய்யும் வினை இதுவாகும். இதன் பயன் இறைவனையே சாரும்.
- ஆன்மாக்கள் முன்செய்த வினைப்பயன்படி, பல பிறவிகளை எடுத்து இருவினை புரிவதும் வினைப்பயனை அனுபவிப்பதுமாய் இருக்கும்போது வறுக்கப்பட்ட வித்துப் போல ஆணவம் வலிகெட இருவினைகளும் ஒழிய, சிவபுண்ணியத் தொடர்பில் திருவருள் குருவாகி வந்து, தீட்சை செய்து ஆட்கொண்டு முத்திநெறியில் சேர்க்கும்.

**(iii) மாயை**

- எல்லாக் காரியங்களும் தன்னிடத்தல் ஒடுங்குதற்கும், அவை தன்னிடத்தே தோன்றுவதற்கும் காரணமாய் நிற்பது மாயை. இது சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயை என மூவகைப்படும். சுத்தமாயை சிவதத்துவம் எனவும், அசுத்த மாயை ஆன்ம தத்துவம் எனவும், சுத்தாசுத்தமாயை வித்தியா தத்துவம் எனவும் கூறப்படும்.
- இந்த மூவகை மாயாகாரியமாக அமைந்ததே உயிர் நிலையாகிய உடம்பு. இவ்வுடம்பைப் போல மாயாகாரியமாய் உள்ளதே உலகம்; சிவதத்துவம் ஐந்தும், வித்தியா தத்துவம் ஏழும், ஆன்ம தத்துவம் இருபத்து நாலும் ஆக முப்பத்தாறு தத்துவங்களைக் கொண்டது உடம்பு.
- ஆணவ இருளில் அடங்கிக் கிடக்கும் ஆன்மாவுக்கு (கேவல நிலையில்) உடலும் கருவிகளும் உபகரித்து உதவுவது மாயை. மாயையின் காரியங்களே தனு, கரண, புவன போகங்களாம். இதனைச் சிவஞானசித்தியார் பின்வருமாறு கூறுகிறது.

  ''மாயையே உடலுமாகும் மாயையே கரணமாகும்
  மாயையே புவனமாகும் மாயையே யோகமாகும்
  மாயையே பொறிகளாகும் மாயையே புலன்களாகும்
  மாயையே அண்டபிண்டம் யாவையும் மாயையாமே''

- மாயை மறைத்தலையும் செய்கிறது. இது ஆணவமலச் சார்பில் அமைந்த குணமே அன்றி, அதன் சொந்த இயல்பு அன்று. சுத்தமாயை ஆகிய சிவ தத்துவங்கள் ஆன்மாவுக்கு மெய்யுணர்வு விளக்கத்துக்கு உபகாரமாய் நிற்கின்றன.
- சூரிய ஒளி வரும்வரை, இருளில் நிற்பவனுக்கு விளக்குச் சிறிதளவு ஒளி தந்து உதவுவதுபோல, ஆணவ இருளில் நிற்கும் உயிர்களுக்குத் திருவருளாகிய பேரொளி வந்து சேரும்வரை மாயாகாரியங்களாகிய தனு, கரண, புவன, போகங்கள் சிறிதளவு அறிவு விளக்கம் செய்கின்றன. இதனைத் திருவருட்பயன் பின்வருமாறு கூறும்.

  ''விடிவாமளவும் விளக்கனைய மாயை
  வடிவாதி கன்மத்து வந்து''

### 7.3.2 முத்திக் கோட்பாடு

- ஆன்மாவானது மலங்களிவிருந்து விடுபட்டு பக்குவநிலையை அடையும். இதனை இருவினைஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் எனும் படிநிலைகளாகச் சைவசித்தாந்தம் கூறும்.
- இருவினைஒப்பானது ஆன்மா நல்வினை, தீவினை ஆகியவற்றிலும் அவற்றின் பயன்களிலும் விருப்பு வெறுப்பின்றி, இரண்டையும் ஒரே தன்மையாகக் கருதலாகும். ஓடும் செம்பொன்னும் ஒப்பவே நோக்கும் நிலையாகும். இந்நிலை ஆன்மாவை இறுகப் பற்றியுள்ள ஆணவமலத்தின் பிடி நெகிழ்ந்து தேய்வதற்குத் துணை புரிகிறது. இதனை மலபரிபாகம் என்பர். மலபரிபாகத்தின்போது மலத்தின் பின்னாகச் சுருங்கிக் கிடந்த திரோதனம் என்ற நிலையிலிருந்து திருவருட்சக்தி ஆன்மாவில் படிந்து அதனைத் தன்வயப்படுத்தி நிற்கும். இது சத்திநிபாதம் எனப்படும்.

- இந்நிலையில் இறைவன் குருவாகி வந்து, ஆன்மாவின் பக்குவ நிலைக்கேற்ப அவற்றை ஆட்கொண்டருளுவார். இவ்வாறு மலங்கள் ஒழிந்து ஞானம் பெற்ற நிலையில் ஆன்மாவானது மீண்டும் பிறவியில் உழலாது முத்திநிலையை அடைகிறது.
- ஆன்மாவானது பிறப்பு, இறப்பு எனும் தொடர்ச்சியிலிருந்து விடுபட்டு, இறைவன் திருவடியை அடைந்து இரண்டறக் கலந்து, பேரின்பம் பெறுதலே முத்திநிலையாகும் எனச் சைவசித்தாந்திகள் கூறுவர். முத்திநிலை அனுபவிக்கத்தக்கதே தவிர, வாக்கினாற் கூறமுடியாததும் மனதினால் எண்ணமுடியாததுமாகும்.
- முத்தியடைந்த ஆன்மா, இறைவனுடன் இரண்டறக் கலந்து ஒன்றாம் தன்மைப்படும். இம்முத்திநிலையைத் தாடலைபோற் கூடல் எனத் திருவருட்பயன் கூறுகிறது. (தாள் + தலை = தாடலை)

### 7.3.3 முத்தி பெறுவதற்குரிய மார்க்கங்கள்

- ஆன்மாவானது ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களோடு சேர்ந்திருக்கும் வரை பிறப்பு இறப்புக்கு உட்பட்டு உழலும்.
- மூலமலமாகிய ஆணவம் உயிரோடு இயைந்திருக்கும் வரை ஆன்மாவுக்கு பிறப் புண்டு. பிறப்புண்டானால் கன்மமும், மாயாமலமும் இடையில் வந்து கூடும். எனவே ஆன்மா பிறப்பை ஒழிப்பதற்கு மலங்களிலிருந்து விடுபட வேண்டும்.
- ஆன்மா மலபந்தங்களிலிருந்து விடுபடுவதற்குச் சைவசித்தாந்தம் பல வழிகளைக் கூறுகிறது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்களாகும். இந் நான்கு மார்க்கங்களிலும் நிற்கும் ஆன்மா படிமுறையாக முத்தி நிலையை நோக்கிச் செல்லும். இதன் முதற்படியாக அமைவது தீட்சையாகும்.
- மனிதப் பிறவி எடுத்த ஆன்மா மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கத்தை ‘இறைபணி நிற்றல்’ என்பர். அகப்பூசை, புறப்பூசை, மந்திரசெபம், திருக்கோயில் வழிபாடு, அடியார் வழிபாடு, சமூகத் தொண்டு ஆகியன இதனுள் அடங்கும்.

#### 7.3.3.1 சைவநாற்பாதங்கள் - சரியை, கிரியை, யோகம், ஞானம்

- வேத காலத்தின் பின்னர் தோன்றி நிலைபெற்ற ஆகமச் சிந்தனை மரபில் முக்கியமாகச் சைவாகமச் சிந்தனை மரபில் வளர்ந்த சைவசித்தாந்தக் கோட்பாடு கூறும் முத்தி சாதனங்கள் அல்லது முத்தி வழிகள் **‘நாற்பாதங்கள்’** என மெய்கண்ட சாத்திர நூல்களில் விதந்து கூறப்படுகின்றன.

### 1.0 சைவ நாற்பாதங்கள் - பொது விளக்கம்

- **‘சைவ நாற்பாதங்கள்’** என்ற தொடர் பதி ஆகிய பரசிவத்தை அடையச் சைவ சமயிகள் அதாவது சிவவழிபாட்டு நெறியினர் பின்பற்றுதற்குரிய நான்கு வழிகள் அல்லது மார்க்கங்கள் என்று பொருள்படும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன ஆகும்.
- இந்நான்கு சொற்களும் ஒழுகுதல், வினைபுரிதல், கூடுதல், அறிதல் என்னும் கருத்துக்களை அவற்றின் வினையடிகள் மூலம் உணர்த்துகின்றன. இச்சொல்

விளக்கத்தின் அடிப்படையில் நோக்கும்போது சரியை என்பது தொண்டு வழி எனவும், கிரியை என்பது சடங்கு வழி எனவும், யோகம் என்பது தியான வழி (கூடுகை நெறி) எனவும், ஞானம் என்பது ஞான வழி (மெய்யுணர்வு நெறி) எனவும் கூறலாம்.

## 2.0 நாற்பாதக் கோட்பாடுகள்

- சைவ நாற்பாதங்கள் பற்றிய பல்வேறு கோட்பாடுகள் சைவசித்தாந்த நூல்கள் தோன்றிய காலந் தொடக்கம் பல்வேறு சைவச் சான்றோராற் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் பின்வருவன முக்கியமான கொள்கைகளாகும்.

### (அ) பசு - சிவம் தொடர்புக் கோட்பாடு அல்லது உறவு நிலைக் கோட்பாடு

- முத்தியடைய விரும்பும் பசுவுக்கும் பதியாகிய சிவத்திற்கும் இடையே நிலவும் தொடர்பின் அடிப்படையில் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய மார்க்கங் களைத் தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்று கூறல் சாத்திர நூற் கோட்பாடு.
- பதியைத் தலைவராக ஏற்றுக் கொண்டு மெய்யன்புடன் இறை பணிபுரியும் ஒழுகலாற்று நெறி தாசமார்க்கம் ஆகும்.
- பதியைத் தந்தை/ தாய் என ஏற்று பிள்ளையின் நிலையில் தன்னை வைத்து, உறவுமுறை அன்புடனான வாழ்க்கைக் கடமைகளைப் புரியும் நெறி சற்புத்திர மார்க்கம் ஆகும்.
- பதியை, நல்வழியிற் செலுத்தும் உண்மை (உத்தம) நண்பராக ஏற்றுத் தன்னை குறைகள் உள்ள ஒருவராகக் கருதி, உத்தம நண்பரின் உதவி மூலம் நல்வழியிற் சென்று வாழ்க்கைப் பயனை அடைய முயலும் நல்லிணக்க வழி சகமார்க்கம் ஆகும்.
- பதியைச் சற்குரு ஆக ஏற்றுத் தன்னை மெய்யறிவு நாடும் சீடனாக கருதி ஞான விசாரணையில் ஈடுபட்டு அதன் இறுதியில் அத்துவித முத்திநிலை சித்திக்க முயலும் ஞானவழி சன்மார்க்கம் ஆகும்.

### (ஆ) பயன் கோட்பாடு அல்லது ஆணவ நீக்க அளவுக் கோட்பாடு

- முத்திக்குத் தடையாயுள்ள ஆணவத்தின வலியை ஒழித்தல் சைவ நாற்பாதங்களின் முக்கிய நோக்கம் ஆகும். இதனை ‘மலபரிபாகம்’ என்று கூறுதல் மரபு. ஆணவத்தின் வலி கூடும் அளவின் அடிப்படையில் சைவ நாற்பாதங்களைப் பயன் கோட்பாடு விளக்குகின்றது.
- சரியை வழியில் ஆணவம் காற்பங்கு மட்டும் ‘சரிந்திடும்’. கிரியை வழியில் அம் மலத்தின் அரைப்பங்கு ‘கெடுதியுற்றிடும்’. யோக வழியில் ஆணவத்தின் முக்காற்பங்கு ‘மடிந்திடும்’. ஞானவழியில் ஆணவம் முற்றும் ‘வீழும்’.
- எனவே சரியையை ‘ஆணவக் காற்சரிவு மார்க்கம்’ எனவும், ஞானத்தை ‘ஆணவம் முற்றும் வீழும் மார்க்கம்’ எனவும் கூறுதல் பொருந்தும்.

- இப்பயன் கோட்பாட்டுச் சிந்தனை விதந்து கூறும் பாடல் பின்வருமாறு:

  "சரியையில் ஆணவங் கால்சரிந்திடும்
  கிரியையில் அரைமலங் கெடுதி யுற்றிடும்
  மருவுயோ கத்தில் முக்கான் மடிந்திடும்
  விரிசிவ ஞானத்தில் முற்றும் வீழுமே"

### (இ) படிநிலை வளர்ச்சிக் கோட்பாடு அல்லது கனி வளர்ச்சிக் கோட்பாடு

- சரியை மூலம் ஞானம் வரை உள்ள நான்கு பாதங்களும் ஒன்றிலிருந்து மற்றொன்று தொடர்ச்சியாக வளர்ந்து முழுமை பெறும் வழிகள் ஆகும். இதனைத் தாவரவியல் கூறும் கனி வளர்ச்சியுடன் ஒப்பிட்டு விளக்கலாம்.
- ஒரு செடியில் அல்லது கொடியில் அல்லது மரத்தில் தோன்றும் சின்னஞ்சிறு அரும்பு மொட்டாக உருப்பெற்று, அடுத்து இதழ் விரிந்து மலராக மலர்ந்து, அதன் பின் சிறு பிஞ்சாக மாறி, காயாகி வடிவம் பெற்று இறுதியில் சிறிது சிறிதாகப் பருத்துச் செங்காயாக மாறி முடிவில் கனியாக முதிர்கின்றது.
- அதுபோல அரும்பு போலத் தோன்றும் சரியை மலர்போலக் கிரியையாக விரிந்து ஒழுங்குமுறை வடிவம் பெற்று காய் போல, படிநிலை வளர்ச்சி கண்டு இறுதியில் கனிபோல முதிர்ந்து ஞானம் என்னும் முழுநிலை பெறுகின்றது. இந்த ஒப்பீட்டு விளக்கத்தைத் தாயுமானவர் எளிமையான பின்வரும் பாடலில் மிக நுட்பமாகக் கூறுகின்றார்.

  "விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
  அரும்பு மலர்காய்கனி போலன்றோ பராபரமே" - பராபரக்கண்ணி

- தாயுமானவர் இவ்வாறு தாவரவியல் உவமை உத்தியைக் கையாண்டு கூறும் இப்படிநிலை வளர்ச்சியின் முழுநிலைப் பயனை மாணிக்கவாசகர்,

  "அது பழச்சுவையென அமுதென அறிதற்கு அரிதென
  எளிதென அமரரும் அறியார்"

  என்று விளக்குதல் சிந்தனைக்கு உரியது.

### (ஈ) உறுப்பமைப்புக் கோட்பாடு

- சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சைவ நாற்பாதங்களில் ஒவ்வொன்றிலும் ஏனைய பாதங்களின் கருத்துக்கள் சில உறுப்புக்களாக அடங்கியுள்ளன என்பது சாத்திர நூல்கள் கூறும் சிறப்புக் கொள்கையாகும். இந்தக் கோட்பாட்டிற்கு இணங்கச் சரியை என்பது சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என்னும் நான்கு உறுப்புக்கள் அமைந்து தன்னளவில் முழுமை பெறும் ஒரு பாதமாகும்.
- அவ்வாறே கிரியையில் சரியை, கிரியையில் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம் என்னும் நான்கு உறுப்புக்கள் கொண்ட மார்க்கம் கிரியை எனப்படும்.
- மேலும் யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில்

ஞானம் என்னும் நான்கு உறுப்பமைதி கொண்டது யோகம் என்னும் வழி எனப்படும். ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்னும் உறுப்பமைப்புக் கொண்டது ஞானம் என்னும் பாதம் எனக் கூறுவர்.

- நாற்பாதங்களின் படிநிலை வளர்ச்சி, உறுப்பமைப்பு, சிறப்பியல்புகள், பயன் நிறையளவு என்பவற்றைப் பின்வரும் வரைபடம் மூலம் விளக்கிக் கொள்ளலாம்.

**(அ) ஞானம்**

**ஞானம்**

1. ஞானத்தில் ஞானம்
2. ஞானத்தில் யோகம்
3. ஞானத்தில் கிரியை
4. ஞானத்தில் சரியை

ஆணவ வலியொடுக்கம் - 1002
அத்துவித முத்தி -
ஞானமாகிய செம்பொருள்
தகைமை - ஞானவேட்கை
ஞானப்பயிற்சி, ஞானத் தேர்ச்சி

**(ஆ) யோகம்**

**யோகம்**

5. யோகத்தில் ஞானம் (அபர ஞானம்)
6. யோகத்தில் யோகம்
7. யோகத்தில் கிரியை
8. யோகத்தில் சரியை

ஆணவ வலி மடிவு - 752
பதமுத்தி - சாரூபம்
அருவ வழிபாடு
“முழுச்சோதி நினைந்திருத்தல்”
தகைமை - யோகத் தேர்ச்சி

**(இ) கிரியை**

**கிரியை**

9. கிரியையில் ஞானம் (அபரஞானம்)
10. கிரியையில் யோகம்
11. கிரியையில் கிரியை
12. கிரயையில் சரியை

ஆணவ வலி கெடல் - 502
பதமுத்தி - சாமீபம்
உருவ வழிபாடு
அருவுருவ வழிபாடு
தகைமை - கிரியைத் தேர்ச்சி

**(ஈ) சரியை**

**சரியை**

13. சரியையில் ஞானம்
14. சரியையில் யோகம்
15. சரியையில் கிரியை
16. சரியையில் சரியை

ஆணவ வலிச்சரிவு - 252
பதமுத்தி - சாலோகம்
உருவ வழிபாடு
தகைமை - தொண்டுகளில் அறிவு, பயிற்சி, திறன், ஆர்வம், நாட்டம், ஆக்க மனப்பாங்கு

- சைவசித்தாந்தத்தில் முத்திக்கான சாதனைகளாக சைவ நாற்பாதங்களே விளங்குகின்றன.
    - சரியாபாதமானது புறத்தொழிலால் உருவத்திருமேனியை வழிபடுதலைக் குறிக்கும்.
    - கிரியாபாதமானது புறத்தொழிலாலும் அகத்தொழிலாலும் அருவுருவத் திருமேனியை வழிபடுதலைக் குறிக்கும்.
    - யோகம் என்பது அகப்பூசை மூலம் அருவத் திருமேனியை வழிபடுதலாகும்.
    - ஞானம் என்பது புறத்தொழிலும், புறத்தொழிலும் இல்லாது இறைவனை அறிவாலும் ஞானநெறியாலும் வழிபாடு செய்தலைக் குறிக்கும்.
- சரியைநெறியில் கோயில் தொண்டு பிரதான இடம்பெறும். இறை உலகில் வாழும் சாலோகம் எனும் நிலை இதனால் கிடைக்கப் பெறும். 'விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந் நெறி ஞானமாகும்' என்னும் பாடல், சரியை நெறியினால் ஏற்படும் ஞானத்தைக் குறிப்பிடுவதாய் அமையும். நாவுக்கரசர் உழவாரத் தொண்டு செய்தபோது ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் நிலையில் திருத்தொண்டில் ஈடுபட்டார். இந்நிலை இருவினைஒப்பாக விளங்குவதை நாம் காண்கின்றோம். என் கடன் பணி செய்து கிடப்பதே என நாவுக்கரசர் தாசமார்க்கத்தில் செயற்பட்டதைக் காணலாம்.
- சைவசித்தாந்தம் வெளிப்படுத்தும் முத்தி நிலை, சைவ நாயன்மார் வாழ்வியல் மூலமாகவும் வெளிப்படுகின்றது. இறைவனை எசமானாகக் கருதி, தொண்டு செய்யும் தாசமார்க்கம் இந்நிலையில் பின்பற்றப்படும்.
- கிரியை வழிபாடு அகவழிபாடும் புறவழிபாடும் நிறைந்தது ஆகும். நறுமண மலர் சூட்டல், தூப தீபங் காட்டல், நைவேத்தியம் செய்தல், அர்ச்சனை செய்தல் முதலிய செயல்களில் ஈடுபடுவதால் சாமீபம் என்னும் முத்திநிலையை அடைவர். இந்த நெறியைப் பின்பற்றி, அதற்கு இலக்கணமாக விளங்கியவர் திருஞான சம்பந்தராவார். சற்புத்திரநெறி இவரால் கடைப்பிடிக்கப்பட்டது.
- யோக வழிபாடு புலனடக்கம், தியானம் என்னும் நெறிகளையுடையது. சுந்தரர் இதன் முன்னோடியாவார். சாரூப முத்திநிலை இதனால் பெறப்படும்.
- ஞானமார்க்கத்தில் தசகாரியச் செயற்பாடுகள் கூறப்படுகின்றன. அவற்றில் ஆன்ம தரிசனம், ஆன்மசுத்தி, ஆத்மலாபம், தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவஞானம் ஆகிய விடயங்கள் உள்ளடங்கும்.

    "இறைவனடி ஞானமே ஞானமென்பர்"

ஞானபூசை, ஞான வழிபாடு என்பவற்றின் மூலமும் இறைவனடி சேரமுடியும்.

1. ஞான நூல்களை ஓதுதல்
2. அவற்றைப் பிறருக்கு ஓதுவித்தல்
3. ஞானநூற் பொருளை, தக்க ஆசானிடம் கேட்டல்

4. தகுதியுடையவர்களுக்கே ஞானநூல்களை உரைத்தல்
5. ஞானநூற் பொருளைச் சிந்தித்தல்

என்பன கூறப்படுகின்றன. இவை கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும் நெறி முறைகளாகக் கூறப்படுகின்றன.

- விரதம், தீட்சை, குருலிங்க, சங்கம வழிபாடுகள் அனைத்தும் முத்திக்கான உபாயங் களாகவே குறிப்பிடப்படுகின்றன. பிறப்பு, இறப்புச் சுழற்சியிலிருந்து விடுபடும் போதே முத்தி சித்திக்கும் எனவும் குறிப்பிடுவர்.

- சைவசித்தாந்த முத்தி நிலையில் இருவினைஒப்பு நிலை மேலானது. ஆணவ மலபரிபாகத்திற்கும் ஆன்மா திருவருளை அடையும் சத்திநிபாதத்திற்கும் இடையில் இருவினைஒப்புநிலை அமைந்து விடுகின்றது. இருவினைஒப்பினால்,
    - ஆணவ அகந்தைகள் குறைவடையும்.
    - நல்வினை செய்யும் உணர்வு மேலோங்கும்.
    - பிறருக்குத் தீமை செய்யும் உணர்வு குறைவடையும்.
    - கன்மவினையிலிருந்து விடுபடவும், உயர்ந்த ஒழுக்க வாழ்க்கை வாழவும் வழியேற்படும்.
    - துன்பத்தை தாம் ஏற்கும் மனோபாவம் ஏற்படும்.
    - திருவருளோடு அத்துவிதமாக கலக்கும் நிலையை ஏற்படும்.
    - குரு அருள், திருவருள், தீட்சை மூலம் கிடைக்கும்.

- முத்தி நிலை என்பது ஆன்மாக்கள் தம் கட்டுக்களில் இருந்து விடுபட்டு இறையருளை பெறுதலைக் குறிக்கும். எடுத்துக்காட்டுகள்:

  ‘பாசஞானம் விட்டு பதிஞானம் அடைதல்’
  ‘மும்மலம் விட்டு நின்மலனுடன் நின்றிடல் முத்தி’

- இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம் என்பது நாவலர் கருத்து.

- இறை அருள் பெறாது, முத்தி நிலையை அடைய முடியாது. இதனை கந்தபுராண மும் எடுத்துக் காட்டுகின்றது. “அவனருள் பெறாது முத்தியடைந்தனரில்லை” என்பது கந்தபுராணப் பாடலாகும்.

### 7.3.3.2 குரு, லிங்க, சங்கம வழிபாடு

- சைவ நாற்பாதங்கள் என்னும் சாதனங்களுடன் தொடர்புடையன குரு, லிங்க, சங்கம வழிபாடு.

#### (அ) குரு வழிபாடு

- குரு என்ற சொல் அறியாமைகள், குற்றங்கள் என்பவற்றை நீக்குபவர் எனப் பொருள்படும். வித்தையாசான், சமயாசாரக் கிரியைகளைப் போதிப்பவர், யோக முறைகளிற் பயிற்சி தருபவர், ஞான விளக்கம், தீட்சை என்பன அருளும் சற்குரு ஆகிய யாவரும் குரு என்ற பொதுப் பெயரில் அடங்குவர்.

- ஞானம் அருளும் சான்றோரைக் குரு, ஞான குரு, குருநாதர், சற்குரு, அருளுரு எனறும் தெய்வம் என்றும் மதித்தலும் அவரை மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் வழிபடலும் சைவநெறி மரபு.

  ''தெளிவு குருவின் திருமேனி காண்டல்
  தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
  தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
  தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே'' - திருமந்திரம்

- குரு, பூதவுடல் வாழ்வைத் துறந்த மாதம், தினம், நட்சத்திரம் என்பவற்றை ஆண்டுதோறும் குருபூசைத் தினமாகக் கொண்டு, வழிபாடு செய்தல் சைவமரபாகும்.

### (ஆ) இலிங்க வழிபாடு (இலிங்கம் - குறி, அடையாளம்)

- இலிங்கம் என்ற சொல் தோற்றம், ஒடுக்கம் என்னும் தத்துவக் கருத்துக்களை உணர்த்துகின்றது. உருவத்துக்குரிய உறுப்புக்கள் இல்லாமை, தொட்டுணரக்கூடிய காட்சிப் பொருளாய் உள்ளமை என்னும் இயல்புகள் ஒருங்கே இருத்தலால் இலிங்கம் சிவபிரானின் அருவுருவத் திருமேனி எனப்படும்.
- சுயம்புலிங்கம் (தானே தோன்றியது), காணலிங்கம், தைவிகலிங்கம், மானுடலிங்கம் என ஐந்து வகைப்படும்.
- ஆலயங்களில் மக்கள் நலனுக்காக இலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூசை வழிபாடுகளாக கிரியை வழி நிறைவேற்றுவது பரார்த்த பூசை வழிபாடு எனப்படும்.
- முறையாகத் தீட்சை பெற்ற ஒருவர் குரு அளித்த இலிங்கத்தை வீட்டில் தமது ஆன்ம நலனுக்காக, கிரியை பூர்வமாகச் செய்வது ஆன்மார்த்த பூசை வழிபாடு எனப்படும். இவ்வாறு வழிபடப்படும் இலிங்கம் இட்டலிங்கம் எனச் சிறப்பாகக் கூறப்படும்.
- சைவர்களில் ஒரு தனிப்பிரிவினரான வீர சைவர்கள் (இலிங்காயதர்கள்), இட்டலிங்க வழிபாட்டை வாழ்க்கைக் கடமையாகக் கடைப்பிடிக்கின்றனர்.
- சைவசித்தாந்திகள் சிவலிங்கத்தின் கீழ்ப்பாகத்தைச் சக்தியின் அடையாளமான ஆவுடையார் எனவும், முழு இலிங்கத்தின் மேற்பாகத்தைச் சிவத்தைக் குறிக்கும் இலிங்கம் எனவும் கூறுவர். மேறபாகமாகிய இலிங்கம் என்பது முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த ஞானகாசம் என்னும் கருத்தையும் கீழ்ப்பாகம் ஆகிய ஆவுடையார் என்பது அண்டங்கள் சிவ சக்தியால் ஆளப்படுகின்றன என்ற கருத்தை யும் குறிக்கின்றன.
- இலிங்க வழிபாடு பற்றிய இக்கருத்துக்கள் நாற்பாதங்கள் என்னும் சாதனங்களை அனுசரிப்போர் உசிதமான சந்தர்ப்பங்களில் பின்பற்றற்கு உரியனவாகும்.

### (இ) சங்கம வழிபாடு

- சங்கமம் என்பது சிவனடியார் கூட்டம் என்ற பொருள் தரும் சங்கம வழியாடானது, ஒன்றுகூடலும், குல வேறுபாடு, பிற வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளாது சிவனடியாரை வரவேற்று உபசரித்தலும், வழிபடலும் சங்கம வழிபாடு எனப்படும்.

- குலச்சிறை நாயனார், வாகீசர், சுந்தரர் ஆகியோர் சங்கம வழிபாட்டைப் பேணிய வர்களிற் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் ஆவர். சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடிய சந்தர்ப்பம் சங்கம வழிபாட்டின் உயர்வைப் புலப்படுத்துகின்றது.
- சிவனடியாரைக் கண்டதும் இருக்கையை விட்டெழல், அவர் எழும்போது தானும் எழல், அவர் முன்னிலையில் உயரம் தாழ்ந்த ஆசனத்தில் அமரல், அவர் உதவு பவற்றை இரு கைகளாலும் ஏற்றல் போன்ற செயல்கள் சங்கம வழிபாட்டில் கடைப்பிடிப்பதற்குரிய ஒழுக்கக் கூறுகள் ஆகும். சிவனடியாரைக் கடவுளராக வணங்க வேண்டும் என்பதை,

  "கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில் அவர்
  கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே "

- எனவே, சங்கம வழிபாடு நாற்பாதங்கள் என்னும் சாதன அனுசரணைக்குத் துணை புரியும் என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

### 7.3.3.3 தீட்சை

- சைவ நாற்பாதங்கள் என்னும் முத்திச் சாதனங்களை அனுசரிப்போர் அறிந்து கொள்ள வேண்டிய மிக முக்கிய விடயங்கள் தீட்சை, பஞ்சாட்சர மந்திரம், சிவசின்னங்கள் என்னும் மூன்றுமாகும். இவற்றின் முக்கியத்துவத்தை இப்போது நோக்குவோம்.
- தீட்சை என்பது பாசத்தைக் கெடுத்து, ஞானத்தைக் கொடுக்கும் ஒரு ஆன்மீக நடைமுறையாகும்.
- தீட்சையளிக்கும் தகுதி, ஏலவே மூன்று தீட்சைகளும் பெற்று ஆசாரிய அபிடேகம் பெற்ற குருவுக்கே உண்டு.
- இவரைத் தீட்சாகுரு எனச் சிறப்பித்துக் கூறல் சைவமரபு. ஒரு தீட்சா குரு தமது பார்வை, ஸ்பரிசம், வாசனம், பாவனை என்பவற்றாலோ, ஆகம விதிமுறையினாலோ அஞ்ஞானத்தை நீக்கி ஞான ஒளியை அளிப்பார்.
- இவ்வாறு குரு வழங்கும் தீட்சைகளில் சமய தீட்சை, விசேட தீட்சை, நிருவாண தீட்சை என்பன ஒன்றில் ஒன்று உயர் சிறப்புமிக்கன.
- சமய தீட்சை என்பது ஒருவரைச் சைவசமயத்திற் பிரவேசிக்க அனுமதி வழங்கும் சிறப்பு உடையது. இந்த அனுமதி பெற்றவரே உருத்திராக்கம் அணியும் அருகதை உடையவராகக் கணிக்கப்படுவார். அதனால் சமயதீட்சை பிரவேச தீட்சை எனப்படும்.
- சமய தீட்சை, விசேட தீட்சை என்பவற்றில் மேம்பட்டது நிருவாணதீட்சை ஆகும். மோட்சத்தைத் தரவல்ல தீட்சை என்பது நிருவாண தீட்சையின் உள்ளார்ந்த பொருள்.
- நிருவாண தீட்சையைப் பெறுபவர் மிக மேலான தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறே இத்தீட்சையை அளிப்பவர் முன்னரே முறையாக மூன்று தீட்சைகள் பெற்று, ஆசாரிய அபிடேகம் பெற்ற ஆதி சைவ குலத்தவராக விளங்க வேண்டும் என்பது சைவமரபு.

### 7.3.3.4 பஞ்சாட்சர மந்திரம்

- 'நமசிவாய' என்னும் திருவைந்தெழுத்துக்கள் பஞ்சாட்சரம் (பஞ்சாக்கரம்) எனப்படும்.
- வேத, ஆகமங்கள் ஏனைய ஞானநூல்கள் என்பன கூறும் மெய்ப்பொருளின் சாரத்தை உணர்த்தும் சிறப்பு பஞ்சாட்சர மந்திரத்திற்கு உரியது.
- நமசிவாய என்பது தூல பஞ்சாக்கரம் எனவும், சிவாயநம என்பது சூக்கும பஞ்சாக்கரம் எனவும் விதந்து கூறப்படும்.
- உபாய மார்க்கத்தினர் நமசிவாய என உச்சாடனம் செய்வர். ஆயின் முத்தி மார்க்கத்தினர் சிவாயநம என ஓதுவர்.
- பஞ்சாக்கரத்தின் மகிமையைப் பின்வரும் பாடல் மூலம் அறியலாம்.

  "அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்
  அஞ்செழுத்தே ஆதிபுராண மனைத்தும் - அஞ்செழுத்தே
  ஆனந்த தாண்டவமும் யாவைக்கும் அப்பாலாம்
  மோனந்த மாமுத்தியும்" - உண்மைவிளக்கம்

### 7.3.3.5 சிவசின்னங்கள்

- திருநீறு, உருத்திராக்கம் என்பன சிவசின்னங்கள் அல்லது சைவசமயி என்பதற்குரிய அடையாளங்கள் ஆகும்.
- திருநீற்றைப் பரவப் பூசுதல் அல்லது உத்தூளனமாகத் தரித்தல் யாவர்க்கும் உரியது. ஆயின் அதனை மூன்று கோடுகளாக அல்லது திரிபுண்டரமாக அணிதல் தீட்சை பெற்றோர்க்குச் சிறப்பாக உரியது.
- திருநீற்றைத் தயாரித்தல் பாங்கும், தரிக்கும் பேணும் முறைகள் பற்றிய சம்பிரதாயங் கள் சைவசமய நூல்களில் விதந்து கூறப்பட்டு உள்ளன. திருநீற்றின் மகிமையைச் சம்பந்தரின் திருநீற்றுப்பதிகம் மூலம் அறிந்து கொள்ளலாம். கூன்பாண்டியனின் சுரநோய் நீக்கம் திருநீற்றின் பயனை விளக்கும் மிகச் சிறந்த அற்புதமாகும்.
- உருத்திராக்கம் என்பது சிவபிரானின் கண்களிலிருந்து தோன்றியது எனப் பொருள் படும் காரணப் பெயராகும். அக்கமணி, கண்டிகை என்பன உருத்திராக்கத்தின் பிறபெயர்கள் ஆகும்.
- உருத்திராக்கமாலை பாவங்களைப் போக்கும் சிறப்பியல்புடையது. யாகப் பயனைத் தரவல்லது என்பது சைவக் கோட்பாடு. சிவனடியார் இம்மாலையைத் தரிக்கும் முக்கியத்துவத்தைச் சேக்கிழார், "ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே" என்று குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது.
- ஒருவர் சந்நியாவந்தனம், சிவமந்திரசெபம், சிவபூசை, சிவத்தியானம் போன்ற காலங்களில் உருத்திராக்கத்தைத் தரித்தல் அவசியம் என்பது சைவசித்தாந்தக் கோட்பாடு. மந்திர செபத்தின்போது செய்யும் உருத்திராக்க தாரணத்தால் சைவசமயி எனத்தக்கவன் ஒருவன் உருத்திரனாவான்; பிறவி நீங்கப் பெறுவான் என்பது சம்பந்தர் கருத்து.

“நெக்கு ளார்வ மிகப் பெரு சிந்தினைந்(து)
அக்கு மாலைகொ டங்கையில் எண்ணுவார்
தக்க வானவ ராத்தரு விப்பது
நக்கன் நாம நமச்சி வாயவே” - சம்பந்தர் தேவாரம்

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படி I** சைவத் திருமுறைகளில் காணப்படும் இறைவன், உயிர், பாசம் பற்றிய பாடலடிகளை அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். அவை பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடி சிந்தனையைத் தூண்டுங்கள்.

**படி II:** சைவசித்தாந்த சாத்திரங்கள், சைவத்திருமுறைகள் முதலியவற்றை மாணவர்களுக்கு வழங்கி பதி, பசு, பாசம் பற்றிய கருத்துக்களைச் சேகரிக்க வழிப்படுத்துங்கள்.

**படி III:** வகுப்பிலுள்ள மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து சைவசித்தாந்தம் பற்றிய மூன்று தலைப்புக்களை வழங்கி, அவை பற்றிய தகவல்களைச் சான்றுகளுடன் தொகுக்கச் செய்யுங்கள்.

**படி IV:** தொகுத்த தகவல்களை ஒழுங்கமைத்து ஒரு சிறு நூலொன்றை ஆக்க வழிகாட்டுங்கள்.

**குழு: 1** சைவசித்தாந்தம் குறிப்பிடும் முப்பொருள்கள்
**குழு: 2** முத்திக் கோட்பாடு
**குழு: 3** முத்தி பெறுவதற்குரிய மார்க்கங்களில் சைவநாற்பாதங்களின் பங்கு
**குழு: 4** முத்தி பெறுவதற்குரிய மார்க்கங்களில், பின்வருவனவற்றுக்குரிய இடம
(அ) குரு, லிங்க, சங்கம வழிபாடு (ஆ) தீட்சை
(இ) பஞ்சாட்சர மந்திரம் (ஈ) சிவசின்னங்கள்

**உசாத்துணை:**

(1) சைவசித்தாந்தத் தெளிவு - நா. ஞானகுமாரன்

**தேர்ச்சி 7.0** : சைவசித்தாந்த மெய்ப்பொருளியலை ஆராய்ந்து விளங்கிச் செயற்படுவர்.

**தேர்ச்சி மட்டம் 7.4** : தென்னிந்திய மெய்ப் பொருளியலாளர்களின் பணிகளை முன்வைப்பர்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற் பேறுகள்:**

- சைவசித்தாந்த மெய்ப் பொருளாளர்களும், சந்தான குரவர்களுமான மெய்கண்டாரதும் உமாபதி சிவாச்சாரியாரதும் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கூறுவர்.
- சைவசித்தாந்த மெய்ப்பொருளை விளக்கிய குருசீட பரம்பரையைத் தோற்றுவிப்பதற்கு மெய்கண்டார் முன்னோடியாகத் திகழ்ந்தவாற்றை உதாரணங்களுடன் முன்வைப்பர்.
- தென்னிந்தியாவில் சைவசித்தாந்த சாத்திரம், நிலைபேறடைய வழிவகுத்த மெய்கண்டாரதும் உமாபதி சிவாசாரியாரினதும் பணிகளை இனங்கண்டு எழுதுவர்.
- சைவசித்தாந்த சாத்திரங்களுள் முதன்மை நூலாக விளங்கும் மெய்கண்டாரின் சிவஞான போதத்தினதும் உமாபதி சிவாச்சாரியாரின் சித்தாந்த அட்டகத்தினதும் சிறப்புக்களை எடுத்துக் காட்டுவர்.
- சைவசித்தாந்த வளர்ச்சிக்கு மெய்கண்டாரதும் உமாபதி சிவாச்சாரியாரதும் பணிகள் உதவியவாற்றை மதித்துப் போற்றும் வண்ணம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**7.4.1 அறிமுகம்**

- தமிழ் நாட்டில் சைவ மெய்யியற் சிந்தனை மரபு சைவசித்தாந்தக் கோட்பாடாக வளர்ச்சியடைந்தமைக்கு ஆதாரமானவை மெய்கண்டசாத்திரங்களேயாகும்.
- மெய்கண்டசாத்திரங்களைத் தோற்றுவித்தவர்கள் சந்தான குரவர்கள் ஆவர்.
- சந்தானம் என்பது பரம்பரை. குரவர் என்பது ஆசிரியர்கள். எனவே சந்தான குரவர் என்போர் குருசீட பரம்பரையில் சைவ மெய்ப்பொருளை வளர்த்த பெரியோர்கள் ஆவர்.
- மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார் என்போர் சந்தான குரவர்கள் எனப்படுவர்.
- சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள்ளும் முதனூலாகத் திகழ்வது சிவஞான போதம். இதன் வழிநூலான சிவஞானசித்தியாரும் இருபா இருப∴தும் அருணந்தி சிவாசாரியாரால் இயற்றப்பட்டன.

- மறைஞானசம்பந்தர் நூல்கள் எதனையும் இயற்றவில்லை. அவரது மாணவராகிய உமாபதி சிவாசாரியார் சைவசித்தாந்த சாத்திரங்களுள் சித்தாந்த அட்டகம் எனச் சுட்டப்படுகின்ற எட்டு நூல்களை இயற்றினார்.
- தமிழ்நாட்டிலே சைவசித்தாந்தப் பணிபுரிந்த சந்தான குரவர்களுள் மெய்கண்டாருக்கும் உமாபதி சிவாசாரியாருக்கும் தனிச்சிறப்புக்கள் உள்ளன.
- அவருக்கு முன்னோடியாக தமிழ்நாட்டிலே கி.பி. 12ம் நூற்றாண்டில் வாகீசமுனிவர் என்பவரால் ஞானாமிர்தம் என்னும் சைவசித்தாந்த நூல் எழுதப்பட்டுள்ளது.
- மெய்கண்டாரே முதன்முதலில் சைவ மெய்யியலைக் கோட்பாட்டு ரீதியாக வகுத்தும் தொகுத்தும் கூறியவராவார். அதற்கும் அவரின் நூலுக்குச் சார்பு நூலாக அமைந்து, தென்னிந்தியாவில் சைவசித்தாந்தம் வளர்ச்சியடைய வழிவகுத்தவை சித்தாந்த அட்டகங்களாகும்.

### 7.4.2 மெய்கண்டார்

- பதினான்கு சித்தார்த்த சாத்திரங்களுள் முதனூலாகத் திகழ்கின்ற சிவஞானபோதத்தின் ஆசிரியர் மெய்கண்டார்.
- சைவசித்தாந்த மெய்ப்பொருளாளர்களுள் முதன்மையானவர்.

| | | |
|---|---|---|
| காலம் | - | கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி |
| பிறந்த இடம் | - | திருமுனைப்பாடியில் திருப்பெண்ணாகடம் |
| தந்தை. தாய் | - | அச்சுதகளப்பாளர், மங்களாம்பிகை |
| தந்தையின் குலகுரு | - | சகலாகம பண்டிதர் (அருணந்தி சிவாசாரியார்) |
| பிறப்பும் இளமையும் | - | திருவெண்காட்டு இறைவனருளால் திருமுறைகள் ஓதி வழிபட்டு பெற்றெடுத்தனர். பிள்ளைத் திருநாமம் - சுவேதவனப் பெருமாள். |

- பிள்ளைப் பருவத்திலேயே பரஞ்சோதி முனிவரால் சிவஞானபோத உபதேசம் பெற்றதுடன், மெய்கண்டார் எனும் திருநாமமும் சூட்டப் பெற்றவர்.
- திருவெண்ணெய் நல்லூர் பொல்லாப் பிள்ளையாரின் திருவருளால் கலைஞானம் கைவரப் பெற்றவர்.

**பணிகள்:**

- இவர் சிவஞானபோதம் எனும் நூலை இயற்றியதோடு, சைவசித்தாந்த நூற்பொருளை நாற்பத்தொன்பது மாணவர்களுக்குப் போதித்தவர். இவரது முதன்மைச்சீடர் அருணந்தி சிவாசாரியார். மற்றவரகளுள் மனவாசகங்கடந்த தேவரும் ஒருவர்.
- மெய்கண்டார் இயற்றிய சிவஞானபோதம், சைவசித்தாந்த சாத்திரங்களுள் முதன்மை யான நூல் மட்டுமன்றி, சைவசித்தாந்தக் கருத்துக்களை முதன்முதலில் சுருக்கியும் விளக்கியும் கோட்பாட்டு ரீதியில் முன்வைக்கும் நூலாகும்.
- சிவஞானபோதம் 12 சூத்திரங்களில் சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்குகின்றது.

- பன்னிரு சூத்திரங்களோடு அவற்றை விளக்கும் 81 உதாரண வெண்பாக்களையும் வார்த்திகம் எனும் உரையையும் கொண்டு அமையப் பெற்றது.
- சிவஞானபோதம் 12 சூத்திரங்களில் முதல் ஆறும் பொது அதிகாரம் எனவும் அடுத்த ஆறும் உண்மை அதிகாரம் எனவும் கூறப்படுகிறது.
- சிவஞானபோதம் நான்கு இயல்களாகவும் வகுக்கப்பட்டுள்ளது. இந்நூல் அமைப்பு பின்வருமாறு அமையும்.

**சிவஞானபோதம்**

**பொது அதிகாரம்** | **உண்மை அதிகாரம்**

| பிரமாணஇயல் | இலக்கணஇயல் | சாதனஇயல் | பயன்இயல் |
|---|---|---|---|
| 1. பதி உண்மை | 4. பசுவின் தன்மை | 7. யாருக்கு சாதனம் (ஆன்மாவுக்கு) | 10. பாசவிடுதலை |
| 2. பாச உண்மை | 5. பாசத்தின் தன்மை | 8. எது சாதனம் (ஞானம்) | 11. சிவப்பேறு |
| 3. பசு உண்மை | 6. பதியின் தன்மை | 9. நடைமுறை வாழ்வில் சாதனம் (ஆன்மசுத்தி) | 12. சீவன் முத்தர் தன்மை |

- சிவஞானபோதத்தின் முன்னுரை இரு பாக்களை உடையது.
- சிவஞானபோதத்திற்கு சிறப்புப் பாயிரத்தை எழுதியவர் அருணந்தி சிவாசாரியார் அவர் இயற்றிய சிவஞானசித்தியார் சிவஞானபோதத்தின் வழிநூலாக அமைகிறது. உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சிவப்பிரகாசம் சார்பு நூலாக விளங்குகின்றது.

**பணிகளின் சிறப்பு:**

- சித்தாந்த நெறியின் அடிப்படையாக விளங்கும் அத்துவிதம் எனும் சொல்லுக்கு விளக்கம் தந்தமை.
- சைவசித்தாந்த அடிப்படை உண்மைகளைத் தருக்கமுறையில் தமிழில் எடுத்துக் கூறியமை.
- புறச்சந்தானகுரவர் பரம்பரைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தமை.
- தமது நூலைத் தொடர்ந்து, பல சிறந்த சைவசித்தாந்த நூல்கள் தோன்ற முன்னோடி யாக விளங்கியமை.

### 7.4.3 உமாபதி சிவாச்சாரியார்

- சைவ சித்தாந்த மெய்ப் பொருளியலாளர்களான சந்தான பரம்பரையின் நான்காம வராக விளங்குபவர்.
- காலம் - கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும், கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் முற்கூறிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வாழ்ந்தவர்.
- பிறப்பு - சிதம்பரம் தில்லைவாழந்தணர் மரபு
- இளமை -
  - வடமொழியிலும் தமிழ்மொழியிலும் பெரும் புலமை பெற்று விளங்கியவர். வேத ஆகமங்களைக் கசடறக் கற்றவர்.
  - சோழ மன்னரின் விருதுகளைப் பெற்றவர்.
- குரு -
  - திருக்காளாஞ்சேரியில் இருந்த மறைஞானசம்பந்தர். அவரால் ஆட்கொள்ளப்பட்டவர். ‘பட்டகட்டையிற் பகற்குருடு போகிறது’ என்ற மறைஞான சம்பந்தரின் வார்த்தைகளின் பொருளை உய்த்துணர்ந்து ஞானஉபதேசம் பெற்றவர்.
  - பக்குவ நிலை கைவரப் பெற்ற உமாபதி, குருவிடமிருந்த முறைப்படி தீட்சையும் தீட்சாநாமமும் பெற்றவர்.
- கொற்றவன் குடியில் சில காலம் வாழ்ந்து, மக்களுக்கு மெய்ப்பொருளைப் போதித்தமையால் கொற்றவன்குடி முதலியார் என்றும் அழைக்கப்பட்டவர்.

**பணிகள்:**

- மறைஞானசம்பந்தரின் சைவசித்தாந்த மெய்ப்பொருள் கருத்துக்களை ஏற்று சித்தார்த்த சாத்திர நூல்கள் எட்டை எழுதினார்.
- சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்ப∴றொடை, கொடிக்கவி, உண்மைநெறிவிளக்கம், நெஞ்சுவிடுதூது, சங்கற்பநிராகரணம் என்பவை அவையாகும்.
- உமாபதிசிவாசாரியாரின் சித்தாந்த அட்டகம் எட்டினுள் போற்றிப்ப∴றொடை, நெஞ்சு விடுதூது என்பன தமது குருவாகிய மறைஞானசம்பந்தரின் பெருமைகளை விளக்கு வதாக காணப்படுகிறது.
- உமாபதிசிவாச்சாரியார் சங்கற்ப நிராகரணம் எனும் நூலில் அகச் சமயக் கொள்கை களை மறுதலித்து, சைவசித்தாந்தக் கொள்கைகளை முதன்மைப்படுத்துகிறார்.
- சிதம்பரத்தில் ஏறாதிருந்த கொடியை ஏற்றுவதற்காகப் பாடியது கொடிக்கவியாகும்.
- சிவப்பிரகாசம் மெய்கண்டாரின் சிவஞானபோதத்தை அடியொற்றிப் பாடப்பட்டுளது. வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம் என்பது இதில் கூறப்பட்டுளது.
- திருவருட்பயன் திருக்குறளைப் போல் பத்துக் குறப்பாக்களில் பத்து அதிகாரங்களை உடையதாய் சைவசித்தாந்தக் கருத்தை விபரிக்கின்றது.
- வினாவெண்பா வினாவிடை முறையில் சைவசித்தாந்த மெய்பொருளைத் தெளிவுபடுத்து கிறது. உண்மைநெறி விளக்கம் ஆன்ம ஞானத்தைத் தசகாரியங்களூடாக விளக்கு கின்றது.

- உமாபதி சிவாசாரியார் இயற்றிய ஏனைய நூல்கள்:
    - (i) சிதம்பர மான்மியத்தை விளக்கும் கோயிற்புராணம்
    - (ii) சேக்கிழாரின் சிறப்பை விளக்கும் சேக்கிழார் புராணம்
    - (iii) வடமொழியில் பௌஷ்கர ஆகமத்திற்கு வியாக்கியானத்தையும் எழுதினார்.
    - (iv) திருப்பதிகக்கோவை, திருப்பதிக்கோவை
- செய்தருளிய அற்புதங்கள்:
    - சிதம்பரத்தில் கொடிக்கவி பாடி, கொடியேறச் செய்தமை.
    - உமாபதி சிவாசாரியார் பாடி பெட்டகத்தில் வைக்கப் பெற்றிருந்த கோயிற் புராணம் எனும் நூல், இறைவன் திருவருளால் அந்தணர்களால் அறியப்பட்டு அவர்களே அரங்கேற்றியமை.
    - பெற்றான் சாம்பனுக்கும் முள்ளிச் செடிக்கும் இறையருளால் முத்திப்பேறு நல்கியமை.
    - அரசனுக்கும் மக்களுக்கும் முத்தி பற்றி அச்சந்தர்ப்பத்தில் விளக்கியமை.

**ஏனைய பணிகள்:**

- சாதிப் பாகுபாடின்றி, ஞானநெறியை ஒழுகத் தலைப்பட்டமை.
- வேதாந்தத் தெளிவே சைவசித்தாந்தம் என்பதை தம் நூல்கள் வாயிலாக விளக்கியமை.
- சைவசமயத்தையும் சைவசித்தாந்த மெய்ப்பொருளையும் உலகமக்களுக்கு நிரூபித்தமை.
- குருவைத் தெய்வமாகப் போற்றும் பக்குவ நிலையை உணர்த்தியமை.
- திருமுறைகளில் தமக்குள்ள ஈடுபாட்டினை, திருவருட்பயன் நூலின் தலைப்புகளின் கீழ் அவற்றைத் தொகுத்து, ‘தேவார அருள் முறைத்திரட்டு’ என வெளியிட்டார்.

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

**படி I** சந்தான குரவர்களுள் மெய்கண்டாரதும், உமாபதி சிவாச்சாரியாரதும் வாழ்க்கை வரலாற்றில் சுவையான பகுதிகளை மாணவர் மனம் கொள்ளும் வகையில் கலந்துரையாடுங்கள்.

**(உ-ம்):** (i) ‘ஆணவத்தின் தன்மை இதோ’ என மெய்கண்டார் அருணந்தியாரைப் பார்த்து கூறுதல்.
(ii) ‘பட்டகட்டையிற் பகற்குருடு போகிறது’ என மறை ஞானசம்பந்தர் கூறுதல்.

**படி II:** மெய்கண்டாரதும் உமாபதி சிவாச்சாரியாரது வாழ்க்கை வரலாறுகள், நூல்களின் சிறப்புகள், பணிகள் என்பன பற்றிய மாணவர் தகவல்களைத் திரட்டத் தேவையான உசாத்துணை நூல்களை வழங்குங்கள்.

**படி III:** மாணவர்களைக் நான்கு குழுக்களாகப் பிரித்து பின்வரும் தலைப்புகளின் கீழ் தகவல்களைத் திரட்ட வழிப்படுத்துங்கள்.

(i) மெய்கண்டாரின் வாழ்க்கை வரலாறும் பணிகளும்

(ii) உமாபதி சிவாச்சாரியாரின் வாழ்வை வரலாறும் பணிகளும்

(iii) சைவ சித்தாந்த சாத்திரங்களில் சிவஞானபோதம்

(iv) சித்தாந்த அட்டகமும் சைவசித்தாந்த மெய்ப்பொருளும்

**படி IV:** திரட்டிய தகவல்களை அழகாக எழுதி சுவர்ப்பத்திரிகையாக வகுப்பறையில் சமர்ப்பிக்கச் செய்யுங்கள்.

**உசாத்துணைகள்:**


| | | | |
|---|---|---|---|
| (1) | சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும் | - | முனைவர் டி. பி. சித்தலிங்கையா |
| (2) | சைவசித்தாந்த அடிப்படைக் கொள்ளைகளும் வரலாறும் | - | அங்கயற்கண்ணி அகம், 1992 |
| (3) | சிவஞானபோதச் செம்பொருள் | - | முனைவர் ச. சாம்பசிவனார் |
| (4) | திருவருட்பயன் - வழித்துணை விளக்கவுரை | - | அருள்நந்திசிவம், அருட்பணிமன்றம், திருநெல்வேலி |
| (5) | முப்பொருள் இயல்பு | - | சி. அருண வடிவேல் முதலியார் சைவசித்தாந்தப் பெருமன்றம் சென்னை. |
| (6) | சைவசித்தாந்த திறவு | - | மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை. |
| (7) | சைவசித்தாந்த மெய்ப்பொருளியல் | - | கலைவாணி இராமநாதன் |

**தேர்ச்சி 8.0** : சமய வாழ்வில் ஆலய வழிபாடு, விழாக்கள், விரதங்கள் என்பவற்றின் முக்கியத்துவத்தினை இனங்கண்டு அவற்றைக் கடைப்பிடிக்க முன்வருவர்.

**தேர்ச்சி மட்டம் 8.1** : ஆகம முறை சார்ந்த ஆலய வழிபாட்டின் முக்கிய அம்சங்களை இனங்கண்டு, அவற்றைக் கடைப்பிடிப்பர்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற் பேறுகள்:**

- ஆகமம் இந்து சமயத்தின் சிறப்பு நூல் என்பதை விளக்கிக் கூறுவர்.
- ஆகமம் என்ற சொல்லின் பொருள் விளக்கத்தை எழுதிக் காட்டுவர்.
- ஆலய அமைப்பு முறைக்கும், ஆகமத்துக்கும் இடையிலான தொடர்பினை எடுத்துக் கூறுவர்.
- திருவுருவ அமைப்பு, வழிபாடு என்பவற்றுக்கும் ஆகமத்துக்கும் உள்ள தொடர்பினை எழுதிக் காட்டுவர்.
- ஆகமம் கூறும் ஆலயக் கிரியை முறைகள், தத்துவங்கள் என்பவற்றையும் ஆலய வழிபாட்டு விதிமுறைகளையும் பட்டியற்படுத்துவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**8.1.1 ஆகமம் - அறிமுகம்**

- **ஆகமம் என்ற சொல்லின் பொருள் விளக்கம்**
  - தொன்றுதொட்டு வரும் அறிவு
  - ஆன்மா, மலநாசம் பெற்று, இறைவனை அடைய வழிகாட்டும் நூல் எனப் பலவாறு பொருள் கொள்ளப்படும்.
- **ஆகமங்களின் சிறப்பு**
  - இந்து சமய வரலாற்றில் வேதங்களைப் போல ஆகமங்கள் முதனூல்கள் ஆகும்.
  - சிரௌதம், சுப தந்திரம் என ஆகமம் சிறப்பிக்கப்படுகிறது.
  - வேதங்கள் பொது நூல் எனவும், ஆகமங்கள் சிறப்பு நூல் எனவும் கொள்ளப் படுகின்றன.
  - ஆகமங்கள் சிறப்பு நூல்கள் என்ற வகையில், சைவ ஆகமங்கள் **சிவாகமங்கள்** எனவும், வைணவ ஆகமங்கள் **சங்கிதைகள்** எனவும், சாக்த ஆகமங்கள் **தந்திரங்கள்** எனவும் அழைக்கப்படும்.
  - இந்து சமய தத்துவக் கோட்பாடுகள் பலவற்றில் ஆப்த வாக்கியப் பிரமாணமாக அமையும் சிறப்புடையது. **உ- ம்:** சைவ சித்தாந்தம் - 'நாதனுரை......'

- இந்துக்களின் கோயில் கட்டட, சிற்பக் கலைகளை எடுத்துக் கூறுவது ஆகம மாகும்.
- இந்துக்களின் கிரியை மரபுகளை நெறிப்படுத்துவதில் ஆகமங்கள் முக்கிய இடம் பெறுகின்றன.
    - ஆகமங்கள் வழிபாட்டை கிரியை நெறி மூலம் வழிப்படுத்துகின்றன. இக்கிரியை நெறியை எடுத்துக் கூறும் நூலே பத்ததிகள் ஆகும்.
- ஆகமங்கள் ஆலய வழிபாடு, சமய அனுட்டானங்கள், சைவ சித்தாந்த சிந்தனைகள் போன்ற பல விடயங்களின் ஊடாக, மக்களின் வாழ்க்கையுடன் நெருக்கமுற்று விளங்குகின்றன.

- **ஆகமங்களின் முக்கியத்துவம்**
    - சமயம், தத்துவம், வாழ்வியல், கலை முதலானவற்றில் ஆகமங்களின் செல்வாக்கு.

- **சிவாகமங்கள்**

### 8.1.2 சைவ ஆகமங்களின் பொருள் விளக்கம்

- ஆ - பசு, க - பதி, ம - பாசம். அதாவது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களை உணர்த்தும் நூல்.
- ஆகமம் என்பதில் உள்ள ஆ - சிவஞானம், க - மோட்சம், ம - மலநாசம். அதாவது மலத்தை நாசம் பண்ணி, சிவஞானத்தை உதிப்பித்து மோட்சத்தை நல்குவது எனவும் பொருள்படும்.

- சிவாகமங்களைச் சிவனே அருளினார் என்பது சைவ சமயத்தவர்களின் நம்பிக்கை.
    - மாணிக்கவாசக சுவாமிகள்
    "ஆகமமாகி அண்ணிப்பான்......" எனவும்
    "அண்ணல் அருளல் அருளும் சிவாகமம்......" எனவும் பாடியுள்ளமை, ஆகமம் தெய்வீக நூல் என்பதை உணர்த்தும்.
- சிவாகமங்களுள் மூலாகமங்கள் காமிகம் முதல் வாதுளம் ஈறாக 28. இவை சிவபேதம் கூறுபவை, உருத்திரபேதம் கூறுபவை என இருவகைப்படும். உபாகமங்கள் 207

**ஆகமங்கள் கூறும் பொருள் மரபு**

- சிவாகமங்கள் ஒவ்வொன்றும் சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என்னும் நான்கு பிரிவுகளை உடையன. அவையாவன:

| | | | |
|---|---|---|---|
| 1. | சரியா பாதம் | - | பிராயச்சித்த விதி, பவித்திர விதி, ஆலய அமைப்பு விதி, சுற்று பிரகாரம், கோபுரம், பரிபாலகர் அமைப்பு உமாமகேசுவரர் இலக்கணம், சிவலிங்க இலக்கணம். |
| 2. | கிரியா பாதம் | - | மந்திரம், உற்சவம், நித்திய, நைமித்திய, காமிய கிரியைகள், சிவசின்னங்களை அணியும் முறை. |
| 3. | யோக பாதம் | - | அட்டாங்க யோகம், அட்டமாசித்திகள், ஆறுவகை ஆதாரங்கள். |
| 4. | ஞான பாதம் | - | முப்பொருள் உண்மை, புவனங்களின் தோற்றம். |

### 8.1.3 ஆகமம் கூறும் ஆலய அமைப்பு முறை

- சிவாகமங்கள் கடவுள், ஆன்மா, கடவுள் வழிபாடு, ஆன்மாக்கள் ஆற்றும் வினைகள், சைவ சமய வாழ்க்கை, ஆலய அமைப்பு, ஆலயக் கிரியைகள், சித்தாந்த சிந்தனைகள் என்று சைவநெறிசார் பல விடயங்களைக் கூறுகிறன.
- சைவாகமங்கள் சைவ மக்களின் ஆன்மீக வாழ்வை, ஆலயங்களை மையமாகக் கொண்டு கூறுகின்றமையைக் காணலாம்.
- ஆகமங்கள் கூறும் ஆன்மீக வாழ்வும், அதனுடன் இணைந்த ஆலய வழிபாடும் வேத மரபின் பரிணாம வளர்ச்சியென்றோ அல்லது அதன் மாறுபட்ட வளர்ச்சியென்றோ கொள்ள முடியும்.
- வேத மரபுகளுக்குப் புறம்பாக, அனைத்து மக்களும் ஆன்ம விடுதலை பெறவேண்டும் என்ற வகையிலேயே ஆகமங்கள் ஆலய வழிபாட்டை வகுத்துக் கூறுகின்றன.
- வேதங்கள் கூறும் அக்கினி வழிபாடும் சாதாரண மக்களுக்கு ஏற்புடைய உருவ வழிபாடும் சிவாகமங்களில் இணைவுறுகின்றன.
- ஆலய வழிபாட்டையும் அவைசார்ந்த அனுட்டானங்களையும் விதிகளாக விளக்கு வதனால் சிவாகமங்களுக்கு சாத்திரங்கள் என்ற பெயரும் உண்டு.
- சிவாகமங்கள் ஆலயம் அமைக்கும் இடம், ஆலய அமைப்பு, ஆலயத்தின் உறுப்புகள், அவை அமைய வேண்டிய இடங்கள், அவற்றின் அளவைப் பிரமாணங்கள், கோயிற் கிரியைகள், ஆலய அனுட்டானங்கள் போன்ற விடயங்களை விதிகளாக விபரிக்கின்றன.
- சிவாகமம் கூறும் கிரியைகளுள் கர்ஷணம் என்னும் கிரியை ஆலயம் அமைப்பதற் குரிய இடத்தைப் பண்படுத்தல் பற்றியதாக உள்ளது.
- சிவாலயம் ஒன்றில் இடம்பெற வேண்டிய கருவறை, மண்டபங்கள், பரிவாரக் கோயில்கள், பிரகாரங்கள் மற்றும் கோபுரம், விமானம் என்பன அமைய வேண்டிய விதிகள் பற்றி இவற்றில் உண்டு.
- ஆலயம் ஒன்றில் அமைய வேண்டிய பிரகாரங்கள் பற்றி காமிக ஆகமம் 'பிரகார லட்சண விதிப்படலம்' எனும் தலைப்பில் விபரிக்கிறது.

### 8.1.4 ஆகமமும் திருவுருவ வழிபாடும்

- சிவாகமங்கள் ஆலய அமைப்பினூடாக திருவுருவ வழிபாட்டை வகுத்துக் கூறுகிறன.
- சிவனின் சிவலிங்கம், அர்த்தநாரீஸ்வரர், இலிங்கோற்பவர், கங்காதரர், தட்சணாமூர்த்தி போன்ற 25 மூர்த்தி பேதங்களை அமைக்க வேண்டிய விதிகளை ஆகமங்களே வகுத்துக் கூறுகின்றன.
- திருவுருவங்களை செதுக்குவதற்குரிய கருங்கல்லைத் தெரிவு செய்தல் பற்றி சிவாகமங்கள் 'சிலாபரீட்சணம்' என்ற தலைப்பில் கூறுகின்றன.
- திருவுருவங்களினுடைய பங்க அமைதிகள், அங்கலட்சணம், அவற்றின் அளவுப் பிரமாணம், ஆடை ஆபரணம் என்பன பற்றியும் அவற்றில் உண்டு.
- சுக்கிர நீதி - 'திருவுருவங்கள் அளவில் மிகினும் குறையினும் நலமுடையன அல்ல' என்கின்றது.
- திருவுருவங்களின் பிரதிமாலட்சணத்தில் ஆகமப் பிரமாணம் முதன்மையான இடம் பெறுகின்றது.

## 8.1.5 ஆகமம் கூறும் ஆலயக் கிரியை முறைகளும் தத்துவங்களும்

- அனைத்து மக்களின் ஆன்ம ஈடேற்றம் சிவாகமங்களின் உயிர் நாதமாக உள்ளது. சிவாகமங்கள் இந்நோக்கத்தை அடையும் வகையில் திருவுருவ அமைப்பையும் அவை சார்ந்த கிரியை முறைகளையும் வகுத்துக் கூறுகின்றன.
- மணிவாசகர் - 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி தெள்ளேணம் கொட்டாமே' என்னும் வாக்கின் செயல் வடிவமாக ஆகமம் கூறும் உருவ வழிபாடு அமையும்.
- சிவாகமங்கள் கூறும் கிரியை முறைகள் திருக்கோயிலையும் திருவுருவங்களையும் மையமாகக் கொண்டவை.
- கோயில்களில் இடம்பெற வேண்டிய கிரியைகள், அவற்றை ஆற்றும் விதிகள், பூசையின் அங்கங்கள், மந்திர உச்சாடனம், நிவேதனப் பொருள்கள் என்பன பற்றிக் கூறுகின்றன.
- சிவாகமங்களில் வரும் பூஜா விதிப்படலம், மந்திராவதாரப் படலம் போன்ற பிரிவுகளில் மேற்கூறிய அம்சங்களுடன் தொடர்புபட்டவை.
- கோயிற் கிரியைகளை சிவாகமங்கள் கர்ஷணம், பிரதிட்டை, உற்சவம், பிராயச்சித்தம் எனும் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளன.

| | | |
|---|---|---|
| கர்ஷணம் | - | ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பண்படுத்துதல். |
| பிரதிட்டை | - | ஆலயத்தில் திருவுருவங்களை பிரதிட்டை செய்தல். |
| உற்சவம் | - | ஆலயத்தில் வருடமொரு முறை இடம் பெறும் திருவிழா |
| பிராயச்சித்தம் | - | ஆலய கிரியைகளின்போது இடம்பெறும் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை |

- கோயிற் கிரியைகளை நித்திய கிரியை, நைமித்திய கிரியை, காமிக கிரியை எனவும் வகைப்படுத்துவர்.
    - நித்திய கிரியை - தினமும் நடைபெறுவது
    - நைமித்திய கிரியை - விசேட நாட்களில் ஆற்றப்படும் கிரியை
    - காமிக கிரியை - பயனை அவாவிச் செய்யும் கிரியை
- நித்திய கிரியை வசதிக்கேற்ப, ஒரு வேளை தொடக்கம் பன்னிருவேளை வரை நடைபெறும்.
- நித்திய கிரியையில் ஏற்படும் குறைகளைப் போக்கவும் மூலமூர்த்தியின் திருவருட் சக்தியை அதிகரிப்பதையும் நோக்காகக் கொண்டு, நைமித்திய கிரியைகள் ஆற்றப்படுகின்றன.
- நித்திய, நைமித்திய கிரியைகளை ஏதேனும் பயனைக் கருத்திற் கொண்டு ஆற்றுமிடத்து, அவை காமிக கிரியைகளாக அமையும்.
- நைமித்திய கிரியைகளாக, சுக்கிர வாரம், சோம வாரம், மாத சங்கிராந்தி, மகோற்சவம், பிரதிட்டை, மகாமகம் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.
- கோயிற் கிரியைகள் சித்தாந்த உண்மைகளை உணர்த்துவனவாக அமைகின்றன.
- கொடியேற்றம் தொடக்கம் கொடியிறக்கம் வரையில் இடம்பெறும் கிரியைகள் தத்துவத் தொடர்பு உடையனவாக விளங்குகின்றன.

- கொடியேற்றத்திற்கு முன் நடைபெறும் மிருகத் சங்கிரணம், அங்குரார்ப்பணம், கிராம சாந்தி, வாஸ்து சாந்தி, பேரிதாடனம், சமஸ்த தேவாகனம் போன்ற கிரியைகள் படைத்தல் தொழிலை உணர்த்துகின்றன.
- கொடியேற்றக்கிரியை சித்தாந்த உண்மைகளுடன் தொடர்புடையது. கொடியேற்றப்படாத நிலையில் கொடிமரம் பதியின் சொரூப நிலையை உணர்த்துகின்றது.
- கொடியேற்றப்பட்ட பின், கொடிமரம் பதியின் தடத்த நிலையில் ஆன்மாக்களின் பொருட்டு, செயற்படுவதனைச் சுட்டுகிறது.
    - கொடிமரம் - பதியையும்
    - கொடிச்சீலை - பசுவையும்
    - மஞ்சட்கயிறு - திருவருட் சக்தியையும்
    - தருப்பைக்கயிறு - பாசத்தையும்

  சுட்டி நிற்கின்றன.
- ஆன்மாவானது, பாசத்தில் இருந்து விடுபட்டு திருவருட் சக்தியின் உதவியுடன் பதியை அடைதலாகிய முத்திப் பேற்றினைப் பெற வேண்டும் என்பதையே கொடியேற்றம் உணர்த்துகிறது.
- மகோற்சவத்தின் போது நடைபெறுகின்ற பல்வேறு கிரியைகளும் சைவ சித்தாந்தம் கூறுகின்ற ஐந்தொழில் தத்துவத்துடன் தொடர்புபடுகின்றன.
    - கொடியேற்றம் - படைத்தல்
    - வாகனத் தீருவிழா - காத்தல்
    - தேர்த்திருவிழா - அழித்தல்
    - மௌனோற்சவம் - மறைத்தல்
    - தீர்த்தம் - அருளல்
- மகோற்சவத்தின் போது தினமும் சுவாமி வெளி வீதி வலம் வருதல் நடைபெறும். இதன் மூலம் இறைவன், ஆன்மாக்களுக்கு சாம்பவ தீட்சையை அளிப்பதாகக் கூறப்படும்.

### 8.1.6 ஆலய வழிபாட்டு விதிமுறைகளும் பயன்களும்

- ஆசிரியர்கள், ஆலய வழிபாட்டு விதி முறைகளும் பயன்களும் தொடர்பான விடயங்களைச் சேகரித்து, அவற்றைக் கற்பிக்க வேணடும்.

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படி I** ஆகம முறை சார்ந்த ஆலய வழிபாட்டின் முக்கிய அம்சங்கள் தொடர்பான விடயங்களைப் பற்றி மாணவர் கூறுவதற்கு இடமளியுங்கள்.

**படி II:** ஆகம முறை சார்ந்த ஆலய வழிபாட்டின் பல்வேறு விடயங்களையும் அறிய உதவும் நூல்களை மாணவர்களுக்கு வழங்கி, அவர்களை வழிப்படுத்துங்கள்.

**படி III:** வகுப்பிலுள்ள மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து, ஆலய வழிபாடு பற்றிய தலைப்புக்களை வழங்கி, அவை பற்றிய கருத்துக்களைச் சேகரிக் கவும் நேரடி அனுபவங்களைச் சேகரிக்கவும் வழிப்படுத்துங்கள்.

**படி IV:** சேகரித்த தகவல்கள், படங்கள். புகைப்படங்கள், கிடைப்படங்கள் என்பவற்றை ஒழுங்கமைத்து, சிறு சஞ்சிகையொன்றை (எல்லாக் குழுக்களதும் தொகுப்பை உள்ளடக்கி), தயாரிக்க வழிகாட்டுங்கள்.

**படி V:** சஞ்சிகையை வகுப்பறையில் காட்சிப்படுத்த இடமளியுங்கள்.

**குழு: 1** ஆகமம் என்ற சொல்லின் பொருள் விளக்கம், ஆகமம் கூறும் பொருள் மரபு, ஆகமம் கூறும் ஆலய அமைப்பு முறை

**குழு: 2** ஆகமமும் திருவுருவ வழிபாடும்

**குழு: 3** ஆகமம் கூறும் ஆலயக் கிரியை முறைகளும் தத்துவங்களும்

**குழு: 4** ஆலய வழிபாட்டு விதிமுறைகளும் பயன்களும்

**உசாத்துணைகள்:**

1) சைவக் கோயில் கிரியை நெறி - கைலாசநாதக் குருக்கள்

(2) சைவ சமய சிந்தாமணி - அருணாசலதேசிகர்

(3) இந்துப் பண்பாட்டு மரபுகள் - பேராசிரியர். ப. கோபாலகிருஷ்ண ஐயர்

(4) சைவாலயக் கிரியைகள் - கோப்பாய் சிவம்

(5) சைவசித்தாந்த நோக்கில் கிரியைகள் - ஏழாலை கந்தையா

**தேர்ச்சி 8.0** : சமய வாழ்வில் ஆலய வழிபாடு, விழாக்கள், விரதங்கள் என்பவற்றின் முக்கியத்துவத்தினை இனங்கண்டு அவற்றைக் கடைப்பிடிக்க முன்வருவர்.

**தேர்ச்சி மட்டம் 8.2** : ஆகமம் சாரா வழிபாட்டு முறைகளின் முக்கிய அம்சங்களை இனங்கண்டு, அவற்றுக்கு மதிப்பளிப்பர்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற் பேறுகள்:**

- ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறைகள், ஆகமம் சாரா வழிபாட்டு முறைகள் என்பவற்றை ஒப்பிடுவர்.
- ஆகமம் சாரா வழிபாட்டு முறைகளின் முக்கிய அம்சங்களைப் பட்டியற்படுத்துவர்.
- ஆகமம் சாரா வழிபாட்டில் இடம்பெறும் தெய்வங்களின் பெயர்களையும், அவை வழிபடும் இடங்கள், அவ்வழிபாடுகளின் தோற்றம், வழிபாட்டின் நோக்கம், வழிபாட்டு முறைகள், வழிபடும் காலம், வழிபாட்டுடன் தொடர்புடைய நூல்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய அட்டவணையைத் தயாரிப்பர்.
- ஆகமம் சாரா வழிபாட்டின் முக்கியத்துவத்தை எழுதிக் காட்டுவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**8.2.0 ஆகமம் சாரா வழிபாட்டு முறைகள் - அறிமுகம்**

**8.2.1 கண்ணகி வழிபாடு**

**(அ) அறிமுகம்**

- கிராமியப் பெண் தெய்வங்களுள் பெருந்தெய்வம் எனப் போற்றத்தக்கவள் கண்ணகி.
- கண்ணகி வழிபாட்டின் தோற்றமும் முதன்மையும் சிலப்பதிகாரத்துடன் ஆரம்பமாகிறது. கிராமியத் தெய்வ வழிபாடாகத் தொடங்கிய இவ் வழிபாடு ஒழுக்கத்தை முதன்மைப் படுத்தும் வகையில் பத்தினித் தெய்வ வழிபாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**(ஆ) தோற்றம்**

- இத் தெய்வம் சிலப்பதிகாரத்தின் பிரதான கதாநாயகி அவள் தெய்வமாக வணங்கப்பட்ட செய்தியைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.
- 'கண்ணகி சிவசக்தியின் அம்சமாகவும், காளியின் அவதாரமாகவும் கருதப்படுகின்றாள்' என்பது கண்ணகி பக்தர்களின் நம்பிக்கை.
- கண்ணகி, தெய்வ வடிவுடன் தோன்றிய கோவலனைக் கண்டு, அவனுடன் வான ஊர்தியிலே தேவருலகம் அடைந்தாள். இவ்வாறு சென்றதனைக் கண்ட சேரநாட்டுக் குன்றக் குரவர் கண்ணகியைத் தங்கள் குல தெய்வமாகக் கருதி, குரவைக்கூத்து நிகழ்த்தி வழிபட்டனர். இவ்வதிசயத்தைச் சேரவேந்தன் செங்குட்டுவனிடம் கூறினர்.

- இம்மன்னன் கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் முதன்முதலாக கண்ணகிக்கு விழா எடுத்தான். அவ்விழாவில் கலந்து கொள்ள பல நாட்டு மன்னர்களுக்கும் அழைப்பு விடுத்திருந் தான். இலங்கைக் கஜபாகு மன்னனும் இவ்விழாவில் கலந்து கொண்டான். அவன் சேர நாட்டிலிருந்து திரும்பி வரும்போது கண்ணகி படிமங்களைக் கொண்டு வந்தாள்.
- இலங்கையில் கண்ணகி வழிபாடு கஜபாகு மன்னனாலேயே ஆரம்பிக்கப்பட்டது. முதன்முதலாக அங்கநாமக் கடவை எனும் இடத்தில் கண்ணகிக்கு கோயில் கட்டி னான். ஆடி மாதந் தோறும் அநுரதபுரத்திலிருந்து விழா எடுக்கும் பணியினைத் தொடங்கினான். இது கி.பி. 2 ஆம் நூற்றாண்டு தொடக்கம் இன்று வரை இவ் வழிபாடு இலங்கையில் நிலவி வருகின்றது.
- தமிழர்களோடு, சிங்களவர்களும் அக்காலத்தில் கண்ணகிக்கு விழா எடுத்தனர். சிங்களவர் 'பத்தினி தெய்யோ' எனும் காவல் தெய்வமாக அநுராதபுரம், கண்டி போன்ற இடங்களிலே வழிபாடியற்றினர்.
- தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வர்த்தக நோக்கில் வந்தவர்களாலும் இவ் வழிபாடு பரப்பப்பட்டு வந்ததாகவும் அறியப்படுகிறது.

### (இ) வழிபடப்படும் இடங்கள்

- பாண்டிநாடு, சேரநாடு, சோழநாடு, ஈழநாடு ஆகிய இடங்களில் கண்ணகி வழிபாடு பரந்து காணப்படுகிறது.
- இலங்கையில் வன்னி, யாழ்ப்பாணம் முதலான பிரதேசங்களில் குறிப்பாக அளவெட்டி, சுருவில், நயினாதீவு, முல்லைத்தீவு, பருத்தித்துறை, மட்டுவில், சுழிபுரம், வற்றாப்பளை, செட்டிக்குளம், கரம்பன், புங்குடுதீவு ஆகிய இடங்களில் கண்ணகியம்மன் வழிபாடு உள்ளது.
- மட்டக்களப்பு, அம்பாறை பிரதேசங்களில் கல்முனை, காரைதீவு, தம்பிலுவில், பட்டிமேடு (பட்டிப்பளை), கல்லாறு, துறைநீலாவணை, வீரமுனை, மகிளூர், செட்டிப் பாளையம், களுவாஞ்சிக்குடி, பழுகாமம், வந்தாறுமூலை, வாழைச்சேனை, சித்தாண்டி, முதலைக்குடா, மண்முனை, போரைதீவு, மண்டூர் முதலிய இடங்களில் கண்ணகி வழிபாடு உள்ளது.
- திருகோணமலையில் கந்தளாய், உவர்மலை பிரதேசங்களில் வழிபடப்படுகிறது.

### (ஈ) வழிபாட்டின் நோக்கம்

- நோய் நீக்கம், மழை வளம் கிடைத்தல், பயநீக்கம், குலதெய்வமாக கருதுதல்.

### (உ) வழிபாட்டு முறைகள்

- ஆகமமயமாக்கல் (கிரியை) - ஆகம சிற்பசாத்திர விதிமுறைகள் சார்ந்த வழிபாடுகள்.
- ஆகம, சிற்ப, சாத்திர விதிமுறைகள் சாராத சடங்கு முறைகள் - இவை சடங்கு என வழங்கப்படும்.

**(ஊ) வழிபடப்படும் காலம்**

- வைகாசித் திங்கள், பூரணையை அடிப்படையாகக் கொண்டது. மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு நாட்கள்.
- பத்தாசி: தெய்வேந்திரன் பத்தாசி / கொம்பு பத்தாசி
- ஆகம முறை சாரா ஆலய அமைப்பு, பந்தல் கட்டல்
- சடங்குகளை முன்னின்று நடத்துபவர்: பூசகர், பூசாரி, கட்டாடி எனும் பெயர்களால் அழைப்பர். இவர் பயபக்தி உடையவராக விளங்குவார்.
- பிரதேச ரீதியாக இடத்துக்கிடம் சிற்சில வேறுபாடுகளுடன் சடங்குகள் நடைபெறு கின்றன.

  (அ) மட்டக்களப்பு, திருகோணமலை பிரதேசங்களில் சடங்குகள்:

  'வைகாசித் திங்களில் வருவேன்' என்று கண்ணகி கூறியபடி வைகாசிப் பூரணையைக் குளிர்த்தி நாளாகக் கொண்டு 3 அல்லது 5 அல்லது 7 நாட் கள் சடங்குகள் நடைபெறுகின்றன.

- ஊர் காவல் பண்ணுதல், மடைவைத்தல், கற்பூரதீபம் ஏற்றி பூசாரி கதவைத் திறத்தல் என்பன முதல்நாள் சடங்காக நடுநிசியில் நடைபெறும்.
- ஆலய முன்மண்டபத்திலே நெற்குவியலில் கமுகம்பாளை, வேப்பிலை முதலான அலங்காரத்துடன் பூரண கும்பம் வைக்கப்படும். அத்துடன் ஆலய முன்றலில் தோரணமும் கட்டுவர்.
- கதவு திறந்ததன் பின்பு, தினமும் ஏடுபடித்தல் இடம்பெறும்.

**கலியாணக்கால் வெட்டுதல்**

- கலியாணக்கால் வெட்டும் நிகழ்வில் அதிகமான பக்தர்கள் கலந்து கொள்வர். ஆலயத்திலிருந்து பூசைப்பெட்டியை அடியவர் ஏந்தி வர, தெய்வமாடுவோர் ஆடி வர அம்மன் பல்லக்கில் பவனி வருவார். வரும் வழி எல்லாம் மக்கள் நிறைகுடம், மடை வைத்து வழிபடுவர். பவனி, கலியாணக்கால் வெட்டும் இடம் வரை இடம்பெறும். பூசகர் பெண் போல் சேலை உடுத்து கல்யாணக்கால் வெட்டும் மரத்தடியில் (வேம்பு அல்லது பூவரசு) மடைவைத்து வழிபாடு ஆற்றுவார். பின் அம்மரத்திலிருந்து பொருத்தமான கிளையை வெட்டி, கலியாணக்காலைப் பெற்று, ஊர்வலமாக எடுத்துக் கொண்டு வருவர். கோயிலின் முன் மண்டபத்தில் நடப்பட்டு கலியாணக்கால் அலங்கரிக்கப்படும். கலியாணக்காலைக் கண்ணகியாகக் கருதுவர். பின் கண்ணகிக்கும் கோவலனுக்கும் கல்யாணம் நடாத்தும் கல்யாண பாவனை நடைபெறும். அவ்வேளையில் இதனை விளக்கும் வகையில் ஏடுபடித்தல் (கலியாணப் படிப்பு) நடைபெறும். பெண்கள் குரவையிட்டு மகிழ்வர்.
- குளிர்த்திச்சடங்கு இடம் பெறுவதற்கு முதல்நாள் பெண்கள் மடிப்பிச்சை எடுத்தல், மடை கொடுத்தல், நெல்லுக் குற்றுதல் என்பன இடம்பெறும்.

**விநாயகப்பானை எழுந்தருளப் பண்ணல்:**

- குளிர்த்திச் சடங்கு இடம்பெறும் அன்று நெல் குற்றி எடுக்கப்பட்ட அரிசியைக் கொண்டு மூன்று மண்பானைகளில் பொங்கலிடுவர். இதில் முதலாவது பானை விநாயகருக்குரியதாக கருதி முதலில் பொங்கல் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து ஏனைய பொங்கல்கள் நடைபெறும்.
- குளிர்த்தி ஆடும் தினத்தன்று, அம்மன் குளிர்த்தி ஆடுவதற்காக பூம்பந்தல் கொண்டு வரப்பட்டு அல்லது அமைக்கப்பட்டு அழகுபடுத்தப்படும்.

**திருக்குளிர்த்தி ஆடல்:**

- வைகாசிப் பூரணை தினத்தன்று அதிகாலையில் பூப்பந்தலின் கீழ் பாணக்கம் கரைக்கப்பட்டு, பூசகர் பெண்போல் வேடமிட்டு முக்காடிட்டு அம்மனைப் போன்று வந்து நிற்பார். அப்போது இருவர் மாறி, மாறி குளிர்த்தில் பாடலைப் பாட அம்மன் குளிர்த்தி ஆடுவார்.
- இவ்வேளையில் தெய்வம் ஆடல், உடுக்கு, தவில், சிலம்பு, மணி, அம்மானைக்காய் போன்றவை ஓங்கி ஒலிக்கப்படும். அது தெய்வீகப் பேரொலியாக விளங்கும். இதன் பின் இறுதியாக கட்டுச் சொல்லுதல், சாட்டைப்பலி, மடைப்பலி என்பன தெய்வம் ஆடுவோரால் நிகழ்த்தப்படும்.
- இறுதி நிகழ்வாக, வாழி பாடுதல் இடம்பெற்று குளிர்த்தி நிறைவுபெறும்.
- கண்ணகி அம்மன் சடங்கின் போது பல்வேறு நேர்த்திகளும் இடம்பெறும்.
    - காவடி எடுத்தல்
    - அங்கப் பிரதட்சணம் செய்தல்.
    - பாளை விற்றல்
    - பிள்ளை விற்றல்
    - மடை கொடுத்தல்
    - பட்டாடை, அங்க அடையாளங்கள், தென்னம்பிள்ளை, மாடு, ஆடு, கோழி, பிள்ளைத் தொட்டில் முதலியவை நேர்த்திக் கடனாகச் செலுத்தப் படும்.
- சடங்கின்போது நெல் குற்றல், பொங்கல் பொங்குதல், அன்னதானம் வழங்கல் முதலிய நிகழ்வுகள் இடம்பெறும்.
- கூத்து, கும்மி, கரகம், வசந்தன் ஆட்டம், கொம்பு விளையாட்டு, போர்த்தேங்காய் அடித்தல், கலை விழாக்கள் என்பனவும் இடம்பெறும்.
- குளிர்த்தி முடித்து கதவடைத்தலின் பின், எட்டாம் நாள் சடங்கு நடைபெறும்.

**முக்கிய குறிப்பு:**

- ஏனைய பிரதேசங்களில் இடம் பெறும் கண்ணகியம்மன் சடங்குகள் பற்றிய விபரங்களை, ஆசிரியர் தேடிக் கற்பிக்கவும்.
- இங்கு தரப்பட்ட வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி, பின்வரும் விடயங்களைக் கற்பிக்கவும்.

8.2.2 மாரியம்மன் வழிபாடு
8.2.3 ஐயனார் வழிபாடு
8.2.4 அண்ணமார் வழிபாடு
8.2.5 பெரிய தம்பிரான் வழிபாடு

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படி I** மாணவர் ஆகமம் சாரா வழிபாட்டு முறைகளின் முக்கிய அம்சங்களையும், அம்மரபில் வழிபடப்படும் தெய்வங்களையும் பற்றி விளக்கிக் கூற இட மளியுங்கள்.

**படி II:** மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு தெய்வங்களை யும் பற்றி விரிவான தகவல்களைப் பெறக்கூடிய நூல்கள், படங்கள், சஞ்சிகைகள் என்பவற்றின் பெயர்களை வழங்குங்கள் அல்லது அவற்றை வழங்குங்கள்.

**படி III:** ஒவ்வொரு குழுக்களும் பின்வரும் தலைப்பின் கீழ் விபரங்களைச் சேகரிக்க வழிப்படுத்துங்கள்.

(அ) குறிப்பிட்ட தெய்வத்தின் தோற்றம் (ஆ) பரம்பல்
(இ) சடங்கு முறை இடம்பெறும் காலம் (ஈ) சடங்குமுறை
(உ) பிரதேச ரீதியாக வழிபாட்டு முறைகள்
(ஊ) வழிபடும் இடங்கள்
(எ) சமய, சமூக உறவுகள்

**படி IV:** சேகரித்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அறிக்கை தயாரித்து, வகுப்பறையில் சமர்ப்பிக்குமாறு கூறுங்கள்.

**உசாத்துணைகள்:**


(1) மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு ஓர் அறிமுகம் - க. மகேஸ்வரலிங்கம்

(2) பண்பாடு, இந்து கலாசாரதிணைக்களம் - இரா.வை. கனகரத்தினம்

(3) நாட்டுப்புறத் தெய்வங்கள் - இரா.பாலசுப்பிரமணியம்

**தேர்ச்சி 8.0** : சமய வாழ்வில் ஆலய வழிபாடு, விழாக்கள், விரதங்கள் என்பவற்றின் முக்கியத்துவத்தினை இனங்கண்டு அவற்றைக் கடைப்பிடிக்க முன்வருவர்.

**தேர்ச்சி மட்டம் 8.3** : இந்துசமயப் பண்டிகைகளின் முக்கியத்துவங்களை இனங்கண்டு அவற்றைக் கொண்டாடுவர்.

**பாடவேளைகள்** : 12

**கற்றற் பேறுகள்:**

- பண்டிகை என்பதற்கான வரைவிலக்கணத்தைக் குறிப்பிடுவர்.
- இந்துப் பண்டிகைகளைப் பெயர் குறிப்பதுடன், அவற்றுள் தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி என்பவற்றைப் பற்றி சிறப்பாக எடுத்துரைப்பர்.
- ஒவ்வொரு பண்டிகையும் கொண்டாடும் காலம், காரணம், ஒழுங்குமுறை தத்துவம் அவற்றினால் வளர்க்கப்படும் நற்பண்புகள் என்பவற்றை அட்டவணைப்படுத்திக் காட்டுவர்.
- இந்து சமயப் பண்டிகைகளை சமய விதிகளுக்கு அமைவாகக் கொண்டாடுவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**8.3.0 பண்டிகைகள் - அறிமுகம்**

- இந்து சமயத்தவர்களால் முக்கிய தினங்களில் சமயம் சார்ந்தும் சமூகம் சார்ந்தும் வருடத்தின் குறிப்பிட்ட தினத்தில் புத்தாடை, விருந்து, வழிபாடு என்பவற்றுடன் சிறப்பாகக் கொண்டாடப்படுபவை பண்டிகைகளாகும்.
- இந்துக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளுள் தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு, தீபாவளி என்பவை குறிப்பிடத்தக்கன.

**8.3.1 தைப்பொங்கல்**

- "தை பிறந்தால் வழிபிறக்கும்" என்பர். தமிழ் மாதங்களில் தனிச் சிறப்பு வாய்ந்த மாதம் தை. தை மாத முதல்நாளில் கொண்டாடப்படும் பண்டிகை தைப்பொங்கல்.
- சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நாள் தைப்பொங்கல் நாளாகும்.
- உணவு உற்பத்திக்கும் உயிர்களின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் தேவையான வெப்பம், சூரியஒளி என்பவற்றை வழங்கும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது.
- தைப்பொங்கல் சூரியன் தனு இராசியிலிருந்து மகர ராசிக்குச் செல்லும் தினத்தில் கொண்டாடப்படுகிறது. இதனால் தைப்பொங்கல் தினத்தை மகரச் சங்கிராந்தி என்றும் கூறுவர்.

- தைப்பொங்கல் பண்டிகை அறுவடைத் திருநாள், உழவர் திருநாள், சூரியப் பொங்கல் எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும்.

- இப்பண்டிகை பிரதேசத்துக்குப் பிரதேசம் வெவ்வேறு முறைகளில் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்துக்கள் வாழும் இடங்களிலெல்லாம் குறிப்பாகத் தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, கனடா, சிங்கப்பூர், மொரிசியஸ் மற்றும் புலம்பெயர் நாடுகளில் எல்லாம் இப்பொங்கல் பண்டிகை விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

- பொங்கல் என்பதற்கு, சாப்பிடும் பொங்கல் என்று மட்டும் பொருள் அல்ல; பொங்கிப் பெருகி வருவது என்றும் பொருளாகும்.

- தைப்பொங்கலுக்கு முதல்நாள் கொண்டாடப்படுவது போகிப் பண்டிகை. அன்று அதிகாலையில் அனைவரும் எழுந்து வீட்டில் உள்ள தேவையற்ற பழைய, பொருட்களை அகற்றி தீயிலிட்டு எரித்து வீட்டைச் சுத்தம் செய்வர். அல்லவை அழிந்து நல்லவை வரட்டும்; பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற மொழிகளுக்கேற்ப போகிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

- பொங்கல் தினத்தன்று அதிகாலையிலெழுந்து கோலமிட்டு விளக்கேற்றி, மஞ்சள், மலர்மாலைகளால் கழுவிச் சுத்தமாக்கிய புதுப்பானையைச் சுற்றிக் கட்டி அலங்கரித்து, அறுவடை செய்த புத்தரிசி (புது அரிசி) இட்டு, புதுப்பாலில் வெல்லம் உள்ளிட்டவற்றைக் கலந்து பொங்கல் இடுவார்கள்.

- இந்நிகழ்வு வீட்டு முற்றத்தில், சூரியன் எழும் திசையை நோக்கி நடைபெறும்.

- பொங்கல் பால் பொங்கி வரும்போது கிராம மக்களின் குரவையிடுவர். “பொங்கலோ பொங்கல்”; “பொங்கும் மங்களம் எங்கும் தங்குக” என்ற குரலோடு பொங்கி, பின் அதனைச் சூரியனுக்கு படைத்து வழிபாடு செய்து நன்றி தெரிவிப்பர்.

- பொங்கல் பால் நன்கு பொங்கி வந்தால், அந்த ஆண்டு முழுவதும் நல்ல வளமும் நலமும் நிலவும் என்பது மக்களது நம்பிக்கை ஆகும்.

- தைப்பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல் கிராமங்கள் தோறும் நடைபெறும். இதனைப் பட்டிப் பொங்கல் எனவும் அழைப்பர். உழவுத் தொழிலுக்கு உறுதுணை யாக இருக்கும் மாடுகளுக்கு நன்றி கூறும் தினமாக இது கொண்டாடப்படுகிறது.

- மாட்டுப் பொங்கலன்று மாடுகளைக் குளிப்பாட்டி மலர்மாலை அணிந்து பொட்டிட்டு மாடுகளின் கொம்புகளுக்கு வர்ணம் தீட்டி சலங்கை கட்டி அலங்கரித்து படையலிட்டு அவற்றை வணங்கி வழிபாடு செய்வர்.

- அன்றைய தினத்தின்போது மாடுகளைச் சுதந்திரமாக திரிய விடுவர்.

- அன்பு, அறம், அகிம்சை, செயந்நன்றி மறவாமை, பகுத்துண்ணல், இறைவழிபாடு, பெரியோரை மதித்தல், வாழ்த்துக் கூறுதல், மன்னிக்கும் பண்பு முதலிய நற்பண்புகள் தைப்பொங்கல் பண்டிகை மூலம் வளர்க்கப்படுகின்றன.

**முக்கிய குறிப்பு:**

இங்கு தரப்பட்ட தைப்பொங்கல் பண்டிகையைப் பின்பற்றி, ஏனைய பண்டிகைகளையும் கற்பிக்கவும்.

**8.3.2 சித்திரை வருடப்பிறப்பு**

**8.3.3 தீபாவளி**

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படி** I இந்து சமயப் பண்டிகைகள், அவற்றைக் கொண்டாடும் முறைகள் என்பன பற்றிய தகவல்களை முன்வைக்க, மாணவர்களுக்கு இடமளியுங்கள்.

**படி** II: தரப்பட்ட மூன்று பண்டிகைகளையும், அவற்றைப் பற்றிய தகவல்களையும் திரட்டுவதற்கு வேண்டிய நூல்களை வழங்குங்கள்.

**படி** III: மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு தலைப்புக்களை வழங்குங்கள்.

**படி** IV: மாணவர் சேகரித்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, உரைச் சித்திரத்தை வெளிப்படுத்த இடமளியுங்கள்.

**படி** V: சேகரித்த தகவல்கள் அடங்கிய கையேடுகளைக் காட்சிக்கு வைக்க வழிப்படுத்துங்கள்.

**உசாத்துணைகள்:**


(1) விரதம், விழா, பண்டிகைகள் - பி. ஸ்ரீ

(2) சைவத் திருக்கோயிற் கிரியை நெறி - பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்

(3) சைவக்கிரியை விளக்கம் - எஸ். சிவபாதசுந்தரனார்

**தேர்ச்சி 8.0** : சமய வாழ்வில் ஆலய வழிபாடு, விழாக்கள், விரதங்கள் என்பவற்றின் முக்கியத்துவத்தினை இனங்கண்டு அவற்றைக் கடைப்பிடிக்க முன்வருவர்.

**தேர்ச்சி மட்டம் 8.4** : இந்து சமய விரதங்களின் முக்கியத்துவங்களை இனங் கண்டு, அவற்றை அனுட்டிப்பர்.

**பாடவேளைகள்** : 28

**கற்றற் பேறுகள்:**

- விரதம் என்பதன் மறுபெயர்கள், அதன் வரைவிலக்கணம் என்பவற்றை எழுதிக் காட்டுவர்.
- விரதங்கள் அனைத்தும் கடவுளை நோக்கி, அவரின் திருவருளைப் பெறுவதற்காக அனுட்டிக்கப்படுகின்றன என்பதை எடுத்துக் கூறுவர்.
- மனதை ஒருநிலைப்படுத்துவதில் விரதங்களின் பங்கினை மதிப்பிட்டுக் கூறுவர்.
- விரதம் அனுட்டிப்போர் கடைப்பிடிக்க வேண்டிய பொது விதிமுறைகளையும் தவிர்க்க வேண்டியவற்றையும் ஒழுங்குமுறைப்படி எழுதிக் காட்டுவர்.
- தரப்பட்டுள்ள ஒவ்வொரு விரதங்களின் நியதி, அனுட்டிக்கும் காலம், அனுட்டிக்கும் முறைகள், விரத பலன் என்பவற்றை உள்ளடக்கிய அட்டவணையைத் தயாரித்து முன்வைப்பர்.
- விரதங்களை அனுட்டிப்பதன் மூலம் வளர்க்கப்படும் நற்பண்புகளைப் பட்டியற்படுத்துவர்.
- தரப்பட்டுள்ள விரதங்கள் தொடர்பாக தெளிவான விளக்கங்களைக் கூறுவர்.
- விரத காலங்களில் தவிர்க்கப்பட வேண்டியவற்றை (பகற் தூக்கம், தாம்பூலம் தரித்தல், தாம்பத்திய உறவு, தீச்சொல், தீய எண்ணங்கள், மது) விளங்கி பட்டியற் படுத்துவர்.

## விடய உள்ளடக்க வழிகாட்டி:

## 8.4.0 இந்து சமய விரதங்கள்

### அறிமுகம்

- விரதம், நோன்பு என்பன ஒரு பொருட் சொற்களாகும்.
- விரதமாவது, மனம் பொறி வழிப்போகாது நிற்றற்பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விசேடமாக வழிபடல் என நாவலர் விளக்குவார்.
- விரதங்கள் அனைத்தும் இறைவனை நோக்கி அனுஷ்டிக்கப்படுகின்றன.
- விரதங்கள் என்பவை இறைவனின் திருவருளைப் பெறுவதற்கான வழி எனப் பொருள் படும்.

- மனதை ஒருநிலைப்படுத்த விரதங்கள் உதவுகின்றன. விரதங்கள் ஒரு வகையில் தவமாகும்.
- விரதங்களை அனுட்டிப்பதன் மூலம் பல நற்பண்புகள் வளர்க்கப்படுகின்றன.
  - தூயசிந்தனை, பணிவு, வலிமை, கடவுள்பக்தி முதலான விழுமியப்பண்புகள் வளர்க்கப்படுகின்றன.
  - பாவங்கள் குறைகின்றன.
  - மனம் ஒருநிலைப்படுகின்றது.
  - உடல், உளத் தூய்மை பேணப்படுகின்றன.
- விரதம் அனுட்டிப்போர் கடைப்பிடிக்க வேண்டியவை:
  - வைகறையில் நித்திரை விட்டெழுதல்.
  - சங்கற்பம் சொல்லல்
  - நீராடி, தோய்த்துலர்ந்த ஆடை அணிதல்.
  - தியானம், செபம், ஆலய தரிசனம், திருமுறைப் பாராயணம் என்பவற்றைச் சிறப்பாகச் செய்தல்.
  - திருக்கோயிலில் விளக்கேற்றல். திருமஞ்சன, அபிசேகத் திரவியங்கள் கொடுத்தல்.
  - நோன்பு முடித்து, சிவனடியார் ஒருவருடன் உணவு உட்கொள்ளல்.

### 8.4.1 சிவ விரதங்கள்

#### அறிமுகம்

- சிவபெருமானை நோக்கி அனுட்டிக்கப்படும் விரதங்களில் திருவாதிரை, சிவராத்திரி, பிரதோஷம், கேதாகௌரி விரதம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

#### சிவராத்திரி விரதம்

- சிவராத்திரி விரதம் சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாகும்.
- சிவராத்திரி விரதம் திருமால், பிரமன் இருவரும் அடிமுடி தேடிய வரலாற்றுடன் தொடர்புடையது.
- சிவராத்திரி என்ற சொல் சிவனுடைய இராத்திரி, சிவமான இராத்திரி, சிவனை அர்ச்சிக்கும் இராத்திரி, சிவனுக்கு இன்பமான இராத்திரி எனப் பல பொருள் தரும்.
- சிவராத்திரி ஐந்து வகைப்படும்.
  - நித்திய சிவராத்திரி
  - பட்ச சிவராத்திரி
  - மாத சிவராத்திரி
  - யோக சிவராத்திரி
  - மகா சிவராத்திரி
- மகா சிவராத்திரியானது மாசி மாத கிருஷ்ணபட்ச (தேய்பிறை) சதுர்த்தசி திதியில் (பதினான்காம் நாள்) அனுட்டிக்கப்படும்.

- **விரத நியதிகள்**
    - விரத தினத்துக்கு முதல் நாள் ஒரு பொழுது உணவு உண்ணுதல்.
    - விரத தினத்தன்று உபவாசம் இருத்தல்.
    - சிவாலய தரிசனம் செய்தல். நான்கு ஜாமப் பூசை காணுதல்.
    - சிவ தோத்திரம் பாடுதலும் கேட்டலும்
    - பஞ்சாட்சர மந்திரம் ஜெபித்தல்
    - இரவு முழுவதும் நித்திரை ஒழித்தல். இயலாதோர் இலிங்கோற்பவ காலம் வரை விழித்திருத்தல்.
    - மறுநாட் காலை விரதம் முடித்து, சூரிய உதயத்தின் முன் பாறணை செய்தல்.
- **சிவராத்திரி விரதத்துடன் தொடர்புடைய கதைகள்**
    - ஒரு சமயம் உமாதேவி விளையாட்டாக ஈசுவரனது கண்களைப் பொத்திவிட எங்கும் பேரிருள் பரவியது. இந்நிலையில் தேவர்கள் சிவனை நோக்கிச் சிவபூசை செய்த தினமே சிவராத்திரி.
    - உலக முடிவாகிய ஊழிக் காலத்தில் பிரமதேவர் இறுதியுற்றார். எங்குள்ள உயிர்கள் ஒடுங்கி உலகங்களும் அழிந்தன. அந்த இரவுப்பொழுதில் உமாதேவி யார் இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய்து இறையருள் பெற்றார். இறைவரிடம், ‘‘இவ்விரவிலே விரதம் இருப்போர் யாவராயினும் அவர் மோட்சத்தை அடைய அருள்க’’ என்று வேண்டினார். அவ்வாறே இறைவரும் அருளினார்.
    - ஒரு பொழுது பிரமனும் திருமாலும் தான்தான் பெரியவன் என்று தம்முள்ளே போர் புரிந்தனர். அவர்களுக்கு அறிவூட்டுவதற்காக சிவபெருமான் இருவருக்கு மிடையே இலிங்கமாகி சுடர்விட்டு விளங்கினார். அவ்வேளையிலும் சிவனை வணங்கும் சிந்தையிலராய் அவ்விருவரும் சிவலிங்கத்தின் (சோதியின்) அடியை யும் முடியையும் காணப் புறப்பட்டனர் ; தோல்வியுற்றனர். செருக்கு அழிந்து, சிவனைச் சரண்புகுந்து வழிபட்டு உய்வு தேடினர். அவ்விரவே சிவராத்திரி.
- **ஆகமங்களில் சிவராத்திரி பற்றிய கதைகள்**
    - ஓர் ஊழியின் இறுதியிலே அண்டங்களை எல்லாம் இருள் வந்து மூடிக் கொண்டது. அந்த இருளைப் போக்கவேண்டி உருத்திரமூர்த்தி சிவலிங்கத்தை வைத்து வழிபட்டார். அதுவே சிவராத்திரியாகும்.
    - பாற்கடலிலே எழுந்த நஞ்சை சிவன் உண்டார். அந்த நஞ்சானது சிவனுக்கு ஏதும் கெடுதல் விளைவியாதிருக்கும் பொருட்டுத் தேவர்கள் இரவு முழுவதும் பூசை செய்தனர். அவ்வேளைப்பொழுதே சிவராத்திரியாகும்.

- **இவ்விரதம் அனுட்டிப்பதால் அடையும் பயன்கள்**
  - புண்ணியம் கிடைக்கும்.
  - அகவிருள் நீங்கி சிவஞான ஒளி கிடைக்கும்.
  - விழுமியப் பண்புகள் வளர்ச்சியடையும்.

    **உ-ம்:** ஜீவகாருண்ணியம், அன்பு, பொறுமை, பணிவு, கடமை, பகிர்ந் துண்ணல், சகோதரத்துவம்
  - முத்தியின்பம் கிடைக்கும்.
- **சிவராத்திரி மகிமை கூறும் நூல்கள்**
  - கந்தபுராணம்
  - இலிங்கபுராணம்
  - சிவராத்திரி புராணம்

### முக்கிய குறிப்பு:

சிவ விரதத்தில் சிவராத்திரி தவிர, ஏனைய விரதங்கள் அனைத்தையும் இதே அமைப்பில் நோக்குங்கள்.

### 8.4.1 சிவ விரதங்கள்

(அ) சிவராத்திரி விரதம் (இவ் விரதம் பற்றி தரப்பட்டுள்ளது)

(ஆ) பிரதோஷ விரதம்

### 8.4.2 சக்தி விரதங்கள்

(அ) நவராத்திரி

(ஆ) வரலட்சுமி விரதம்

### 8.4.3 விநாயகர் விரதங்கள்

(அ) பெருங்கதை விரதம் (விநாயகர்சஷ்டி விரதம்)

(ஆ) விநாயகர் சதுர்த்தி விரதம்

### 8.4.4 முருக விரதம்

(அ) கந்தசஷ்டி விரதம்

### 8.4.5 வைரவ விரதங்கள்

### 8.4.6 விஷ்ணு விரதம்

(அ) வைகுண்ட ஏகாதசி விரதம்

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

**படி I** இந்து சமய விரதங்களையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் மாணவர் கூற வழிப்படுத்துங்கள்.

**படி II:** தரப்பட்டுள்ள விரதங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்குத் தேவையான நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றைக் கொடுத்து உதவி செய்யுங்கள்.

**படி III:** மாணவர் சேகரித்த தகவல்கள், படங்கள் என்பவற்றைக் கொண்டு சஞ்சிகை ஒன்றைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

**படி IV:** சஞ்சிகையை வகுப்பில் காட்சிப்படுத்த இடமளியுங்கள்.

## உசாத்துணைகள்:


(1) ஈழத்து இந்து விரதங்கள் - கலைவாணி இராமநாதன்

(2) கைலாச நாதம் - பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் நினைவுமலர்

(3) விரதம், விழா, பண்டிகைகள் - பி. ஸ்ரீ

(4) சைவத் திருக்கோயிற் கிரியை நெறி - கா. கைலாசநாதக்குருக்கள்

(5) சைவக்கிரியை விளக்கம் - எஸ். சிவபாதசுந்தரனார்

(6) சைவ விரதங்கள் - கோப்பாய் சிவம்

**தேர்ச்சி 9.0** : மனித வாழ்வு செம்மையுறுவதுடன் ஆன்மீக மேம்பாடு உடையதாகவும் அமைவதற்கு அறவழியிலான செயற்பாடுகளை மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : இந்து அறவியல் நூல்களின் முக்கியத்துவத்தினை அறிந்து அவற்றை வாழ்க்கையில் பயன்படுத்துவர்.

**பாடவேளைகள்** : 34

**கற்றற் பேறுகள்:**

- இந்து அறம், தர்மம், கடமை என்பவற்றுக்கான விளக்கங்களைக் கூறுவர்.
- இந்து அறவியல் நூல்களைத் துணையாகக் கொண்டு, புருடார்த்தங்கள், ஆச்சிரம தர்மங்கள் என்பவற்றை விளக்கி எழுதுவர்.
- புராதன இந்து சமுதாயத்தின் அறவியல் சிந்தனைகளின் வெளிப்பாடே புருடார்த்தங்கள், ஆச்சிரம தர்மங்கள் என்பதனை விளக்கி எழுதுவர்.
- மனித வாழ்வைச் செம்மையுடையதாக்குவதில் புருடார்த்தங்களின் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறுவர்.
- தனிமனித வாழ்வைச் செம்மைப்படுத்துமாற்றையும் ஆச்சிரம தர்மங்கள் அவை படிமுறையாக ஆன்மீக விடுதலை அடைவதற்கு வழிகாட்டுமாற்றையும் உதாரணங்களுடன் விளக்குவர்.
- புருடார்த்தங்களும், ஆச்சிரம தர்மங்களும் தற்கால இந்துக்களின் வாழ்வியலில் வகிக்கும் பங்கினை விபரிப்பர்.
- தரப்பட்டுள்ள தமிழ் நீதி நூல்களில் உள்ள (திருக்குறள், ஆத்திசூடி, நல்வழி) அறவியல் தொடர்பான எடுத்துக்காட்டு களையும், மேற்கோள்களையும் விளக்கங்களையும் பட்டியற்படுத்துவர்.
- மனிதவாழ்வைச் செம்மையுடையதாகவும் ஆன்மீக மேம்பாடு உடையதாகவும் மாற்றி அமைப்பதில் உதவும் இந்து அறக் கருத்துக்களின் பங்களிப்பை உதாரணங்களூடாக முன்வைப்பர்.
- இந்து சமய நூல்களில் கூறப்பட்டுள்ள அறக் கருத்துக்கள் மனித வாழ்வைச் செம்மைப்படுத்துமாற்றினை உணர்ந்து, அவற்றை பாடசாலை வாழ்விலும் பொதுவாழ்விலும் கடைப்பிடிப்பர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

**9.1.1 அறவியல் ஓர் அறிமுகம்**

- இந்து சமயம் சார்ந்த ஒழுக்கவியல் சிந்தனைகளையும் அறச் சிந்தனைகளையும் உள்ளடக்கி நிற்பதே இந்து அறவியல் எனக் கூறப்படுகிறது.
- தர்மம் என்னும் சொல் அறம், ஒழுக்கம், நீதி என்னும் ஒத்த பொருளைத் தரும். தர்மம் என்பது ‘த்ரு’ என்னும் அடிச்சொல்லில் இருந்து பிறந்தது. இச்சொல்லின் பொருள் தாங்குவது என்பதாம். அறு + அம் = அறம். தகுந்த வழியில் நடத்தலை அறம் எனலாம்.

- மனிதனின் இன்ப, துன்பங்களுக்கு அடிப்படையாக அமைவது அறமே என்பது இந்துக்களின் நம்பிக்கை. மனிதன் சுகமாக வாழவும் இன்பம் பெறவும் துன்பங்களைத் தாங்கவும் அறம் துணையாக உள்ளது.
- வேதம், உபநிடதம், பகவத்கீதை, புராண இதிகாசம், தர்மசாத்திரங்கள், அர்த்த சாத்திரம் முதலிய வடமொழி நூல்களிலும் திருமந்திரம், திருக்குறள், சிலப்பதிகாரம், நாலடியார், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, பன்னிரு திருமுறைகள் முதலிய தமிழ் நூல்களிலும் அறவியல் சிந்தனைகள் அடங்கியுள்ளன.
- வேத உபநிடதங்களில் கூறப்பட்ட தர்ம சிந்தனைகள் சனாதன தர்மம் என்றும், வைதீக தர்மம் என்றும் கூறப்படும்.
- இந்து ஒருவனது அறச் செயல்களுக்கு இறை நம்பிக்கையே ஆதாரமாக உள்ளது. இறைவன் மீதும் அறம், நீதி என்பனவற்றின் மீதும் வைக்கும் நம்பிக்கை, மக்களிடையே திரிகரண சுத்தி, திடசித்தம், மன வைராக்கியம், மன உறுதி என்பனவற்றை ஏற்படுத்தும்.
- இந்துக்களிடையே அறமானது சமயம், தத்துவம், கலை, சடங்கு முறை என்பவற்றின் ஊடாக எடுத்துச் செல்லப்படுகிறது.
- இந்துசமயம் மனிதன் நேர்மையான வாழ்வியலை அமைத்துக் கொள்ள வழிகாட்டுகிறது.

**(அ) வேத இலக்கியங்களில் அறம்**

- வேத இலக்கியங்களில் 'ரிதம்' என்பது ஒழுங்கு பற்றியதாகும்.
  **உ-ம்:** ''உலகினைத் தாங்குவதும் அதை நிலைநிறுத்துவதும் ரிதமாகிய அறமே'' என வேத இலக்கியமொன்று பகர்கின்றது.
- வேதப் பாடல்களில் அறக் கடவுளாக வருணன் போற்றப்பட்டான்.
- வர்ண சூக்தத்தில், நல்ல சிந்தனைகள் தோன்றவும் தீய சிந்தனைகளில் இருந்து விடுபடவும் இறை வழிபாடு செய்யும் நிலை வற்புறுத்தப்படுகின்றது.
- இயற்கை அகவயமாகவும் புறவயமாகவும் அற ஒழுங்கோடு தொடர்புபட்டுள்ளது.
- தர்மம் தன்னை மீறியவனைக் கொல்லும்; தர்மம் தன்னைப் பாதுகாத்தவனைக் காப்பாற்றும். '' தர்மோ ரக்ஷதி ரஷிதஹ ; தர்ம ஏவ ஹதோ ஹந்தி''

**(ஆ) உபநிடதங்களில் அறம்**

- 'அகம்பிரமாஸ்மி', 'தத்துவமஸி', 'அயமாத்மா பிரமம்', ஸோ அகம் அஸ்மி', 'பிரக் ஞானம் பிரமம்' என்பன உபநிடத மகாவாக்கியங்கள். நான் பிரமமாக இருக்கிறேன், அது நீயாக இருக்கிறாய். இந்த ஆத்மாவே பிரம்மம். அது நானாக இருக்கிறேன்.ஞானமே பிரம்மம் என்ற உபநிடதக் கருத்துக்கள் ''நானும் அது; நீயும் அது; எல்லாம் ஒன்று'' எனும் அனைவரையும் சமநோக்குடன் நோக்கும் உயர்நிலை அறத்தைப் போதிக்கின்றன.
- ''அனைவரிலும் தெய்வீகம் உண்டு. அனைவரையும் நேசி, அனைவரிடமும் அன்பாயிரு'' எனும் உயர் மனித நேயமே இவ்வுபநிடதங்களின் போதனையாகும்.
- மிகவுயர்ந்த ஒழுக்க விழுமியங்களையே உபநிடதங்கள் சிறந்த அறப் பண்புகளாகச் சித்திரித்துள்ளன.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்) | ஸத்யம்வத | - | உண்மை பேசு |
| | தர்மம்சர | - | தர்மவழியில் நட |
| | சத்யாத்நப் பிரமதிதவ்யம் | - | சத்தியத்தினின்றும் நழுவுதல் கூடாது |
| | தர்மாத் நப்பிரமதிதவ்யம் | - | தர்மத்தினின்றும் நழுவுதல் கூடாது |
| | பூத்யை நப்பிரமதிதவ்யம் | - | பெருமையுள்ளவற்றைப் போற்றவும் தவறக்கூடாது |
| | மாத்ரு தேவோபவ | - | தாயைத் தெய்வமாகப் போற்றுக |
| | பித்ரு தேவோபவ | - | தந்தையைத் தெய்வமாகப் போற்றுக |
| | ஆச்சார்ய தேவோபவ | - | குருவைத் தெய்வமாகப் போற்றுக |
| | அதிதிதேவோபவ | - | விருந்தினரைத் தெய்வமாகப் போற்றுக |

- சமூக வாழ்வில் மனித நடத்தைகளை ஒழுங்குபடுத்தும் நடைமுறை விதிகளாக, அறக்கட்டளைகளாக இந்துமதம் இவற்றை வலியுறுத்துகின்றது.
- ஒரு தொழிலைச் செய்தல் கருமம். வேதசாத்திரங்களில் விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்தல் தருமம் என அறிஞர் கூறுகின்றனர்.

**(இ) தர்மசாத்திரங்களில் அறம்**

- தர்மசாத்திரங்களில் யுக தர்மம் பற்றிக் கூறப்பட்டுள்ளது.
- சமயச் சடங்குகள் தர்மத்தை அடிப்படையாகக் கொண்டவை.
- தர்ம சாத்திரங்களில் வர்ண தர்மம், ஆச்சிரம தர்மம், புருடார்த்தம் என்பன அறம் பற்றிக் கூறுவன.

**(ஈ) புராண, இதிகாசங்களில் அறம்**

- மகாபாரதம்,இராமாயணம் எனும் இதிகாசங்களும் புராணங்களும் அறத்தை எடுத்துக் கூறுவன.
- மகாபாரதத்தில் தர்மம் உண்மையும் ஒளியும் இன்பமும் உடையது என்று வருணித்துக் கூறப்பட்டுள்ளது.
- புராண இதிகாசங்களில் தர்மத்தையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடிப்பவன் தனது பாவங்களில் இருந்து விடுபட்டு ஆத்மீக ஞானம் அடைவான் என்றும் கூறப்பட்டுள்ளன.
- அன்பு, சத்தியம், பொறுமை, பொதுநலம் முதலிய அறச் சிந்தனைகள் இதிகாசங்களில் பெரிதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

**(உ) பகவத்கீதையில் அறம்**

- பகவத்கீதை மனித அறம் பற்றிய நூலாகும்.
  (உ-ம்) "யதோ தர்மஸ்ய ததோஜெய"
  எங்கே தர்மம் உள்ளதோ அங்கே வெற்றி உள்ளது என்பது இதன் கருத்தாகும்.

**(ஊ) தமிழ் நூல்களில் அறம்**

- பண்டைத் தமிழ் நூல்களாகிய சங்க நூல்களில் அறக் கருத்துக்கள் காணப்படுகின்றன.
- சங்க மருவிய காலத்தில் அறம் பற்றிய கருத்துக்களைக் கொண்ட நூல்கள் பெருமளவு தோற்றம் பெற்றன.

- சங்க மருவிய கால நூல்களில் திருக்குறள் மனித அறம் பற்றிக் கூறும் முக்கிய நூலாகும். திருக்குறளிலுள்ள அறத்துப்பால் அறக்கருத்துக்களையே வலியுறுத்துகின்றது. பின்வரும் குறளில் அறத்தைக் கடைப்பிடிப்பவன் தவிர்க்கவேண்டிய செயல்கள் கூறப்பட்டுள்ளன.

  "அழுக்காறு அவா வெகுளி இன்னாசொல் இவை நான்கும்
  இழுக்கா றியன்றது அறம்"

  மேற்கூறிய அறங்களினாலேயே உயர் பேறாகிய பேரின்பம் (வீடுபேறு) கிடைக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

- சங்க மருவிய கால அறம் பற்றிய நூல்களுள் திருமந்திரம் குறிப்பிடத்தக்கது. திருமந்திரத்தில் காணப்படும் அறம் தொடர்பான கருத்துக்கள் முக்கியமானவை.

  "யாவர்க்கு யாம் இறை வற்கொரு பச்சிலை..."

  எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் அன்றாட வாழ்வினை எவ்வாறு அறவழியில் அமைக்கலாம் என்பதையும், அறஞ்செய்வது அரியசெயலன்று; எல்லோராலும் செய்யக்கூடியது. யாவர்க்கும் எளிதானது என்பதையும் இப்பாடல் விளக்கும்.

- "அறம் அறியார் அண்ணல் பதம் நினையும்
  திறன் அறியார்"

  இதன் மூலம் அறத்தின் முக்கியத்துவம் திருமந்திரத்தில் வலியுறுத்தப்படுகின்றது.

- சைவ சித்தாந்தத்தில் அறம் மேலானதாகக் கூறப்படுகின்றது. சைவ சாதனையுடன் அறம் நெருங்கிய தொடர்புடையது. சைவசித்தாந்த சாத்திரத்தில் ஒன்றான சிவஞான சித்தியார் அறம் பற்றிய விளக்கத்தைப் பின்வருமாறு கூறும்.

  "ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்
  வழுக்கிலா தவம் தானம் வந்தித்தல் வணங்கல் வாய்மை
  அழுக்கில்லா துறவு அறிவு அர்ச்சித்தல் ஆதி
  இழுக்கில்லாத அறங்கள்..."

## 9.1.2 புருடார்த்தங்கள்

**அறிமுகம்**

- மனித வாழ்வை மேம்படுத்துவதற்காக இந்துசமயம் வகுத்து அமைத்த அறநெறி முறைகளுள் புருடார்த்தம் அடங்கும்.
- ஒவ்வொரு மனிதனும் ஆன்மீக இலட்சியத்தை அடைய வாழ்க்கையின் நான்கு நிலையிலும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் இப்புருடார்த்தங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- புருடார்த்தங்கள் என்பவை மனிதனால் அடையப்பட வேண்டிய செல்வங்கள் எனப்படும்.
- இவை தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் எனப்படும். இதனை அறம், பொருள், இன்பம், வீடு என்பர்.
- வாழ்வின் இலட்சியத்தை அடைய அறத்தின் வழிநின்று அவ்வழியிலேயே பொருளைத் தேடி வாழ்க்கையினை அனுபவிக்க வேண்டும் என்பதே புருடார்த்தங்களின் குறிக்கோளாகும். இதன் வழி வீடுபேறு சித்திக்கும் என்பது ஆன்றோர் வாக்காகும்.

**அறம்:**

- இந்து மரபிலே வலியுறுத்தப்படும் உயர்ந்த அறநெறிகள் புருடார்த்தங்களாகும். புருடார்த்தங்களில் அறமே பிரதானமானதாக முதனிலைப்படுத்தப்பட்டுள்ளது. அதுவே யாவற்றுக்கும் அடிப்படையாகவும் அமைந்துள்ளது.
- அறம், தர்மம் எனவும் பொருள்படும்.
- தர்மம் - 'த்ரு' என்ற வடமொழி வினையடியிலிருந்து தோன்றியது. இதன் பொருள் வைத்திருத்தல், போஷித்தல், காப்பாற்றுதல், தாங்கிக்கொண்டிருத்தல் முதலியனவாம்.
- தர்மம் என்ற சொல் கட்டளை, வாழ்க்கை நெறி, விதி, கடமை, ஆணை, கோட்பாடு, சட்டம், சமயம் ஒழுங்கு, ஒழுக்கம், நீதி நேர்மை எனப் பல பொருள்படும்.
- தமிழிலுள்ள அறம் என்ற சொல்லும், ஒழுக்கம், புண்ணியம், சமயம், ஞானம், நூல், நோன்பு, இறுத்தல், நீக்குதல் முதலிய கருத்தைப் புலப்படுத்தும்.
- ஆகவே தர்மம், அறம் என்பன ஒரே கருத்தைப் பெரும்பாலும் வெளிப்படுத்துகின்றன.
- "வேதோ கிலோ தர்ம மூலம்" என்பது தர்மத்தின் அடிப்படை, வேதங்களே என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது. வேதங்கள் மூலமும் முனிவர்கள் கண்ட தரிசனங்கள் மூலமும் தர்மம் பற்றி விளக்கப்பட்டுள்ளது.
- வேதங்கள், முதலில் தர்மம் என்பது சமயச்சடங்குகள், கிரியைகள் எனக் குறிப்பிட்டன.

  ப்ரதமா தர்மம் (முதல் ஆணை)

  சனாதாதர்மானி (பழைய ஆணை) - இருக்குவேதம் (3.17.1, 10.56.3)
- அதர்வ வேதத்தில் (9.9.17) சமயக் கடமைகளையும் கிரியைகளையும் வேதங் களிலுள்ளவாறும் பெரியோர் விதித்தவாறும் செய்யும் ஒருவனுக்குக் கிடைக்கக்கூடிய புண்ணியங்களைத் தர்மம் என்ற சொல் குறித்துள்ளது.
- பிருகதாரணிய உபநிடதத்தில் (1.14.14) தர்மம், சத்யம் (உண்மை) என்ற பொருளில் வந்துள்ளது. தைத்திரிய உபநிடதத்தில் குருகுல வாசம் முடித்து வீடு திரும்பும் மாணவனுக்கு குரு கூறும் உபதேசங்களில் "சத்யம் வத, தர்மம் சர" எனும் கூற்றுக்கள் காணப்படுகின்றன.
- முண்டக உபநிடதம் சத்தியமே வெற்றி பெறும் என்கிறது.

  "சத்யம் ஏவ ஜயதே"
- சாந்தோக்கிய உபநிடதம் (2.23) இல்வாழ்வான், வானப்பிரஸ்தன், பிரமச்சாரி ஆகியோருக்கான கடமைகள் தர்மத்தின் மூன்று பிரிவுகள் எனக் கூறப்பட்டுளது.
- "ஸ்தர்மவே நிதனம் சிரேயஹ" - தனக்கு விதிக்கப்பட்ட கடமையை (தர்மத்தைச்) செய்யும்போது இறத்தலே நன்று என பகவத்கீதை கூறுகிறது. (3.35, 2.31).
- "ஆசாரமே மேலான தர்மம்" - என மனு ஸ்மிருதி (1.108) கூறுகிறது.
- "அஹிம்சையே மேலான தர்மமென" - மகாபாரதத்திலுள்ள அனுசரணை பர்வப் பகுதி கூறுகிறது.
- மகாபாரதத்தில் - "பிரபஞ்சத்தினைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஒழுங்கும் ஒரு

பொருள். அது இருக்க வேண்டியவாறு அமைந்திருப்பதற்கான மூலமும் அதுவேயாம். நல்லொழுக்கமுள்ளவர்களுக்கு நன்மை செய்வதும், அவர்களைத் தாங்கி நிற்பதும் தருமமே; உலகங்கள் அனைத்திலும் வாழ்க்கையை நெறிப்படுத்துவதும் அதுவே''- என்று கூறப்படுவதும் இங்கு நோக்கத்தக்கதே.

- மகாபாரதம், இராமாயணம் எனும் இதிகாசங்கள் தருமத்தின் வழி இவ்வுலகில் வாழ்வதற்கேதுவான வழிகாட்டல்களை உள்ளடக்கி உள்ளன. மகாபாரதத்தில் தருமனும், இராமாயணத்தில் இராமனும் தருமத்தின் வழி வாழ்ந்தவர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.
- தர்மம் தன்னைக் கொன்றவனைக் கொல்லும். அது தன்னைப் பாதுகாத்தவனைக் காக்கும். ''தர்ம ஏவ ஹதோ ஹத்தி...''

  ''தர்மம் தலைகாக்கும்''

  ''அரசன் அன்று கொல்லும்
  தெய்வம் நின்று கொல்லும்''
- புராணங்களில் போதிக்கப்படும் ஒழுக்கம், தர்மத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். புராணங்கள் சாதாரண தர்மம், விசேட தர்மம் என இரு வகைத் தர்மங்கள் பற்றிக் கூறுகின்றன. விசேட தர்மம் 'ஸ்வதர்மம்' அதாவது அவரவருக்குரிய தர்மம் எனவும், யாவர்க்கும், எக்காலத்துக்கும் பொருத்தமானதாகவும் நிரந்தரமானதாகவுமுள்ள ஒழுக்க விதிகளே சாதாரண தர்மம் எனவும் கூறப்படுகிறது.

  **உ-ம்:** உண்மை பேசுதல் - அரிச்சந்திரன்
- இவ்வாறு மேற்குறிப்பிட்ட வரையறைகளின் அடிப்படையிலே நோக்கும்போது 'தர்மம்' என்பது பரந்த கருத்திலே நோக்கப்பட்டு வந்துளது. பொதுவாக வைதிக சமூகத்தில் தனிமனிதனின் ஒழுக்கத்தரம், வர்ண ஆச்சிரம தருமக் கோட்பாடுகள், நான்கு புருடார்த்தங்கள் தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய கடமைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக உணரப்பட்டுள்ளது.
- மனித குலம் ஆன்மீக ரீதியில் முழுமையும் இன்பமும் அடையும் வகையிலும், உலகியல் வாழ்வில் அவர்கள் ஒழுக்கம், பொருளியல், அறவியல் ரீதியில் குறிப்பிடத் தக்க நன்னிலை அடைவதற்கு வழிகாட்டுவதே தர்மத்தின் தலையாய நோக்கமாகும்.
- பரம் பொருள் உறைந்திருக்கும் மனிதனின் மானிடப் பண்பை உணர்த்துவதும், ஒவ்வோர் உயிரிலும் இறைவன் உள்ளான் எனும் ஞானமுமே என்றுமுள்ள தர்மத்தின் அடிப்படைக் கோட்பாடென மகாபாரதம் கூறுகிறது.
- வேதங்களிலிருந்து புராண இதிகாசங்களூடாக வளம் பெற்ற தர்மம் தர்மசூத்திரங் களூடாகவும் தர்மசாத்திரங்களூடாகவும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.
- தர்ம சாத்திரங்களில் தர்மம் பற்றிய சிந்தனைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவை கடமை, ஒழுக்கம் என்ற கருத்தில் காணப்படுகின்றன. மனு ஸ்மிருதியில் தர்மம், சட்டம் என்ற கருத்திலேயும் நோக்கப்படுகின்றது. இதில் தருமத்தின் மூலங் களாகச் சுருதி, ஸ்மிருதி, இவற்றை நன்கு அறிந்தவர்களது ஆசாரங்கள், ஒருவரின்

மனச்சாட்சி என்பன கூறப்படுகின்றன.

- தர்மசாத்திரங்களில் ஸ்வதர்மம், ஆச்சிரம தர்மம், இராஜ தர்மம் என பல வகைப் பட கூறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| சுவதர்மம் | - | இது குலதர்மம் எனப்படும். ஒவ்வொருவரும் தத்தம் கடமை களைச் செய்தலைக் குறிக்கும். இவை வாழ்க்கைக்கு அவசியமான கடமைகளாகும். |
| ஆச்சிரம தர்மம் | - | வாழ்க்கையின் நான்கு நிலைகளிலும் மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கங்கள், கடமைகள் இதனுள் அடங்கும். பிரமச்சரிய, இல்லறக் கடமைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. |
| இராஜ தர்மம் | - | நீதிபரிபாலனம், சமுதாய ஒற்றுமை, முடிசூட்டுதல் முதலியன பற்றியும் தர்மம் தவறினால் நாட்டில் ஏற்படும் தீமை பற்றியும் கூறப்பட்டுள்ளன. |

- தர்மசாத்திரங்களில் எல்லோருக்கும் பொதுவான சாதாரண தர்மங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளதாக அவற்றுக்கு உரை எழுதியோர் கூறியுள்ளனர். **(உ-ம்)** அஹிம்சை முதலியன. புராணங்களில் சாதாரண தர்மங்கள் இன்றியமையாத விதிகளாக வலியுறுத்தப்பட்டுள்ளன. அஹிம்சை, சஷமா (பொறுமை), இந்திரிய நிக்கிரவர (புலனடக்கம்), தயை (இரக்கம்), தானம் (கொடை), சௌச (தூய்மை), சத்யம் (உண்மை), தபஸ் (தவம்), ஞானம் (அறிவு) முதலியன பற்றி பத்ம, கருட, கூர்ம, அக்கினி புராணங்களில் விளக்கப்பட்டுள்ளன.
- புராண கதாபாத்திரங்கள் தர்மத்தைத் தம் வாழ்வின் இலட்சியமாகப் போற்றியுள்ளனர். **(உ-ம்)** அரிச்சந்திரன், ருக்மாங்கதன் (உண்மை பேசுதல்)
- மனித செயற்பாடுகளுக்கு அப்பாலும் உலகனைத்தையும் பிரபஞ்சமனைத்தையும் தாங்கி இயக்கி வரும் முழுமுதற் காரணியாகவும் தருமம் கருதப்பட்டு வந்துள்ள வகையில் தருமம் தெய்வம் என்ற கருத்திலேயும் அதாவது தரும தேவதை, அறக் கடவுள் எனக் கருதப்பட்டுள்ளது.
- தர்மத்தின் வழி ஒழுகுவதனால் அடையும் நன்மைகள் பற்றியும் இந்துசமய நூல்களில் கூறப்பட்டுள்ளது. தருமமே ஒருவனுக்கு மரணத்தின் பின்னரும் தொடர்ந்து வரும் மிக நெருங்கிய நண்பன். முழுமையும் பேரின்பமுமளிக்கவல்ல நிரந்தரமான மூலம் என பிரம்ம, கருட புராணங்கள் கூறுகின்றன. ஜைமினியின் பூர்வ மீமாம்ச சூத்திரத்திலே (1.1.2) வேதங்களிலே போற்றி விதிக்கப்பட்டுள்ள சமய ஒழுக்கக் கடமைகளைச் செய்தலே தர்மமென்றும், இதனால் இறுதியில் வாழ்க்கையில் சாந்தியும் சமாதானமும் மகிழ்ச்சியும் உண்டாகும் எனவும் கூறப்பட்டுள்ளது.

**தமிழ் நூல்களில் அறம்**

- மேற்குறிப்பிட்ட கருத்துக்களைத் தமிழ் நூல்களிலும் நாம் காணமுடிகின்றது.
- சங்க இலக்கியங்களில் அரசியல் தர்மம் நன்கு வலியுறுத்தப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது.

**(உ-ம்)** “அறம் துஞ்சும் செங்கோல்...” - (புறம் - 2)

“அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்” - (சிலப்பதிகாரம்)

- சங்க காலத் தமிழகத்தில் புருடார்த்தங்கள் பற்றிய கருத்தும் மக்களிடையே தெளிவாகக் காணப்பட்டுள்ளமையையும் அறிய முடிகின்றது.

**(உ-ம்)** “சிறப்புடைமரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல” - (புறநானூறு - 31)

- திருக்குறள் அறம், பொருள், இன்பத்தை அடிப்படையாகக் கொண்ட நூல். இதன் நாலாவது அதிகாரம் அறன் வலியுறுத்தலாகும். இந்நூல் வடமொழி நூல்களில் கூறப்பட்டுள்ள தர்மம் பற்றிய கருத்துக்களையொத்த பொருள் மரபைக் கொண்டு விளங்குகிறது. “அறத்தால் வருவதே இன்பம்...”

  “அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை...”

  “சிறப்பினும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கும்
  ஆக்கம் எவனோ உயிர்க்கு”

  என அறத்தின் சிறப்பினை வெளிப்படுத்துகிறது. திருவள்ளுவர் அறத்துப்பாலில் இல்லறம், துறவறம் ஆகிய இரு நிலைகளைப் பற்றி விளக்கியுள்ளார்.

- சங்க மருவிய காலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பெரும் பாலானவை அறநூல்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- ஔவையார் ‘அறம் செய விரும்பு’ எனக் கூறியுள்ளார். பிற்காலத் தமிழ் இலக்கி யங்களும் அறம், பொருள், இன்பம், வீடு பயத்தலே நூற் பயன் என்கிறது.
- இந்துக்களின் வாழ்வின் எல்லா நிலைகளிலும், அம்சங்களிலும் தர்மம் தலையாய இடத்தினை வகித்து வந்துளது. அது மட்டுமன்றி அவைதிக மதங்களான சமண பௌத்த மதத்திலும் தர்மம் நன்கு வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**பொருள்:**

- புருடார்த்தங்களில் பிரமச்சரியம், கிருகஷ்தம், வானப்பிரஸ்தம் ஆகிய நிலைகளி லுள்ளோருக்கு அறம் வலியுறுத்திக் கூறப்பட்டதன் பின்பு அர்த்தம் அதாவது பொருள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.
- “பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை” என்ற கூற்று வையத்துள் வாழ்வாங்குவாழ பொருள் அவசியம் என்பதனை வெளிப்படுத்தப்படுகின்றது.
- தனிமனிதனதும் சமுதாயத்தினதும் சிறப்பான வாழ்வுக்குப் பொருள் இன்றியமையாதது.
- அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றினுள் நடுவாக உள்ள பொருளை அடைந் தாலே அறமும் இன்பமும் எய்துவர். அதாவது பொருளை அறத்தின் வழி நின்று ஈட்டினால் தான் அறத்தையும் அதன் வழி இன்பத்தையும் குறைவிலாது அனுபவிக்க முடியும் என்பது ஆன்றோர் வாக்காகும்.
- அர்த்த சாஸ்திரம், திருக்குறள் முதலிய நூல்களில் பொருளீட்டல் பற்றிய கருத்துக் கள் கூறப்பட்டுள்ளன. அர்த்த சாஸ்திரம் பொருளை ஈட்டுவதற்கான வழிவகைகள் பற்றி சிறப்பாக அரசனுக்கே எடுத்துக் கூறுகின்றது.

- பொருளைத் தேடும்போது அறத்தின் வழிநின்றே ஈட்டவேண்டும். இவ்வாறு ஒரு தனிமனிதன் பொருளை ஈட்டத் துணைபுரிவது அரசு. அப்பொருளைப் பாதுகாத்து வாழவும் உதவுவது அரசு. அதனாலேயே அரசு பற்றி அறநூல்கள் ஆராய்ந்துள்ளன. திருக்குறளிலும் பொருட்பாலில் சிறப்பாக அரசியல் பற்றியே விபரிக்கப்பட்டுள்ளது.
- இந்துக்களின் பொருளாதாரக் கோட்பாட்டை விளக்கும் நூலாக அமையும் அர்த்த சாஸ்திரம் பொருளீட்டல், பொருளைப் பயன்படுத்தல், சமூக விருத்திக்குப் பொருள் அவசியம், அரசனால் உரியவாறு பரிபாலனம் செய்யப்பட வேண்டியது பொருள் எனும் கருத்துக்களை முன்வைத்துள்ளது.
- இராஜசேவை, வாணிபம், விவசாயம் முதலிய தொழில்களால் பொருளீட்டலே சிறப்பானது என தர்மசாத்திரங்களும் அர்த்தசாத்திரங்களும் கூறுகின்றன. பரிதானம், சுங்கம் கொடாமை, வட்டிக்கு வட்டி முதலிய தீயவழிகளில் ஈட்டும் பொருள் அதர்மத்துக்கே வழிகோலும். அதனாலேயே ஔவையார், ''தீவினை விட்டீட்டல் பொருள்'' எனக் கூறியுள்ளார்.
- பிரமச்சரிய நிலையில் குருவின் இல்லம் சென்று கல்வி கற்று வீடு திரும்பும் மாணாக்கனுக்கு குரு கூறும் அறிவுரை ''பொருள் வளத்தினைக் கவனிப்பாயாக'' என்பது பொருளின் முக்கியத்துவத்தினை அக்கால இந்துக்கள் உணர்ந்திருந்தனர் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.
- இல்வாழ்வான் இல்லறம் நல்லறமாக அமைய அறவழியில் பொருளை ஈட்டவேண்டும். அறம், பொருள், இன்பம் ஆகிய புருடார்த்தங்கள் இல்வாழ்வானுக்கு உரியவையாதலால், அறச்செயல்களில் ஈடுபடவும் அதன் வழி இன்பத்தை அனுபவிக்கவும் பொருள் இன்றியமையாததாகும்.
- இல்வாழ்வான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணையாக அமைவதற்கும் 'பஞ்சயக்ஞம்' செய்வதற்கும் பொருள் இன்றியமையாததாகும்.
- பொருள், ஆன்மீக இலட்சியத்தை அடைய உதவும் சாதனமாகவும் கருதப்படுகின்றது.

  ''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
  தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

  என்பதில் அறவழியில் ஈட்டிய பொருளைப் பிறருடன் பகிர்ந்து உண்ணுதலே ஆன்மீக இலட்சியத்தை அடையும் வழி எனப்படுகிறது.
- ''பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
  வழி எஞ்சல் எஞ்ஞான்று மில்''

  எனும் திருக்குறள் வாயிலாகவும் இதனை விளக்கலாம்.
- தாம் ஈட்டிய பொருளைக் கொண்டு இம்மையில் இன்பம் அடைவதோடு, பலவகையான அறப்பணிகளிலும் பயன்படுத்தும்போது இம்மைப் புகழும் மறுமை இன்பமும் ஈற்றில் முத்திப்பேறும் கிடைக்க வழி ஏற்படும்.

**இன்பம்:**

- புருடார்த்தங்களில் ஒன்றான இன்பம் (காமம்) என்பது, காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபடுவதே ஆகும்.
- இவ்வின்பத்தை இல்லறத்தில் அமர்ந்து முறையாகப் பெறுதல் வேண்டும். இல்லறத்தில் இன்பம் என்பது சிறந்த புதல்வரைப் பெற்று அவர்கள் மூலம் தமது அறங்கள் தொடர்ந்து இடையூறின்றி நிகழ்வதற்கும் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் தான் என்ற ஐம்புலத்தையும் ஓம்பிப் பாதுகாப்பதற்கும் இன்றியமையாததாகிறது.
- சமய நூல்கள் இன்பத்தை சிற்றின்பம், பேரின்பம் எனவும் வகுத்து நோக்கும். ஆணும் பெண்ணும் கருத்தொருமித்து அனுபவிப்பதே சிற்றின்பம். இதுவும் அறத்தின் வழியிலே அனுபவிக்கப்பட வேண்டும். அழியும் பொருள்களால் அடையப்படும் இன்பம் சிற்றின்பம் என்றும், இறைவனைச் சார்ந்து அநுபவிப்பது பேரின்பம் எனவும் அது ஆன்மீக ரீதியான ஆனந்தம் என்றும் அவை விளக்கும்.

**வீடுபேறு:**

- ஆன்ம இலட்சியத்தின் இறுதிப்பேறு வீடுபேறாகும். இது மோட்சம் எனவும் வழங்கும்.
- அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் அறத்தின் வழிநின்று அனுபவிக்கும் போது இறுதியில் வீடுபேறு எய்துதல் நிச்சயம் என ஞானியர் கூறுவர்.
- பின்வரும் ஒளவையார் பாடலில், புருடார்த்தம் பற்றிய விளக்கத்தைக் காணலாம்.

  ''ஈதல் அறம் தீவினை விட்டீட்டல் பொருள் எந்நாளும்
  காதல் இருவர் கருத்தொருமித்து
  ஆதரவு பட்டதே இன்பம் பரனை நினைந்திம் மூன்றும்
  விட்டதே பேரின்ப வீடு''

- இந்து சமயத்தில் எல்லாப் பிரிவினரும் மோட்சத்தை அடைவதற்கான வழிவகைகளைக் கூறுகின்றனர்.
- இந்து சமயமானது எல்லாத் தளைகளிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் ஆன்மாக்கள் விடுதலை பெற இயலும் என்று உறுதி அளிக்கின்றன.
- துன்பங்களிலிருந்து முழுமையாக விடுபடுவதே உண்மையான விடுதலை என்பர். துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவது மட்டுமன்றி ஈடிணையற்ற ஆனந்தத்தை உணர்ந்து அனுபவிப்பதே மோட்சம் என்பது இந்துமதத்தின் கருத்தாகும்.
- இந்த இன்பத்தை அடைந்த ஆன்மாவிற்கு மறுபிறப்பு இல்லை. இதுவே ஒவ்வோர் ஆன்மாவும் அடைகின்ற முடிவாகும்.

### 9.1.3 ஆச்சிரம தர்மங்கள்

- இந்துமக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழவும் அதன் பயனாக ஆத்மீக விடுதலை பெறவும் எமது முன்னோர்களால் வகுத்தளிக்கப்பட்ட படிநிலைகளே ஆச்சிரமக் கோட்பாடாகும்.

- இந்துக்கள் மனித வாழ்வினை பிரமச்சரியம் (மாணவ நிலை), கிருஹஸ்தம் (இல்லற நிலை), வானப்பிரஸ்தம் (காட்டில் வசிக்கும் நிலை), சந்நியாசம் (துறவு நிலை) எனும் நான்கு நிலைகளாக வகுத்தனர். இந்நான்கு வாழ்க்கைப் படிநிலைகளும் வடமொழி நூல்களில் ஆச்சிரமங்கள் எனப்பட்டன.
- ஆச்சிரம தர்மங்களினின்று ஆற்ற வேண்டிய கடமைகள், கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை முறைகள் என்பன பற்றி தருமசாத்திரங்கள் விதிகளாக விளக்குகின்றன.

| | | |
|---|---|---|
| பிரமச்சரியம் | - | வாழ்க்கையின் ஆரம்பக் கட்டம் (மாணவப் பருவம்) |
| கிருஹஸ்தம் | - | ஒருவன் மணமுடித்து இல்வாழ்க்கை நடத்துக் காலம். |
| வானப்பிரஸ்தம் | - | இல்வாழ்க்கையின் பயன்களை அதற்குரிய கடன்களை நிறைவேற்றிய பிறகு மறுமைப்பயன் கருதி ஆன்மீக ஈடேற்றத்திற்கு ஆயத்தமாகும் நிலை. |
| சந்நியாசம் | - | முற்றுந் துறந்த நிலை - வானப்பிரஸ்த நிலையில் பந்த பாசங்களைத் துறந்து, இன்ப துன்பங்களைச் சமநிலைப்படுத்தி பற்றினைத் துறத்தற்கான பக்குவ நிலையினின்றும் மேலான நிலை. |

- இந்து சமுதாயத்தில் இவ்வாச்சிரம தர்மங்கள் தனிமனித தர்மத்தைப் பேணவும், ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவும் இறுதியில் ஆன்மீக இலட்சியத்தை அடையவும் வழிகாட்டுவதனால் இந்து அறவியல் கோட்பாடுகளில் முக்கியத்துவம் பெறுகின்றன.

**பிரமச்சரிய நிலை:**

- இது மனித வாழ்க்கையின் முதலாவது படியாகும். ஒருவன் கல்வியும் ஒழுக்கமும் கற்கும் நிலையினைப் பிரமச்சரியம் என்பர்.
- பிரமம் என்பது மெய்ப்பொருள். மெய்ப்பொருளை நோக்கி மாணவனை அழைத்துச் செல்லும் கல்வி முறைமை பிரமச்சரியம் ஆகும்.
- கல்வி என்பதனை ‘மெய்ப்பொருள் காண்பது அறிவு’ என்றார் வள்ளுவர். மாணாக்கன் குருவின் இல்லம் நாடிச் சென்று குருவைத் தெய்வமாக மதித்து, குருவுக்குப் பணிவிடை செய்து, குருவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, அறிவியல்களையும் கலைகளையும் கற்றுக் கொள்ள வேண்டும்.
- குருகுலக் கல்வியில் வேதக்கல்விக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அத்துடன் அரசியல், பொருளியற்கல்வியும் வழங்கப்பட்டன. புராதன குருகுலங்களில் வில்வித்தை முதல் குருவிற்கு பொருள் தேடலில் பெற்ற அனுபவக்கல்வியும் அளிக்கப்பட்டது.
- பயிற்சிக்காலம் முடிந்தவுடன் குரு தம் மாணாக்கர்களுக்கு இறுதியாய் புத்திமதி களைக் கூறி வீட்டுக்கு அனுப்பி வைப்பார். தைத்திரிய உடநிடதத்தில் இத்தகைய அறிவுரையொன்று காணப்படுகிறது.

> “சத்தியத்தைப் பேசுங்கள்; அறச்செயல்களைச் செய்யுங்கள்;
> படித்ததை ஒதுக்கித் தள்ளி விடாதீர்கள்...”

- மாணவனும் குருவுக்குத் தன்னாலியன்ற தட்சணையை வழங்கி, தன் பெற்றோரின் இல்லம் சென்று, கிருஹஸ்த வாழ்வுக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்வான்.
- புலனடக்கம், நல்லொழுக்கம், ஆசாரம் பேணுதல், பிரமச்சரிய விரதம் காத்தல், கல்வி கற்றல் முதலானவை பிரமச்சரியத்தின் சிறப்புக்களாகக் கருதப்பட்டன.

**கிருஹஸ்த நிலை:**

- இது வாழ்க்கையின் இரண்டாவது படிநிலையாகும். தனது கல்விப் பருவத்தை நிறைவுசெய்த ஒருவன் திருமணம் செய்து இல்லற வாழ்க்கையைத் தான் மனையாளோடு மேற்கொள்ளும் நிலை.
- கிருஹஸ்தம் அறத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையாகும். குடும்பத் தலைவன் தன் மனையிலிருந்து, தன் மனைவியின் துணையோடு சமய, சமூக, குடும்ப ரீதியாக அறங்களை ஆற்றுதலால் குடும்பவாழ்வு இல்லறம் எனப்பட்டது.
- கிருஹஸ்தன், பிரமச்சரிய நிலையில் கற்ற அறவொழுக்கங்களினின்றும் வழுவாது இல்லறதருமத்தைப் பேண வேண்டியவன். ஒருவன் அடைய வேண்டியவையாகிய அறம், பொருள், இன்பம் ஆகியவை இல்வாழ்வானுக்காகவே விதந்துரைக்கப்பட்டன.
- இல்வாழ்வான் அறத்தின் வழிநின்று பொருளைத் தேடி அதனைப் பகிர்ந்துண்டு, அறத்தின் வழியே இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்றும் இவற்றின் வழி வீடுபேறு அடையலாம் எனவும் தர்மசாத்திரங்கள் கூறுகின்றன.
- தர்மசாத்திரங்கள் முதலிய இந்து அறநூல்கள், கிருஹஸ்தன் ஆற்றவேண்டிய கடமைகள் பற்றி விளக்குகின்றன. அவை பஞ்ச யக்ஞங்களாகும். அவை வருமாறு:
    1. **பிரமயக்ஞம்:** பிரமயக்ஞம் என்பது மேலான பரம்பொருளை வழிபடுதலாகும். தேவார, திருவாசகங்களாலும், திருமுறைகளாலும் போற்றப்படுவதாகும்.
    2. **தேவயக்ஞம்:** தேவயக்ஞம் என்பது உருவ வடிவமான கடவுளுக்கு ஆற்றும் வழிபாடு. இது நன்றியுணர்வில் செய்யப்படுவதாகும்.
    3. **பிதிர்யக்ஞம்:** பிதிர்யக்ஞம் என்பது இறந்துபோன மூதாதையர்களின் ஆன்ம சாந்தியின் பொருட்டு, சிரார்த்தச் சடங்கினை நடத்துதலும் பிதிர்லோகத் தெய்வங்களுக்கும் செய்யும் வழிபாடு
    4. **பூதயக்ஞம்:** பூதயக்ஞம் என்பது உயிரினங்களின் பொருட்டுச் செய்யப்படும் வழிபாடு. குறிப்பாக வீட்டில் உள்ள உயிரினங்களின் பொருட்டுச் செய்யப் படுவதாகும். (உ- ம்) பட்டிப்பொங்கல்
    5. **மானிடயக்ஞம்:** மானிடயக்ஞம் என்பது மானிடர் பொருட்டுச்செய்யப் படும் வழிபாடு. வீட்டில் நடைபெறும் பிறப்பு, திருமணம், விருந்தினரை உபசரித்தல் முதலான சடங்குகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.
- மேற்கூறியவற்றுடன் புதல்வரைப் பெறுதலும் இல்வாழ்வானுக்குரிய கடமையாகக் கருதப்படுகிறது. இதுவே தம் இல்லறக் கடமைகளை ஒப்படைத்து வானப்பிரஸ்தம் மேற்கொள்ள வழிவகுக்கிறது.
- இல்லறம் நல்லறமாக நடக்கின்றபோது சகல ஜீவராசிகளையும் நேசிக்கும் பண்பு வளர்க்கப்படுகிறது. அன்பு, கருணை, இரக்கம், அஹிம்சை முதலிய நல்லறங்களைச் சமூகத்திற்கு வழங்க முடியும்.

**வானப்பிரஸ்த நிலை:**

- வாழ்க்கைநிலையின் மூன்றாவது படிநிலை இதுவாகும். இல்வாழ்வான் தனது இல்லற தருமத்தைத் தொடர்ந்து நடத்தி, பிள்ளைப்பேறுகள் பெற்று, இல்லறத்தைத் துறந்து மனைவியோடு வனஞ் சென்று செபம், தவம், தியானம் முதலியவற்றில் ஈடுபட்டு ஆன்மீக இலட்சியத்தை அடைய முயற்சிப்பது வானப்பிரஸ்தமாகும்.
- இந்நிலைக்குரிய காலம் பற்றி மனுதர்ம சாஸ்திரம் பின்வருமாறு கூறுகிறது. ''குடும்பத் தலைவன் நெற்றியில் கோடுகள் விழ ஆரம்பித்த பின், தலையில் நரை தோன்றிய பின், தன் மகனுக்கு மகனைக் கண்டபின் காட்டுக்குச் செல்லலாம்'' என்பதாகும்.
- வாழ்க்கைக் கடமைகளைத் துறந்து, மனைவியுடனோ அல்லது தனியாகவோ வனம் சென்று தன் தேவைகளைக் குறைத்து, உடலை ஒறுத்து, வானமே கூரையாக வாழ்ந்து தவம் முதலிய ஆன்மீக விடயங்களில் நாட்டத்தைச் செலுத்துதலாகும்.
- இவ்வானப்பிரஸ்த நிலையே வாழ்க்கையின் இறுதிப்படியான சந்நியாச நிலைக்கான பயிற்சிக்காலமாக அமைகிறது. தியானத்தாலும், தவத்தாலும் உலகப்பற்றுக்களி னின்றும் தன் தன்னை விடுவித்துக் கொள்கிறான்.

**சந்நியாஸ நிலை:**

- வாழ்க்கையின் இறுதிப்படிநிலை இதுவாகும். சந்நியாஸம் என்பது முற்றும் துறத்தல் எனப்படுகிறது. உலகப் பற்றுக்களையெல்லாம் ஒருங்கே துறந்த நிலையில் ஊர்தோறும் சென்று யாசகம் பெற்று ஆன்மீக இலட்சியத்தை அடையும் வரை வாழ்தலாகும்.
- சந்நியாஸமே இந்து ஒருவனின் இறுதி இலக்கு எனப்படும். உன்னத இலட்சியத்தை நோக்கி வாழ்க்கையின் கடைசிப்பகுதிக்கு மனிதன் தனிமையாகவே நடந்து செல்ல வேண்டும் என டாக்டர். இராதாகிருஷ்ணன் கூறுகிறார்.
- சந்நியாசி தனது காலத்தை யோகத்திலும், தியானத்திலும் கழிக்கிறான். மனித இனத்தின் ஆன்மீகத்துக்குக் காவலனாய் இருந்து வாழ்க்கையின் இரகசியங்களைப் பற்றிச் சிந்திக்கிறான். விருப்பு வெறுப்பற்றவன்; அன்புடையவன். நாடு, இனம் என்ற குறுகிய வட்டத்தைக் கடந்து விடுதலை பெற்ற மனிதனாய் சந்நியாசி உள்ளான்.
- சந்நியாச நிலை, இறைவனுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, இறை இன்பத்தில் திளைக்கும் நிலையாகும்.

**வாழும் இந்து மதத்தில் ஆச்சிரம தர்மங்கள்:**

- இவ் ஆச்சிரம தர்மங்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து படிப்படியாக அதனின்றும் விடுபட்டுப் பரம்பொருளை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டு வகுக்கப் பட்டவையாகும்.
- அவைதிக மதங்களின் துறவொழுக்கங்களுக்கு ஆட்படாது இயல்பான வாழ்க்கையைப் படிமுறைக் கிரமமாக ஆற்றி, உன்னதமான பரத்தை அடைவதற்கான வழியாகவே அக்கால கட்டத்தில் இதனை வகுத்தனர்.
- புராதன இந்து சமூகத்தில் இவ் ஆச்சிரம தருமநெறி நின்று, பரஞானத்தை அடைந்த வர்களையும் நாம் புராண இதிகாசங்களூடாக அறிய முடிகிறது.

- வாழ்க்கைப் படிநிலைகளை ஒழுங்குமுறையாகக் கடந்தவர்களை அன்றி, சந்நியாசிகளாக வாழ்ந்தவர் களையும் நாம் காண்கிறோம். உயர் நோக்கங்களுக்காக பிரமச்சரிய நிலையிலேயே நின்று ஞானிகளாக விளங்கியவர்களும் வாழ்ந்தனர்
  **உ-ம்:** சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலானந்தர்.
- இல்லறத்திலிருந்து கொண்டே ஞானிகளாக விளங்கியவர்களும் வாழ்ந்தனர்.
  **உ-ம்:** ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, ஸ்ரீ இராமர்
- வாழ்க்கையின் முற்பகுதியிலே உலக இன்பங்களை இறைவழி நின்று அனுபவித்துப் பிற்பகுதியிலே பற்றினைத் துறந்து பரஞானம் பெற்று ஞானியாக வாழவேண்டும் என்பதையே ஆச்சிரம தருமம் உணர்த்துகிறது.

**இன்றைய நிலையில் ஆச்சிரம தர்மம்**

- இயந்திரவியல் உலகில் இலத்திரனியல் பயன்பாட்டாலும் விஞ்ஞானத்தின் விந்தை களாலும் மனிதவாழ்க்கை, நடைமுறைகள் நாளுக்குநாள் மாறுபட்ட வண்ணமுள்ளது.
- மாறுபாடு அடைகின்ற வாழ்க்கை முறைக்குள் ஆங்காங்கே மதங்கள் எடுத்தியம்பும் ஆச்சிரம தர்மங்களை ஓரளவுக்குக் காணமுடிகிறது.
- இன்றைய சமூகத்தில் பிரமச்சரிய நிலையில் பிரமச்சரிய கடமைகளும் கிருகஸ்த நிலையில் கிருகஸ்த கடமைகளும் நிறைவேற்றப்பட்டு வருவதை அவதானிக்கலாம். வானப்பிரஸ்த நிலையும் சன்னியாச நிலையும் ஒரு சிலரால் பின்பற்றப்பட்டு வருகின்றன.

## 9.1.4 தமிழ் நீதிநூல்கள்

**அறிமுகம்**

- 'நூல்முறை தெரிந்து சீலத்து ஒழுகு' என்பது ஔவை வாக்கு. அதாவது நீதிநூல் களில் கூறப்பட்டுள்ள நல்ல நீதிமுறைகளை அறிந்து (கற்று) நல்ல ஒழுக்கத்துடன் நட (வாழ்) என்பது இதன் பொருள்.
- இவ்வகையில் தமிழில் எழுந்த இலக்கியங்கள் பலவும் மக்களுடைய வாழ்க்கை நெறியை ஒழுங்குபடுத்துவனவாக அமைகின்றன. இதனாலே அவை அறம் சார்ந்த நூல்களாக விளங்குகின்றன.
- திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியன தமிழ் நீதிநூல்களையும் அவற்றிலுள்ள அறப்பண்புகளையும் இங்கு கற்போம்.

### 9.1.4.1 திருக்குறள்

- தமிழில் தோன்றிய அறநூல்களுள் எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய கருத்துச் செறிவுள்ள நீதிநூல் திருக்குறள்.
- திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். திருவள்ளுவரைப் பொய்யாமொழிப்புலவர், தெய்வப் புலவர், செந்நாப்போதர் முதலிய பல பெயர்களால் போற்றுவர்.
- சங்கமருவிய காலத்துக்குரிய நூல் எனத் திருக்குறள் கருதப்படுகிறது. ஆயினும் இந்நூலின் காலம் பற்றிய கருத்து வேறுபாடுகளுண்டு.

- திரு + குறள் = திருக்குறள். தெய்வத்தன்மை பொருந்திய அல்லது மேன்மைமிக்க குறட் பாக்களாலான நூல் என்பது இதன் பொருளாகும்.
- திருக்குறளை முப்பானூல், பொய்யாமொழி, தமிழ்மறை, உலகப் பொதுமறை, தெய்வ நூல் முதலிய சிறப்புப் பெயர்களால் வழங்குவர்.
- குறள் வெண்பா வகையால் எழுதப்பட்ட இந்நூல், 133 அதிகாரங்களை உடையது. அதிகாரங்கள் ஒவ்வொன்றும் பத்துக் குறள்களை உடையன. அவ்வகையில் 1330 (133 x 10) குறட்பாக்கள் உள்ளன.
- அறமானது ஒழுக்கம், தண்டம், வழக்கு என மூவகைப்படும். ஒழுக்கமாவது மக்கள் தமக்கு விதிக்கப்பட்ட பிரமச்சரியம் முதலிய வாழ்க்கை நிலைகளினின்றும் அவ்வவற்றிற்குரிய அறங்களினின்றும் வழுவாது ஒழுகுதல்.
- திருவள்ளுவர் திருக்குறளில் ஒழுக்கத்துக்கே மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துள்ளார். வழக்கு, தண்டம் முதலியன உயிர்க்கு உறுதிபயத்தலில் சிறப்பில. ஆதலால் அவற்றை ஒழித்து சிறப்புடைய ஒழுக்கமே அறம் எனக் குறிப்பிடுகிறார்.
- இந்து அறவியலில் முக்கியத்துவம் பெறும் புருடார்த்தங்களான அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு, திருக்குறள் பாடப்பட்டுள்ளது. இதனால் இந்நூல் முப்பானூல் எனப்பட்டது.

**நூலமைப்பும் பொருள்மரபும்:**

- திருக்குறளின் வைப்புமுறை பற்றி நோக்கும்போது இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகளை உடையது.

| | | |
|---|---|---|
| அறத்துப்பால் | - | 38 அதிகாரங்கள் |
| பொருட்பால் | - | 70 அதிகாரங்கள் |
| காமத்துப்பால் | - | 25 அதிகாரங்கள் |

- திருக்குறளின் பொருள் மரபை நோக்கின் முதல் நான்கு அதிகாரங்களும் பாயிரவியல் எனப்படுகிறது. இவை திருக்குறளின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.
- முதலாம் அதிகாரம் கடவுள் வாழ்த்து ஆகும். இதில் ‘கற்றதனாலாயபயன் கடவுளை வணங்குதல்” எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறே, இங்கு திருவள்ளுவர் ‘அறவாழி அந்தணன்’ எனக் குறிப்பிட்டுள்ளமை இந்நூல் அறத்துக்கு வழங்கும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.
- திருக்குறளின் நாலாம் அதிகாரம் அறன் வலியுறுத்தலாகும். அறமானது, இம்மை, மறுமை, வீடு பயத்தலால் ஏனைய பொருளையும் இன்பத்தையும் விட வலிமை யுடையது என்பது விளக்கப்படுகிறது. இவ்வதிகாரத்தில் மனத்துக்கண் மாசிலனாதலே அனைத்து அறங்களுக்கும் அடிப்படை என்பது உறுதிபடக் கூறப்பட்டுள்ளது.
- அறத்துப்பால் இல்லறம், துறவறம் என இரு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. இவ்விரு அறங்களுள்ளும் இல்லறமே ஏற்புடையது எனவும், இல்லறத்தைச் சார்ந்தே துறவறம் உள்ளது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுளது.

  **உ-ம்:** ‘துறந்தார்க்கும்....’

- இல்லறவியல் குடும்பத்தின் பொது முக்கியத்துவம் பற்றியது. குடும்பத்தில் ஆணின் துணையாகவே பெண் பேசப்படுகிறாள். நன்மனையாளின் இயல்பு, பிள்ளைப்பேறு, அன்பு, விருந்தோம்பல் முதலிய இல்லறத்தானுக்குரிய பண்புகளும் தனிமனிதன் கடைப்பிடிக்க வேண்டிய இன்சொல், நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை முதலிய பல பண்புகளும் கூறப்பட்டுள்ளன.
- துறவறவியலில் துறவுக்கு அடிப்படையாய் அமையும் அருள் உடைமை என்பது முதலிலும் துறவி கைக்கொள்ள வேண்டிய புலான் மறுத்தல், தவம், வாய்மை, வெகுளாமை முதலிய பல விடயங்களும் விளக்கப்பட்டுள்ளன.
- துறவறவியலில் இறுதி நான்கு அதிகாரங்களிலும் துறவின் பயனாகிய ஞானம் அதாவது வீடு பயக்கும் உணர்வினைக் கூறுகிறார்.

  **உ-ம்:** 'பற்றுக பற்றற்றான் பற்றினை...'
- இல்லறம், துறவறம் ஆகிய இருநெறியில் நின்றாலும், செய்வினையின் பயனை அனுபவித்தே தீரவேண்டும் என்பதனால் திருவள்ளுவர் அறத்துப் பாலின் இறுதியில் 'ஊழ்' எனும் அதிகாரத்தை வைத்துள்ளார்.

  **உ-ம்:** 'ஊழிற் பெருவலி யாவுள...'
- பொருட்பால் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூன்று பகுதிகளை உடையது. அரசியலிலும் அங்கவியலிலும் அடங்காதவற்றை ஒழிபியலில் வகுத்துக் கூறுகிறார். ஒழிபியல் குடிமை,மானம், பெருமை, நல்குரவு, கடமை எனப் பல விடயங்களை கொண்டுளது. இங்கு நன்றியில் செல்வம், நல்குரவு ஆகிய அதிகாரங்களில் ஒருவன் பொருளைத் தேடி பிறருடன் பகுத்துண்ணுதலைச் செய்யானாயின், அவனுக்கு கோடி பொருள் உண்டாயினும் இல்லாததாகும் என்றும் பொருளின் அவசியத்தையும் எடுத்துரைக்கிறார்.
- திருவள்ளுவர் பொருட்பாலில், பொருளை ஈட்டுவதற்கும், அனுபவிப்பதற்கும், துணைக் காரணமாகிய அரச நீதியைப் பற்றி விளக்குகிறார்.

  இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த<br>வகுத்தலும் வல்லது அரசு (385)

  பொருட்பாலில் இறைமாட்சி எனும் அதிகாரத்திலுள்ள இக்குறள் வாயிலாக, பொருள் ஈட்டுதலும் ஈட்டிய பொருளைப் பேணிப்பாதுகாத்தலும், காத்த பொருளை அறம், பொருள், இன்பங்களின் பொருட்டு செலவிடுதலும் உடையவனே அரசன் எனக் கூறிப்பிடுகிறார். இதன் மூலம் அரசனுக்கும் மக்களுக்கும் பொருளின் இன்றியமையாமை பற்றி விளக்குகிறார்.
- இறுதியாக காமத்துப்பாலில், உலகியல் இன்பத்தை அறத்தின்வழி அனுபவித்தலுக் கேது பற்றி கூறுகின்றார். காமம் என்பது இங்கு இன்பம் என்ற பொருளில் கொள்ளப் படுகிறது. "காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" எனும் ஔவை வாக்கினை இது விளக்குகிறது. அறத்தின் வழிநின்று பொருளைத் தேடி அதனைத் துய்ப்பதன் காரணமாக, இம்மை பயப்பதாகிய உலகியல் இன்பத்தை விபரிக்கிறார்.

- சங்க மருவிய காலத்தில் தமிழகத்தில் வேரூன்றத் தொடங்கிய வைதிக சமய மரபுகள், பின்பு மக்களிடையே செல்வாக்குப் பெறத் தொடங்கியன. சமூக மாற்றம் ஏற்படும் காலகட்டத்தில் அந்த மாறுகிற சமுதாயத்திற்கு வேண்டிய சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு மாற்றங்களுக்கான மெய்யியற் கோட்பாட்டை வள்ளுவர் வழங்குகிறார்.
- இந்த முயற்சியின் சிந்தனை வளமும் சிந்தனைச் சிறப்பும் காரணமாகவே திருக்குறள் உலகளாவிய ரீதியில் போற்றப்படுகிறது என்பர்.

**முடிவுரை**

- தமிழர் வாழ்வில் சமூகச் சவால்களை ஏற்பதற்கான கருவி நூலாகத் திருக்குறளைக் கொண்டாடும் முறையொன்று வளரத் தொடங்கிற்று.
- கி.பி. 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் இல்லற மாண்புகளை வெளிப்படுத்தும் வகையில் ஓதல், வாழ்க்கைச் சடங்குகளுக்குத் திருக்குறளைப் பயன்படுத்துதல் என்பவற்றினால், திருக்குறள் ஒரே சமயத்தில் வாழ்வியல் வழிகாட்டியாகவும் பண்பாட்டின் குறியீடாகவும் கருதப்படலாயிற்று என்பர்.
  **உ-ம்:** திருமணச்சடங்கில் ஓதல்.

## 9.1.4.2 ஆத்திசூடி

**அறிமுகம்:**

- தமிழில் தோன்றிய நீதிநூல்களுள் பாலர், பாமரர், பண்டிதர் என உள்ள யாவரும் படிப்பதற்கேற்ற நூல்களாக விளங்குபவை ஔவையார் இயற்றிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நூல்களாகும்.
- இவற்றுள் ஆத்திசூடியும் கொன்றைவேந்தனும் அறக்கருத்துக்களை இரண்டு மூன்று சொற்களால் விளக்கும் கட்டளை மொழிகளாக அமைந்தவை.

**நூலாசிரியர்:**

- அறநூல்களைப் பாடிய ஔவையார் பெண்பாற் புலவராகும். இவர் பல்வேறு காலங் களோடு தொடர்புடையவராக விளங்குவதால் ஔவையார் என்ற பெயரில் பலர் வாழ்ந்திருந்ததாகத் தெரிகிறது.
- தமிழறிஞர் மு. அருணாசலம் அவர்கள் சங்ககால ஔவை, இடைக்கால ஔவை, சோழர்கால ஔவை, சமயப்புலவர் ஔவை, பிற்கால ஔவை I , பிற்கால ஔவை II என பல ஔவையார்கள் இருந்தனர் என்கிறார். பொதுவாகத் தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் சங்ககால ஔவையார், சோழர்கால ஔவையார் ஆகிய இருவருமே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஔவையார் ஆவார்.
- சங்ககால ஔவையார் அதியமானிடமிருந்து நெல்லிக்கனி பெற்றவர் என்றும், அவரது பாடல்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன என்றும் கூறுவர். ஔவையார் பாடலாக நற்றினை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு முதலியவற்றில் மொத்தம் 59 பாடல்கள் காணப்படுகின்றன.
- அற நூல்களைப் பாடிய ஔவையார், சோழர்கால ஔவையார் என அறியப்படு கின்றது. இவரைக் கம்பர், ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்களோடு தொடர்புபடுத்திக் கூறப்படும் இவரது காலம் கி.பி. 10 ஆம் 11 ஆம் நூற்றாண்டுகள் என்பர்.

- சோழர்கால ஔவையார் பாடிய நூல்கள் என அறியப்படுபவை பல உள. அதிசயக் கோவை, பத்தனந்தாதிப் பெட்டகம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, கல்வியொழுக்கம், ஞானக்குறள், விநாயகர் அகவல், கணபதி ஆசிரிய விருத்தம், உயர் ஞானசார நூல் சாத்திரம், நவமணிமாலை, தரிசனப்பத்து, அருந்தமிழ்மாலை, நன்னூற்கோவை, நான்மணிக்கோவை என்பனவுமாகும்.
- ஔவையாரின் வரலாற்றைத் திருவள்ளுவர் கதை, கபிலரகவல், ஞானாமிர்தம், புலவர் புராணம், விநோதரச மஞ்சரி, பன்னிரு புலவர் சரித்திரம், தமிழ் நாவலர் சரிதை, பாவலர் சரித்திர தீபகம் முதலான நூல்களிலும் தனிச் செய்யுட் சிந்தாமணி, தனிப்பாடல் திரட்டு ஆகியவற்றினூடாகவும் அறிய முடிகிறது.
- மு. அருணாசலம், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, ந. சுப்பிரமணியம், தமிழண்ணல் முதலானோர் ஔவையாரின் வரலாற்றை வரன்முறையாக இலக்கிய ஆராய்வோடு எழுதியுள்ளனர்.
- ஔவையார் என்பதற்குப் பலவாறு பொருள் கொள்வர். அவை தாய், அன்னை, துறவி, புலமைப்பாட்டி, மூதாட்டி, பெண்துறவி, நோற்பவள், தவப்பெண் முதலியனவாம்.
- 'ஔவை வாக்கு அமுதவாக்கு' என்பர் ஆன்றோர். ஔவையாரைத் தமிழ் மக்கள் எத்துணை மதித்துப் போற்றினர் என்பதற்குத் தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் துளஜாப் பட்டினத்தில் அமைக்கப்பட்டுள்ள கோயிலே சான்றாகும்.

**நூற்பெயர்:**

- ஔவையார் பாடிய ஆத்திசூடி நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல், 'ஆத்திசூடி' எனத் தொடங்குவதனால், அதுவே நூலுக்கும் பெயராயமைந்த சிறப்பினை உடையது.

**நூலமைப்பு:**

- ஆத்திசூடி மிகச் சிறிய நூலாகும். காப்புச் செய்யுளோடு 108 கூற்றுக்களைக் கொண்டது. ஆத்திசூடியின் ஒவ்வொரு கூற்றும் ஒவ்வோர் அறங்களாக மொத்தம் 108 அறங்களைக் கூறுகிறது. இதனால் இதனை அஷ்டோத்திர நீதிநூல் எனவும் சிறப்பித்துக் கூறுவர்.
- ஆத்திசூடியின் காப்புச் செய்யுள் (கடவுள் வாழ்த்து) சிவபெருமானைப் போற்றுகிறது. ஆத்திசூடி தமிழ் நெடுங்கணக்கு முறையிலமைந்த நூலாகும். தமிழில் உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்களில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களை முதலாகவும் அவ்வாறு வராத எழுத்துக்களை இரண்டாம் எழுத்தாகவும் கொண்டு பாடப்பட்டுள்ளது.
- முதலில் 'அ' தொடக்கம் 'ஔ' வரை உயிரெழுத்துக்கள் பன்னிரெண்டும் பின் ஆய்த எழுத்தும் இடம்பெறுகிறது. பின்னர் 'க' கரம் முதல் 'ன' கரம் ஈறாக பதினெட்டு மெய் எழுத்துக்களும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.
- அதன்பின் க, ச, த, ந, ய, ம, வ எழுத்து வருக்கத்தில் ஔகாரம் நீங்கலாகப் பதினொரு உயிர்மெய் எழுத்துக்களும் சூத்திரங்களின் முதலாக அமைகின்றன. மொழி முதலில் வராத எழுத்துக்களின் முன்னே அகர, இகர, உகர உயிர்கள் சேர்த்துச் சூத்திரங்களின் முதலாக அமைந்துள்ளன.

- ஆத்திசூடியை 1848 இல் ஜே. சுதன் பாதிரியார் முதன்முதலில் பதிப்பித்து வெளியிட்டார்.
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 1851 இல் ஆத்திசூடியையும் கொன்றைவேந்தனையும் தமது பாலபாடம் முதலாம் புத்தகத்தில் பதிப்பித்து வெளியிட்டார். 1852 இல் இவ்விரு நூல்களுக்கும் உரையெழுதி இரண்டாம் புத்தகத்தில் சேர்த்துப் பதிப்பித்து வெளியிட்டார்.
- ஆத்திசூடி பொருள்பொதிந்த வாக்கியங்களாலானது; கருப்பொருள் அமைதி உடையது. இதனாலேயே இந்நூலுக்குப் பலர் உரையெழுதியுள்ளனர்.
- இப்போது கிடைக்கும் உரைகளுள் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்படும் உரை பரிமேலழகர் உரை எனப்படுகிறது. இது பற்றிய கருத்து வேறுபாடுகளும் உள. இதன் பின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய உரையே காலத்தால் முற்பட்ட உரையாகக் கிடைக்கிறது.
- இந்நூலுக்குப் பல உரைநூல்கள் எழுந்தது போலவே பல சார்பு நூல்களும் வழிநூல்களும் தோன்றியுள்ளன. புதிய ஆத்திசூடி, ஆத்திசூடி வெண்பா, ஆத்திசூடிப் புராணம், ஆத்திசூடிச் சிந்து, ஆத்திசூடி அகவல், ஆத்திசூடிக் கதைகள் போன்றன வாகும்.

  **உ-ம்:** பாரதியாரின் புதிய ஆத்திசூடி
  இராமபாரதியின் ஆத்திசூடி வெண்பா

**பொருள் மரபு:**

- ஆத்திசூடியின் பொருள்மரபை நோக்கும்போது அது வேத, உபநிடதக் கருத்துக்களின் சாரமாக அமைந்துள்ளமை பற்றியும் விளக்கியுள்ளனர். மானிட வாழ்க்கையின் பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகைப் புருடார்த்தங்களையும் எடுத்து விளக்குகின்றது.

  **உ-ம்:** ''அறம் செய விரும்பு''
  ''பொருள்தனைப் போற்றி வாழ்''
  ''மெல்லியநல்லாள் தோள்சேர்''
  ''வீடு பெறநில்''

- ஆத்திசூடியின் கூற்றுக்களுக்கும் திருக்குறளுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படு கிறது. திருக்குறளில் பல அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள விடயங்கள் இந்நூலில் ஓரிரு கூற்றுக்களில் மிகச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

  **உ-ம்:** ''நன்றி மறவேல்''
  ''ஞயம்பட உரை''
  ''ஊக்கமது கைவிடேல்''

- ஒரு மனிதன் மனம், மொழி மெய்களால் அறத்தின் வழிநின்று சீர்பெற வழிகாட்டும் நீதிநூலாகவும் விளங்குகின்றது. அறத்தின் மேன்மை, ஈகைச் சிறப்பு, கல்வியின்

அவசியம், உழைத்து வாழல், உலகத்தோடொட்ட ஒழுகல், நல்ல நட்பு, செய்ந் நன்றி மறவாமை, ஒழுக்கம் பேணல், ஆன்மீக இலட்சியம் ஆகிய கருத்துக்களை வெளிப்படுத்துகிறது.

- ஆத்திசூடி இந்து அறவியல் கருத்துக்களை வெளிப்படுத்தும் நூல் மட்டுமன்றி, இந்து தத்துவ சிந்தனைகளையும் அடிப்படையாகக் கொண்டது என்பர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தமது உரைகளில் இந்து தத்துவங்களின் அடிப்படையில் விளக்கமளித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**உ-ம்:** "ஓதுவது ஒழியேல்"
"பேதமை அகற்று"
"தூக்கி வினை செய்"
"வீடு பெற நில்"

### 9.1.4.3 நல்வழி

**நூற்சிறப்பு:**

- நல் + வழி = மனிதன் நல்வாழ்வு வாழ வழிகாட்டும் நூல்.
- சோழர் காலத்தில் வாழ்ந்த ஔவையாரால் இயற்றப்பட்ட இந்நூல் கடவுள் வாழ்த்துடன் 40 வெண்பாக்களை கொண்டது.
- இந்நூலின் கடவுள் வாழ்த்துப்பாடலில் ஔவையார் விநாயகப் பெருமானிடம் 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என விநயமாக வேண்டுகிறார்.
- வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் கருத்துக்களை அறிவுரைகளாக இந்நூல் வழங்குகிறது.
- நல்வழி பாடல்கள் சமய தத்துவக் கருத்துக்கள் வாழ்வியல் நடைமுறைகளோடு தொடர்புபடுத்தி கூறுகிறது.
- இவ்வகையில் இந்நூல் இந்து சமயம் சார்ந்த குறிப்பாக சைவசமயம் சார்ந்த தத்துவக் கருத்துக்களையும் வாழ்வியல் சிந்தனைகளையும் எடுத்துக் கூறுவதாகக் காணப்படு கிறது.
- வினைப்பயன், ஊழ்வினை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, பசிக் கொடுகை, நல்வினை தீவினை, நடுவுநிலைமை, பேராசைப்படாமை, ஒழுக்கம் பேணல், பிறனில் விழையாமை, தருமத்தின் அவசியம் போன்ற அரிய கருத்துக் களைக் கூறுகிறது.
- அத்தோடு திருவைந்தெழுத்தின் பெருமை. திருநீற்றின் பெருமை, வேதநூற் சிறப்பு முதலிய இந்து சமயக் கருத்துக்களையும் கூறுகின்றது.
- இந்நூலின் நாற்பதாவது பாடலில் ஔவையார் தான் வாழ்ந்த காலத்துக்கு முன்பு தோன்றிய திருக்குறள், நூல் வேதங்கள், தேவாரமுதலிகளின் தேவாரங்கள் திருவாசகம், திருக்கோவையார், திருமந்திரம் முதலிய நூல்களைக் குறிப்பிட்டு அவை யாவும் ஒரே கருத்தையே மையமாக உடையன எனக் குறிப்பிடுகிறார்.

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படி I** இந்து அறக்கருத்துக்களை வெளிப்படுத்தும் மகுட வாசகங்களை காட்சிப்படுத்தி அவை பற்றி மாணவருடன் கலந்துரையாடி மாணவர்களையும் அதுபோன்ற கருத்துக் களைக் கூற இடமளியுங்கள்.

**படி II:** வகுப்பிலுள்ள மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து புராதன இந்து சமுதாயத்தை நெறிப்படுத்திய புருடார்த்தங்கள், ஆச்சிரம தர்மங்கள் தொடர்பான கருத்துக்கள் பற்றிக் கலந்துரையாடச் செய்யுங்கள். அதனை நெறிப்படுத்துங்கள்.

**படி III:** மாணவர்கள் அறக்கருத்துக்களைத் தேடித் தொகுப்பதற்குத் தேவையான திருக்குறள், ஆத்திசூடி, நல்வழி போன்ற நூல்களை வழங்குங்கள்.

**படி IV:** மனித வாழ்வைச் செம்மைப்படுத்துவதோடு, ஆன்மீக விடுதலைக்கும் வழிகாட்டும் வகையிலான அறக் கருத்துக்களை உள்ளடக்கும் தலைப்புக்களை வழங்கி மாணவர்கள் நற்சிந்தனைகளைத் தொகுக்க வழிப்படுத்துங்கள். தொகுத்த நற்சிந்தனைகளை காலைப் பிரார்த்தனையில் கூறவும், வகுப்பறையில் சமர்ப்பிக்கவும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**உசாத்துணைகள்:**

| | | |
|---|---|---|
| இந்துசமயத் தத்துவம் | - | ரி. எம். பி. மகாதேவன் |
| திருக்குறள் | - | பரிமேலழகர் உரை |
| திருக்குறள் உரைவிளக்கம் | - | திரு. நி. வரதராஜன் |
| திருக்குறள் ஆராய்ச்சி | - | ஆசிரியர் இறையனார் |
| திருவள்ளுவர் நூல்நயம் | - | திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை |
| திருக்குறள் ஓர் உலக இலக்கியம் | - | திரு. ச. மோகன் |
| சிறுவர் நீதிநூல்கள் (விளக்கவுரையுடன்) | - | லேனா தமிழ்வாணன் |
| தமிழ்இலக்கிய வரலாறு (பன்னிரண்டாம் நூற்றாண்டு) | - | மு. அருணாசலம் |
| ஔவையார் (இந்திய இலக்கியச் சிற்பிகள்) | - | தமிழண்ணல் |
| பாலபாடம் II | - | ஆறுமுகநாவலர் |
| ஆத்திசூடி - பரிமேலழகர் உரை | - | இராசேந்திரன் |
| கொன்றைவேந்தன் | | |
| உபநிடதம் | | |
| பகவத்கீதை | | |
| தருமசாத்திரம் | | |

**தேர்ச்சி 9.0** : மனித வாழ்வு செம்மையுறுவதுடன் ஆன்மீக மேம்பாடு உடையதாகவும் அமைவதற்கு அறவழியிலான செயற்பாடுகளை மேற்கொள்வர்.

**தேர்ச்சி மட்டம் 9.2** : மூவகை யோகங்களின் விளக்கங்களை அறிந்து பின்பற்றுவர்.

**பாடவேளைகள்** : 16

### கற்றற் பேறுகள்:

- இந்து சமயத்தில் இறைவனை அடைவதற்கான பல வழிவகைகள் கூறப்பட்டுள்ளன என்பதனை அறிந்து கூறுவர்.
- இந்து சாதனங்களுள் பகவத்கீதையில் விளக்கப்பட்டுள்ள மூவகை யோகங்களும் அடங்கும் என்பதையும் அவை பற்றிய கருத்துக்களையும் விளங்கி எழுதுவர்.
- கருமயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்பன ஆன்மீக விடுதலைக்கு வழிகாட்டு மாற்றை இனங்கண்டு சான்றுகளுடன் முன்வைப்பர்.
- மூவகை யோகங்கள் பற்றிய இந்துசமயப் பெரியார்களின் கருத்துக்களையும் வழிகாட்டல்களையும் தொகுப்பர்.
- இந்துக்களின் அன்றாட வாழ்வியலை நெறிப்படுத்துவதில் மூவகை யோகங்கள் வகிக்கும் பங்கினை உணர்ந்து மதிப்பிடுவர்.

### விடய உள்ளடக்க வழிகாட்டி:
### 9.2.1 மூவகை யோகங்கள்

### 9.2.1.1 யோகம் - அறிமுகம்

- இந்து மதத்தில் இறைவனை அடையும் வழிகள் பல. அவற்றைச் சாதனங்கள் என்பர். சாதனம் எனும் சொல் 'உபகரணம்', 'ஆன்மீகவழி' அல்லது 'முழுமையடையும் வழி' எனப் பொருள்படும். 'இச்சாதனங்கள்' பற்றிய கருத்து உபநிடதத்தில் காணப்படுகிறது.
- கடவுளை அடையும் வழிகள் பலவற்றுள் கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்பனவும் அடங்கும். யோகம் என்பது இறைவனோடு இணைதலும் அதற்கான வழிகளும் என்பது பொரு ளாகும்.
- கர்மயோகம் - தன்னலம் கருதாத உழைப்பின் வழி
  பக்தியோகம் - இறைவனிடம் தனியாக ஈடுபட்டுச் செல்லும் வழி
  தன்னலங் கருதாத அன்பு வழி
  ஞானயோகம் - அறிவு வழி

### 9.2.1.2 கர்மயோகம்:

- கர்மயோகம் என்பது செயல் மூலம் இறைவனுடன் இணைதல்.
- செயலைச் செய்துவிட்டு அதன் பலன்களைப் பற்றி எண்ணுவதே பிறவிக்குக் காரண மாகும். கீதை கர்மயோகம் பற்றி விளக்குகிறது. கண்ணன் கீதையில், கர்மத்தின் அவசியத்தை பின்வருமாறு வலியுறுத்துகிறார்.

  "விதிக்கப்பட்ட கருமத்தைச் செய்;
  செயலின்மையைவிட செயல் சிறந்தது"

- காமிய, நிஷ்காமிய வினைகள் பற்றி பகவத்கீதையில் கூறப்பட்டுள்ளது.

  காமிய வினை - பயன் கருதிய வினை

  நிஷ்காமியம் - பயன் கருதாத வினை

- பலனை நினைத்துச் செய்யப்படுவதும், தன்முனைப்போடு செய்யப்படுவதுமாகிய செயல்கள், செய்பவனை அதன் எதிர் விளைவுக்குப் பொறுப்பாளியாக்கிறது. எனவே பலனில் பற்று வைக்காத செயலே ஒருவனைக் கர்மயோகி ஆக்குகிறது.
- காமிய வினைகளால் ஆன்மா மீண்டும் பிறவி எடுக்கிறது. நிஷ்காமிய வினைகளே ஆன்ம விடுதலைக்கு வழிகாட்டும்.
- 'உன்னுடைய வினைகள் உன்னைத் தளைக்காதபடி வினையாற்று; கடமையைக் கடமைக்காகவே செய்' இதையே கீதை யோகம் என்று உயர்த்திக் கூறுகிறது. 'பலன் கருதாமல் வினை முடிப்பவனே கருமயோகி' எனவும் விபரிக்கிறது.
- கீதை கர்மத்தின் ஊடாகச் செயலில் துறவு எனும் கொள்கையைப் போதிக்கின்றது. கருமயோகம் என்பது செயலில் துறவு எனப் பொருள்படுமே தவிர, செயலைத் துறத்தல் அன்று.
- செயலைத் துறந்து உலக வாழ்வைத் துறந்து செல்லாமல், உலக வாழ்வில் ஈடுபட்டுக் கொண்டே செயலில் பற்றற்ற மனப்பாங்கை வளர்த்தலாகிய செயலில் துறவு பற்றி கீதை கூறுகிறது.
- பழக்கத்தைக் காட்டிலும் ஞானமும், ஞானத்தை விட தியானமும், தியானத்தைக் காட்டிலும் செய்கையும், செய்கைக் காட்டிலும், செயலிலுள்ள பற்றைத் துறத்தலும் மேலானது எனக் கர்மயோகத்தின் சிறப்பு கிருஷ்ண பரமாத்மாவால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- ஐம்பொறிகளையும் அடக்கி மனதால் புலன் இன்பங்களை எண்ணிக் கொண்டிருப்பவன் பொய் ஒழுக்கத்தை உடையவன் என்று பற்றற்ற நிஷ்காமிய வினைகளின் அவசியத்தை கீதை குறிப்பிடுகிறது.
- துறவு வாழ்க்கையில் பொறிகளை அடக்கி, புலன் இன்பங்களை மனதால் எண்ணிக் கொண்டிருப்பவன் உண்மையான துறவி அல்ல. செயல்களை ஆற்றிக் கொண்டு அதன் இன்பங்களில் பற்றற்ற தன்மையை வளர்ப்பதே உண்மைத்துறவு. இத்தகைய துறவு மனப்பாங்கையே கீதை செயலில் துறவு எனக் கூறுகின்றது.
- கடமையைக் கடமைக்காகவே செய். இதுவே கருமத்தில் ஞானம் என்கிறது கீதை "யோக கர்மசு கௌசலம்"
- நிஷ்காமிய வினையை ஆற்றும் விதம், அதனால் கிட்டும் பயன் என்பன பற்றியும் கீதை கூறும்.

- “செயலில் மட்டுமே உரிமை உண்டு. அதன் பயனில் ஒருபோதும் உரிமை பாராட்டாதே” என்று, கீதை நிஷ்காமிய வினையை வலியுறுத்துகிறது. ஸ்ரீகிருஷ்ணன் “நான், எனது, எனும் கர்வத்தை நீக்கி செயல்கள் யாவற்றையும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்யும்போது பற்றுறுதி நிலை இலகுவில் கைகூடும் என்கிறார்.
- செயல்களையும் அதன் பயன்களையும் இறைவன் பொருட்டு ஆற்றும்போது முத்தி கைகூடும். செயல்களை நான் செய்யவில்லை. அதன் பயன்களும் எனக்குரியவை அல்ல. யாவும் இறைவனுக்குரியவை எனும் எண்ணத்தை வளர்க்க வேண்டும்.
- நல்வினையாயினும் தீவினையாயினும் தன்முனைப்புடன் பலன் கருதிப் புரியப்படும் போது முறையே, தங்க விலங்காகவும் இரும்பு விலங்காகவும் அவை தம்மை ஆற்றியவனைப் பிணிக்கின்றன.
- “மக்கள் சேவையே மகேசன் சேவை” என வாழும் தன்னலமற்ற சேவை மார்க்கமே கீதை போதிக்கும் கர்ம யோகமாகும். கர்ம யோகத்தின் வழி பற்றின்றிச் செயல்களை ஆற்றும் நிலையில் ஆன்மா முத்தி இன்பத்தை பெறும்.
- கண்ணன் “பற்றின்றிப் பெருவினையாற்று அவ்வாறு செயல் புரிபவள் பெருநிலை அடைகிறான்” என்கிறார்.
- கண்ணன், ஜனகர் என்போர் அவ்வாறு வினைகளை ஆற்றி, முத்தி இன்பம் பெற்றனர். விஷ்ணுவும் அவ்வாறு மக்களின் பொருட்டு செயல் புரிபவரே.
- “மூவுலகிலும் எனக்கென்று கடமைகளோ, அடைய வேண்டிய தேவைகளோ எதுவும் இல்லை. எனினும் யான் செயலாற்றியவண்ணமே உள்ளேன்” எனத் தனது தன்னலமற்ற சேவையைக் கண்ணன் கீதையில் விளக்குகிறார்.
- ஸ்வதர்மம் பற்றி வலியுறுத்தும் ஸ்ரீகிருஷ்ணன், அதன் வழியே கன்மயோகத்தின் முக்கியத்துவத்தையும் நிலைநிறுத்துகிறார்.

### 9.2.1.3 பக்தி யோகம்:

- பக்தி என்பது அன்பு எனப் பொருள்படும். பக்தியோகம் தன்னலமற்ற அன்பு நெறி யாகும்.
- ‘ஆழ்ந்த இறைபற்றே பக்தி’ என்று நாரதர் தம் பக்தி சூத்திரங்களில் குறிப்பிட்டுள்ளார்.
- மணவான முனிவர் “புலனறிவுக்குட்பட்ட பொருள்களிலிருந்து பேதைகள் பெறும் இன்பம் இறைவனை நோக்கித் திருப்பப்பட்டால், அதுவே பக்தி என்று பொருள் படும்” என்கிறார்.
- நிலையற்ற உலகப் பொருட்கள் மீது வைக்கும் அன்பு துன்பத்திற்குக் காரணமாகிறது. ஆனால் யாவற்றுக்கும் மூலகாரணனான இறைவன் மீது வைக்கும் அன்பு என்றும் நிலையான இன்பம் தரும். அதுவே பக்தி.
- பிருகதாரணிய உபநிடதத்தில் யாஞ்ஞவல்கியர் தனது மனைவி மைத்ரேயிக்கு கூறும் உபதேசம் பக்தி பற்றிய உயர்ந்த கருத்தைத் தருகிறது. “இறைவனே உயர்ந்த அன்புக்கு உறைவிடம். பரமான்மாவே வேறு எப்பொருளையும் விட, ஒருவன் அதிக அன்பு செலுத்துவதற்குரிய பொருள். அதுவே உள்ளார்ந்தது. பரமாத்மா மேல் வைக்கும் அன்பே முதன்மையானது. இவ்வுலகிலுள்ள அனைத்தும் இறைவனால் படைக்கப்பட்டவை என்பதனாலேயே நம் அன்புக்குப் பாத்தியதை ஆகின்றன.”

- “அன்பே கடவுள்; இவ்வுண்மையை உணர்ந்து வாழ்க்கை நடத்துதலே பக்தி யோகம்” என்கிறார்.
- இறைவனின் பக்தி வெள்ளத்தில் ஆழ்ந்தவர்கள் பக்தர்கள். பிரவரலாதன், ஹனுமான், அருச்சுனன், கண்ணப்பர், அப்பர் முதலானோரின் பக்தி, பக்தியோகத்துக்கு எடுத்துக் காட்டாகும்.
- புலனறிவுக்கும், கற்பனைக்கும் மேலான உள்ளுணர்வு ஒன்றுளது. அதுவே இறைவனை அறிதற்குள்ள கருவி. இந்த உள்ளுணர்வு நெறி கலை நுகர்ச்சியிலும், பயன் கருதாப் பணியிலும், பற்றற்ற அன்பிலும் பரவிக் கிடக்கிறது. இவற்றினூடாக இறைவனை அடையும் மார்க்கம் பக்தி நெறி எனக் கருதப்படுகிறது.
- பக்தி இருவகைப்படும். அவை ஆசார பக்தி, பிரபக்தி என்பனவாகும்.
- ஆசார பக்தி சடங்குகளோடு கூடிய வழிபாடாகும். இதனை வைதிக பக்தி என்பர். ஆசார பக்தியானது சாத்திரவிதிப்படி பக்தி பண்ணுதலாகும். இறைநாமத்தை உச்சரித்தல், உபவாசமிருத்தல், தீர்த்த யாத்திரை போதல், பூசை முதலியன இவற்றுள் அடங்கும். இதனை இறைவன் அன்பைப் பெறுவதற்கு ஒரு படிநிலையாகக் கொள்ளலாம்.
- இது உயர்ந்த பக்தியாகிய பிரபக்திக்க இட்டுச் செல்லும். பிரபக்தி உண்மையான பக்தி எனப்படுகிறது. இதனை முக்யா என்பர்.
- பக்தன் தன்னை இறைவனிடத்து முழுமையாக அர்ப்பணித்து விடும் நிலை பிரபக்தி ஆகும். இது இறையன்பின் உயர்ந்த நிலை எனப்படுகிறது.
- பக்திக்கும் பிரபக்திக்குமிடையே வேறுபாடுண்டு. பக்தி இறைவனிடம் அன்பு பூண்டொழுகுதல். பிரபக்தி இறைவனைச் சரணடைதல். இதனைச் சரணாகதி தத்துவம் என வைணவம் கூறும்.
- பக்தி நெறிக்கு அறிவுடையவனாயிருத்தல், நல்வினைகளைச் செய்தல், உயர்குடிப் பிறத்தல் முதலிய பல தகுதிகளுண்டு. ஆனால் பிரபக்திக்கு இந்தத் தகுதிகளெதுவும் வேண்டுவதில்லை. இது யாவருக்கும் பொதுவான வழியாகும். கடவுளைச் சரணடைந்த யாவரும் இதற்குத் தகுதி பெற்றவரே.
- பகவத் கீதையில், இப்பிரபக்தி ஆன்ம நிவேதனம் எனப்படுகிறது.
- பக்தன் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கும்போது இறைவன் தன் அருட்பிரசாதத்தை வாரி வழங்குகிறான்.
- ‘பற்றற்ற மனமும் உண்மையான அன்பும் இறைவனை அடையும் வழி’ என்பார் ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்சர்.
- பிரபக்தியினூடாக ஆன்மாவானது இறைவனோடு நேரடித் தொடர்பு கொள்கிறது. பக்தி சூத்திரங்களின் ஆசிரியரான நாரதர், பிரபக்தி தூய்மையானது; தன்னலமற்றது; நுட்பமானது; இடையறாது என்றும் விரிவடைந்து கொண்டிருப்பதுமான ஓர் அனுபவம் என்கிறார்.
- பிரபக்தி நிலையானது ‘ஊமை ஒருவன் நல்ல சுவையுள்ள உணவை உண்டும், அதனைப் பற்றிச் சொல்ல முடியாது தவிக்கும் நிலையில் உள்ளது’ என்பர்.
- பகவத்கீதையில் பகவான் அருச்சுனனிடம் “எல்லாக் கடமைகளையும் விட்டுவிட்டு நீ மட்டும் என்னிடம் வந்து தஞ்சம் புகு. நீ வருத்தம் கொள்ளாதே. நான் உன்னைப் பாவங்களிலிருந்து விடுவிப்பேன்” என்று பிரபக்தியைப் போதிக்கிறார்.

- பக்தியோகத்தின் சிறப்புப் பற்றியும் பகவான் கீதையில் கூறுகிறார். ''நான் எல்லா உயிர்களிடத்தும் சமமாயிருக்கிறேன். எனக்குப் பகைவனுமில்லை; நண்பனுமில்லை. ஆனால் என்னைப் பக்தியோடு பூஜிக்கின்றவர்கள் என்பார் உளர். நானும் அவர்கள் பால் உளேன்'' - (ராஜவித்யா யோகம் - 29)
- பக்தியாளர்கள் இறைவன் மீது கொண்ட பற்று எல்லை அற்றது. பகவத் கீதையின் பக்தி யோகத்தில் பகவான் ''என்னிடத்தில் மனதை வைத்து யோகத்தில் நிலைத்தவராய் பெருஞ்சிரத்தையுடையவராய் யார் என்னை உபாசிக்கிறார்களோ அவர்கள் யோகத்தில் மேம்பட்டவர்கள்'' எனப் போற்றுகிறார்.
- மனித உறவுகள் ஒன்றின் அடிப்படையில் பக்தன் தன்னை இறைவனோடு இணைத்துக் கொள்கிறான். இம்மனப்பாங்கு 'பாவங்கள்' எனப்படுகின்றன. பக்தி சாஸ்திரங்கள் பத்தொன்பது வகையான பாவங்கள் பற்றி கூறுகின்றன.
- அவற்றுள் முக்கியமானவை ஆறு பாவங்களாகும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | தாஸ்யம் | - | எஜமானுக்கும் வேலைக்காரனுக்குமிடையிலுள்ள மனப்பாங்கு.<br>(உ-ம்) தொண்டரடிப் பொடியாழ்வார், அப்பர் சுவாமிகள் |
| 2. | சகியம் | - | தோழமை உறவு.<br>(உ-ம்) குசேலர், கிருஷ்ணர், அருச்சுனன், சுந்தரர் |
| 3. | வாற்சல்யம் | - | இது குழந்தை மேல் தாய்க்குள்ள பாசம்.<br>(உ-ம்) கோசலை, யசோதை, பெரியாழ்வார் |
| 4. | சாந்தம் | - | குழந்தைக்குத் தாய் மேல் உள்ள பாசம்<br>(உ-ம்) பிரகலாதன், துருவன் |
| 5. | காந்தம் | - | ஒரு மனைவி கணவன் மேல் வைக்கும் அன்பு சீதைக்கும் இராமனுக்குமுள்ள உறவு. |
| 6. | மதுரம் | - | இது காதலனுக்கும் காதலிக்கும் இடையிலான உயர்ந்த காதல் உறவு. (உ-ம்) இராதை - கிருஷ்ணர்<br>இதுவே மிக உயர்ந்த அன்பாகும். பக்தன் தன்னைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் கருதி தன்னை முழுமையாக ஒப்புவிக்கும் நிலையாகும். |

- இத்தகைய உயர்நிலையுடைய பக்தர்களின் பேரியல்பு பற்றி பகவத்கீதையில் பரவலாகக் கூறப்பட்டுள்ளது.

  '' உயிர்கள் அனைத்திடத்தும் வெறுப்பின்றி, நட்பும் கருணையும் உடையவனாய் அகங்காரம் மமகாரமற்று, இன்பதுன்பங்களைச் சமமாய்க் கருதி பொறுமையுடன் எப்பொழுதும் சந்தோசமுடையவனாய், யோகியாய், தன்னடக்கமுடையவனாய், திடநிச்சயமுடையவனாய், என்னிடத்து மனம் புத்தியைச் சமர்ப்பித்தவராய் யார் என் பக்தனாகிறானோ, அவன் எனக்குப் பிரியமானவனாவான்.''

  (பக்தி யோகம். சுலோ 13, 14)
- பக்தி அன்பைப் பெருக்கிறது. மனது உறுதியாக இறைவனால் நிலைத்து நின்று விடுமானால் அது முதிர்ந்த பக்தியாகிறது. இல்லையேல் பயிற்சியினால் மனதை ஒழுங்குபடுத்த வேண்டும்

" சித்தத்தை என்பால் உறுதியாக வைக்க இயலாவிடின்
அப்பியாச யோகத்தால் என்னை அடையவிரும்பு" (பக்தியோகம் சுலோ. - 9)

- பக்தியோகம் மற்ற மூன்று யோகங்களையும் விட மிக எளிது. ஏனெனில் எந்த சாஸ்திர ஞானமும் விவேகமும் இதற்கு ஏராளமாய் வேண்டியதில்லை என்பதாலாகும்.
- பக்தியோகத்தின் வழி நிற்போர் துன்பப்படாத உயர்ந்த மனநிலையுடையவர்களாதலில் புற உலக துன்பங்கள் எந்த விதத்திலும் அவர்களைப் பாதிப்பதில்லை.

  (உ-ம்) பிரகலாதன்
- பக்தியோகம் ஆன்மீக இலட்சியத்தை அடைவதற்கான வழி என்பதைப் பகவத்கீதை உறுதி செய்கிறது.

  "மனதை என்னிடத்து வைத்து, என்பால் பக்திபண்ணி என்னையே வணங்கு, என்னைக் குறியாகக் கொண்டு உள்ளத்தை உறுதிப்படுத்தி என்னையே அடைவாய்."

  - (ராஜசித். - 34)

  "என்னிடத்தே மனதை வைத்து என்னிடத்துப் புத்தியைச் செலுத்துக. பின்பு என்னிடத்தே வசிப்பாய் என்பதில் சந்தேகமில்லை." - (பக்தியோகம் சுலோ - 8)

### 9.2.1.4 ஞானயோகம்:

**அறிமுகம்:**

- அறிவு, ஞானம், வேதனம், பிரக்ஜை இவை யாவும் ஒரு பொருளைக் குறிப்பிடுகின்றன.
- ஞானம் என்பது அறிவு எனப் பொருள்படும். ஞானயோகம் என்பது அறிவுவழி எனப்படும்.
- வாழ்க்கையின் குறிக்கோள் முக்தியடைதலாகும். இம்முத்திக்கான மார்க்கங்களாக பகவத்கீதை கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகிய மூன்று யோகங்களை யும் முன்வைத்துளது.
- பகவத்கீதையின் பதின்மூன்றாவது அத்தியாயம் முதல் பதினெட்டாம் அத்தியாயம் வரையில் ஞானத்தை வளர்ப்பதற்கான வழிகள் கூறப்பட்டுள்ளன. இதனை ஞானயோகம் என்பர்.
- பிரகிருதி, புருஷன் ஆகிய இரண்டு தத்துவங்களையும் அறிவதே ஞானம் எனப் பகவத்கீதை கூறுகிறது.
- உலகின் துன்பங்களுக்கும் குறைபாடுகளுக்கும் மூலகாரணம் அறியாமை எனும் அஞ்ஞானமாகும். ஆன்மா அஞ்ஞானம் காரணமாகத் தன்னைப் பிரமத்தினின்றும் வேறுபட்டதாக நினைக்கிறது. அஞ்ஞானத்தை ஞானத்தால் அகற்ற இயலும்.
- பிரமத்திலிருந்து ஆன்மா பேதமற்றது என்ற அறிவின் மூலமே முழுமை நிலை பெறலாம்.
- முத்தி அல்லது மோட்சம் என்பது ஆன்மாவின் என்றுமுள்ள தன்மை ஆகும். முத்தி அல்லது வீடுபேறடைவதற்கு முக்கிய வழி ஞானமே எனச் சங்கரரின் அத்வைதம் கூறுகிறது.
- சங்கரர் கருத்துப்படி 'சமயத்தின் வழி' ஒன்று எப்படி இருக்க வேண்டும் என்பதில் அன்று; ஆனால் அது எப்படி இருக்கிறது என உணர்ந்து கொள்வதில் இருக்கிறது. இதனை இந்துசமயத் திருநூல்கள் பின்வருமாறு விளக்குகின்றன.

(உ-ம்) “தரதி சோகம் ஆத்மவித” - ஆன்மாவைக் கடந்தவன் துன்பத்தைக் கடந்த வனாகிறான்.

“பிரம்மவித் பிரமைவ பவத” - பிரமத்தை அறிந்தவன் பிரம மாகிறான்.

- மனத்தால் பெறும் அறிவு ஞானமன்று. அது ஆன்மீக உள்ளொளி பெறுவதாகும். இதுவே முத்திநிலை பெறுவதற்குரிய வழியாகிறது.
- ஒவ்வொருவரிடமும் அன்பும் அறிவும் சேர்ந்திருக்க வேண்டும். (உ-ம்) நாரத முனிவரிடமிருந்தது ஞானத்தோடு கலந்த பக்தியாகும். இதுவே வேண்டப்படுவதாகும்.

ஞானம் இருவகைப்படும்.

1. பரவித்தை - அபரஞானம்
2. அபரவித்தை - பரஞானம்

- உலகத்தைப் பற்றிய அறிவு அபர வித்தை எனப்படுகிறது. வேதங்கள், வியாகரணம், கலைஞானங்கள், பௌதிக சாத்திரங்கள் முதலிய இவை யாவற்றாலும் ஏற்படும் அறிவாகும்.

  ஆனால் பிரம ஞானமோ - பரவித்தை ஆகும். அறிய முடியாத பிரமத்தை அறிவதே உயர்ந்ததாகும்.

  உதாரணமாக நாரதர் சனற்குமாரரிடம் “ நான் வேத இதிகாசங்களையும் புராணங் களையும் கணிதம், நுண்கலை முதலிய யாவற்றையும் கற்றுள்ளேன். ஆனால் நான் ஆன்மாவைப் பற்றி அறியவில்லை; நான் துக்கப்படுகிறேன். எனக்கு ஞானத்தை அருளுங்கள்” என மனந் திறந்து கூறினார். அதன் பின் சனற்குமாரர் அவருக்கு ஆன்ம விடுதலை பெற ஒரே வழியான பரவித்தையைப் போதித்தமாக உபநிடதம் கூறுகிறது.
- வாழ்க்கையின் ஊடாகத் தன்னைப் பண்படுத்துவதாலேயே ஞானம் வருகிறது.
- பகவத்கீதையில், “தற்பெருமையின்மை, தருக்கின்மை, அஹிம்சை, பொறுமை, நேர்மை, குருசேவை, தூய்மை, விடாமுயற்சி, தன்னடக்கம், பற்றின்மை, மனைவி, மக்கள் என்று அபிமானியாதிருத்தல், வேண்டுவன வேண்டாதவைகளிடத்து மனம் நடுநிலையில் நிற்பது, வேறு எதையும் எண்ணாத யோகத்தால் என்னிடம் பிறழாத பக்தி செலுத்துதல், தனிமை நாடுதல், ஜனக்கூட்டத்தில் விருப்பமின்மை, ஆத்ம ஞானத்தில் நிலைபேறு, உண்மைப்பொருள் ஆராய்ச்சி இவை யாவும் ஞானமாம்; இதற்கு அன்னியமானவை அஞ்ஞானம்” எனப் பகவான் கூறுகிறார்.
- மாறுபாடில்லா என்றும் நிலைத்திருக்கும் பரப்பிரமத்தை அறிவதே மோட்சமாகும். பிரமத்தை அறிந்தவன் பிரமமாகிறான்.
- அறிவும், அறியப்படுபொருளும், அறியப்படுவதனால் அடையப்படுவதுமாகிய பிரமம் எல்லோருடைய உள்ளத்திலும் நிலைத்திருக்கிறது. இதனை அறியும் என் பக்தன் என்னையடையத் தகுந்தவனாகிறான் என்பது பகவத்கீதையில் பகவான் கூறியுள்ளார்.
- பிரமத்தை அறியும் பரஞானத்தை அடைவதற்கான முயற்சிகள் இரு கட்டங்களில் அமைகிறது.

1. அறிவு நிலை உணர்ச்சி நிலையில் ஆயத்தம் செய்தல்.
   - (i) நிலையானவை, நிலையற்றவை என்பவற்றினைப் பிரித்தெண்ணுதல்.
   - (ii) தன்னல காரியங்களின்றும் விடுபடுதல்

(iii) மனத்தை ஒருமுகப்படுத்தல்

(iv) விடுதலை பெறுவதற்கான விருப்பம்

என நான்கு வகைத் தகுதிகளையும் பெறல்.

2. பிரமஞானத்தையடைந்த குருவிடம் ஞானநூல்களைக் கற்றல்.
3. சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என பல படிகளில் அமையும்.

- பகவத்கீதையில் ஞானயோகம் பற்றிய உயர்வான கருத்துக்கள் காணப்படுகின்றன.

"பொருளைக் கொண்டு செய்யும் யக்ஞத்தைவிட
ஞான யக்ஞம் மேலானது. பார்த்தா
கர்மம் முழுதும் ஞானத்தில் முற்றுப் பெறுகிறது."
(ஞானகர்ம ஸாதயாஸ யோகம் - 33)

"பணிந்தும், கேட்டும், பணிவிடை செய்தும் நீ
ஞானத்தை அறிந்து கொள். உண்மையை
உணர்ந்த ஞானிகள் உனக்கு அந்த ஞானத்தை உபதேசிப்பார்கள்."
(ஞானகர்ம ஸந் - 34)

"சிரத்தையுடையவன், பரத்தைச் சார்ந்திருப்பவன்
புலன்களை வென்றவன் 'ஞானத்தைப் பெறுகிறான்
ஞானத்தைப் பெற்று விரைவில் மேலாம் சாந்தி அடைகிறான்."
(ஞான கர்ம. - 39)

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

**படி I** பகவத்கீதை உபதேசக் காட்சியை வகுப்பறையில் காட்சிப்படுத்தி, அது தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**படி II:** மனித வாழ்வியலை செம்மையுடையதாக்கும் மூவகை யோகங்கள் தொடர்பான கருத்துக்களை மாணவர் பெற்றுக் கொள்ளத் தேவையான நூலாதாரங்கள், கட்டுரைகள் என்பவற்றை வழங்குங்கள்.

**படி III:** மாணவர் கருமயோகம், பக்தியோகம், ஞானயோகம் பற்றிய கருத்துக் களைச் சேகரிக்க வழிப்படுத்துங்கள்.

**படி IV:** வகுப்பிலுள்ள மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து, மூவகை யோகங்கள் பற்றிய சொற்பொழிவுகளைத் தயாரித்து, வகுப்பறையில் நிகழ்த்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுங்கள். தயாரித்த சொற்பொழிவினை திருத்தி எழுதி, வகுப்பறையில் காட்சிப்படுத்துமாறு கூறுங்கள்.

**உசாத்துணைகள்:**

| | | | |
|---|---|---|---|
| (1) | பகவத்கீதை மூலமும் உரையும் | - | சுவாமி சித்பவானந்தர் |
| (2) | பகவத்கீதை | - | பாரதியார் உரை |
| (3) | இந்திய சிந்தனை மரபு | - | கலாநிதி. ந. சுப்பிரமணியன்,<br>கௌசல்யா சுப்பிரமணியன் |

**தேர்ச்சி 10.0** : இந்து அறிவியல் காலத்தோடும் தேவைகளோடும் இணங்கியும் இசைந்தும் மனிதவாழ்வை மேம்படுத்து மாற்றினைக் கண்டறிவர்.

**தேர்ச்சி மட்டம் 10.1** : இந்து அறவியல் தொடர்பான விளக்கங்களை ஆராய்ந் தறியும் முயற்சிகளில் ஈடுபட்டு, முன்னோரின் அறிவியல் சிந்தனைகளுக்கு மதிப்பளிப்பர்.

**பாடவேளைகள்** : 10

**கற்றற் பேறுகள்:**

- அறிவியல் என்பதற்கான வரைவிலக்கணத்தைத் தெளிவாகக் குறிப்பிடுவர்.
- இந்து அறிவியல் அம்சங்கள் காலத்தால் முற்பட்டவை என்பதை உதாரணங்களுடன் முன்வைப்பர்.
- காலத்தால் முற்பட்ட இந்து அறிவியல் அம்சங்கள் ஏனைய நாடுகளிலும் பரவி உள்ளன என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிக் கூறுவர்.
- இந்து அறிவியலில் அடங்கும் விடயங்களைப் பகுத்தும் தொகுத்தும் எடுத்துக்காட்டு களுடன் முன்வைப்பர்.
- இந்து அறிவியலில் எமது முன்னோரின் அறிவியல் சிந்தனைகளின் பங்களிப்புகளை விளங்கி, மதிப்பளிப்பர்.
- இந்து அறிவியல் அம்சங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை விளங்கி செயற்படுவர்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி:**

## 10.1 இந்து அறிவியல்

### 10.1.1 இந்து அறிவியல் ஓர் அறிமுகம்

- ஆக்கத்திற்கு அடிகோலுவது ஆய்வுச்சிந்தனை. அதனை அடிப்படையாகக் கொண் டமைவது அறிவியல் துறையாகும்.
- "அறிவைக் கொண்டு ஒன்றை ஆராய்ந்து, அதன் உண்மைத் தன்மைகளைப் பகுப்பாய்வு செய்து பரிசோதனை மூலம் நிறுவுதலே அறிவியல்" என வரைவிலக்கணப் படுத்துவர்.
- 'அறிவு', 'இயல்' எனும் இரு சொற்கள் இணைந்து 'அறிவியல்' என்னும் கலைச்சொல் உருவானது.
- முழுமையான ஒன்றைப் பற்றிப் பகுத்து ஆராய்வதும் முழுமையற்றுக் காணப்படும் ஒன்றின் படிமுறையான தொடர்பையும் ஒழுங்கையும் ஆராய்தலும் அறிவியலாகும். அறிவியல் என்பதை விஞ்ஞானம் எனவும் கூறுவர்.

- இந்து அறிவியல் துறைகள் ஒவ்வொன்றும் இந்துக்களின் வாழ்வியலோடு தொடர்பு பட்டதாகவே விளங்குகின்றன.
- இந்துப் பண்பாட்டில் அறிவியலும் ஆன்மீகமும் ஒன்றை ஒன்று சார்ந்து வளர்ச்சி பெற்று வந்துள்ளன.
- இந்து அறிவியல் என்பதனுள் எண்ணற்ற துறைகள் அடங்கும். அவற்றுள் இந்து மருத்துவம், சோதிடவியல் என்னும் விடயங்களை மட்டும் இங்கு விரிவாக நோக்குவோம்.

## 10.1.2 இந்து மருத்துவம்

- இந்துக்களின் மருத்துவம் காலம் காலமாக கட்டியெழுப்பப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட துறையாகும்.
- நோயை அறிதலும், நோய் முதலை அறிதலும், நோயைத் தணித்தலும் நீக்கலும் தடுத்தலும் அது பற்றி ஆய்தலும் மருத்துவத்தின் பாற்படும்.

  இந்துக்களின் மருத்துவக்கலை அறிவு இருக்கு வேதத்தில் இருந்து ஆரம்பமாகின்றது.

  **(உ-ம்)** - இருக்கு வேதத்தில் உள்ள 'ஓஷதி சூக்தம்' - வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றையும் 'திரிதாது' எனக் குறிப்பிடுகிறது.

  - கண், செவி சார்ந்த குறைபாடுகளை நீக்கும் தேவ மருத்துவர்களாக அஸ்வினி குமார்கள் போற்றப்பட்டனர்.

- சுக்கில யசுர் வேதத்தில் குஷ்டம், இதயநோய், காசநோய், சித்த சுவாதீனம் போன்ற பிணிகளுக்கான குணங்கள், அறிகுறிகள் அடையாளங் காணப்பட்டுள்ளன. இந்த நோய்களை தீர்க்கும் மருந்தாக மந்திர உச்சாடனங்களே பயன்படுத்தப்பட்டன.
- இந்து மருத்துவ வரலாற்றில் அதர்வண வேதம் குறிப்பிடத்தக்கது. இதில் வரும் பேஷ ஜானி சூக்தம், ஆயுஷ்யானி சூக்தம் பகுதிகளில் மருத்துவ சிந்தனைகள் அதிகமாக உள்ளன.

  - சூரியனின் அகஞ் சிவப்புக் கதிர்களுக்கு மஞ்சட் காமாலை நோயைக் குணப் படுத்தும் சக்தி (ஆற்றல்) உண்டென்பதை அதர்வண வேதம் அன்றே குறிப்பிட் டுள்ளது.

    **(உ-ம்)** 'இவன் நோய் நீங்கி மஞ்சளாகாமலிருக்க...
    காமாலையும் நீங்குக' என்னும் வரிகள்.

  - கி.முற்பட்ட காலத்தில் தோன்றிய அதர்வண வேதத்தின் 2 ஆம் காண்டம் - 66 ஆம், 67 ஆம் சூக்தங்களில், 'கிருமிநாசம்' என்ற பகுதியில் நோய்க் கிருமிகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.
  - அதர்வண வேதத்தில், மனித உடற் கூற்றியல், குருதிச் சுற்றோட்டம் என்பன தொடர்பான துல்லியமான சில சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன.

**(உ-ம்)** நாடிகளில் பாய்கின்ற சிவப்பு நிறமான குருதி, ‘அருணா’ எனவும், நாளங்கள் தாங்கி வரும் கரும் சிவப்புக் குருதியை ‘லோஹினி’ எனவும் அழைத்தனர்.

- அதர்வண வேதத்தில் பல்வகை ஔடதங்கள் பற்றிய கருத்துக்கள் உள்ளன.
  **(உ-ம்)**
  - குஷ்ட ரோகத்தை நிவர்த்தி செய்யும் இரஜனீ என்ற மருந்து.
  - கபால வியாதிகளைச் சீர்செய்யவல்ல கர்ண சூலம் என்ற மருந்து.
  - விஷ முறிவை ஏற்படுத்தும் அபஸ்கம்பம் என்னும் மூலிகையானது, வெண்குஷ்டத்தைப் போக்கும் சக்தி வாய்ந்தது.

- இந்துக்களின் மருத்துவ அறிவின் வளர்ச்சிப்போக்கு கி.மு. 1500-500 வரையில் மேலும் வளர்ச்சி பெற வலுச் சேர்ந்தவர்களில் ஆத்திரேயர், தன்வந்திரி, சரகர், சுஸ்ருதர் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

### (அ) ஆத்திரேயர்

- ஆத்திரேயர் ஆயுர்வேத நூலொன்றை இயற்றினார்.

### (ஆ) தன்வந்திரி

- இந்திய மருத்துவத்தின் தந்தை என இவர் போற்றப்படுகிறார்.
- இவர் ஆயுர் வேதத்தை வழங்கியவர். ஆயுர் வேதத்தை அஷ்டாங்கம் எனப்படும் எட்டுப் பிரிவுகளாக வகுத்தவரும் இவரே.

### (இ) சரகர்

- ஆத்திரேயரின் சீடர்களில் ஒருவரான அக்கினிவேசரின் நூலைத் தழுவி, இவர் தனது நூலை எழுதினார்.
- சரக சம்ஹிதை 8 பிரிவுகளையும் 120 அத்தியாயங்களையும் உடையது.
  - இந்நூலில் இரத்தோட்டம், அதன் செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.
  - இரத்தம் உடலில் சுற்றி வருதல், அது உடம்பின் ஒவ்வொரு உறுப்பிற்கும் ஊட்டச்சத்துக்களை எடுத்துச் செல்லல், கழிவுப்பொருட்களை எடுத்துச் செல்லல், இதனை முறையாகச் செயற்படுத்துவதில் இதயத்தின் பங்களிப்பு முதலான பல்வேறு விடயங்கள் சரக சம்ஹிதையில் உண்டு.
- சரகர் எழுதிய மருத்துவநூல் சரகசம்ஹிதை ஆகும். இதில் பல்வேறு நோய்களின் விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.
- 149 வகை நோய்கள், அவை வருவதற்கான காரணங்கள், அதன் அறிகுறிகள், சிகிச்சை முறைகள் என்பனவும் அதில் கூறப்பட்டுள்ளன.
- முக்கியமான 13 இரத்தக்குழாய்கள், அதனைக் கட்டுப்படுத்தும் மையங்கள், இரத்த ஓட்டத்தில் தடை ஏற்பட்டால் உருவாகும் நோய்கள் என்பனவும் சரக சம்ஹிதையில் விளக்கப்பட்டுள்ளன.

- மேற்கூறிய விடயங்கள் தொடர்பான ஆராய்ச்சிகள், மேல்நாட்டில் 1628 இன் பின்னர் தான் ஆரம்பமானது. ஆனால் சரகர் இதனை முன்கூட்டியே கூறியமை வியப்பை அளிக்கின்றது.
- வைத்தியத்தொழில் பயிற்சி முடிந்த பின் நிகழ்த்தும் சமய விழாவின்போது, வைத்திய மாணவர்கள் பின்பற்ற வேண்டிய அறிவுரைகளை சரசர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

  > "... நோயாளியின் வீட்டுக்குச் செல்லும்போது உன் பேச்சும், உள்ளமும் அறிவும் புலன்களும் வேறு எங்கும் செல்லாது, நோயாளியையும் அவருக்கு வேண்டிய வைத்திய முறையையும் நோக்கி நிற்றல் வேண்டும்..."

  இதில் வைத்திய மாணவர்களுக்கு வேண்டிய புலனடக்கம், உளவியல் நோக்கு என்பனவற்றை வற்புறுத்தியுள்ளார்.

### (ஈ) சுஸ்ருதர்

- இவர் இந்திய அறுவைச் சிகிச்சையின் தந்தை எனப் போற்றப்படுபவர்.
- வேதங்களில் அதீத மந்திர சக்திகளுடன் தொடர்புபடுத்திக் கூறப்பட்ட அறுவை மருத்துவம் இவரது சுஸ்ருத சம்ஹிதையில் விஞ்ஞான ரீதியில் விளக்கப்பட்டுள்ளன.
- சுஸ்ருதரின் - சுஸ்ருத சம்ஹிதையில் அறுவை, மருத்துவம், மருந்துகள், காது, மூக்கு, தொண்டை, கண்நோய், விஷமுறிவு, மனநலம் என்பன பற்றி கூறப்பட்டுள்ளன.
  - இந்நூல் பூர்வதந்திரம், உத்தரதந்திரம் எனும் இரு பிரிவுகளை உடையது.
  - பூர்வ தந்திரம் அறுவை மருத்துவம், நோய்க்காரணம், அறிகுறி, கரு வளர்ச்சி, உடற்கூறு, நாடிநரம்பு, மருத்துவம், விஷம் முறிக்கும் முறைகள் என்பன பற்றிக் கூறுகின்றது.
  - உத்தர தந்திரம் அறுவையின்போது உருவாகும் ஜுரம், பேதி, இருமல், விக்கல், கிருமிகளின் பாதிப்பு என்பனவற்றை ஆராய்ந்து கூறுகின்றது.
  - அறுவைச் சிகிச்சைக்கு உடற்கூறு பற்றிய நூலறிவை விட, நேரடியான செயல்பாடு தேவை என்றும் அதற்கு இறந்தவரின் உடலை அறுத்து ஒவ்வொரு உறுப்புகள் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும் என சுஸ்ருதர் கூறி யிருப்பது, இன்றைய அறுவை நிபுணர்களின் குரு அவரே என்பதை உறுதிப் படுத்துகிறது.
  - அறுவைச் சிகிச்சைக்கு உட்படுபவரின் உணர்வினை மறக்கச் செய்ய அவர் மதுவைப் பயன்படுத்துமாறும் குறிப்பிட்டிருந்தது, 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்து மருத்துவத்தின் சிறப்பை வெளிப்படுத்துவதாக உள்ளது.
  - போரிலிழந்த அல்லது காயப்பட்ட அல்லது சட்டமுறையால் வெட்டப்பட்ட மூக்கு, காது, உதடு என்பவற்றை மீண்டும் அமைத்துத் திருத்துவதில் பண்டைய இந்திய சத்திர சிகிச்சை வைத்தியர்கள் வல்லுனராக இருந்தனர்.
- இந்திய இந்து மருத்துவத் துறையில் இதிகாசங்களும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

**(உ-ம்)** -

இராமாயணத்தில் இராம லட்சுமணர்கள் இந்திரஜித்தின் பிரம்மாஸ்திரத்தால் மயங்கி இருந்தபோது அவர்களைக் காக்க, ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையை எடுத்து வந்தமை.

- வான்மீகி இராமாயணத்தில் சஞ்சீவி மலையில் இருந்த மூலிகைகளின் வகைகள், அவை குணப்படுத்தும் நோய்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

1. ம்ருத் சஞ்சீவினி - இறந்தவரைப் பிழைக்க வைக்கும் தன்மை கொண்டது.
2. விசல்ய கரணி - உடலில் தைத்த அம்புகளைப் பிடுங்கிவிட்டு, இந்த மூலிகையைப் பயன்படுத்தினால் காயத்தின் வடு கூடத் தெரியாமல் குணப்படுத்தும் தன்மை கொண்டது.
3. ஸந்தான கரணி - எலும்பு முறிவு, கிழிந்து போன சதை என்பவற்றைக் குணப்படுத்தும்.
4. ஸாவர்ணய கரணி - தீக்காயத்தினால் எரிந்துபோன தோலைக் குணப்படுத்தி, முன்பு இருந்தது போலச் செய்யும்.

## தமிழக வரலாற்றில் இந்து மருத்துவம்

- சங்க நூல்களில் பதிற்றுப்பத்து, பாலைக்கலி என்பவற்றுடன் நற்றங்கொற்றனார் பாடிய அகப் பாடலிலும் மருத்துவனின் இயல்பு, அறுவைச் சிகிச்சை முறை என்பன கூறப்பட்டுள்ளன.

  **(உ-ம்)** "மீன்றோர் கொட்பிற் பனிக்கய மூழ்கிச் சிரல் பெயர் தன்ன..."

  (பதிற்றுப்பற்று 42:2-6)

- சங்க மருவிய கால நூல்களில் திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் முதலானவை அரிய மருத்துவ சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன.

  - திருக்குறளில் பொருட்பால் இரண்டாம் பகுதி 95 ஆம் அதிகாரம் 'மருந்து' எனப் பெயரிடப்பட்டுள்ளது. அதில் மருத்துவ விளக்கமும் தரப்பட்டுள்ளது.

    **(உ-ம்)** "நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
    வாய்நாடி வாய்ப்பச் செயல்" (948)

    என்னும் திருக்குறள் நோயைக் கண்டறியும் முறையைக் குறிப்பிடுகிறது.

- 5 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியா வந்த பாகியன், கடவுள் பற்றுடைய மக்கள் வழங்கிய நன்கொடையால் பேணப்பட்டு வந்த மருத்துவ நிலையங்களை சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

- பல்லவர் கால இந்து மருத்துவ பாரம்பரியங்களை, அக்கால கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் என்பன எடுத்துக் கூறுகின்றன.

  - பல்லவ கால அரசர்கள் மருத்துவர்களுக்கு மானியமாக வழங்கிய நிலம் 'மருத்துவப்பேறு' என கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- மருத்துவ மூலிகை பயிரிடுவோர் அரச வரி செலுத்தினர் என கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

- பல்லவர் காலத்தில் வெப்புநோய் தீர்த்தமை, விஷமுறிவு செய்தமை என்பன அற்புதம், இறையருள் என்பவற்றுடன் இந்திய மருத்துவ முறைகளையும் வெளிக்கொணர்கிறது.
- சோழர் காலத்தில் மன்னர்கள், மருத்துவர்களைப் பேணியதுடன் மருத்துவமனைகளை அமைத்து மானியங்களும் வழங்கி நிர்வகித்தனர். இதனை செங்கல்பட்டு முக்கூடலில் உள்ள விஷ்ணு கோயில் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.
- குந்தவைப் பிராட்டியார் தனது தந்தை சுந்தரசோழன் நினைவாக தஞ்சையில் ஒரு மருந்தகத்தை அமைத்தார். அவ்வாறே திருவரங்கத்தில் இருந்த மருத்துவமனை பற்றி அங்குள்ள கல்வெட்டு ஒன்றின் மூலம் அறிய முடிகிறது.
- சில கோயில்களை அடுத்து மருத்துவமனைகள் இருந்தன. அவற்றில் இருவகை மருத்துவர் இருந்தனர்.
    - ஒருவர் கைநாடி பார்த்து மருந்து கொடுப்பவர் (Physician)
    - மற்றொருவர் கட்டி முதலியவற்றை அறுத்து, புண்களை ஆறவைப்பவர். அவர் ‘சல்லியக் கிரியை பண்ணுவான்’ (Surgeon) எனப்பட்டார்.
    - ஒவ்வொரு மருத்துவமனையிலும் வேர்களையும் பச்சிலைகளையும் கொண்டு வருவோர், அவற்றை மருந்தாக்குவோர், நோயாளிகளைக் கவனிக்கும் தாதிமார் என்போர் இருந்தனர் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.
- சோழர் காலப் பேரிலக்கியங்களான சிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய நூல் களிலும் மருந்துகளைப் பற்றியும் மருத்துவர்களைப் பற்றியும் சில விபரங்கள் காணப்படுகின்றன.
- வேர்களையும் பச்சிலைகளையும் பயன்படுத்தும் முறை தமிழர்களுக்கே உரிய சித்த மருத்துவ முறையாகும்.
- இதில் சித்தர்கள் கைதேர்ந்தவர்கள். இவர்கள் வெறுமனே வைத்தியம், மருந்துகள் பற்றி எழுதவில்லை. ஆராய்ந்து, அனுபவ மூலம் கண்டவற்றையே தந்தனர். அத்தோடு அவர்கள் மெய்ஞ்ஞானிகளாகவும் விளங்கினர்.
    - இதயத்துடிப்பை அறிய இன்றைய ஆங்கில வைத்தியர் பயன்படுத்தும் சாதனம் அன்று தேவைப்படவில்லை. நாடி பிடித்துப் பார்த்தே அதனை அவர்கள் அறிந்தனர். ‘நாடிக்கவி’ யின் முதற் செய்யுள் இதற்கு எடுத்துக்காட்டாகும்.
- சித்த மருத்துவத் துறையில் வந்த நோய்களைத் தீர்ப்பதுடன், நோயே வராது தடுக்கும் முறைகளும் நரை, திரை, மூப்பு, பிணி, பயம், சாக்காடு என்பவற்றை வென்று, உடலையும் உயிரையும் அழியாது நிலைநிறுத்தி, அட்டமா சித்திகளையும் பெறும் வழிமுறைகளும் கூறப்பட்டுள்ளன.

- இந்திய மருத்துவத்தில் நாள், கோள் பார்த்து வைத்தியம் செய்வது முக்கியமானது.
- பிற்காலத்தில் நாவிதரும் அறுவை வேலையில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் மருத்துவர் எனப்பட்டனர். பிள்ளைப் பேற்றுத் துறையில் நாவிதர் மனைவிமார் ஈடுபட்டிருந்தனர். நாவிதன் மனைவி மருத்துவிச்சி எனப்பட்டாள்.
- விஜயநகர நாயக்கர் காலத்தில் இந்து மருத்துவப் பாரம்பரியம் தனித்துவமான வளர்ச்சியைப் பெற்றிருந்தது.

  **(உ-ம்)** ஸ்ரீரங்கம் கோயிலில் புகழ்பெற்ற மருத்துவமனை ஒன்று நிறுவப்பட்டிருந்தது.
- இக்காலத்தில் ஆதீனங்கள் ஊடாகவும் மருத்துவ சேவைகள் பரப்பப்பட்டன.
- 18 ஆம் நூற்றாண்டில் கிழக்கிந்தியக் கம்பனியின் சத்திர வைத்தியர் இந்தியாவிடமிருந்து, இந்திய சத்திர வைத்தியம் என்னும் சிறப்பான வைத்திய முறையை விரும்பிக் கற்றனர்.

## இந்து வழிபாட்டு முறைகளில் காணப்படும் மருத்துவச் சிந்தனைகள்

- பிள்ளையார் வழிபாட்டில் தோப்புரக்கரணம் போடுதல், நெற்றியில் குட்டிக் கும்பிடுதல் என்பன மிக முக்கியமான வழிபாட்டு முறைகளாகும்.
- இவ்வழிபாட்டு முறைகளில் யோகாசன மருத்துவம் உள்ளடங்கியுள்ளது. அவ்வாறே நெற்றிப்பொட்டின் இருபக்கமும் குட்டிக் கும்பிடுவதால் அங்குள்ள நரம்பு மையங்கள் தூண்டப்பட்டு நினைவாற்றல் அதிகரிக்கும் என்ற முன்னோரின் சிந்தனைகள் இன்றைய அறவியலுடன் ஒத்துப் போவதையும் காணலாம்.
- இதனை அமெரிக்க விஞ்ஞானிகளும் கூறி வருவதாக இணையத்தளம் ஒன்று குறிப்பிடுகிறது.
- அவ்வாறே தோப்புக்கரண, அட்டாங்க, பஞ்சாங்க வழிபாடுகளினாலும், தலயாத்திரை செய்வதனாலும், கிரிவலம் செல்வதாலும், தெய்வங்கள் வீற்றிருந்து அருள்புரியும் மலைகளுக்கு ஏறிச் செல்வதாலும் ஒருவரின் உடலிலுள்ள நாரி, இடுப்பு, முழங்கால் தசைகள் நன்கு பலமடைகின்றன. அதனால் இரத்தச் சுரப்பிகளில் உள்ள அடைப்புக்கள் நீக்கப்பட்டு, குருதிச் சுற்றோட்டம் ஒழுங்கமைக்கப்படுகிறது.
- மேலும் நீரிழிவு நோய், வாதநோய் முதலியன குணமாகும் வாய்ப்பும் உள்ளது.

  இந்து வழிபாட்டு முறையில் பயன்படும் பத்திரங்கள் யாவும் (அறுகு, துளசி, வில்வம் முதலானவை) மருத்துவக் குணங்கள் நிறைந்தனவாகும்.
- ஆங்கில மருத்துவத்தால் தீர்க்க முடியாத பலநோய்களை இந்து சமயம் கண்ட யோகாசன முறைகள், பிரணாயாமம், சூரிய நமஸ்காரம் முதலியன தீர்த்து வருகின்றன.
- இந்து விரத நியமங்கள் ஆன்மீக நோக்குடையவை மட்டுமன்றி, உடல் நலம் காக்கும் செயற்பாடுகளுமாகும். இதனை விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

- சமயச் சின்னங்கள் அணிவதன் மூலம் உடல் வியாதிகளை அகற்றலாம் எனப்படு கிறது.
  - திருநீற்றின் மகத்துவம் முன்னரே அறியப்பட்டுள்ளது.
  - உடம்பில் நாடி, நரம்புகள் சந்திக்கும் நெற்றிப்பொட்டில் குங்குமம் அணிவதால் அதிலுள்ள மஞ்சளின் சக்தி உடம்பில் ஊடுருவி, உடம்பில் விஷ பாதிப்புகள் ஏற்பட்டிருப்பின் அதனை நீக்கி விடுகிறது.

### இந்து மருத்துவத்தின் முக்கியத்துவம்

- இந்து மருத்துவ முறைகள் எந்நாட்டவர்களுக்கும் ஏற்புடையது. சிறப்பாக இந்திய நாட்டு வெப்ப, தட்ப நிலை, உணவு வகை, தொழில் நிலை, உடல்வாகு என்பவற்றுக்கு ஏற்றதாக உள்ளது.
- இந்து மருத்துவத்தில் சேரும் மூலப்பொருள் யாவும் தாவரங்கள், உப்புகள், உபரசங்கள், உலோகங்கள் முதலானவற்றில் இருந்து உள்நாட்டிலே கிடைப்பதால் நம்பிக்கையுடன் பயன்படுத்த முடிகிறது.
- இவற்றில் எவ்வித பக்க விளைவுகளும் இல்லை. ஆனால் ஆங்கில மருந்துகள் பக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றன.
- மேல்நாட்டு மருத்துவ முறைகளுக்கு ஆதார சுருதியாக விளங்கி இருப்பவை இந்திய மருத்துவமாகும்.
- இந்து வழிபாட்டு முறைகளில் எல்லாம், முன்னோரின் அறிவியல் என்று தெரிந்தோ தெரியாமலோ, பல முறைகளை விரத வழிபாடு, யோக வழிபாடுகள் மூலம் அறிமுகம் செய்துள்ளனர்.
- இந்து மருத்துவத்தில் மருந்துகளுடன் யோகாசனம், தியானம், விரதங்கள் என்பனவும் நோய்கள் ஏற்படாது காக்கின்றன.
- விபூதி அணிதல் சமய நெறிமுறையாகும். அதேவேளை குளித்த பின் அதனை அணிவதால் உடலில் உள்ள ஈரத்தன்மை உலர்த்தப்படுகிறது.
- விபூதியை உடலின் 16 இடங்களில் தரிக்க வேண்டும் என சைவம் வலியுறுத்து கின்றது. இந்த 16 இடங்களும் இன்றுள்ள அக்குபங்சர் வைத்திய முறையில் உடலில் இனங்காணப்பட்ட இடங்களாகக் கூறப்படுவதும் இந்துக்களின் புராதன மருத்துவ அறிவிற்குத் தக்க சான்றாகும்.

## 10.1.3 சோதிடவியல்

### அறிமுகம்

- இந்து நாகரிக வரலாற்றில் இந்துக்களிடையே அறிவியல் சிந்தனைகள் மிக ஆரம்ப காலத்திலிருந்தே தோற்றம் பெற்றன என்பர். அவற்றுள் வானியலும் சோதிடவியலும் மிக முக்கியத்துவமுடையன.
- வானியலை அடிப்படையாகக் கொண்டே சோதிடக்கலை தோற்றம் பெற்றதனால் இவை இரண்டும் இணைந்து செயற்படுபவைகளாகவும் உள்ளன.

- வானியல், சோதிடம் பற்றிய சிந்தனைகள் மக்கள் வாழ்வை வளப்படுத்துவனவாகவும் விளங்குகின்றன.
- இந்துக்களின் சமய வாழ்வுக்கும் சமய இலட்சியங்களை அடைவதற்கும் உரிய சாத்திரங்களாக வானியலும் சோதிடவியலும் அமைகின்றன.
- வேத இலக்கியங்களின் துணை நூலான வேதாங்கங்கள் ஆறினுள் சோதிடமும் ஒன்றாகும். சோதிட சாத்திரம் என்பது வேள்வி நிகழ்த்துவதற்கேற்ற திகதியையும் நேரத்தையும் குறிப்பிடுவதையே நோக்காகக் கொண்ட, பண்டைய வானியலை உள்ளடக்கியதாகும்.
- வேதகால மக்கள் போதியளவு சோதிட, வானியலறிவு பெற்றிருந்தனர் என்பதை வேதங்களின் சில பகுதிகளிலிருந்து நாமறிய முடிகிறது.
- இந்திய சோதிடவியல், வானியல் வரலாறு மிகவும் பரந்தது என மராட்டிய ஆசிரியரான S. B. தீட்சித் என்பவர் குறிப்பிடுகிறார். இவ்விடயம் பற்றி விரிவான நூலொன்றையும் அவர் எழுதியுள்ளார்.
- இந்திய சோதிடவியல், வானியல் தொடர்பான அறிவியல் சிந்தனைகளை பின்வரும் தலைப்புக்களில் ஆராயலாமெனவும் S. B. தீட்சித் குறிப்பிடுகிறார்.

**(i) வேத காலம்**

- மண், விண், இடைவெளி பற்றி ஆராயப்பட்டுள்ளன.
- சூரிய, சந்திரர் பற்றி அறியப்பட்டுள்ளன.
- நாள், சந்திர மாதம், சூரிய வருடம் பற்றிய குறிப்புகளும் உள்ளன.
- பிராமணங்களில் சூரியனது போக்குப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஐந்து முதல் ஆறு காலங்கள் பற்றியும் 12 மாதங்கள் பற்றியும் 27 நட்சத்திரங்கள் பற்றியும் சில கிரகங்கள் பற்றியும் குறிப்புகள் உள.

**(ii) வேதாங்கங்கள்**

- சந்திர மாதம் பற்றிக் கூறப்படுகிறது.
- அதில் சூரிய வருடம் பற்றி விபரம் காணப்படுகிறது.
- அதர்வ வேதத்தில் சோதிடத்தின் தொடக்கமுளது.
- மகாபாரதத்தில் யுகங்கள், மாதங்கள், ருதுக்கள் பற்றிய குறிப்புக்களுள.

**(iii) பண்டைய வானியல் கோட்பாடுகள் (கி.மு. 500 - கி.பி. 500)**

**(அ) பிதாமஹ கோட்பாடு**

- வருடம் 365 நாட்களைக் கொண்டது.

**(ஆ) புளிஷ கோட்பாடு**

- நீள்வட்டப்பாதை பற்றிய விபரம் (Oblique Path)
- நட்சத்திரங்களின் தோற்றம், மறைவு, நாட்கணிப்பு

**(இ) சூரியக் கோட்பாடு**

- கிரகங்களின் அசைவு கணிப்பு

**(iv) வராக மிகிரர் முதல் கணேஷ் தைவஞ்ஞன் வரை (கி.பி. 500 - கி.பி. 1500)**

- இந்து வானியல் பற்றிய ஆராய்ந்த ஆரம்பகால ஐரோப்பிய அறிஞர்கள் பிற்காலத் தெழுந்த நூல்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தார்களே அன்றி, ஆரம்ப கால நூல்களைப் புறக்கணித்தமையால் இந்து வானியல் பற்றிய உண்மைகள் அதிகம் வெளிப்படவில்லை.
- இருக்கு வேத காலத்திலிருந்து வானத்தில் 27 நட்சத்திரங்கள் அல்லது சந்திரனில் வீடுகள் உள எனக் கணக்கிடப்பட்டது.
- சந்திரனானது நிலையான நட்சத்திரங்களைச் சுற்றி வர 27 சந்திர நாட்களும் 7 3/4 மணி நேரமும் எடுக்கிறது. அதனால் வானம் 27 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நாளும் சந்திரன் சுற்றி வரும்போது சூரியனில் வெளித்தோற்றப் பாதை யிலுள்ள எந்த நட்சத்திரக் கூட்டத்தை அணுகிச் செல்கிறதோ அதன் பெயரால் அவை அழைக்கப்பட்டன.
- சந்திர மாதம், நட்சத்திரங்களைக் கொண்டு அளவிடப்பட்டது. அது 27 நாட்களும் 8 மணி நேரமுமாயிருந்தமையால் இதனைச் செம்மைப்படுத்த பிறிதொரு நட்சத் திரத்தை இடையிற் புகுத்தினர் என்பர்.
- இந்திய வானியலாளர் தம் வானியல் அறிவை, கணித அறிவோடு விருத்தி செய்து அராபியருடாக ஐரோப்பியர்களுக்கு நல்கினர் என்ற செய்தி அறியப்படுகிறது.
- பண்டைய வானியல் முறைகள் யாவற்றையும் போன்று இந்திய வானியலாளர்களும் தொலைநோக்கி இன்றியே தம் அவதானிப்புக்களைச் செய்தனர். இவ் அவதானிப்பு முறைகள் மிகச் செவ்வையாயிருந்தமையாலும் அவர்கள் தசம முறை மூலம் கணித்தலில் தேர்ச்சி பெற்றிருந்தமையாலும் மிகச் செப்பமாக அவற்றை அளவீடு செய்தனர்.
- இவர்கள் தம் அளவீடுகளூடே ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி ஆகிய ஏழு கிரகங்களையே ஆரம்பத்தில் அறிந்திருந்தனர். பின் இராகு, கேது எனும் கிரகங்களையும் சேர்த்துக் கொண்டனர்.
- இவ்வெல்லாக் கிரகங்களும் ஒவ்வோர் ஊழிக் காலத் தொடக்கத்திலும் ஒரேநிலையில் நின்று சுழலத் தொடங்கினதென்றும் அவ்வூழிக்கால முடிவில் அந்நிலைக்கே மீளுமென்றும் நம்பப்பட்டது.
- இந்து வானியலார் ஏனையோரைப் போலின்றி கோள்களுக்குச் சமமான, உண்மையான இயக்கமுண்டு எனவும், அவை புவியினின்றும் வெவ்வேறு தொலை விலிருப்பதனாலேயே வெவ்வேறான கோணவியக்கத்தை உடையன எனவும் கூறினர்.
- இந்து வானியல்படி ஆரம்பத்தில் கிரகங்கள் பூமியை மையமாகக் கொண்டுள்ளன எனக் கணிப்பு முறைக்காகக் கொள்ளப்பட்டது. எனினும் கி.பி. 5 ஆம் நூற்றாண் டளவில் ஆரியப்பட்டர் எனும் இந்து வானியலார் புவியானது சூரியனைச் சுற்றி வருகிறதெனவும், அது தன் அச்சில் சூழல்கிறதெனவும் கருத்து வெளியிட்டார்.

- சூரியன் நடுவரையைக் கடக்கும் காலத்தை அறிந்து, அதனை ஓரளவு செம்மையாகக் கணித்தனர்.
- மேலும் ஓராண்டின் காலவளவு, சந்திரமாதம் என்பவை நம்பக்கூடியவையாக இருந்த தோடு கிரேக்க, ரோம கணிப்பு முறைகளிலும் செம்மையாகக் காணப்பட்டது எனக் கருதினர்.
- இந்து வானியலார் கிரகணங்களைத் திருத்தமாக எதிர்வு கூற அறிந்திருந்ததோடு, அவற்றின் உண்மைக் காரணத்தையும் விளங்கியிருந்தனர்.
- கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிரிய நாட்டு வானியலறிஞரான செவரசு செபோத்து என்பார் இந்திய வானியலாளரின் வானியல், கணிதவியல் சிறப்பை போற்றியுள்ளார்.
- கி.பி. 5 ஆம் - 7 ஆம் நூற்றாண்டளவில் உஜ்ஜயனியில் வானியலாராச்சி மையம் இருந்ததாக நம்பப்படுகிறது. ஆயின் இது திட்டவட்டமாக அறியப்படவில்லை. கி.பி. 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் ஜெய்ப்பூரிலும் டெல்லியிலும் அமைக்கப் பட்ட வானாராய்ச்சி நிலையங்கள் முற்கால வானாராய்ச்சி நிலையங்களின் வளர்ச்சி யைக் குறிப்பன என்ற கருத்தும் நிலவுகிறது.
- இந்திய அல்லது இந்து வானியலாளர்கள் பற்றி அல்புறூணியின் (Albiruni's India - 1031 - A. D) குறிப்புக்களிலிருந்தும் பல விடயங்களை நாமறிய முடிகிறது.
- வானியலில் துறைபோன அறிஞர்களில் வராகமிகிரர், புளிசர், ஆரியப்பட்டர், பிரம்மகுப்தர், லாடதேவர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.
- இந்திய வானியல் பற்றிய நூல்களில் ஆரியப்பட்டர் பற்றிய குறிப்புகள் காணப்படு கின்றன. வராகமிகிரர் தொடக்கம் இன்று வரையிலான வானியலாளர்கள் ஆரியப் பட்டரின் குறிப்புக்களை மேற்கோளாகக் காட்டுகின்றனர். மகா ஆரிய சித்தாந்த என்ற நூல் இவரது நூல்கள் அழிந்து போனமைக்கு ஆதாரமாகும். ஆரியப்பட்டரது சித்தாந்தம் (1) கீதிகா - வானவியல் அட்டவணை (2) கணிதம் (3) காலசியாகால அளவு (4) கோளம் என வகைப்படுத்தப்பட்டுளது என்பர்.
- கி. பி. 6 ஆம் நூற்றாண்டளவில் உஜ்ஜயினியில் வாழ்ந்த வானியலாளர் வராகமிகிரர் சோதிடத்தில் மிக வல்லவரான இவர் வானவியல் வரலாற்றுக்குப் பயன்படும் 'பஞ்ச சித்தாந்திகை' எனும் தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளார்.
- லடாசாரியார் யவனபுரத்தில் சூரியாஸ்தமனத்தை அடிப்படையாகக் கொண்டும் சிம்வராசாரியார் இலங்கையின் சூரிய உதயத்தை அடிப்படையாகக் கொண்டும் நேரத்தைக் கணித்தனர்.
- பஞ்ச சித்தாந்திகளின் வானியல் பற்றிய நூல்கள் உலகம், திக்குகள், இடங்கள், காலங்கள், கிரகங்களின் போக்குகள் பற்றிக் கூறுகின்றன.

- சோதிடம் என்பது கருமானுட்டானங்களைச் செய்வதற்கு நாள், கோள் முதலிய கால விசேடங்களைக் கணித்துக் கூறுவது எனப்படுகிறது.
- இந்து வானியலும் சோதிடமும் இணைந்து செயற்படும் அறிவியல் சார்ந்த சிந்தனை களாகும்.
- அறிவியலும் நம்பிக்கையும் ஒன்றினையும் துறையாகச் சோதிடம் வளர்ச்சி கண்டுளது.

சிந்துவெளி மக்களிடையே காணப்பட்ட சமய நம்பிக்கைகளில் சில சோதிடச் சிந்தனைகளோடு ஒப்பு நோக்கத்தக்கன. எனினும் அவை ஊகங்களாகவே நோக்கப் படுகின்றன.

- வேதகாலத்தில் வானில் நிகழும் இயற்கை நிகழ்வுகள் பூமியில் நிகழும் கால மாற்றங்கள் என்பவற்றில் மக்கள் கொண்ட நம்பிக்கைகளே சோதிடம் பற்றிய சிந்தனைகளாக விருத்தியடைந்தன.
- வேதங்களைப் போல் பழமையுடையது சோதிடம். வேதத்தின் ஆறு அங்கங்களில் ஒன்றாகவும் இது விளங்குகிறது.
- யசுர் வேதத்தில் யாகங்களில் நாள், கோள் குறித்தமை பற்றிய சிந்தனைகள் இக்காலத்தில் சோதிடம் பெற்றிருந்த செல்வாக்கை எடுத்துக் காட்டுகின்றது.
- இதிகாச, புராணங்களில் சோதிடத்தின் செல்வாக்குக் காணப்படுகிறது.

**உ-ம்:**
- நகுல, சகாதேவர் சோதிட வல்லுநர்.
- இராமாயணத்தில் இராமனது பட்டாபிஷேகத்திற்கு நாள் குறித்தல்.
- கிருஷ்ண பரமாத்மா சோதிடத்தில் கவனம் செலுத்தியமை.
- புராணங்களில் தேவர்கள், அசுரர்கள் சோதிட சிந்தனைகளை முன்னிறுத்தி செயற்பட்ட சம்பவங்கள், அரண்மனைகளில் சோதிடர் செல்வாக்கு.

- சோதிடம் வடமொழியில் 'ஜ்யோதிஷம்' எனப்பட்டது. இதன் பொருள் 'ஒளியுடைய சாத்திரம்' என்பது.
- ஜ்யோதிஷம் என்பதற்கு, ஞானத்தை அல்லது அறிவைத் தரும் ஒளி என்றும் நட்சத்திரங்களின் தூதுச் செய்தி எனறும் கருத்துக்கள் உண்டு.
- சோதிடம் வானியல்படி அமைகின்ற கோள்களின் நிலையைச் சார்ந்துள்ளது என்பர்.

பண்டைய வானியல் தொடர்பான அறிவியற் சிந்தனைகளான சூரியன், சந்திரன், நாள், சந்திரமாதம், சூரிய வருடம், ஆறு காலங்கள், பன்னிரண்டு மாதங்கள், 27 நட்சத்திரங்கள், யுகங்கள், சதுர் யுகங்கள், மன்வந்தரங்கள் பற்றிய குறிப்புக்கள் யாவும் இந்து சோதிடக் கலைக்கு அடிப்படையாய் அமைந்தன எனலாம்.

- பண்டைய வானியல் கோட்பாடுகளான பிதாமஹ கோட்பாடு, புளிஷ கோட்பாடு, சூரியக் கோட்பாடு போன்றவையும் இந்து சோதிடக் கலை வளர்ச்சிக்கு உறுதுணை யாய் அமைந்தன.

- பொதுவாக மக்கள் வானவீதியில் வலம் வரும் கோள்கள், நட்சத்திரங்களின் இருப்புகள், அசைவுகள் என்பவற்றை அறிந்து, அவற்றின் இயக்கங்கள் பூமியோடு எவ்வாறு தொடர்புறுகின்றன என்பதையும் அந்தத் தொடர்புகளால் மானிட வாழ்வில் எத்தகைய தாக்கங்கள் ஏற்படும் என்பதையும் தெரிந்து, அத்தீமைகளினின்றும் தப்பி நன்மையடைய முயன்றனர். இம்முயற்சியின் விளைவாகத் தோற்றம் பெற்றதே சோதிடவியல் என்ற கருத்தும் காணப்படுகிறது.
- இந்து வானியலாளர் பெற்றிருந்த வானசாத்திரமும், கணிதப் புலமையும் பஞ்சாங்கங் களைக் கணித்து சோதிடத்தை விருத்தி செய்ய உதவின.
- புராதன வானியலறிஞர்களான ஆரியபட்டர், பிரம்மகுப்தர் ஆகியோரின் நூல்களி லிருந்தும் சோதிடவியல் பற்றிய பல குறிப்புகள் கிடைக்கின்றன. மகரிஷியாகிய 'கார்க' பிருது மன்னனின் சோதிடராவார் என்பதும் மகாபாரதத்திலிருந்து இவரது திறமைகளைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன என்பதுமாகும்.
    - 'கார்க' காலம் பற்றிய சிறந்த அறிவைப் பெற்றிருந்தாரென்றும், நட்சத்திரங்கள் பற்றிய சாஸ்திரத்தில் சிறந்த புலமை பெற்றிருந்தார் என்றும் குறிப்பிடப்படுகிறது.
    - காலஞானம், காலம் பற்றிய அறிவியல் நூல் இவருடையது எனவும் அறியப் படுகிறது.
    - விஷ்ணு புராணத்தின்படி, மாமுனிவராகிய 'கார்கஷேச' என்பவரிடமிருந்து வானியல் பற்றிய அறிவையும் கிரகங்கள் பற்றிய விடயங்களையும் அறிந்து கொண்டனரென்றும் குறிப்பிடப்படுகிறது.
- கார்கி சம்ஹிதை சோதிடத்தைப் பற்றிய ஒரு நூலாக அமைவதாகவும் இது கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப காலத்தில் தொகுக்கப்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. இந்நூல் புராண அமைப்பைக் கொண்டது என்பர்.
- கார்க என்பவரது நூலை அடிப்படையாகக் கொண்டே, வராகமிகிரர் எனும் வானியலாளர் பிருஹத் சம்ஹிதை எனும் சோதிட நூலை இயற்றினார் எனப்படுகிறது.
- பிருஹத் சம்ஹிதையில் வராகமிகிரர் தேவர்களது இருப்பிடமாகிய மேருமலையைச் சார்ந்த இடத்தில் நாரதர் பிருஹஸ்பதிக்கு ரோகிணி யோகத்தை கூறினார். அதே சாஸ்திரம்தான் கார்க, பராசரர், காசியபர், மயன் ஆகியோரால் பல்வேறு சீடர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இந்த உண்மைகளை ஆராய்ந்தே தானும் ஒரு சுருக்கமான நூலை எழுதியதாக வராகமிகிரர் குறிப்பிடுகிறார்.
- "சோதிடனை ஆதரிக்காத இளவரசன் அழிவைச் சந்திப்பான்" எனப் பகவான் கார்க கூறியதாக அவர் குறிப்பிட்டிருப்பது சோதிடக்கலையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.
- கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வராகமிகிரர் வானியல் சாத்திரத்தை விட சோதிடத்தில் சிறந்தவராக விளங்கியுள்ளார். 'பிருகத் சம்ஹிதை' இவரது மிகச் சிறந்த படைப்பாகும். இதில் சோதிடம் பற்றிய மிகப் பரந்த விடயங்களைக் குறிப் பிட்டுள்ளார். சோதிடக் கலைச் சொற்கள் பற்றிய விளக்கம், பல்வேறு கிரகங்கள்

பற்றிய விளக்கம், பல்வேறுபட்ட பிறப்புகள், பாலரிஷ்டம் எனும் இளமையில் இறப்பு, நீண்ட ஆயுளைத் தீர்மானித்தல், கால ஒழுங்கில் கிரகபலன், வாழ்க்கை முறை, ராஜயோகம், இரு கிரக சேர்க்கைப் பலன், பல்வேறு ராசி வீடுகளில் உள்ள கிரக பலன், தூரதிஷ்டம், மாரகம் ஏற்படுதல் போன்ற விபரங்கள் பிருகத் சம்ஹிதையில் காணப்படுகின்றன.

- இவர் பிருகத் ஜாதக, யோக யாத்திரா போன்ற நூல்களையும் எழுதியுள்ளார். இவர்களின் பின் 'முஞ்சல' என்பவர் காலக் கணிப்போடு தொடர்புடையவராகவும், சதானந்தர் என்பவர் சூரிய சந்திர மானங்களைப் பற்றி ஆராய்ந்தவராயும் சோதிட விருத்திக்கு உதவியுள்ளனர்.
- பிற்கால அறிஞர் வரிசையில் கி.பி. 1114 இல் வாழ்ந்த பாஸ்கராச்சாரியார் குறிப் பிடத்தக்கவர். இவரது சாதக பாஸ்கரன் எனும் நூல் குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாட்டில் வானியலும் சோதிடமும்

- தமிழ்நாட்டின் புராதன வரலாற்றை அறிய உதவும் சங்க இலக்கியங்களில் வானியல், சோதிடம் பற்றிய செய்திகள் அக்காலப் புலவர்களால் பாடப்பட்டுள்ளன.
- வானியல், சோதிட நூலின்படி அமைந்துள்ள காலக் கூறுபாடுகளான திங்கள், பக்கம், நாள் ஆகியவற்றைத் தமிழர் பழங் காலத்தில் அறிந்திருந்தனர்.
- நெடுநல்வாடையில் நக்கீரர் வானவியல் குறிப்பு ஒன்றைக் கொடுத்துள்ளார். ஞாயிறானது மேடராசி தொடங்கி இராசி தோறும் பெயர்ந்து செல்வதை அவர் பாடியுள்ளார். - (நெடுநல்வாடை 160, 161)
- கூடலூர்கிழார் இராசியின் பெயர், அதில் ஞாயிறு நின்ற நிலை, வெள்ளி எனும் கோள் நின்ற நிலை, நாண் மீன்கள் எழுதுவதும் அமர்வதும், எரிமீன் விழுவதும் ஆகியவற்றைப் புறநானூற்றுப் பாடலொன்றில் (புறம் 229) விளக்குகிறார். இவர் இராசிகளுக்கும் நாண் மீன்களுக்கும் தமிழ்ப் பெயர்களையே அளித்துள்ளார்.
- உறையூர் முதுகண்ணன் சாத்தனாரின் புறநானூற்றுச் செய்யுளிலும் இது பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. - (புறம் 20)
- முல்லைப் பாட்டில் காலத்தை அளவிடும் கருவியான 'கன்னல்' எனும் நாளிகை வட்டில் பற்றி அறிந்திருந்தனர்.
- பொதுவாக சங்க காலத் தமிழர்கள் கி.பி. 3 ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்னரே
  - (i) மேடம், இடபம் முதலான பன்னிரண்டு இராசிகளையும்
  - (ii) கோள்கள் திரிந்து வரும் வானமண்டலத்துள் அமைந்திருக்கும் நாண்மீன் களையும்
  - (iii) கோள்நிலை திரிவதாலும், புகைமீன் வீழ்வதாலும் நாண்மீன் ஒவ்வொன்றுடனும் நிலாக்கூடி வருவதாலும் ஏற்படக்கூடிய விளைவுகளையும் அறிந்திருந்தனர்.
- பழந் தமிழர்களில் சிலர், வானத்தில் இராசிதோறும் ஞாயிறு பெயர்ந்து செல்வதையும்,

அங்கு ஒரு குறிப்பிட்ட வட்டமான வழியிலேயே அது சுற்றி வருவதையும், காற்று இயங்குவதையும் ஆகாயம் நிலைத்து நிற்பதையும் சில ‘கணிகன்’ இருக்குமிடத்தி லிருந்தே கோள்களைத் துல்லியமாகக் கணிக்கும் ஆற்றல் பெற்றிருந்தனர்.

- வானத்தில் மின்னுவன விண்மீன்கள், ஞாயிற்றின் ஒளியைக் கொண்டு மின்னுவன கோள்கள் - இக்கோள்களின் இயக்கங்களைக் கணித்துப் பின்வருவனவற்றை முன்னரே கூறும் ஆற்றல் வாய்ந்தவர் ‘கணி’ அல்லது ‘கணியன்’ எனப்பட்டனர். கணிகளின் தலைவன் பெருங்கணியன் எனப்பட்டான். இவை பற்றிய செய்திகள் சங்க இலக்கியங் களிலுண்டு.

  **(உ-ம்)** கணியன் பூங்குன்றனார், சோதிடக் கலையில் வல்லுனராக விளங்கினார்.

- பண்டைத் தமிழர், பின்வருமாறு வழங்கியமைக்கு இலக்கியச் சான்றுகளுண்டு.

| | | |
|---|---|---|
| செவ்வண்ணக் கோள் | - | ‘செவ்வாய்’ |
| பொன்வண்ணக் கோள் (வியாழன்) | - | பொன் |
| வெண்ணிறக்கோள் | - | வெள்ளி |
| நீலவண்ணக்கோள் | - | நீலன்காரி |

- பபிலோனியா, சுமேரியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கிடையிலான விரிவான கடல் வணிகத்தில் ஈடுபட்டிருந்த பண்டைத்தமிழர் வடமீன், ஒளிமிக்க கோள்களை வெள்ளி, வியாழன், செவ்வாய் ஆகியவற்றின் வானநிலையைக் கண்டே காலத்தையும் திசையையும் கணித்து மரக்கலம் ஓட்டினர்.

- சங்கமருவிய காலத்தெழுந்ததாகக் கருதப்படும் திருக்குறளிலும் ஏழுநாள் கால அளவாகிய வாரத்தைப் பற்றிய குறிப்பு ஒன்று உண்டு. (குறள் - 1278)

- பல்லவர் காலத்தவரான திருஞானசம்பந்தர் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் ஏழு கிழமைகளின் பெயர்களையும் ஒரு பதிகத்தில் வைத்துப் பாடியுள்ளார். (தேவாரம் 2.85.1)

- தமிழரின் ஆண்டானது கதிரவனின் செலவைக் கணக்கிட்டு அறுதியிடப்பட்டது. எனவே ஓராண்டில் பன்னிரண்டு திங்களே கணக்கிடப்பட்டது. பன்னிரண்டு திங்களின் பெயரமைப்பே தமிழரின் வானியலறிவை வியந்து கூற வைக்கின்றன. சூரியன் எந்த ராசியில் எத்தனை நாள் நிற்கிறதோ அத்தனை நாள் அந்த இராசி.

  **(உ-ம்)** சித்திரை நாண் மீனில் நிலவு முழுமையடையும் திங்களுக்கு சித்திரை என்று பெயர். விசாகத்தில் சந்திரன் முழுமதியாகும் மாதத்துக்கு வைகாசி என்று பெயர்.

- சோழர் காலத்தில் சோதிட விற்பனர்கள் அரச சபையை அலங்கரித்திருந்தனர். இராஜராஜ சோழன் தனது பிறந்த நாளை ஆண்டுதோறும் சோதிடங்களின் கணிப் பின்படி தனது ஜென்ம நட்சத்திரத்தில் கொண்டாடியதாக அறிகிறோம்.

- சோழர் காலத்தில் பயிற்சி பெற்ற சோதிடப் புலவர்கள் குழந்தைகளுக்குச் சாதகம் கணித்துக் கொடுத்தனர். சாதகம் கணிப்பதற்கு சிரோதயம், பூபதனம், தெரியும்

காலம் என்ற மூவியலையும் அடிப்படை நேரமாகக் கொள்வதுண்டு எனவும் அறியப் படுகிறது.

- கி.பி. 17 ஆம் நூற்றாண்டளவில் சித்தர்களின் பெயரால் பல்வேறு சோதிட நூல்கள் இயற்றப்பட்டதாக அறிய முடிகிறது. குறிப்பாக சோதிட நூல்களில் நாடிகள் எனும் நூல்கள் பல காணக் கிடக்கின்றன.

  **(உ-ம்)** கௌசிக நாடி, கௌமார நாடி, சுக்கிர நாடி, காகபுசுண்டர் நாடி, துருவ நாடி, சப்தரிஷி நாடி, நந்தி நாடி, மார்க்கண்ட நாடி என்பன அவற்றுட் சில.

- ஒருவருடைய கைரேகைகளைக் கொண்டோ, அவருடைய சாதகக் குறிப்பைக் கொண்டோ அவரது வாழ்க்கையின் முக்கால நிகழ்ச்சிகளையும் நாடிகள் எடுத்துக் கூறுகின்றன. சாதகனின் பெயர், பெற்றோர் பெயர், பிறந்த ஊர், அவர் பெற்ற கல்வி, செய்யும் தொழில் ஆகியவை பற்றிய குறிப்புகளை இந்நாடி சோதிடம் சில சமயம் தெளிவாகவும் மறைபொருளாகவும் தெரிவிக்கின்றன.

## ஈழத்தில் சோதிடக் கலை:

- ஈழத்தில் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் சோதிட நூல்கள் பல தோன்றியுள்ளமையை நாம் நோக்கலாம்.

- கி.பி. 1310 இல் தம்பதேனிய அரசன் மூன்றாம் பராக்கிரமபாகு அரசவையில் சரசோதிமாலை எனும் சோதிட நூல் அரங்கேற்றப்பட்டது.
  - இதன் ஆசிரியர் அரசவைப் புலவரான போசராச பண்டிதர் (தேனுவரைப் பெருமாள்).
  - இந்நூல் கால நியதி, அக்கினி, ஆதனம், நெல் விதைத்தல், ஆயுர் வேதம், குணதீதம் முதலிய செய்திகளைக் கூறுகிறது.
  - இந்நூலிலுள்ள மனை செய்யுள் படலம் வீடமைக்கும் முறை பற்றி விபரிக்கிறது.
  - வடமொழிச் சோதிட நூலின் மொழிபெயர்ப்பான இந்நூல், வைத்தியத் துறையுடன் நெருங்கிய தொடர்புடையது.
- செகராசசேகரமாலை எனும் நூல் கி.பி. 1380 ஆம் ஆண்டளவில் நல்லூர் செகராச சேகர மன்னன் ஆதரவுடன் சோமசன்மா என்பவரால் இயற்றப்பட்டது.
  - காசிபர், வசிட்டர், அத்திரிபைலர், கௌதமர், சிறுசீகர் முதலிய முனிவர்களால் சொல்லப்பட்ட வடமொழிச் சோதிட நூல்களின் பொருளை உடையதென இதன் பாயிரவியல் கூறுகிறது.

- கி.பி. 1713 இல் அதாவது ஒல்லாந்தராட்சிக் காலத்தில் அராலி இராமலிங்க முனிவரால் சந்தான தீபிகை எனும் நூல் இயற்றப்பட்டது.
  - இந்நூல் சந்தான விருத்திக்கான சோதிட விடயங்களை மட்டும் கூறுகிறது. **(உ-ம்)** பஞ்சாயுதம் தரிசித்தல், கர்ணவேதனம், அரைஞாண் தரித்தல், சௌச கருமம், வித்தியாரம்பம் போன்ற பல விடயங்களைக் கூறுகிறது.

- கி.பி. 1929 இல் அம்பலவாணபிள்ளை, இடைக்காடர் என்போரால் "வானசேகர சோடச பாவனா சோதிடம் எனும் இலகு சாதகம்" எனும் நூல் இயற்றப்பட்டது.
  - இந்நூலில் கிரக சாந்திக் கருமங்கள் உள்ளன.
  - திசைகளின் கால அளவை, திரிகோணம், கேந்திரம், விக்கிரகம், சட்ட வர்க்கம், அட்டவர்க்கம், விந்துபாவம் பற்றி விபரிக்கப்பட்டுளது.
- இருபதாம் நூற்றாண்டில் 'சந்தானமணி' எனும் சோதிட நூல் சபாபதி சோதிடரால் இயற்றப்பட்டது. சந்தான விருத்திக்கான நல்வழி முறைகளை இந்நூல் கூறுகிறது.
- 'பரகிதம்' விதான மாலை சாதக பாஸ்கரன் ஆகிய பழைய சோதிட நூல்களும் இக்காலப் பகுதியில் மூலமும் உரையுமாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

**பஞ்சாங்கம்:**

- வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் எனும் ஐந்து முக்கிய உறுப்புக்களை உடையது பஞ்சாங்கம். (பஞ்ச + அங்கம்)
- முதல் பஞ்சாங்கம் குப்தப் பேரரசு காலத்தில், ஆரியப்பட்டரால் வான சாஸ்திர ஆய்வின்படி கோள்களின் நிலை கண்டறிந்து கணிக்கப்பட்டது என்பர்.
- இவருக்குப் பின் வராகமிகிரர் என்பவர் பஞ்சாங்க விடயங்களைத் தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்து சோதிடக் கலைக்கு மிகுந்த பங்களிப்பை நல்கினார்.
- இந்தியாவில் இன்று மூன்று விதமான பஞ்சாங்கங்கள் காணப்படுகின்றன என்பர்.
  1. வாக்கிய பஞ்சாங்கம் 2. சித்தாந்த பஞ்சாங்கம்
  3. திருக்கணித பஞ்சாங்கம் ஆகியவை.
- பஞ்சாங்கத்தில் தேதிகள் சூரியனுக்குரிய நாட்களை அன்றி திதிகளை அடிப்படை யாகக் கொண்டே கணிக்கப்பட்டன. முப்பது திதிகள் ஒரு சந்திர மாதமாகும். இது 29 1/2 சூரிய நாட்களாகும்.
- ஒவ்வொரு மாதமும் பதினைந்து திதிகளைக் கொண்ட இரு பட்சங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன.
  - அமாவாசையுடன் தொடங்கும் பட்சம் - சுக்கில பட்சம்
  - பௌர்ணமியுடன் தொடங்கும் பட்சம் - கிருஷ்ண பட்சம்
- ஆரம்பத்தில் வட இந்தியாவிலும் தக்கணத்திலும் மாதங்கள் பௌர்ணமியிலே தொடங்கின.
- ஆனால் தமிழ் நாட்டில் பொதுவாக அமாவாசையிலே மாதந் தொடங்கியது. இம் முறையிலான பஞ்சாங்கமே இந்து சமய நோக்கங்களுக்காக இந்தியா எங்கும் இன்றுவரையும் பயன்படுத்தப்படுகிறது.
- சூரியநாளின் எந்நேரத்திலும் திதி தொடங்கலாம். ஆனால் சூரியன் உதயமாகும் பொழுது எத்திதி உளதோ அத்திதியே அன்று முழுவதும் இருக்குமெனக் கொள்ளப் பட்டது.

- சந்திர மாதங்கள் சித்திரையிற் தொடங்கின. சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என்பன அவையாகும்.
- இந்திய ஆண்டின் ஆறு பருவங்களாவன:
  1. வசந்தம் (இளவேனில் - மார்ச் - மே)
  2. கிரீட்மம் (முதுவேனில் - மே - யூலை)
  3. வருஷ (மழைக்காலம் - யூலை - செப்டம்பர்)
  4. சரத் (இலையுதிர்காலம் - செப்டம்பர் - நவம்பர்)
  5. ஏமந்தம் (மாரி காலம் - நவம்பர் - சனவரி)
  6. சிசிரம் (கூதிர் காலம் - சனவரி - மார்ச்)
- பிரபவ முதல் அசஷய வரை வருஷங்கள் 60 ஆகும்.
- பன்னிரு சந்திர மாதங்களில் 354 நாட்களே உண்டு. இது சூரிய ஆண்டுக்கும் சந்திர ஆண்டுக்கும் உள்ள முரண்பாடு. அறுபத்தியிரண்டு சந்திர மாதங்கள் அறுபது சூரிய மாதங்களுக்குச் சமமென இம்முரண்பாட்டைத் தீர்த்தனர்.
- இந்துப் பஞ்சாங்கத்தின் தேதிகள் மாதம், பட்சம், திதி என்ற வரிசைக் கிரமத்தில் தரப்படும். இந்துப் பஞ்சாங்கம் மிகத் திறமையாக யாக்கப்பட்டதென்பர். எனினும் ஓரளவு சிக்கலான தன்மையும் உள்ளது.
- குப்தர் காலம் முதலே, மேலை நாட்டு வானியலாளர் தந்த சூரிய பஞ்சாங்கத்தை மக்கள் அறிந்திருந்தபோதிலும், அண்மைக்காலம் வரை அவர்கள் பழைய சந்திர சூரிய பஞ்சாங்கத்தையே பயன்படுத்தினர்.

## பஞ்சாங்கங்களின் அங்கங்கள் பற்றிய விளக்கம்:

**கிழமை** - 7 வாரம் - இரவி வாரம், சோம வாரம், மங்கள வாரம், புதன் வாரம், பிருகஸ்பதி வாரம், சுக்கிர வாரம், சனி வாரம்.

**திதி** - இது சூரியன் நிற்குமிடத்திலிருந்து சந்திரன் நிற்கும் தூரத்தைக் குறித்து நிற்கும்.

பிரதமை முதல் பூரணை வரை - சுக்கிலபட்சம்

பிரதமை முதல் அமாவாசை வரை - கிருஷ்ணபட்சம்

**நட்சத்திரம்** - அச்சுவினி முதல் ரேவதி ஈறாக 27 ஆகும்.

**யோகம்** - இது நட்சத்திரங்களைக் கொண்டு கணிக்கப்படும்.

**கரணம்** - 30 திதிகளுக்கும் 60 கரணங்களைக் குறிப்பிடுவர். 11 கரணங்களுண்டு.

**அயனங்கள்** - அயனங்கள் இரு வகைப்படும். அவையாவன:

1. உத்தராயனம் (தை முதல் ஆனி வரை)
2. தட்சிணாயனம் (ஆடி முதல் மார்கழி வரை)

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படி I** இந்து அறிவியல் தொடர்பாக தாம் அறிந்த விடயங்களை மாணவர் கூறுவதற்கு இடமளியுங்கள்.

**படி II:** இந்து அறிவியலில் உள்ளடங்கும் விடயங்கள் ஒவ்வொன்றையும் பற்றி (பாடத்திட்டத்தில் உள்ளவை) கூறுவதற்கும், அவை தொடர்பான நூல்கள், ஏட்டுச் சுவடிகள், படங்கள் என்பவற்றைத் தேடிக் கொள்வதற்கும் வழி காட்டுங்கள்.

**படி III:** மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து, பின்வரும் தலைப்புகளை வழங்குங்கள்.

**குழு - 1 :** இந்து மருத்துவம்

**குழு - 2 :** இந்து மருத்துவம்

**குழு - 3 :** இந்து சோதிடவியல்

**குழு - 4 :** இந்து சோதிடவியல்

**படி IV:** ஒவ்வொரு குழுவும் தமது தலைப்பு தொடர்பான தகவல்களையும், நூல்கள், ஏட்டுச் சுவடிகள், படங்கள், மூலிகைகள், ஏனைய சான்றுகள் முதலானவற்றைச் சேகரிக்க கால அவகாசம் வழங்குங்கள்.

**படி V:** குறிப்பிட்ட நாளில் 4 குழுக்களும் பொருட்காட்சியில் பங்கு பற்றி, தமது தலைப்பு தொடர்பாகவும் தாம் சேகரித்தவை தொடர்பாகவும் பார்வையாளர்களுக்கு விளக்கமளிக்கச் செய்யுங்கள்.

**உசாத்துணைகள்:**

**(தமிழ் நூல்கள்)**


(1) சம்பத்குமார். வி. எஸ் - அறிவியலின் வரலாறு, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1997.

(2) ஸ்ரீ நிவாஸ் சாது. சு - உபநிஷத்துக்களின் விஞ்ஞான ரகசியங்கள், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1994.

(3) கோபாலகிருஷ்ணஐயர். ப - இந்து அறிவியல் வளர்ச்சியில் வானியலும் சோதிடமும் சில சிந்தனைகள், இந்துநெறி, யாழ். பல்கலைக்கழக வெள்ளிவிழா சிறப்பு மலர், யாழ்ப்பாணம், 1999.

(4) பசாம். ஏ. எல் - வியத்தகு இந்தியா

(5) சிதம்பரனார். சாமி - சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, 2001.

(6) சம்பங்கி, பி - சித்த மருத்துவமும் தெய்வவழிபாடும், பாலாஜி பிரதர்ஸ் பதிப்பகம், கும்பகோணம், 2003.

(7) திருஞானம். க - திருக்கோயில் மரங்களின் மருத்துவப்பயன்கள், செல்வி பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, 1998.

(8) சித்தரியல் ஆய்வுமாலை, (தொகுதி - 1, 2) - சித்தரியல் ஆய்வு மாநாடு, பேரூராதீனம், கோவை, 2005.

(9) சுப்புரெட்டியார். ந - அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம், தத்துவம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 2001.

(10) சந்திரா. எஸ் - அறிவியல் முன்னோடிகள், விசு பதிப்பகம், சென்னை, 1990.

(11) சற்குணதாஸ். சாமி - புராதன இந்தியாவின் அறிவியல் மேதைகள், தமிழ்க்கடல் பதிப்பகம், சென்னை, 1988.

(12) சுப்பிரமணியம். மே. சீ - சித்தர்களின் இரசவாதக்கலை, தாமரை நூலகம், சென்னை, 1985.

(13) ஞானப்பிரகாசம். வி. மி அறவாணன். க. ப - தமிழில் அறிவியல் கருத்துக்கள், பாரி நிலையம், சென்னை, 1975.

(14) தியாகராஜன். இரா - அருள்வெளி நடனம் (நடராஜர்) (GRACE COSMIC DANCE), பரணி அச்சகம், சென்னை, 1992.

(15) பாலசுந்தரம். இ - இலக்கியத்தில் மருத்துவக் கருத்துக்கள், நாட்டார் வழக்கியல் கழகம், யாழ்ப்பாணம், 1990.

(16) இராசமாணிக்கனார். மா - தமிழகக் கலைகள், சாந்தி நூலகம், சென்னை, 1959.

(17) சண்முகராஜா. என் - "இந்துசமய நூல்களில் விஞ்ஞானக் கருத்துக்கள்" இந்துநெறி (சுவாமி விவேகானந்தர் சிறப்பு மலர்) இந்துமன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, (1991-1992).

(18) வெற்றிவேல் சக்திவேல் - "இந்து தமிழர் பண்பாட்டு மருத்துவ மரபில் யோகம்" இந்துநெறி (மஞ்சச்சிறப்பு மலர்), இந்துமன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, (1993-1995).

(19) இராமசாமி. பொ. இரா - நோய்நீக்கும் நட்சத்திர மூலிகைகள், பிரார்த்தனா வெளியீட்டகம், இராசபாளையம், தமிழ்நாடு, 2002.

(20) நஜன் - தீபதரிசனம், பிரதிபா பிரசுரம், சென்னை, 1997.

(21) இலிங்கன் - வராகர் ஓரா சாத்திரம் (பழைய உரையுடன்) அடிகள் ஆசிரியர் (பதிப்பு), சரஸ்வதி மகால், தஞ்சாவூர், 1991.

(22) இராமநாதன். பொன் - சித்த மருத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம், 2008.

(23) சிவசண்முகராசா. சே - இந்து ஆலயங்களில் மருத்துவ சுகாதாரம், (தமிழர் வாழ்வில் சித்த மருத்துவம்), சித்த மருத்துவ வளர்ச்சிக்கழகம், யாழ்ப்பாணம், 2006.

(24) சிவசண்முகராசா. சே - இந்து விரதங்களும் உடல்நலமும், சித்த மருத்துவ வளர்ச்சிக்கழகம், யாழ்ப்பாணம், 2007.

(25) சிவசண்முகராசா. சே - மருத்துவமும் சோதிடமும் (தமிழர் வாழ்வில் சித்த மருத்துவம்), சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம், யாழ்ப்பாணம், 2006.

(26) கணேசன். பி. சி - தெய்வ சக்தியும் மனித முயற்சியும், வானதி பதிப்பகம், சென்னை, 1999.

(27) யோகம் பயிற்சிக் கையேடு - விவேகானந்த கேந்திர வெளியீடு, சென்னை, 2000.

(28) டாக்டர் சு. சக்திவேல் - நாட்டுப்புற இயல்ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், 1983.

(29) பவுன்துரை, இராசு - தமிழகக் கோயிற் கட்டடக்கலை மரபு மயன் அறிவியல் தொழில்நுட்பம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2004.

(30) மகாலட்சுமி. தி - சோதிடவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1996.

(31) இராமசாமி. எம். பி. எம் - (பதிப்) சிற்பரத்நாகரம், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1998.

(32) சிவசண்முகராஜா. சே - மருத்துவ நோக்கில் மரணக்கிரியைகள் (தமிழர் வாழ்வில் சித்த மருத்துவம்) சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம், யாழ்ப்பாணம், 2009.

(33) சௌரிராஜன். மு - நாடிவாகடம், தஞ்சை சரசுவதிமகால் நூலகம், 2000.

**(ஆங்கில நூல்கள்)**

(1) Chattopadhyaya. C.(ed) - Studies the history or Science of India (Vol. I), Editoriac enter prises New Delhi, 1982.

(2) Jaggi. O. P - History of Science, Technology and Medicine in India (Vol. II. Science in ancient India), Atma Ram & Sons, Delhi, 1986.

(3) Jaggi. O. P - History of Science, Technology and Medicine in India (Vol.1.Indian astronomy and Mathematics) Atma & Ram Sons, Delhi, 1987.

(4) Sela. B. N - Positive Science of the ancient Hindus, London, 1915.

# பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம்

கற்றல், கற்பித்தல், மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதையும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும் என்பதையும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்றேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) கணிப்பீட்டு கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும்போதே கணிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம்பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ சோதனை நடத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர் களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முறைமையாகும். ஆதலால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங் களையும் இனங்கண்டு அவற்றிற்குப் பரிகாரம் கண்டவாறு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமுமாகும்.

கற்றல் - கற்பித்தற் செயன் மூலம், தேடல் செயன்முறையின்பால் மாணவர்கள் வழிப்படுத்தப் படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சென்று அவர்கள் செய்யும் வேலை களை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாக கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவரது ஆற்றல், அபிவிருத்தி என்பன எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்கு தக்க அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து, அவற்றை அவர்கள் சரியாகப் பெற்றுக் கொண்டார்களா என உறுதிப்படுத்தல் கற்றல் - கற்பித்தல் ஊடாக நிகழ வேண்டும். அத்தோடு அதற்குத் தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். கணிப்பீட்டில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பின்னூட்டல் / முன்னூட்டல் என்பனவாகும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காகப் பின்னூட்டலையும் மாணவர்களின் திறமை களையும் ஆற்றல்களையும் இனம் காணும்போது அவற்றை மேன்படுத்த முன்னூட்டலையும் வழங்குவதும் ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காக பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர் களுக்கு அவசியமாகின்றது. கணிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்ட கணிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தல், மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படுத்தத்தக்க அணுகுமுறை வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சைத் திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே, அவை தொடர்பாக பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அணுகுமுறை வகைகள் வருமாறு:

1. ஒப்படைகள்
2. செயற்றிட்டங்கள்
3. அளவாய்வுகள்
4. தேடியாய்வுகள்
5. அவதானிப்புக்கள்
6. கண்காட்சி / முன்வைத்தல்கள்
7. களச் சுற்றுலாக்கள்
8. குறுகிய எழுத்துப் பரீட்சைகள்
9. அமைப்புக் கட்டுரைகள்
10. திறந்த நூல் சோதனைகள்
11. ஆக்கச் செயற்பாடுகள்
12. செவிமடுத்தல் சோதனைகள்
13. செய்முறைச் செயற்பாடு
14. பேச்சுக்கள்

15. சுய ஆக்கங்கள்
16. குழுச் செயற்பாடுகள்
17. எண்ணக்கருப் படங்கள்
18. இரட்டைப் பதிவு - ஜேர்னல்
19. சுவர்ப் பத்திரிகைகள்
20. வினா - விடை நிகழ்ச்சிகள்
21. வினா - விடைப் புத்தகங்கள்
22. விவாதங்கள்
23. குழுக் கலந்துரையாடல்கள்
24. கருத்தரங்குகள்
25. உடனடிச் சொற்பொழிவு
26. பாத்திரமேற்று நடித்தல்

அறிமுகம் செய்யப்பட்டுள்ள மேற்படி கற்றல் - கற்பித்தல், மதிப்பீட்டு முறைகள் அனைத்தையும், எல்லா பாடங்களினதும் எல்லா அலகுகளுக்காகவும் பயன்படுத்த முடியும் என எதிர் பார்க்கப்படவில்லை. தமது பாடத்திற்கும் குறித்த பாட அலகிற்கும் பொருத்தமான வகைகளைத் தெரிவு செய்து கொள்வதற்கு அறிவூட்டம் பெற வேண்டும். அதற்கமைய அவற்றைத் தெரிவு செய்து கொள்ளவும் வேண்டும்.

இந்த ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தமது மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தை கணிப்பிடப் பயன்படுத்தக்கூடிய கற்றல் - கற்பித்தல் மற்றும் கணிப்பீட்டு வகைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் தமது மாணவர்களின் முன்னேற்றத் திற்காக அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தல் வேண்டும். இவற்றைப் பயன்படுத்தாது தவிர்த்தல் மாணவர் தமது அறிவாற்றல் மற்றும் உள எழுச்சி, உள இயக்கத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் தடையாக அமையும்.

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான
# உத்தேசக் கருவிகள் - 1

| | | |
|---|---|---|
| **தவணை** | : | **முதலாம்** |
| **கருவி இலக்கம்** | : | **01** |
| **தேர்ச்சி** | : | **6.0** |
| **தேர்ச்சி மட்டம்** | : | **6.1, 6.2** |
| **கருவியின் தன்மை** | : | **வினாவிடை நிகழ்ச்சி** (Quiz Programme) |

- அறிவுக்குரிய வழிகள், இந்து தரிசனங்கள் எனும் விடயப் பரப்புக்களை உள்ளடக்கிய தாகச் சிறு வினாக்களையும் விடைகளையும் மாணவர் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.
- விடைகள் ஒரு சொல் அல்லது இரண்டு சொற்கள் அல்லது ஒரு சிறிய வசனத்தைக் கொண்ட அமைய வேண்டும் எனக் கூறுங்கள்.
- மாணவர் தயாரித்த வினாக்களைத் தொகுத்துக் கொள்ளுங்கள்.
- மாணவரைப் பொருத்தமான குழுக்களாகப் பிரித்து, வினாவிடை நிகழ்ச்சியை நடாத்துங்கள்.
- பின்வரும் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளனர் | | தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை | |
| 1. பாடத்துக்குப் பொருத்தமானவாறு வினாக்கொத்து தயாரிக்கப்பட்டு இருத்தல். | 04 | | | | |
| 2. பொருத்தமான குழுக்களை அமைத்துக் கொள்ளல். | 04 | | | | |
| 3. வினாக்களை முன்வைக்கும் திறன் | 04 | | | | |
| 4. விடையளிப்பதில் காட்டும் பங்களிப்பு | 04 | | | | |
| 5. புள்ளிகளைப் பதிவுசெய்தலும் ஒட்டுமொத்தப் பங்களிப்பும் | 04 | | | | |
| பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | 20 | | | | |
| இறுதிப் புள்ளி = $\frac{\text{பெற்ற மொத்தப் புள்ளிகள்}}{2}$ | 10 | | | | |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான
# உத்தேசக் கருவிகள் - 2

**தவணை** : முதலாம்
**கருவி இலக்கம்** : 02
**தேர்ச்சி** : 6.0
**தேர்ச்சி மட்டம்** : 6.3
**கருவியின் தன்மை** : சுவர்ச் செய்திப் பத்திரிகை

- அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம் ஆகிய தலைப்புக்களை வழங்கி, இவ் வேதாந்த தத்துவங்கள் விளக்கும் பிரமம், ஆன்மா, உலகு தொடர்பான கருத்துக் களை உள்ளடக்கிய அட்டவணையைக் கொண்டதான சுவர்ச் செய்திப் பத்திரிகை ஒன்றை தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து மூன்று தலைப்புக்களையும் வழங்கிச் செயற்படுத்துங்கள்.

- பின்வரும் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளனர் | | தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை | |
| 1. கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் காணப்படும் தொடர்பு / பொருத்தப்பாடு | 04 | | | | |
| 2. ஒழுங்கமைப்பும் பொருத்தப்பாடும் | 04 | | | | |
| 3. அழகுபடுத்துவதற்காக கையாளப்பட்டுள்ள உத்திகளும் அவற்றின் பொருத்தப்பாடும் | 04 | | | | |
| 4. உள்ளடக்கத்தின் ஆக்கபூர்வமான தன்மையும், தர்க்கரீதியான தன்மையும் | 04 | | | | |
| 5. சுவர்ச்செய்திப் பத்திரிகை என்ற வகையில் ஆக்கத்தின் வெற்றிகரமான தன்மை | 04 | | | | |
| பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | 20 | | | | |
| இறுதிப் புள்ளி = $\frac{\text{பெற்ற மொத்தப் புள்ளிகள்}}{2}$ | 10 | | | | |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான
# உத்தேசக் கருவிகள் - 3

**தவணை** : முதலாம்
**கருவி இலக்கம்** : 03
**தேர்ச்சி** : 7.0
**தேர்ச்சி மட்டம்** : 7.2
**கருவியின் தன்மை** : உடனடிச் சொற்பொழிவு

- அத்வைதம் சைவசித்தாந்தம் என்பவற்றுக்கிடையிலான (ஒற்றுமை வேற்றுமைகளை) ஒப்பீட்டு விளக்கத்தைச் செய்யும் வகையில் உடனடிச் சொற்பொழிவொன்றை மாணவர் நிகழ்த்த வழிப்படுத்துங்கள்.

- பின்வரும் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளனர் | | தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை | |
| 1. அணுகுமுறையும் தலைப்பைத் தெளிவாக முன்வைத்தலும் அதன் பொருத்தப்பாடும் | 04 | | | | |
| 2. ஒழுங்கமைப்பு தலைப்புக்குப் பொருத்தமானவாறு விடயங்களை முன்வைத்தல், மொழிச் செம்மை | 04 | | | | |
| 3. சிறப்பான மொழி பிரயோகங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துதல், ஆக்கபூர்வமான தன்மை | 04 | | | | |
| 4. தெளிவு, குரல், கட்டுப்பாடு, முகபாவனை. அங்க அசைவுகள், நோக்கட்டுப்பாடு, சரியான உச்சரிப்பு | 04 | | | | |
| 5. தொகுப்பு | 04 | | | | |
| பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | 20 | | | | |
| இறுதிப் புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் / 2 | 10 | | | | |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான
# உத்தேசக் கருவிகள் - 4

| | | |
|---|---|---|
| **தவணை** | : | **இரண்டாம்** |
| **கருவி இலக்கம்** | : | **01** |
| **தேர்ச்சி** | : | **7.0** |
| **தேர்ச்சி மட்டம்** | : | **7.3** |
| **கருவியின் தன்மை** | : | **சஞ்சிகை (ஆக்கத் தொழிற்பாடு)** |

- சைவசித்தாந்த மெய்ப்பொருட் கோட்பாடுகளை ஆதாரங்களுடன் விளக்கும் வகையில் சஞ்சிகை ஒன்றைத் தயாரிப்பதற்கான வழிகாட்டலை மேற்கொள்ளுங்கள்.
- சஞ்சிகை, சஞ்சிகைக்குரிய சகல அம்சங்களையும் கொண்டிருப்பதோடு, பல்வகை ஆக்கங்களை உடையதாகவும் அமைய வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளனர் | | தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை | |
| 1. பாடப்பரப்புடன் கற்றற் தேர்ச்சிகளுடன் உள்ள பொருத்தப்பாடு, புதுமைப்பாடு | 04 | | | | |
| 2. ஆக்கம் படைப்பதற்காகப் பயன்படுத்திய ஊடகங்களின் பொருத்தப்பாடு | 04 | | | | |
| 3. ஒழுங்கமைப்பு, முன்வைத்தல், ஆக்கபூர்பத்தன்மை | 04 | | | | |
| 4. குறிக்கோள்கள் எட்டப்படும் வகையில் உருவாக்கப்படல். | 04 | | | | |
| 5. அழகுபடுத்துவதற்காகக் கையாளப்பட்டுள்ள உத்திகளும் பொருத்தப்பாடும் முன்வைத்தலும் | 04 | | | | |
| பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | 20 | | | | |
| இறுதிப் புள்ளி = $\frac{\text{பெற்ற மொத்தப் புள்ளிகள்}}{2}$ | 10 | | | | |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான
# உத்தேசக் கருவிகள் - 5

**தவணை** : இரண்டாம்

**கருவி இலக்கம்** : 02

**தேர்ச்சி** : 8.0

**தேர்ச்சி மட்டம்** : 8.1

**கருவியின் தன்மை** : களப் பயணம்

- மாணவர்களை ஆகம விதிப்படி அமைந்த சிவாலயம் ஒன்றுக்கு களப் பயணம் மேற்கொள்ளச் செய்யுங்கள்.
- அவ்வாலயத்தோடு தொடர்புடையதாகப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் அறிக்கை தயாரிக்கச் செய்யுங்கள். அதனை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.
    1. ஆகமம் கூறும் ஆலய அமைப்பு முறை
    2. ஆகமமும் திருவுருவ வழிபாடும்
    3. ஆகமம் கூறும் ஆலயக் கிரியை முறைகளும் தத்துவங்களும்
    4. ஆலய வழிபாட்டு விதிமுறைகளும் பயன்களும்
- பின்வரும் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளனர் | | தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை | |
| 1. களப்பிரயாணத்தின் கருப் பொருளையும் குறிக்கோள்களை யும் உருவாக்குதல். அவற்றுக்கும் பாடத்துக்கும் இடையிலான தொடர்பை வகைப்படுத்தல். | 04 | | | | |
| 2. திட்டமிடலும் ஒழுங்குசெய்தலும் (அனுமதி பெறல் உட்பட) | 04 | | | | |
| 3. பார்வையிடச் செல்ல எதிர்பார்க் கும் இடங்கள், பார்வையிட எதிர் பார்ப்பவை பற்றிய தகவல்களைச் சேகரித்தல், இடங்களைப் பட்டியற் படுத்தல். | 04 | | | | |
| 4. அவதானிப்புக்களைப் பதிவு செய்தல் / பருமட்டான குறிப்புகள் எழுதிக்கொள்ளல், பருமட்டான தேசப்படங்களைப் பயன்படுத்தல் / புகைப்படங்களைப் பயன்படுத்துதல் | 04 | | | | |
| 5. களப் பிரயாணத்தின் பின்னர் கலந் துரையாடிப் பெற்ற தகவல்களை யும் பதிவு செய்த தகவல்களையும் பயன்படுத்தி அறிக்கை எழுதுதல். | 04 | | | | |
| பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | 20 | | | | |
| இறுதிப் புள்ளி = $\frac{\text{பெற்ற மொத்தப் புள்ளிகள்}}{2}$ | 10 | | | | |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான உத்தேசக் கருவிகள் - 6

**தவணை** : இரண்டாம்
**கருவி இலக்கம்** : 03
**தேர்ச்சி** : 8.0
**தேர்ச்சி மட்டம்** : 8.2
**கருவியின் தன்மை** : கண்டறிகை

- பின்வரும் வழிபாடுகள் இடம்பெறும் இடங்களுக்குச் சென்று, அவ் வழிபாட்டு முறைகள் தொடர்பான விடயங்களைக் கண்டறிந்து, தாம் கண்டறிந்த விடயங்களை அறிக்கைப் படுத்துங்கள். அதனைக் காட்சிப்படுத்துங்கள்.
  1. கண்ணகி வழிபாடு
  2. ஐயனார் வழிபாடு
  3. பெரிய தம்பிரான் வழிபாடு
  4. மாரியம்மன் வழிபாடு, அண்ணமார் வழிபாடு

- பின்வரும் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளனர் | | தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை | |
| 1. களப்பிரயாணத்தின் கருப் பொருளையும் குறிக்கோள்களை யும் உருவாக்குதல். அவற்றுக்குப் பாடத்துக்கு இடையிலான தொடர்பை வகைப்படுத்தல். | 04 | | | | |
| 2. திட்டமிடலும் ஒழுங்குசெய்தலும் (அனுமதி பெறல் உட்பட) | 04 | | | | |
| 3. பார்வையிடச் செல்ல எதிர்பார்க் கும் இடங்கள், பார்வையிட எதிர் பார்ப்பவை பற்றிய தகவல்களைச் சேகரித்தல், இடங்களைப் பட்டியற் படுத்தல். | 04 | | | | |
| 4. அவதானிப்புக்களைப் பதிவு செய்தல் / பருமட்டான குறிப்புகள் எழுதிக்கொள்ளல் பருமட்டான தேசப்படங்களைப் பயன்படுத்தல் / புகைப்படங்களைப் பயன்படுத்துதல் | 04 | | | | |
| 5. களப் பிரயாணத்தின் பின்னர் கலந் துரையாடிப் பெற்ற தகவல்களை யும் பதிவு செய்த தகவல்களையும் பயன்படுத்தி அறிக்கை எழுதுதல். | 04 | | | | |
| பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | 20 | | | | |
| இறுதிப் புள்ளி = $\frac{\text{பெற்ற மொத்தப் புள்ளிகள்}}{2}$ | 10 | | | | |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான
# உத்தேசக் கருவிகள் - 7

**தவணை** : மூன்றாம்
**கருவி இலக்கம்** : 01
**தேர்ச்சி** : 8.0
**தேர்ச்சி மட்டம்** : 8.3
**கருவியின் தன்மை** : சுவர்ப்பத்திரிகை

- இந்துசமயப் பண்டிகைகளையும் (பாடத்திட்டத்தில் தரப்பட்டவை) அவற்றின் முக்கியத்துவங்களையும், விளக்கக்கூடிய சுவர்ப்பத்திரிகை ஒன்றைத் தயாரிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

- பின்வரும் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளனர் | | தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை | |
| 1. கற்றல், கற்பித்தல் செயன்முறை யுடன் காட்டும் தொடர்பு பொருத்தப்பாடு | 04 | | | | |
| 2. ஒழுங்கமைவும் பொதுவானதாக இருத்தலும் | 04 | | | | |
| 3. அழகுபடுத்துவதற்காக கையாளப் பட்டுள்ள உத்திகளும் அவற்றின் பொருத்தப்பாடும் | 04 | | | | |
| 4. உள்ளடக்கத்தின் ஆக்கபூர்வமான தன்மையும், தர்க்கரீதியான தன்மையும் | 04 | | | | |
| 5. சுவர்ச்செய்திப் பத்திரிகை என்ற வகையில் ஆக்கத்தின் வெற்றிகர மான தன்மை | 04 | | | | |
| பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | 20 | | | | |
| இறுதிப் புள்ளி = $\frac{\text{பெற்ற மொத்தப் புள்ளிகள்}}{2}$ | 10 | | | | |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான
# உத்தேசக் கருவிகள் - 8

**தவணை** : மூன்றாம்
**கருவி இலக்கம்** : 02
**தேர்ச்சி** : 9.0
**தேர்ச்சிமட்டம்** : 9.2
**கருவியின் தன்மை** : குழுக்கலந்துரையாடல்

- பகவத்கீதை குறிப்பிடும் மூவகை யோகங்கள் தொடர்பாக குழுக் கலந்துரையாடலை மேற்கொள்வதற்கான குழுத் தலைப்புகளை (பொருத்தமானது) வழங்கி, மாணவர்களை நெறிப்படுத்துங்கள்.

- குழுக் கலந்துரையாடலை நிகழ்த்துவதற்கு வேண்டிய தகவல்களை மாணவர் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் நூல்கள், கட்டுரைகள், ஆக்கங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ள வழிகாட்டுங்கள்.

- பின்வரும் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளனர் | | தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை | |
| 1. கற்றற் செயன்முறையுடன் காட்டும் பொருத்தப்பாடு | 04 | | | | |
| 2. குழுவாக்கத்துரையாடலை ஒழுங்கு செய்தல் நெறிப்படுத்தல் தலைப்புக்களை ஒதுக்கிக் கொள்ளல் அறிவுறுத்தல்களைப் பின்பற்றல். | 04 | | | | |
| 3. கலந்துரையாடலை முன்னெடுத் துச் செல்லத்தக்க வகையில் விருத்திகரமான வகையில் கருத்துக்களை முன்வைத்தல் | 04 | | | | |
| 4. முன்வைக்கப்படும் கருத்துக்களின் ஆக்கபூர்வமான கணிசமான தர்க்கரீதியான தன்மையும் | 04 | | | | |
| 5. பொழிப்பாக்கலும் முடிவுகளும் முடிவுகளுக்கான காரணங்களை யும் முன்வைத்தலும். | 04 | | | | |
| பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | 20 | | | | |
| இறுதிப் புள்ளி = $\frac{\text{பெற்ற மொத்தப் புள்ளிகள்}}{2}$ | 10 | | | | |

# பாடசாலை மட்டக் கணிப்பீட்டிற்கான
# உத்தேசக் கருவிகள் - 9

| | | |
|---|---|---|
| **தவணை** | : | மூன்றாம் |
| **கருவி இலக்கம்** | : | 03 |
| **தேர்ச்சி** | : | 10.0 |
| **தேர்ச்சிமட்டம்** | : | 10.1 |
| **கருவியின் தன்மை** | : | கண்காட்சி |

- இந்து அறிவியல் தொடர்பான நூல்களையும் அறிவியல் தொடர்பான மருத்துவம், சோதிடவியல், அறிவியல் ஆகிய விடயங்களை உள்ளடக்கிய ஒரு கண்காட்சியை ஏற்பாடு செய்ய வழிப்படுத்துங்கள்.

- அதில் நூல்கள், மாணவர்களது ஆக்கங்கள், பிறரால் ஆக்கப்பட்ட ஆக்கங்கள், இணையம் மூலம் தேடிப் பெற்ற விடயங்கள், பத்திரிகை சஞ்சிகைகளிலிருந்து பெறப்பட்டவை, ஏட்டுப் பிரதிகள், கல்வெட்டுக்களின் படம், உண்மைப்பொருள்கள், பஞ்சாங்கம், மூலிகைகள், படங்கள், சித்திரங்கள், நேர்காணலின் ஒலிப்பதிவுகள், மாதிரி உருக்கள் போன்றவற்றைக் காட்சிப்படுத்துங்கள்.

- பின்வரும் அடிப்படையில் புள்ளிகளை வழங்குங்கள்.

| நியதிகள் | புள்ளிகள் | புள்ளி வழங்கல் | | | |
|---|---|---|---|---|---|
| | | தேர்ச்சிமட்டத்தினை அடைந்துள்ளனர் | | தேர்ச்சிமட்டத்தை அடையவில்லை | |
| 1. கண்காட்சியின் தலைப்புக்கேற்ற பொருத்தப்பாடும் தொடர்பும் | 04 | | | | |
| 2. கண்காட்சியை ஏற்பாடு செய்ய கையாண்ட வழிமுறைகள் | 04 | | | | |
| 3. கண்காட்சியை ஒழுங்கமைத்தல் | 04 | | | | |
| 4. பயன்பாடும் உத்திகளின் பொருத்தமும் | 04 | | | | |
| 5. ஆக்கத்தின் விளைவும் முடிவும் | 04 | | | | |
| பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை | 20 | | | | |
| இறுதிப் புள்ளி = பெற்ற மொத்தப் புள்ளிகள் / 2 | 10 | | | | |